வரு.75 இல. 12 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2023 மார்ச் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
March 19 Sunday, 2023
24 பக்கங்கள் 100/-



















## இலங்கை–இந்திய உறவு மிகுந்த அபர்த்தி மிக்கது

### இணைந்து செயற்படுவதில் இந்தியா அக்கறை



நீரை விடவும் இரத்தம் அடர்த்தி மிக்கது. இது போன்றே இலங்கையும் இந்தியாவின் உறவும் உள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். எனவேதான், இக்கட்டான நிலையிலும் இந்தியா இலங்கையுடன் இணைந்து செயற்பட்டதாக 06

## IMF இன் முக்கிய அறிவிப்பு 21 ஆம் திகதி அதிகாலை





இலங்கைக்கு வழங்கப்படவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதி குறித்து 21ஆம் திகதி அதிகாலை முக்கிய அறிவிப்பொன்று வெளியிடப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய நேற்று வாரமஞ்சரிக்குத் தெரிவித்தார்.

இலங்கை எதிர்பார்க்கும் கடன் வசதிகளை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் கூட்டம் நாளை மார்ச் 20 ஆம் திகதி அமெரிக்க நேரப்படி காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், விவாதிக்கப்பட்ட விடயங்கள் குறித்து தெரிவிக்கும் வகையில் அன்றைய தினம் இரவே செய்தியாளர் சந்திப்புக்கும் சர்வதேச நாணய நிதியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை நேரப்படி 21ஆம் திகதி காலை 08 மணியளவிலும் அமெரிக்க நேரப்படி 20ஆம் திகதி இரவு, ஊடகவியலாளர் மாநாடு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதரகத்தின் தலைவர் 06

## தேர்தலை உடனடியாக நடத்த TNA வலியுறுத்து

### அரசிடம் சம்பந்தன் MP கோரிக்கை



எவ்வித காரணங்களும் கூறாமல் உடனடியாக தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் 06

### குருணாகல் மாநகர சபை வரலாற்றில்

## ஒருநாள் மாநகர சபை உறுப்பினராக சத்தார்



**மாவத்தகம தினகரன் நிருபர்**

குருணாகல் மாநகர சபையின் வரலாற்றில் ஒரு நாள் மட்டும் மாநகர சபை உறுப்பினர் பதவியை வகித்த முதல் 06

## இந்திய கோழி முட்டைகள் முதல் தொகுதி நாட்டுக்கு

### கப்பலில் இன்று வந்தடையவுள்ளது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டையின் முதலாவது தொகுதியை ஏற்றி வரும் கப்பல் இன்று (19) நாட்டை வந்தடையவுள்ளதாக அரச வர்த்தக இதர சட்டப்பூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இரண்டு மில்லியன் முட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய 06

### இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடிக்க

## இந்திய மீனவருக்கு ஒரு நிமிட நேரம் கூட அனுமதி இல்லை

**பாஸ் நடைமுறையும் கிடையாது; வடக்கு மீனவர்களிடம் அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு**



இலங்கை கடற்பரப்புக்குள் ஒரு நிமிடம் கூட இந்திய கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி கிடையாதென்பதுடன் பாஸ் நடைமுறையும் கிடையாதென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 03.30 மணியளவில் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் வடக்கு கடற்றொழிலாளர்களுடன் நடத்திய கலந்துரையாடல்களின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

## ஆசிரியர் இடமாற்ற சபை கலைப்பு

கல்வி அமைச்சின் கீழுள்ள ஆசிரியர் இடமாற்ற சபை உடனடியாக அமுலாகும் வகையில் கலைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக இது கலைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் இடமாற்ற சபையின் பரிந்துரைக்கமைய நடைமுறைப்படுத்தப்படவிருந்த 12,500 ஆசிரியர்களின் அனைத்து இடமாற்றங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக 06

### 144ஆவது நீலவர்ணங்களின் சமர்

## கொழும்பு ரோயல் கல்லூரி 181 ஓட்டங்களால் வெற்றி



144ஆவது நீலவர்ணங்களின் சமரில் கொழும்பு ரோயல் கல்லூரி மற்றும் தோமஸ் கல்லூரிகளுக்கு இடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டித் தொடரில் ரோயல் கல்லூரி நேற்று 06



சினிமாத்துறையில் சாதனை படைத்த கலைஞர்களை பாராட்டும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சதராவ தீபணீ' விருது வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு BMICH இல் நடைபெற்றது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் தயாரிப்பில் உருவான திரைப்படங்களின் இயக்குநர்களுக்கும் கலைஞர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. இங்கு சினிமாத்துறையின் சிரேஸ்ட இயக்குநர் தர்மஸ்ரீ பண்டாரநாயக்க, ஜனாதிபதியிடமிருந்து விருதைப் பெற்றுக்கொண்ட போது பிடிக்கப்பட்ட படம். அமைச்சர் பந்துல குணவர்தனவும், இலங்கை மன்றக் கல்லூரியின் தலைவர் சமன் அதாவுத ஹெட்டியும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: சுலோச்சன கமகே)*

# எங்கள் கருத்து...

## முதலில் நாட்டின் இருப்பு; அதன் பின்னரே அரசியல்!

தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமையன்று வேலைநிறுத்தப் போராட்டமொன்று நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் அன்றைய தினம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவில்லை. சில குறிப்பிட்ட தொழிற்சங்கங்கள் அப்போராட்டத்தில் பங்கேற்காமல் ஒதுங்கிக் கொண்டன.

நாட்டில் இன்று நிலவுகின்ற மோசமான நெருக்கடி நிலைமையின் போது, மக்களை மென்மேலும் வருத்தும் வகையில் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவது முறையல்ல என்பதே அப்போராட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொண்ட தொழிற்சங்கங்களின் எண்ணமாக இருந்தது.

அவ்வாறு சில தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பைப் புறக்கணித்ததன் காரணமாகவே கடந்த புதனன்று மக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் ஒருவாறாக பாதிக்கப்படாமல் நடைபெற்றன. தனியார் பேருந்து சேவைகளை இதற்கான உதாரணமாகக் கூறலாம். மின்சார விநியோகம், தண்ணீர் விநியோகம் ஆகியனவும் பாதிப்பின்றி நடைபெற்றன.

நாட்டில் இன்று நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு இன்றைய அரசு எவ்விதத்திலும் காரணமல்ல. முன்னைய அரசு கடைப்பிடித்த தவறான அணுகுமுறைகளே நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தன. எமது நாடு இனிமேல் ஒருபோதுமே மீளமுடியாத 06

## வறிய குடும்பங்களுக்கு படையினர் வீடு வழங்கல்

### யாழ்ப்பாணம், முல்லைத்தீவில் கையளிப்பு



யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவிலுள்ள இரண்டு குடும்பங்களுக்கு இலங்கை இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு புதிய வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

வறிய குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் வீடுகள் நிர்மாணிப்பு திட்டத்தின் கீழ் இப்புதிய வீடுகளின் சாவிகள் அந்தந்த குடும்பங்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் 64ஆவது 06

### தொல்பொருளியல் திணைக்களத்தின் செயற்பாட்டில் அதிருப்தி;

## நெடுந்தீவு வெடியரசன் கோட்டை தமிழரது பண்பாட்டு மரபியல் அடையாளம்

**பாதுகாக்க உதவுமாறு ஜனாதிபதிக்கு சிறிதரன் எம்.பி கடிதம்**



**பருத்தித்துறை விசேட நிருபர்**

தமிழர் தம் பண்பாட்டு, மரபியல் அடையாளமாகப் பேணப்பட்டு வரும் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை பௌத்த தாதுகோபுரத்தின் எச்சமாக நிறுவுவதற்காக தொல்பொருளியல் 06

## ஏப்ரல் 05 ஆம் திகதி முதலாம் தவணை விடுமுறை 06

### இம்முறை 03 கட்டங்களாக வழங்க ஏற்பாடு

## அரசுக்கு பலம் சேர்க்கும் வகையில் இணைந்து செயற்பட முன்வரவும்

### முன்னாள் ஜனாதிபதியிடம் சர்வ மதத் தலைவர்கள் வேண்டுகோள்



அரசாங்கத்துடன் நேரடியாக இணைந்து முன்னரைப் போன்று மீண்டும் மக்கள் பணிக்கு தன்னை அர்ப்பணித்து செயல்பட முன் வரவேண்டுமென சர்வமதத் தலைவர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு 06





தொழில்சார் சட்டத்துறைக்கும் நாட்டுக்கும் 50 வருடங்கள் சேவையாற்றியுள்ள சட்டத்தரணிகளைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக கொழும்பு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சினமன் கிராண்ட் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த விருது விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய விருது வழங்கி கௌரவித்த போது பிடிக்கப்பட்ட படம். அத்தோடு பிரதம நீதியரசர் ஜயசூரிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். ஸுஹைர், ரத்னசபாபதி ஆறுமுகம் ஜகதீசன் ஆகியோருக்கும் விருது வழங்குவதையும் படங்களில் காணலாம். இவ்விழாவில் விருது பெற்றவர்களில் முன்னாள் பிரதம நீதியரசர் அசோக்க டி சில்வா, முன்னாள் நீதியரசர் டி.ஜே.டி. எஸ் பாலபட்டபெந்தி, கனகரத்தினம் கணேச யோகன், எஸ்.எஸ். எம். சவாஹிர் உள்ளிட்டோரும் இடம்பெற்றிருந்தனர்.

# விமானப்படையின் மிகச்சிறந்த விமானப்படை வீர, வீராங்கனைகளுக்கான விருது வழங்கும் விழா




இலங்கை விமானப்படையின் முன்னேற்றத்திற்காக ஆக்கப்பூர்வமான கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் தமது தொழிலுக்கு அப்பால் சென்று திறன்களை வெளிப்படுத்திய சிறந்த விமானப்படை வீர, வீராங்கனைகளை அங்கீகரிப்பதற்காக வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விமானப்படையின் சிறப்பு விருது வழங்கும் வைபவம் கடந்த 2023 மார்ச் 15ம் திகதி கட்டுநாயக்க விமானப்படை ஈகிள் லகூன் மண்டபத்தில் இடம்பெற்றது.

2022 ஆம் ஆண்டில், விமானப்படையின் ஒவ்வொரு தொழில் பிரிவிலும் சிறந்த விமானப்படை வீரர் தெரிவானது அப்பிரிவின் பணிப்பாளர் குழுவின் மேற்பார்வையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முறையின்படி இடம் பெறும்,

(19ஆம் பக்கம் பார்க்க)



பாகிஸ்தானின் தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க மற்றும் நிலையத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர் ஆகியோரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் வைத்து பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் பர்கி சந்தித்த போது...

# தொண்ணூறாவது அகவையில் கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயம்

கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயத்தின் தொண்ணூறு ஆண்டுகால வரலாற்றில் படைக்கப்பட்ட சாதனைகள் பல. "தன்னுடைய நெறிகளைத் தானே வகித்திடவும் பிறரின் நலனில் பொறுப்புணர்வுடன் செயலாற்றும் தற்துணிவுடைய பெண்களை உருவாக்குவதை குறிக்கோளாகக் கருதி தலைநகர் கொழும்பில் சைவத்தமிழ் மகளிருக்கு தனித்துவமான வித்தியாலயம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் எனும் எண்ணத்திற்கு செயலுருக் கொடுத்தவர்கள் முப்பெரும் பெண்மணிகளான இராசமுத்து சதாசிவம், சொர்ணாகாந்தி நல்லைநாதன், பாலாம்பிகை நமசிவாயம் ஆகியோராவர்.

எழுச்சி ஏட்டில் மட்டுமல்ல செயலுருவிலும் நிகழ வேண்டும் என்பதில் உறுதியாகச் செயற்பட்டதன் பயனாகவே உயர்குணமும், முற்போக்குச் சிந்தனையுமுடைய தமிழ் மாணவர் சமூகத்தை உருவாக்குவதில் வித்தியாலயம் பெரும்பணியாற்றுகின்றது. சைவப் பெண்களுக்கு கல்வியூட்டல் என்னும் கருப்பொருளை ஆதார சுருதியாகக் கருதி 1932ம் ஆண்டு விஜயதசமி நன்னாளில் வித்தியாரம்பம் இடம்பெற்றது. ஏழுமாணவிகளுடன் பீட்டர்ஸ் ஒழுங்கையிலுள்ள பெசன்ட் இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டு, ஒருவருடத்தின் பின்னர் உருத்திரா மாவத்தைக்கு நிரந்தரமாக இடமாற்றப்பட்டது.

"அறிவார்ந்த சமூகத்தினை உருவாக்குதல்" எனும் தூர நோக்குடன் செயற்படத் தொடங்கியமையே தனித்துவத்துடன் மிளிர்வதற்கு வித்திட்டது. சைவமங்கையர் கழகம், வித்தியாலய நிர்வாகம் இணைந்தே பாடசாலைச் செயற்திட்டங்களை மேற்கொள்வதுடன் பெண்களே முழுமையான நெறிப்படுத் தலை வகிக்கின்றனர். அவ்வகையில் கழகத்திற்கு தலைவியாக திருமதி தம்பையாவும், வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராக சொர்ணகாந்தி நல்லைநாதனும் பணியாற்றியமை சிறப்பிற்குரியதாகும்.



ஆரம்பத்தில் ஒரு கட்டடத்துடன் ஆரம்பிக்கப்பட்டபோதும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும், தேவைகளுக்கு ஏற்பவும் பௌதீக வளங்களையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதிலும் நிர்வாகத்தினர் சிறப்புறச் செயற்பட்டனர். வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக நாகம்மாள் காசிப்பிள்ளை பணியாற்றத்தொடங்கினார். அவரைத் தொடர்ந்து கனகசபை, இந்திராணி பத்மநாதன், மனோன்மணி ஆறுமுகம், ஞானேஸ்வரி பாலச்சந்திரன், பத்மா கஜேந்திரதாஸ், சசிதேவி சிவனேசன், சாந்தினி வேலுப்பிள்ளை, தவநாயகி பாலசிங்கம் ஆகியோர் தமது சேவைகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்தனர். வித்தியாலயத்தின் பத்தாவது அதிபராக தற்போதைய அதிபர் அருந்ததி இராஜவிஜயன் பணியைத்தொடர்ந்து செவ்வனே செயற்படுத்துகின்றார்.




அவ்வகையில் தற்போதைய அதிபரின் நெறிப்படுத்தலும், தலைமைத்துவமும்,

(19ஆம் பக்கம் பார்க்க)



யாழ். நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய ஆண்டு 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரிவினாத்தாள்கள் பாடசாலையின் அதிபரிடம் கையளிக்கப்பட்டன. வினாத்தாள் கொள்வனவு மற்றும் நிகழ்வுக்காக யாழ்.மாநகரசபை உறுப்பினரும் தேசோதய தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன், தனது துனைவியார் அமரர் லீலாதேவியின் நினைவாக நிதிப் பங்களிப்பு செய்திருந்தார்.

(படம் வேலணை குறூப் நிருபர்)

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
**நகர அபிவிருத்தி அதிகாரசபை**

செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்திற்கான முன்மொழிவுகளுக்கான அழைப்பு (RFP)

**கொழும்பு கோல்ட் சென்டர் கொழும்பு 11,**

வருடாந்த குத்தகை அடிப்படையில் 10 ஆண்டு காலத்திற்காக

**88,900,000.00 ரூபா**
(எண்பத்து எட்டு மில்லியனே ஒன்பது இலட்சம் ரூபா)
**வருடாந்த குத்தகை வாடகை அடிப்படை**

கிடைக்கும் வசதிகள்
- ✓ 88 கடைகள் மற்றும் ஓர் உணவு மையம்
- ✓ இலகுவான அணுகல்
- ✓ போதுமான அளவு வாகன நிறுத்தும் இடங்கள்
- ✓ வங்கி வசதிகள்
- ✓ சி.சி.டி.வி கெமரா மற்றும் பாதுகாப்பான சூழல்
- ✓ மைய ஏசி அமைப்புடன் முகப்புப் பகுதி
- ✓ நகரேணிகள் (Escalator)

**இந்த RFP இன் பிரதான நோக்கங்கள்**

கொழும்பு கோல்ட் சென்டரை உலகப் புகழ்பெற்ற மாணிக்கம் மற்றும் நகைகளின் மையமாகவும் அதனுடன் தொடர்புபட்டதாக திருமணப் பொருட்கள், அழகுக் கலை நிலையம், திருமண திட்டமிடல் அலுவலகங்கள், திருமண புகைப்பட நிலையங்கள், ஆடம்பர பொருட்கள் வர்த்தகம் மற்றும் வேறு போட்டிரீதியான பயன்பாடுகள் போன்ற வர்த்தக வாய்ப்புகளை நிறுவுதல்.



- ஆர்வமுடைய தரப்புகள் (வணிக வளாக முகாமையாளர்/ இயக்குனர்) பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 6ஆவது மாடியில் நிதிப் பிரிவுக்கு வரி உட்பட **இலங்கை ரூபா இருபத்தி ஐயாயிரம் (இ. ரூபா 25,000)** மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி **2023 மார்ச் 22 ஆம் திகதி தொடக்கம் 2023 மே 22 ஆம் திகதி** வரை வேலை நாட்களில் **மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை** என்ற முகவரியில் இருந்து RFP ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.
- விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பத்தரமுல்லை, "செத்சிறிபாய" கட்டம் 1, 9அவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர்கூடத்தில் **2023 ஏப்ரல் 26ஆம் திகதி மு.ப. 10.00க்கு** இடம்பெறும்.
- தொழில்நுட்ப முன்மொழிவுடன் ரூபா 10,000,000 விலைமனு பிணைத் தொகை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
- முன்மொழிவுகளை ஏற்பது **2023 ஜுன் 22ஆம் திகதி மு.ப. 11.00க்கு** நிறைவடையும் என்பதோடு **பத்தரமுல்லை, சுஹுருபாய, 18ஆவது மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு பணிப்பாளர் நாயகத்தின் (தொழில்நுட்பம்)** அலுவலகத்தில் மேல் குறிப்பிடப்பட்ட நேரம் முடிவுற்ற பின் தொழில்நுட்ப முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் நேரத்திற்கு விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.

பணிப்பாளர், மெய் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம். தொலைபேசி: 011-2875921, 011-2875916-20, நீடிப்பு: 2960-2967, கைபேசி: 071 2798593, தொலைநகல்: 0112875900, மின்னஞ்சல்: directorred@uda.gov.lk

**தலைவர், நிலையான அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (SCANC),**
**நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சு, 17ஆவது மற்றும் 18ஆவது மாடி, சுஹுருபாய பத்தரமுல்லை.**

# ஜனாதிபதியின் தலையீட்டால் கைவிடப்பட்ட போராட்டங்கள்



**சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியுள்ள 2.9 பில்லியன் டொலர் கடன் அங்கீகரிக்கப்படவுள்ளது. சில தினங்களுக்கு முன்னர்தான் அரச ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துக் கொள்ளும் நோக்கில் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் உள்ளிட்ட வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் சில குழுக்களையும் சந்திப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.**

வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளாமல் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி ரணிலுக்குப் புறம்பாக, ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்கா, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கா மற்றும் ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரியவும் தொழிற்சங்கத் தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை மேற்கொண்டார்கள். இந்தப் போராட்டத்தின் தீர்க்கமான நாளாக அமைந்திருந்தது கடந்த 15ம் திகதியாகும். கடந்த திங்கட்கிழமை அதிக நேரத்தை ஜனாதிபதி ஒதுக்கியிருந்தது வேலைநிறுத்தப் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காகும்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை சாதகமான முறையில் நிறைவடைந்தது. பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி தரப்பினரிடமிருந்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது ஜனாதிபதியுடனும் ஜனாதிபதி செயலாளருடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதாகும்.

இரண்டாவது பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியின் செயலாளரும், சிரேஷ்ட ஆலோசகருமான கலாநிதி சமரதுங்கவும் கலந்து கொண்டிருந்தார். ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்காவும் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய வங்கி பிரதிநிதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள், வைத்தியர்கள் என பலருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதுடன், அவர் வரும் வழியில் ஒரே விடயத்தை தொடர்ந்தும் கூறி அலுத்துவிட்டது எனக் கூறினார்.

“எனது பேச்சை பதிவு செய்து இவர்களுக்குப் போட்டுக் காட்ட முடியாதா?. வரி திருத்தம் தொடர்பில் தெளிவு படுத்தியே வாய் வலிக்கின்றது” என ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல கூறிய போது அங்கிருந்த அதிகாரிகள் சிரித்தார்கள்.

“சேரின் வாய் வலித்தாலும் வரி தொடர்பில் கூறிய விடயங்களின் காரணமாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக்களை மாற்ற முடிந்தது” என அங்கிருந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

தபால் சேவையையும் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்துமாறு கடந்த திங்கட்கிழமை மாலை ஜனாதிபதி ரணில் ஜனாதிபதி செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார். அங்கிருந்த வஜிர உடனடியாகவே அத்தியவசிய சேவைகள் சட்டத்தில் உள்ள சில பிரிவுகளை நினைவுபடுத்தினார்.

“இந்தச் சட்டத்திற்கு அமைய அத்தியவசிய சேவை உத்தரவினை மீறுவோரின் உடைமைகளை அரசுடைமையாக்க முடியும்” என வஜிர கூறிய போது தலையை ஆட்டி ஜனாதிபதி எதையும் கூறவில்லை.

சட்டத் துறையில் 50 வருடங்களை நிறைவு செய்த சட்டத்தரணிகளுக்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த திங்கட்கிழமை மாலை சினமன் கிரேண்ட் ஹோட்டலுக்குச் சென்றார். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததோடு, அவர்கள் இருவரும் சட்டக்கல்லூரியிலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்திலும் சமகாலத்தில் படித்தவர்களாகும்.

சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஜனாதிபதியை பிரதம அதிதியாக அறிவிப்பதற்கு முன்மொழிந்த போதிலும், தான் விருது பெறும் ஒருவர் என்பதால் பிரதம நீதியரசரை பிரதம அதிதியாக அழைக்குமாறு ஜனாதிபதி அவர்களுக்கு அறிவித்திருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான டப்ளிவ். டீ. ஜே. செனவிரத்னவும் இங்கு விருது பெற்றதோடு, ஜனாதிபதி தனக்கான விருதினைப் பெற்றது தனது வகுப்புத் தோழனான பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவிடமிருந்தாகும்.

50 வருட நிறைவுக்கான விருது வழங்கும் பட்டியலில் 9வது சட்டத்தரணியாக ஜனாதிபதிக்கு விருது வழங்கப்பட்டது. எனினும் ஏனைய விருது பெறுனர்களுக்கு கிடைத்த கைதட்டலைத் தாண்டி முழு அரங்குமே அதிரும் வகையில் அவருக்கு பலத்த கைதட்டல் கிடைத்தது.

விருது வழங்கும் நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற இரவு விருந்துபசார நிகழ்விலும் கலந்து கொண்ட ரணில், தனது பழைய நண்பர்களுக்கு அருகிலேயே சென்று அவர்களோடு பேச மறந்துவிடவில்லை. இரவு விருந்துபசாரம் இனிய இசை நிகழ்ச்சியோடு இடம்பெற்ற போது சட்டத்தரணியும், பிரபல பொப் இசைப் பாடகருமான ஷெஹான் வீரசிங்கவுக்கு அருகில் சென்ற ஜனாதிபதி முதலில் சட்டத்துறையில் 50 வருடங்களை நிறைவு செய்தமைக்காகக் கிடைத்த விருதுக்காக அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். அத்தோடு நிறுத்திக் கொள்ளாத ஜனாதிபதி, நிகழ்வில் பாடல் ஒன்றைப் பாடுமாறும் அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதியின் அழைப்பை மனமுவந்து ஏற்றுக் கொண்ட பாடகர் ஷெஹானும் விஜய குமாரதுங்கவின் “ரெல்லென் ரெல்லட்ட” என்ற பாடலை அனைவரின் பலத்த கரகோசங்களுக்கு மத்தியில் பாடினார். ஜனாதிபதியும் அப்பாடலுக்கு கரகோசம் இட்டதோடு, பாடலை ரசித்து இசைக்கு ஏற்றவாறு கைகால்களை அசைத்துக் கொண்டிருந்தார். தனது பழைய தோழர்களுடன் பழைய கால நினைவுகளை மீட்டியவாறு ஜனாதிபதி அங்கு நள்ளிரவு வரைக்கும் தரித்திருந்தார்.

மூன்றாவது பதவிக்காலத்திற்காகத் தெரிவான சீன ஜனாதிபதி ஷி ஜின் பின்னுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு ஜனாதிபதி மறந்துவிடவில்லை. கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில், ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கா உள்ளிட்ட தரப்பினர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை வெற்றிபெற்றதுடன், அனேக தொழிற்சங்கங்கள் இந்தப் பேச்சுவார்த்தையினால் வேலைநிறுத்தப் போராட்டத்திலிருந்து விலகிக் கொண்டன.

சீனாவின் பிரதான எண்ணெய் விநியோக நிறுவனமான சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகள் இலங்கையில் எண்ணெய் விநியோகம் செய்வது தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்டோரை சந்தித்து கலந்துரையாடினர். பெட்ரோலிய உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் தொடர்பான முன்மொழிவுகளை சினோபெக் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

வேலைநிறுத்தம் நடைபெறும் தினத்தில் பணிக்குச் செல்லும் பணியாளர்களுக்கு உதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி பாதுகாப்பு துறை பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதன்போது புகையிரத மற்றும் துறைமுகங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் ஜனாதிபதியின் செயலாளர் உள்ளிட்டோருக்கு பணிப்புரை விடுத்தார்.

பல நிறுவனங்களில் பணியாளர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததால், ஏற்றுக்கொள்ளக்கூடியகாரணங்களைத்தவிர வேலைக்குச் சமூகமளிக்காத அனைவரினதும் அன்றாட ஊதியத்தை குறைக்குமாறு தொழில் ஆணையாளர் அறிவுறுத்தியிருந்தார். அன்றைய தினம் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் இலங்கையில் பொருத்தப்பட்ட பல மோட்டார் சைக்கிள்களை ஜனாதிபதி செயலகத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்விலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

அதன் பின்னர், சீன அரசாங்கத்தினால் இலங்கை பொலிஸாருக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ சீருடைகளை பெற்றுக்கொள்ளும் நிகழ்விலும் அமைச்சர் டிரான் அலசுடன் ஜனாதிபதி கலந்துகொண்டார். இதன் போது பொலிஸ் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதாக சீன பிரதிநிதிகள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர் டிரான் ஆகியோரிடம் உறுதியளித்தனர்.

வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெற்ற தினம் மாலை ஜனாதிபதி செயலகத்திற்கு வந்த அமைச்சர்கள் சிலர் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர்.

“அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளது. அவர்களுக்கு ஜனாதிபதியிடமிருந்து கடிதம் ஒன்று கிடைத்துள்ளதாகவே கூறுகின்றனர்” என்றவாறு பேச்சை ஆரம்பித்தார் வஜிர அபேவர்தன.

“அவர்கள் இரண்டாகப் பிரிந்து விட்டார்கள். இவர்கள் அரசியல் மற்றும் சொந்த தேவையின் நிமித்தமே செயற்படுகின்றார்கள் என்பதை மக்கள் அறிவார்கள்” என்றார் அமைச்சர் பந்துல.

“துறைமுகத்திலும் கொள்கலன் போக்குவரத்திற்கு எந்த தடங்கல்களும் ஏற்படவில்லை. எனினும் முக்கிய கப்பல்களில் பணியாளர்களை ஏற்றிச் செல்லும் துறைமுகத்தின் சிறிய கப்பல்களின் கெப்டன்கள் அவர்களை ஏற்றிச் செல்ல முடியாது எனக் கூறியிருக்கின்றார்கள். என்றாலும் நாம் கடற்படையினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு பணியாளர்களை கப்பல்களுக்கு அனுப்பினோம். இதனால் பிரச்சினைகள் ஏற்படவில்லை” என ஜனாதிபதி பணிக்குழு பிரதானி சாகல பதிலளித்தார்.

“துறைமுகத்திற்குச் சொந்தமான ஜே.சி.டியினைச் சேர்ந்தோர் பணியாற்றவில்லை. என்றாலும் அது பெரிதாக தெரியவில்லை. காரணம் பெரிய கப்பல்கள் இந்த முனையத்துக்கு வராததேயாகும்” என்றவாறு அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும் இணைந்து கொண்டார்.

“லால் காந்த ஒன்றைக் கூறுகிறார், வசந்த சமரசிங்க இன்னொன்றைக் கூறுகின்றார். பணியாளர்கள் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்” என அமைச்சர் பந்துல கூறினார்.

இதனிடையே ஜனாதிபதி ரணிலை நோக்கி வந்த அதிகாரி ஒருவர், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களின் மக்கள் வங்கியில் இயங்கும் வங்கிக் கணக்குகளை வேறு வங்கிகளுக்கு மாற்றுவதற்கு அனுமதி கேட்பதாகக் கூறினார்.

“ஆமாம், என்னிடம் பேசிய தனியார் துறை வியாபரிகள் சிலரும் இந்தக் கதையைக் கூறினார்கள்” என வஜிரவும் கூறினார்.

உடனே இது பற்றி ஆராய்ந்து பார்த்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். வியாழக்கிழமை பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி ரணில் நிதி அமைச்சுக்குச் சென்றார். அங்கு IMF சான்றிதழ் கிடைப்பது தொடர்பிலும், அதன் பின்னர் செயற்படும் முறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

“தொழிற்சங்கங்கள் எதிர்பார்த்ததைப் போல் வேலைநிறுத்தம் வெற்றிபெறவில்லை. தொழிற்சங்கங்கள் எதிர்பார்த்த மதிப்பீட்டைப் பெறவில்லை” என்றவாறான ஒரு கருத்தை நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

“துறைமுக ஊழியர்கள் மற்றும் புகையிரத சாரதிகள் ஆகியோர் சில தடைகளை மேற்கொள்ள முயற்சித்தாலும் ஜனாதிபதி தலையிட்டதால் பிரச்சினைகள் ஏற்படாதவாறு செயற்பட முடிந்தது. தற்போது 40 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது” எனக் கூறிய ரஞ்சித் சியம்பலாபிட்டிய, இதனை தானும் ஊடகங்களுக்கு தெரிவித்ததாகவும் கூறினார்.

இதன் போது தான் முன்னைய தினம் அறிந்து கொண்ட மக்கள் வங்கி தொடர்பான தகவலையும் வெளிப்படுத்திய ஜனாதிபதி, அது பற்றி ஆராய்ந்து பார்க்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். வரும் 20ம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் கடன் அனுமதி கிடைத்ததன் பின்னர் அந்த ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி நிதி அமைச்சின் அதிகாரிகளிடம் தெரிவித்தார். அதன் பின்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

எம்.எஸ். முஸப்பிர்

# இந்திய ரூபாய் Nostro கணக்கை ஆரம்பித்துள்ள செலான் வங்கி



அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, மும்பாய், இந்தியன் வங்கியுடன் இந்திய ரூபாய் (INR) Nostro கணக்கை ஆரம்பித்துள்ளது. இதனூடாக, இரு நாடுகளுக்குமிடையே இறக்குமதி மற்றும் ஏற்றுமதியில் ஈடுபடுவோருக்கு, பரஸ்பர அனுகூலமளிக்கும் வகையில் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.


சார்க் பிராந்தியத்தினுள் வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் இந்திய ரூபாயை ஏற்றுக் கொள்ளக்கூடிய அந்நிய நாணயமாக இலங்கை மத்திய வங்கி அறிவித்திருந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் செலான் வங்கியின் சர்வதேச செயற்பாடுகளுக்கான உதவி பொது முகாமையாளர் திலன் விஜேகுணவர்தன கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையும் இந்தியாவும் பரஸ்பர வணிக பங்காண்மை வளர்ச்சியை அண்மைக் காலமாக அனுபவித்த வண்ணமுள்ளன. இந்தியன் வங்கியுடன் எமது Nostro கணக்கை ஆரம்பித்துள்ளமையினூடாக, வர்த்தக, பணப் பரிமாற்றங்கள் மற்றும் திறைசேரிசார் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு உதவியாக அமைந்திருக்கும். எமது பெறுமதி வாய்ந்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வாடிக்கையாளர்களுக்கு இரு நாடுகளுக்குமிடையே சர்வதேச வியாபாரங்களை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், அதனூடாக எமது சந்தையை நாம் மேலும் வலிமைப்படுத்தியுள்ளோம்.” என்றார்.

116 வருடங்களுக்கு மேலாக இந்தியாவின் நிதிச் சேவைகள் துறையில் பிரசன்னத்தைக் கொண்டுள்ள இந்தியன் வங்கியுடனான இந்தப் பங்காண்மையினூடாக, செலான் வங்கிக்கு அதன் உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு இந்திய ரூபாயில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அமெரிக்க டொலர்கள் அல்லது இதர சர்வதேச நாணயங்களில் வியாபாரங்கள் அல்லது பணப் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் தேவையை இல்லாமல் செய்துள்ளது.

அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, அதிநவீன தொழில்நுட்பம், புதுமையான கணக்குகள் மற்றும் வகுப்பில் சிறந்த சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னத வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான தொலைநோக்குடன் செயல்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர, சில்லறை மற்றும் நிறுவனங்கள் என வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள வங்கி, நாடு முழுவதிலும் 540 க்கும் அதிகமான வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளும் அலகுகளைக் கொண்டுள்ளது. பிற்ச் மதிப்பீடுகளால் செலான் வங்கி, தேசிய நீண்டகால மதிப்பீடு ‘A’(lka) ஆக தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனூடாக செயல்திறன் சிறப்பைக் கொண்ட நிதி ரீதியாக நிலையான அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனைகள் செலான் வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்குவதற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
"Friday Special Buriyani
RS. 455/- PER PACK
During Weekends
Lamprais Available
Rs.865.00 per pack
Order Now.
AA CEYLON
Estd. 1904
VISIT -
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha, Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)




உங்கள் இறக்குமதி/ஏற்றுமதிகளை
இந்திய ரூபாயில் இலகுவாக முன்னெடுக்க
செலான் வங்கிக்கு வாருங்கள்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள், இளங்கோ 0112 456 428
அல்லது அருகிலுள்ள செலான் வங்கிக் கிளையை அணுகுங்கள்.
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

# சர்வதேச கடனுதவிகளுக்கு முட்டுக்கட்டையாக அமையும் வரி எதிர்ப்புப் போராட்டம்!

**வரி அதிகரிப்புக்கு எதிராகத் தொழிற்சங்கங்கள் இணைந்து கடந்த 15 ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன. ரயில்வே திணைக்களம், துறைமுக அதிகாரசபை, வங்கி, மருத்துவம், ஆசிரியர் சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் இவ்வேலைநிறுத்தத்தில் பங்கேற்பதாக அறிவித்திருந்தன.**

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையைப் பின்புலமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள வரி அதிகரிப்புக்கு எதிராகவே இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சுமார் 40 இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் இதில் கலந்து கொண்டிருந்த போதும், மக்களுக்கான சேவைகளைப் பாதிப்பு இன்றிப் பெற்றுக் கொடுக்க முடிந்ததாக நிறுவனங்களின் தலைவர்கள் அறிவித்திருந்தனர். குறிப்பாக மக்களின் நடமாட்டத்துக்கு முக்கியமான போக்குவரத்துத் துறை விசேடமாக பயணிகள் பஸ் போக்குவரத்து எவ்வித தடையுமின்றி மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்துகள் இயங்கியிருந்ததுடன், தனியார்பஸ் உரிமையாளர்கள் சங்கம் வேலைநிறுத்தத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கவில்லை. இருந்தபோதும் வைத்தியர்களின் வேலைநிறுத்தத்தால் குறித்த எண்ணிக்கையான நோயாளர்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்திருக்கும் இக்கட்டான சூழ்நிலையில், தொழிற்சங்கங்கள் இவ்வாறு வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பது சரியா, தவறா என்ற விவாதம் மக்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படுகிறது.

இருந்தபோதும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து சாதகமான சமிக்ஞைகள் கிடைத்திருக்கும் இன்றைய நிலையில் இவ்வாறான போராட்டங்கள் நிச்சயமாக நாட்டை பாதகமான நிலைக்கே கொண்டு செல்லும் என்பதை பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிடத் தவறவில்லை.

விசேடமாக நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவுக்கேனும் முன்னேற்றுவதற்குத் தற்பொழுது காணப்படும் தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியையே பார்க்க முடியும். இது விடயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, இவற்றில் முன்னேற்றமும் காணப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெறுவதாயின் இலங்கை ஏனைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களிடம் பெற்றுக் கொண்ட கடன்களை மறுசீரமைக்க வேண்டும் என்ற நிபந்தனை சர்வதேச நாணய நிதியத்தின் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கை பல மாதங்களாகத் தனக்கு கடன் வழங்கியவர்களுடன் பேச்சுக்களை நடத்தியது. இந்தியா, சீனா போன்ற நாடுகள் இதில் முக்கியமானவையாகும்.

சீனா ஆரம்பத்தில் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்காத போதும், கடந்த சில நாட்களுக்கு முன்னர் கடன் மறுசீரமைப்புக்குத் தாம் தயார் என்பதை எழுத்துமூலம் இலங்கைக்கு அறிவித்திருந்தது.

எனவே, இலங்கைக்குக் கடன் வழங்கிய அனைவரும் கடன் மறுசீரமைப்புக்குத் தயார் என்ற விடயம் சர்வதேச நாணய நிதியத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் இலங்கைக்கான கடன் உதவி எதிர்வரும் சில வாரங்களில் கிடைக்கலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னடைவுக்கு மத்தியில் இது பாரியதொரு முன்னேற்றம் என்றே கூற வேண்டும். ஏனெனில், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கக் கூடிய கடனுதவியானது ஒட்டுமொத்தப் பிரச்சினைக்குமான தீர்வு என்று கூறிவிட முடியாதுதான்.

இருந்தாலும் நாடு மீட்சி பெறுவதற்கு இது ஒரு ஆரம்பப் புள்ளியென்றால் அது மிகையல்ல. கடன்களை மீளச் செலுத்த முடியாத வங்குரோத்து நிலையை அடைந்துள்ளோம் என இலங்கை அறிவித்ததைத் தொடர்ந்து பல்வேறு திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு விட்டன. உதாரணமாகக் கூறுவதாயின், வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக வெளிநாடுகள் நிதியுதவிகளை வழங்கி வந்திருந்ததால் மத்திய வங்கியின் அறிவிப்பைத் தொடர்ந்து குறித்த திட்டங்களுக்கான அடுத்தகட்ட நிதி வழங்கப்படவில்லை. இதனால் அபிவிருத்திப் பணிகள் யாவும் இடைநடுவில் கைவிடப்பட்டன.

இதனை சுருக்கமாகக் கூறுவதாயின், கடன் மீளச்செலுத்த முடியாத ஒருவனுக்கு எந்தவொரு நபரும் தெரிந்துகொண்டே சென்று மீண்டும் கடன்கொடுக்கப் போவதில்லை.

அதுபோலவே இலங்கையின் நிலையும் காணப்படுகிறது. எனவே, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்துக்காக அளிக்கப்படும் கடன்மறுசீரமைப்பு என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் ஏற்கனவே இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திக்கான நிதியளிப்புக்களும் மேற்கொள்ளப்படும்.

இதனால் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி மாத்திரமன்றி ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கக் கூடிய கடன் உதவிகளும் நாட்டை வந்து சேருவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.



**சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கைகூடி வந்துள்ள இவ்வேளையில், அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் போராட்டத்தின் பின்னணியில் செயற்படும் எதிரணி அரசியல் கட்சிகள்!**

**ரூபா ஒரு இலட்சத்துக்கு மேல் மாதாந்த வேதனம் பெறுவோரிடமிருந்து வரியை அறவிட்டு, வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வோரின் வாழ்வாதாரத்துக்கு உதவுவதைத் தடுக்க நினைப்பது எவ்வகையில் நியாயம்?**



இதனால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மிகவும் முக்கியமானது என்பதே பொருளாகும்.

மறுபக்கத்தில் கடன்களை வழங்கும்போது விதிக்கப்படக் கூடிய நிபந்தனைகள் குறித்த கருத்தாடல்களும் காணப்படுகின்றன. சாதாரணமாக நாம் ஒரு வங்கியில் சென்று கடனைப் பெறும்போது பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டியிருக்கும். அதேபோலவே நாடொன்றுக்குக் கடன் வழங்கும் போது கடன் வழங்குனர்கள் நிச்சயமாக நிபந்தனை விதிப்பார்கள் என்றே எதிர்பார்க்கலாம்.

சர்வதேச நாணய நிதியமும் அவ்வாறே இலங்கையிடம் சில மறுசீரமைப்புக்களை வலியுறுத்தியுள்ளது. இதன் ஒரு அங்கமே வரி மறுசீரமைப்பாகும்.

இலங்கை இவ்வாறு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியுறுவதற்கு நாடு பின்பற்றிய வரி மறுசீரமைப்பு பிரதான காரணமாகும். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு சில மாதங்களில் மக்கள் மத்தியில் பிரபல்யமடைவதை நோக்காகக் கொண்டு மேற்கொண்ட வரி மறுசீரமைப்புத் தீர்மானம் நாட்டுக்குப் பாதகமாக அமைந்தது. இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களில் அதுவும் ஒன்றாகும்.

வற் வரி உட்பட பெரும்பாலான வரிகள் கணிசமானளவு குறைக்கப்பட்டன. தமக்கு ஆதரவு வழங்கும் ஒரு சில பாரிய வர்த்தகர்களுக்கு சலுகை அளிக்கும் நோக்கில் இவ்வாறு வரிக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டது என்ற விமர்சனங்கள் ஒருபுறம் காணப்பட்ட அதேவேளை, அரசாங்கத்துக்குக் கிடைக்க வேண்டிய வரி வருமானம் பெருமளவில் வீழ்ச்சியுற்றது. இதனால் இலங்கையால் கடன் மீளளிப்புக்களை வழங்க முடியாத நிலைமை மேலும் தீவிரமடைந்தது.

இருந்தபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வரிக்கொள்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளிலும் வரி மறுசீரமைப்பு விடயம் உள்ளடங்கியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் வரி அறவீட்டில் மாற்றங்கள் தேவை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதாவது நேரடி வரி அறவீடுகள் அதிகரிக்கப்பட்டு மறைமுக வரி அறவீடுகள் குறைக்கப்பட வேண்டும். அதேநேரத்தில் வரி வருமானம் என்பது நாட்டுக்கு முக்கியமானதாக அமைந்திருக்கும் பின்னணியில், வரி மறுசீரமைப்பு என்ற விடயத்தை முன்னிலைப்படுத்தி தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அண்மையில் மேற்கொண்ட வரி மறுசீரமைப்பில் மாதாந்த வருமானமாக ரூபா ஒரு இலட்சத்துக்கு மேல் பெற்றுக் கொள்பவர்களிடமிருந்து வரி அறவிடப்படுகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தொழிற்சங்கங்கள் கிளர்ந்து எழுந்துள்ளன. நாடு இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீட்சிபெற மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதைத் தொழிற்சங்கங்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றன என்று பொருளாதார நிபுணர்கள் அபிப்பிராயம் கூறுகின்றார்கள்.

அதேநேரம், இந்தத் தொகையை விட குறைந்தளவு மாத வருமானத்தைப் பெறும் குடும்பங்களே அதிகமாக உள்ளன. குறைந்த வருமானங்களைப் பெறும் குடும்பங்கள் தற்போதைய விலைவாசி அதிகரிப்பினால் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில், அவ்வாறானவர்களுக்கு உதவியளிக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உள்ளது. எனவே, சக இலங்கையர்களை பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே வரி செலுத்துவோருக்கு முன்வைக்கப்படுகின்ற வேண்டுகோள் ஆகும்.

இருந்தபோதும் தொழிற்சங்கப் போராட்டங்கள் அரசாங்கத்தின் முயற்சிகளை நிச்சயமாக சீர்குலைத்துவிடும். அது மாத்திரமன்றி, போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கான சம்பளங்கள் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான தொழிற்சங்கப் போராட்டங்கள் நாட்டை மீட்சிபெறுவதில் மாத்திரமன்றி, ஒட்டுமொத்த மக்களையும் சிக்கல்களுக்கே உள்ளாக்கும் என்பது நன்றாகவே புரிகின்றது.

**நாடு இக்கட்டான நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதாயின் மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை தொழிற்சங்கங்கள் புரிந்து கொள்ளத் தவறுவதாக பொருளாதார நிபுணர்கள் அபிப்பிராயம்!**



**இன்றைய தொழிற்சங்கப் போராட்டங்கள் நாடு மீட்சிபெறுவதை மாத்திரமன்றி, ஒட்டுமொத்த மக்களையும் சிக்கல்களுக்கே உள்ளாக்கும் என்பது நன்றாகவே புரிகின்றது**




# அரசாங்கத்தின் எட்டு மாதகால கடினஉழைப்பின் பலாபலன் படிப்படியாகத் தென்படுகின்றது

## அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவுடன் சந்திப்பு



**கடந்த எட்டு மாதங்களில் அரசாங்கம் கடுமையாக உழைத்தமையையே இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்திருப்பதன் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது என்று நீதி மற்றும் சிறைச்சாலை நடவடிக்கைகள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அமைச்சர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி போராட்டக்காரர்களை கைது செய்ததுடன், தமிழ் இளைஞர்கள் பலரும் எந்தவித குற்றச்சாட்டும் இன்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதை சர்வதேச சமூகம் கண்டித்துள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்திற்குப் பதிலாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந்த முயற்சியின் முன்னேற்றம் என்ன?**

*பதில்: அச்சட்டத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அமைச்சரவை ஒப்புதல் அளித்தவுடன் வர்த்தமானியாக வெளியிட வேண்டும். இப்போது, வர்த்தமானி நிலையில் உள்ளதால், மூன்று மொழிகளிலும் மொழிபெயர்க்க வேண்டியுள்ளது.*

**கே: ஜெனிவா ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் இலங்கை மனித உரிமைகள் தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது விடயத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?**

*பதில்: இந்த விடயத்தில் நாம் ஏற்கனவே பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். தற்போது மனித உரிமைகள் துறையில் பல அபிவிருத்திகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் இயங்கி வருவதுடன், அவற்றில் பாரிய முன்னேற்றம் காணப்படுகின்றது. மேலும், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் செயற்பாட்டில் உள்ளது. வடமாகாணத்தில் எத்தனையோ நடமாடும் சேவைகளை செய்துள்ளோம். பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்குப் பதிலாக புதிய சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. பின்னர் புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளோம். கடந்த சில மாதங்களில் கைதிகள் சிலரையும் விடுதலை செய்துள்ளோம். மனித உரிமைகளைப் பொறுத்த வரையில், நாம் எடுத்துள்ள முற்போக்கான நடவடிக்கைகள்தான் அவை.*

**கே: நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன, சில வழக்குகள் 20–25 ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படுகின்றன, அந்த நேரத்தில் சில வழக்குரைஞர்கள் இறந்துவிட்டனர். இத்தாமதங்களை நிவர்த்தி செய்ய நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் எவை?**

*பதில்: சட்டத்தின் தாமதத்திற்காக, கடந்த ஐந்து முதல் ஆறு மாதங்களில் 20 இற்கும் மேற்பட்ட சட்டங்களை இயற்றியுள்ளோம். நொத்தாரிசு கட்டளைச் சட்டம், மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் இறுதி ஆவணங்கள் கட்டளைச் சட்டம் போன்றவை திருத்தம் செய்யப்பட்டுள்ளன. நாங்கள் சிறிய உரிமைகோரல் நீதிமன்றங்களை அமைக்க உள்ளோம். ரூபா இரண்டு மில்லியனுக்கும் குறைந்த தொகை சம்பந்தப்பட்ட அந்த வழக்குகள் ஒரு வருடத்திற்குள் சிறிய உரிமைகோரல் நீதிமன்றங்களுக்கு மாற்றப்படும். குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளாகத்தை மீட்டெடுப்பதற்கான மசோதாவையும் நாங்கள் நிறைவேற்றினோம், அந்த வழக்குகள் ஒரு சுருக்கமான நடைமுறையின் கீழ் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் வழக்குகள் தீர்க்கப்பட வேண்டும். நடைமுறையை எளிதாக்கும் வகையில் சிவில் நடைமுறைச் சட்டத்தில் புதிய திருத்தங்கள் உள்ளன. மற்றும் விசாரணைக்கு முந்திய நடவடிக்கைகள் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

**கே: முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய அரசியலமைப்பு வரைவை உருவாக்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ரொமேஷ் டி சில்வா தலைமையில் குழுவொன்றை நியமித்தார். இந்த நிலையில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வேகம் உள்ளதா?**

*பதில்: இந்தக் கட்டத்தில் அப்படியொரு வேகம் இல்லை. ஏனெனில் 21ஆவது திருத்தத்தை அவசரத் தேவையாக அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இப்போது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு முதல் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். நாங்கள் அந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம்.*

**கே: இன்று நமது சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன மற்றும் கைதிகள் நிலைமை நன்றாக இல்லை. சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்கும் வகையில் அபராதம் செலுத்த முடியாதவர்களையும், சிறுகுற்றங்களுக்காக சிறைத்தண்டனை பெற்றவர்களையும் விடுதலை செய்ய முன்வர வேண்டும். சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன? நீங்கள் மனதில் கொண்டுள்ள சிறை சீர்திருத்தங்கள் என்ன?**

*பதில்: சிறு குற்றங்களுக்கு அபராதம் செலுத்த முடியாத 620 கைதிகளை சுதந்திர தினத்தன்று விடுதலை செய்துள்ளோம். 1934 முதல் இருந்ததை ரத்து செய்வதன் மூலம் மற்றொரு சிறைச்சாலை விதிமுறைகளை நாங்கள் மாற்றியுள்ளோம். பலவீனமானவர்கள் மற்றும் தீவிர நோயால் பாதிக்கப்பட்டவர்களை பரிசீலிக்க சிறப்புக் குழுக்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களை நியமித்துள்ளோம். மருத்துவர்களின்பரிந்துரைகளின் அடிப்படையில் அவர்களை விடுவிக்க முடியும். சிறிய குற்றங்களுக்கு குற்றவாளிகளை வீட்டுக் காவலில் வைக்கும் புதிய முறையை நாங்கள் பரிசீலித்து வருகிறோம். மேலும் சிறைக்கு அனுப்பாமல் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் காவலில் வைக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் சிறைக்குச் செல்லும்போது அவர்கள் உண்மையான குற்றவாளிகளாகத் திரும்புகிறார்கள். எனவே, நாங்கள் பல அம்சங்களைப் பரிசீலித்து வருகிறோம்.*

**கே: உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு ஏப்ரல் 25ஆம் திகதி மிகவும் பொருத்தமான திகதி என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. உள்ளாட்சித் தேர்தலை நடத்துமாறு சர்வதேச சமூகம் அரசாங்கத்தை வற்புறுத்தியதாகவும் ஆனால் தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லை என அரசாங்கம் கூறியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இது விடயத்தில் அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்ன?**

*பதில்: தேர்தலுக்குப் பொருத்தமான திகதியை அறிவிப்பதில் எந்த கேள்வியும் இல்லை. சட்டப்படி தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கும். இப்போது வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. எங்களிடம் பணம் இல்லை, முன்னுரிமைகள் வேறு என்ற நிலைப்பாட்டை நிதியமைச்சர் எடுத்துள்ளார். எப்படியிருந்தாலும், நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் கவனத்திலெடுக்க வேண்டும்.*

**கே: ஜே.வி.பி மீண்டும் எழுச்சி பெற்று வருவதாகவும் எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலிலும் கணிசமான வெற்றிகளைப் பெற முடியும் என்றும் பல விமர்சகர்கள் கூறுகின்றனர். இதில் உங்கள் பார்வை என்ன?**

*பதில்: ஜனநாயகத்தின்படி அவ்வப்போது தேர்தல் நடத்துகிறோம். 2004 இல் கூட முப்பத்தொன்பது ஜே.வி.பி எம்.பி.க்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். அது நாட்டிலுள்ள அனைத்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை விடவும் பெரியது. அவர்கள் வந்து போனார்கள். அலைகள் அவ்வப்போது வந்து செல்லும். அதுதான் ஜனநாயகத்தின் இயல்பு. மக்கள்தான் இறுதியில் முடிவினை எடுப்பார்கள்.*

**கே: பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில், இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைந்ததன் முக்கியத்துவம் என்ன?**

*பதில்: கடந்த எட்டு மாதங்களில் நாங்கள் மேற்கொண்ட கடின உழைப்பின் பலன்களை இது காட்டுகிறது. பணத்தை அச்சடிக்கக் கூடாது என்பதுதான் நாங்கள் முதலில் ஏற்றுக்கொண்ட கொள்கை. இரண்டாவதாக, இறக்குமதிக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளோம். ஏற்றுமதியாளர்களுக்கு முடிந்தவரை சில சலுகைகளையும் கொடுத்தோம். அரசின் ஸ்திரத்தன்மை குறித்து மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. அதனால், எங்கள் நாணயத்தின் பெறுமதி உயர்ந்துள்ளது. மேலும், ஏராளமான சுற்றுலாப் பயணிகளும் நாட்டிற்கு வருகின்றனர். கடந்த மாதம் 110,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். ஜனவரி மாதம் 102,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர். நாங்கள் மேற்கொண்ட ஏராளமான முயற்சிகளின் முடிவுகள் அவை.*

**ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகின்றனர். கடந்த மாதம் 110,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். ஜனவரி மாதம் 102,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர். நாங்கள் மேற்கொண்ட ஏராளமான முயற்சிகளின் பலன்கள் அவை**



**பணத்தை அச்சடிக்கக் கூடாது என்பதுதான் நாங்கள் முதலில் ஏற்றுக்கொண்ட கொள்கை. இரண்டாவதாக, இறக்குமதிக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளோம். ஏற்றுமதியாளர்களுக்கு முடிந்தவரை சில சலுகைகளையும் கொடுத்தோம். அரசின் ஸ்திரத்தன்மை குறித்து மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. அதனால், எங்கள் நாணயத்தின் பெறுமதி உயர்ந்துள்ளது**



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# இலங்கை தனது கடந்த கால அனுபவங்களை உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்வது அவசியம்!

யுத்த மோதல்களுக்கு முடிவில்லை. மிகவும் வறிய நாடுகள் கூட ஆயுதங்களை விலைக்கு வாங்குகின்றன. தங்களது பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பின்பற்றுகின்றன. தேசிய வருமானத்தை சுகாதார வசதிகளுக்காக செலவிடுவதை விட அதிக வீதத்தில் போர் உபகரணங்களை வாங்குவதற்காக செலவிடும் நாடுகளும் உள்ளன.

பாதுகாப்பு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளும் சீர்குலைக்கும் சம்பவங்களும் அதிகமாக உள்ளன என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். இப்பின்னணியில் போர் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு சந்தர்ப்பம் உருவாகின்றது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட நவீன ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் ஆயுத வர்த்தகத்தை பாரிய பொருளாதார வாய்ப்பாக மாற்றிக் கொண்டுள்ளன.

இந்தியா மெல்ல மெல்ல யுத்த தளபாட ஏற்றுமதியில் முக்கிய இடத்தை நோக்கிப் பயணிக்கின்றது. கடந்த மார்ச் 6ஆம் திகதி முடிவடைந்த ஒரு வருடத்திற்குள் 13,399 கோடி இந்திய ரூபாவுக்கு பாதுகாப்பு ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை வேறு நாடுகளுக்கு விற்பனை செய்ய இந்தியாவால் முடிந்துள்ளது. 2017_18 காலப்பகுதியில் இந்த ஆயுத ஏற்றுமதி வருமானம் இந்திய ரூபாவில் 4,682 கோடியாகும். இந்திய பாராளுமன்றத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டதோடு, அண்மைக் காலத்தில் இந்தியா இந்தத் துறையில் பெற்றுள்ள முன்னேற்றம் இதன் மூலம் குறிப்பிடப்படுகிறது.

இந்திய திட்டத்தின்படி 2025ஆம் ஆண்டளவில் உலகின் போர்ஆயுத விற்பனையில் முக்கிய நாடுகளில் ஒன்றாக வருவதற்கான இலக்கை இந்தியா கொண்டுள்ளது. அந்நாடு வருடமொன்றுக்கு ஐந்து பில்லியன் அமெரிக்க டொலரை ஏற்றுமதி வருமானமாக எதிர்பார்க்கின்றது. போர் ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களை உற்பத்தி செய்தல், அவற்றை ஏற்றுமதி செய்வதில் உள்ள தடைகளைப் பற்றி ஆராயும் போது இவ்வாறான இலக்கை அடைவது இலகுவானதல்ல.

ஆய்வு அறிக்கைகளின்படி இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் யுத்ததளபாடங்களை விலைக்கு வாங்கும் நாடுகள் பலவாகும். இத்தாலி, ரஷ்யா, மாலைதீவு, நேபாளம், பிரான்ஸ், எகிப்து, பூட்டான், இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகள் இந்திய உற்பத்திகளை விலைக்கு வாங்குவதற்காக ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதாக தெரியவருகின்றது.

உண்மையில் இந்தியா பங்களாதேஷ் குறித்தும் தனது கவனத்தை செலுத்தியுள்ளது. அந்நாட்டின் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் இந்தியாவுக்கு வருகை தந்ததன் பின்னர் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அவற்றின் விற்பனை தொடர்பாக கடன் வசதியை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக கலந்துரையாடல் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா அண்டையில் உள்ள நாடுகளின் பாதுகாப்பு மற்றும் சட்டவிரோத சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சியில் ஆயுத மற்றும் உபகரணங்களின் வர்த்தகம் தீர்மானம் மிக்க காரணியாகும்.

இந்திய இராணுவம் உலகிலேயே இரண்டாவது அதிகளவு வீரர்களைக் கொண்டுள்ளது. அது 12 இலட்சத்தையும் தாண்டியுள்ளது. கடற்படையும் விமானப்படையும் குறிப்பிட்டளவு காணப்படுகின்றன. இந்திய இராணுவத்தை மட்டுப்படுத்தும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாதுகாப்புப் பிரிவினருக்கு பயிற்சியளிக்கும் இடங்கள் 140 இற்கும் அதிகமாக அமைக்கப்பட்டுள்ளன. இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையே இணைந்த பயிற்சிகளும் நடைபெறுகின்றன. முக்கிய அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் மத்திய நிலையங்கள் மத்திய பிரதேச பிராந்தியத்தில் அமைந்துள்ளது. இராணுவ மற்றும் கடற்படை விமானப் படை பிரிவுகளை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கும் தலைமை அதிகாரிகள் மத்திய நிலையம் மத்திய பிரதேச பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

30 வருட கால குரூர யுத்தத்தை தோல்வியடைச் செய்த அனுபவம் இலங்கை முப்படைகளுக்கு உள்ளது. தற்கொலைத் தாக்குதல் பயங்கரவாதிகள் குழுவை தோல்வியடையச் செய்த பயங்கரமான யுத்த அனுபவம் உலகில் வேறெந்த நாடுகளின் இராணுவத்துக்கும் கிடைக்கவில்லை.

சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு முடிவுகள் எடுத்து எதிரியை தோற்கடிக்கும் ஆக்கிரமிப்பு உபாயங்களில் இலங்கை இராணுவம் விசேட அனுபவங்களைக் கொண்டது. அப்பாவித் தமிழர்களை காப்பாற்றியதோடு பயங்கரவாதத்தையும் தோல்வியுறச் செய்த இந்த அனுபவத்தை உலகில் ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் சூழ்நிலையை புரிந்து கொண்டு முடிவுகளை எடுக்கக் கூடியதாக இருக்கும்.

பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததன் பின்னர் முப்படைகளின் பொறுப்புகள் இலகுவாகியுள்ளன. ஆனால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் குறித்தும் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. திடீர் அழிவுகளில் நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. விசேடமாக கொவிட் தொற்று நிலைமை காணப்பட்ட வேளையில் மக்கள் இயல்பு வாழ்வு பாதிக்கப்படாமல் வாழ்வதற்கு அளித்த ஒத்துழைப்பை மறக்க முடியாது. எவ்வாறாயினும் பொருளாதார ரீதியாக மிகவும் மோசமான பின்னணி காணப்படும் இவ்வேளையில் பாதுகாப்பு படைகளை பராமரிப்பது, பயிற்சி மற்றும் வேதனம் பற்றிய விமர்சனங்களும் காணப்படுவதை மறந்துவிட முடியாது.

இந்தியா போர் ஆயுதங்கள் மற்றும் யுத்த தளபாட விற்பனையில் முன்னணிக்கு வரும் போது வீரர்களுக்கு தேவையான அறிவையும் மற்றும் ஆத்ம பலத்தையும் ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சி திட்டங்களை வழங்க இலங்கையிலுள்ள திறமையான அதிகாரிகளால் முடியும். இது புதிய நடவடிக்கையாகும். வீரர்கள் அதில் ஈடுபடுவதால் நாட்டிற்கு அந்நிய செலாவணியையும் பெற முடியும். அதற்குத் தேவையான கொள்கை தீர்மானங்களை எடுப்பது முக்கியமாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

## தவக்கால சிந்தனை



### கண்ணிருந்தும் குருடர்கள்

(யோவான் 9:141)

தவக் காலத்தின் நான்காவது வாரத்தில் அடியெடுத்து வைக்கின்றோம். அந்த வகையில் தவக்காலப் பயணத்தின் அரைவாசிப் பகுதியினை நிறைவு செய்துவிட்ட மகிழ்வு அனைவரினது மனங்களிலும் நிறைந்திருக்கின்றது.

தவக்காலத்தின் நான்காவது வார ஞாயிறினை திரு அவையானது 'மகிழும் ஞாயிறு' என்று பெயரிட்டே அழைக்கின்றது.

அதனூடாக திரு அவையானது தன் நம்பிக்கையாளர்களுக்கு சொல்ல வருவது யாதெனில் உயிர்ப்பின் பயணத்தில் உண்மையான மகிழ்வினைக் கண்டு கொள்ளவும், அதனை உலகில் வளர்க்கவும் அழைக்கிறது.

இன்றைய நற்செய்தியானது இயேசு பிறவி முதலே கண்பார்வையற்று பிச்சையெடுத்துக் கொண்டிருந்த ஒருவனுக்கு பார்வையளித்த புதுமையினை அடியொற்றியதாக அமைகிறது.

இங்கே இயேசுவின் புதுமைக்கு மேலாக அவன் பார்வை பெற்ற நாள் ஓர் ஓய்வுநாளாகும் என்பதே யூதர்களினதும் யூதத்தலைமைகளினதும் முக்கிய பேசுபொருளாக மாறுகிறது.

இவனது பார்வை பெறுதலினால் இயேசு மீதான செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. இதனைப் பொறுக்கமாட்டாத யூதத்தலைமைகள் அவர்மீது குற்றம் கண்டுபிடித்து தம்மை தூயவர்களாக் காட்டிக் கொள்ள ஓய்வுநாள் மீறலை பேசுபொருளாக மாற்றுகின்றார்கள்.

எந்தளவிற்கென்றால் "ஓய்வுநாள் சட்டத்தைக் கடைப்பிடிக்காத இந்த ஆள் கடவுளிடமிருந்து வந்திருக்க முடியாது"என்று அவர்மீது தங்களது வன்மத்தைக் கக்குகின்றார்கள். அடுத்தவர்களின் நலனில், சுகத்தில், பிணிபோக்குதலில் அக்கறை காட்டாதவர்கள் எவ்வாறு தங்களையே தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியும். அவர்கள் தங்களது அகப்பார்வை அற்றவர்கள்.

இயேசு செய்த நன்மைத்தனத்தைக் காணாது அவரில் தவறு கண்டுபிடித்து விட்டதாக மார்புதட்டுகின்ற யூதத்தலைமைகள்தான் முதலில் பார்வை பெறவேண்டும். அவர்கள் கண்பார்வையிருந்தும் பாவிகளாகவே இருக்கின்றார்கள்.

சமூகத்தில் இழையோடியுள்ள நோய்களையும், பிணிகளையும், துயரங்களையும், கண்ணீரையும் களைய முன்வராத வரைக்கும் அனைவருமே பார்வையற்றோர்தான். அடுத்தவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் மட்டில் கண்டும் காணாமல் இருத்தல் பார்வையற்ற செயலே. அத்தகையோர் வெட்கித் தலைகுனிய வேண்டும். அதுமட்டுமல்லாது அத்தகைய நலப்பணிகளில் ஈடுபடுவோர் மீது இல்லாத பொல்லாத அபாண்டங்களை வாரி விதைக்கின்றவர்களும் அகத்தில் பார்வையற்றவர்களே.

இத்தகையோர் கண்ணிருந்தும் குருடர்களே.

தவக்காலமதில் பார்வை பெற முயற்சிப்போம். அதனால் உள்ளம் உள்ளொளி பெற்று அடுத்தவர்களில் நல்லவற்றைக் காணவும், நல்லவை புரியவும் முனைவோம்!

அருட்தந்தை நவாஜி...

# முப்படையினரின் பல்வேறுவித பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

**சாகல ரத்நாயக்க**

முப்படை வீரர்களின் 10 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாத சில பிரச்சினைகள், வடக்கு கிழக்கு மனிதாபிமான நடவடிக்கைக்குப் பின்னர் பல வருடங்கள் முப்படையினர் மற்றும் அங்கவீனமான படைவீரர்களின் சம்பள முரண்பாடு, ஓய்வூதிய கொடுப்பனவு முரண்பாடு உள்ளிட்ட தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க ஜனாதிபதி செயலணியின் பிரதானி, தேசிய பாதுகாப்பு ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில், கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் முப்படையினரின் இப் பிரச்சினைகள் குறித்து சாகல ரத்நாயக்க தலைமையில்

கலந்துரையாடல் நடைபெற்றது.

முப்படையினரின் தீர்க்கப்படாத சுமார் 11 பிரச்சினைகள் இங்கு முன்வைக்கப்பட்டன, இதில் இரண்டு பிரச்சினைகளைத் தவிர அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்க சாகல ரத்நாயக்க நடவடிக்கை எடுத்தார்.

தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினைகளால் சுமார் 7,000 படைவீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இக் கலந்துரையாடலில் தெரியவந்தது.

2009ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற ஆயுதப்படை உறுப்பினர்களின் செயல்பாட்டுப் பகுதிகளில் 05 ஆண்டுகள் நிறைவடையாததால் 85% ஓய்வூதிய இழப்பை மாற்றி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை பரிசீலித்து விரிவான அறிக்கை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக ஏப்ரல் 05 க்கு முன் தேவைப்படும் நிதி தொடர்பில் அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறும் சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

ஒன்பது கோரிக்கைகளுக்கு தீர்வுகளை வழங்கிய ஜனாதிபதி செயலக பிரதானி சாகல ரத்நாயக்க, எஞ்சிய இரண்டு கோரிக்கைகள் தொடர்பிலும் விரிவான தகவல்களை வழங்க முடியுமெனவும், இந்த விடயம் தொடர்பில் பின்னர் கலந்துரையாடலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

## ஏப்ரல் 05 ஆம் திகதி முதலாம் தவணை விடுமுறை

**இம்முறை 03 கட்டங்களாக வழங்க ஏற்பாடு**

பாடசாலைகளின் முதலாம் தவணையின் முதலாம் கட்ட விடுமுறை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2022ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக, மே மாதம் 13 ஆம் திகதி முதல் மே மாதம் 24 ஆம் திகதிவரை முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் கட்ட விடுமுறை எதிர்வரும் ஜுலை மாதம் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2023ஆம் கல்வி ஆண்டின் இரண்டாம் தவணை விடுமுறை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 12ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது.

இக் காலப்பகுதியில் 2023 ஆம் கல்வி ஆண்டுக்கான 05ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட விடுமுறை எதிர்வரும் டிசம்பர் மாதம் 23ஆம் திகதி முதல், 2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிவரை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## 500 சுற்றுலாப் பயணிகளுடன் சில்வர் ஸ்பிரிட் கப்பல் கொழும்பை வந்தடைவு

சுமார் 500 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 410 பணியாளர்களுடன் சில்வர் ஸ்பிரிட் பயணிகள் கப்பல் நேற்று (18) காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த கப்பல் கடந்த 16ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து சென்னை வழியாக திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. இக் கப்பல் இன்று நாட்டை விட்டு புறப்படுகிறது.

### இலங்கைஇந்திய உறவு...

அவர் குறிப்பிட்டுள்ளார். அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் கீழ் இந்தியா செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இதேவேளை கடினமான தருணங்களை கடந்து வரும்போது இலங்கையின் உண்மையான நண்பர் யார்? என்பதே முக்கியமென்றும் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவும் பங்கேற்று பேசும் போது, இலங்கையின் சவாலான காலங்களில், தங்களுக்கு உதவிய உண்மையான நண்பன், இந்தியாவே என்று தெரிவித்தார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ள கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே தூதுவர் மிலிந்த மொரகொட இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் பேசிய உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்தியாவே இலங்கையின் உண்மையான நண்பன் என்றும், அதனை இலங்கை எப்போதும் மறக்காது என்றும் குறிப்பிட்டார்.

## களுத்துறை கட்டுக்குருந்தை யுனைட் கழகத்தின் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

களுத்துறை கட்டுக்குருந்தை யுனைடட் விளையாட்டுக் கழகத்தினால் இன்று களுத்துறை வெட்டுமக்கட பாகிஸ்தான் மைதானத்தில் 10 அணிகளை கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெறும்.

கட்டுக்குருந்தை பிரதேசத்தில் வாழும் மற்றும் அப்பிரதேசத்தில் வாழ்ந்து தற்போது வேறு இடங்களில் குடியிருக்கின்ற உறவுகளை மீண்டும் ஒன்றிணைத்து தமக்கிடையே பரஸ்பரம் தமது கடந்த கால நினைவுகளை மீட்டியபடி புரிந்துணர்வை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு இரண்டாவது வருடமாக இந்த கிரிக்கட் சுற்றுப் போட்டி நடைபெறுகிறது.

இதில் 40 வயதிற்கு மேற்பட்டவர்களும் விளையாடவுள்ளனர்.

இப்போட்டிகளில் கட்டுக்குருந்தை பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த வெளிவிகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் உவைஸ் மொஹமட் ஆகியோரும் விளையாடுகின்றனர்.

### கொழும்பு ரோயல் கல்லூரி...

வெற்றியீட்டியுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ரோயல் கல்லூரி அணி 08 விக்கெட்களை இழந்து 326 ஓட்டங்கள் பெற்று போட்டியை இடைநிறுத்தியிருந்தது.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை விளையாடிய தோமஸ் கல்லூரி அணி சகல விக்கெட்களையும் இழந்து 153 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

பின்னர் தமது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய ரோயல் கல்லூரி அணி 04 விக்கெட்களை இழந்து 168 ஓட்டங்கள் பெற்று போட்டியை இடைநிறுத்தியிருந்தது. பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய தோமஸ் கல்லூரி அணி சகல விக்கெட்களையும் இழந்து 161 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அதனடிப்படையில் 181 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொழும்பு ரோயல் கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளது.

### தேர்தலை உடனடியாக நடத்த...

இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். உள்ளூராட்சித் தேர்தலை நடத்த இந்த அரசாங்கம் பின்னடிக்குமானால், மாகாணசபை, பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல்களின் நிலைமை என்னவாகுமென்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

மக்களின் வாக்குரிமையை தட்டிப்பறிக்க முடியாதென்பதால் விரைந்து உள்ளூராட்சித் தேர்தலை அரசங்கம் நடத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

மக்களின் ஆணைக்கு வழிவிடுவது அரசாங்கத்தின் கடமையென்றும் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

### IMF இன் முக்கிய அறிவிப்பு...

மசாஹிரோ நோசாகி ஆகியோர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கின்றது.

சூம் தொழில் நுட்பத்துடன் நடத்தப்படவுள்ள இச்சந்திப்பில் இலங்கையும் கலந்துகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் இலங்கையும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்கள்தின் சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் புரூயர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக்குழுவின் தலைவர் மஸாஹிரோ நொசாக்கி ஆகியோரும் இணைந்துகொள்வரென சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது

### இந்திய கோழி முட்டைகள்...

திட்டமிடப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் தெரிவித்தார். தற்போதுள்ள முட்டை தட்டுப்பாட்டைக் குறைக்கவும், விலையைக் கட்டுப்படுத்தவும் முட்டைகளை இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்தது. முட்டை இருப்புக்கள் பேக்கரி தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளதாக அரச வர்த்தக இதர சட்டப்பூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த முட்டைகளை பேக்கரி தொழிற்சாலைகளுக்கு 40 ரூபா அல்லது அதற்கும் குறைவான விலையில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை உடனடியாக தயாரிக்குமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### அரசுக்கு பலம் சேர்க்கும்...

விடுத்துள்ளனர். மீண்டும் மக்களுக்காக முன்வந்து நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்கு அரசுக்கு தங்களது ஆணித்தரமான செயற்பாடுகள் அவசியமென்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பல்வேறு விமர்சனங்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் கடும் முயற்சியின் மூலம் பொருளாதாரத்தை சீர்செய்துவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் இணைந்து மக்களுக்கு பணியாற்ற வேண்டும். தலைமைத்துவம் வழங்கவேண்டுமென்றும் சர்வமதத் தலைவர்கள் நேரடியாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

பௌத்த மதத் தேரரான கலகம தம்மரஞ்சதேரர், இந்துமத குருபீடத்தைச் சேர்ந்த கலாநிதி இராமச்சந்திரக்குருக்கள் பாபுசார்மா, இஸ்லாமிய மத குரு ஹஸன் மௌலானா, அருட்தந்தை நெல்சன் ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் நேரடியாக சந்தித்து இவ்வேண்டுகோளை விடுத்து தமது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துள்ளனர்.

### வறிய குடும்பங்களுக்கு...

காலாட் படைப் பிரிவின் 643ஆவது காலாட் பிரிகேட் படையினரால் முட்டியங்காட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த திருமதி ஜே. அன்டோனிதாஸின் குடும்பத்துக்காக புதிய வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

08ஆவது இலங்கை பீரங்கி படையினர் தங்களுடைய தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் திறன்கள் மற்றும் தேவையான மனிதவளத்தைப் பயன்படுத்தி இந்த வீட்டை நிர்மாணித்துள்ளனர். அதே நேரத்தில் 643ஆவது காலாட் பிரிகேடின் தளபதி கேர்ணல் சந்தன விக்கிரமநாயக்க, தனது தனிப்பட்ட தொடர்புகள் மற்றும் நண்பர்களின் மூலம் மூலப்பொருட்களுக்கு தேவையான செலவினங்களை திரட்டியுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாண பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் (SFHQJ) 51ஆவது காலாட்படை பிரிவின் 511ஆவது படையணி, தமது தொழில்நுட்ப மற்றும் பொறியியல் நிபுணத்துவத்துடன் 09ஆவது இலங்கை இலகு காலாட்படையுடன் இணைந்து யாழ். மாவட்டத்தில் கீரிமலை பகுதியைச் சேர்ந்த ஆறுமுகத்தின் 'சந்திரசேகரம்' இல்லத்தை புனரமைத்ததாக இராணுவ ஊடகம் தெரிவித்துள்ளது. இந்த திட்டத்துக்கு தேவையான நிதி அனுசரணையை விஷ் நடராஜ் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## எங்கள் கருத்து

### முதலில் நாட்டின் இருப்பு; அதன் பின்னரே அரசியல்!

நெருக்கடிக்குள் வீழ்வதற்கிருந்த வேளையிலேயே நாட்டின் தலைமைப்பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார்.

அன்றைய நெருக்கடி வேளையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு எதிரணியினர் முன்வரவில்லை. மக்களை மேலும் அதிக துன்பத்துக்குள்ளாக்கி அரசு மீது வெறுப்புக் கொள்ள வைப்பதன் மூலம், எதிர்வரும் தேர்தலின் போது அத்தனை வாக்குகளையும் வசீகரித்துக் கொள்வதற்கே எதிரணியினர் காத்திருக்கின்றனர் என்பது புரிந்து விட்டது.

இன்றைய நெருக்கடி நிலைமையில் இலங்கைக்குத் தேவையானது அரசியல் அல்ல! பொருளாதார நெருக்கடியிலிருந்து எவ்வாறாயினும் மீண்டெழுவது மாத்திரமே இன்றைய தேவையாகும். பொருளாதாரம் சீரடைந்த பின்னரே அரசியலைப் பற்றிச் சிந்திக்க முடியும். இல்லாது போனால் அரசியல் செய்வதற்கென்றே ஒரு நாடு எமக்கு இல்லாமல் போய்விடலாம்.

இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் அரசியல் ஆதாயம் பற்றியும், தேர்தல் பற்றியும் அரசியல்வாதிகள் இலக்கு வைத்திருப்பார்களானால் அதனைவிட சுயநல நோக்கம் வேறெதுவும் இருக்க முடியாது. இந்த உண்மை நாட்டுமக்களுக்கு நன்கு புரிகின்றது. ஆனால் அரசியல்வாதிகள் மக்களை விட்டுவிடுவதாக இல்லை.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கும் விதத்தில் ஆர்ப்பாட்டமென்றும், பணிப்பகிஷ்கரிப்பென்றும் மக்களை வீதிக்குக் கொண்டு வருவதிலேயே எதிரணி அரசியல்வாதிகள் கண்ணுங்கருத்துமாக உள்ளனர். நாட்டின் நலன் மீது அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லையென்பது புரிகின்றது.

முதலில் நாட்டின் எதிர்காலம் பற்றியும், நாட்டின் இருப்பு குறித்தும் கரிசனை செலுத்துவதே இன்று அவசியமாகின்றது. இல்லையேல் மீட்டெடுக்க முடியாத பாதாளத்தினுள் இலங்கை வீழ்ந்து விடுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

### நெடுந்தீவு வெடியரசன் கோட்டை...

திணைக்களத்தினால் மிகத்துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் முனைப்புகளை தடுத்து நிறுத்துமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கி.மு.200 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், தொல்புரம், பூநகரி, மன்னார் போன்ற பகுதிகளை ஆட்சிசெய்த ஈழத்தமிழ் மன்னனான விஷ்ணுபுத்திர வெடியரசன் காலத்தில் அமைக்கப்பட்டதும், நெடுந்தீவு மண்ணின் கோட்டைக்காடு என அழைக்கப்படும் நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் (J/01) இது அமைந்துள்ளது.

கோட்டை தொடர்பில் 2023.03.16 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இவ்வாறான செயற்பாடு தமிழ்பேசும் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையிலான இன நல்லிணக்கத்தை அடியோடு சிதைக்கும் நடவடிக்கையாகவே அமையும் என்பதை தாங்களும் உணருவீர்கள் என நம்புகிறேன்.

தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை 'துறவிமடம்' என்னும் பெயரிலான தொல்லியல் ஒதுக்கிடமாக வெளிப்படுத்தி 2020.11.26ஆம் திகதிய, 2203/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டமை பற்றி துறைசார் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க 2020.12.18 ஆம் திகதி நான் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தும் அது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

நெடுந்தீவு விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை தொடர்ந்தும் தமிழர்களின் பாரம்பரிய அடையாளமாக பேணிப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு, மக்களின் கோரிக்கையாக இதனை தங்களுக்கு முன்னளிப்புச் செய்கிறேன் என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

### ஆசிரியர் இடமாற்ற சபை...

தெரிவருகிறது. கல்விப் பொதுத் தராதர சாதாரணதரம் மற்றும் உயர்தர மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் கடந்த காலங்களில் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே தற்போது ஆசிரியர் இடமாற்றமும் வழங்கப்பட்டால் அது மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் , அதனைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதியால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து சிக்கல்கள் , செலவுகள் அதிகரித்துள்ளமை , வரி மற்றும் வாடகை வீட்டு பிரச்சினைகள் உள்ளிட்ட மனிதாபிமானக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த இடமாற்றங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன. ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்துள்ள ஆசிரியர்களும் இடமாற்றத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சில இடமாற்றங்கள் அரசியல் ரீதியில் நோக்கப்படும் என்பதால் அதனை தவிர்ப்பதற்காகவும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சகல காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி, ஆசிரியர் இடமாற்ற சபையை கலைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

### ஒருநாள் மாநகர சபை...

நபர் என்ற சாதனையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் அப்துல் சத்தார் படைத்துள்ளார். குருணாகல் மாநகர சபையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்திய மாநகரசபை உறுப்பினர் காமினி பெரமுங்க நீக்கப்பட்டதையடுத்து வெற்றிடமாக உள்ள சபை உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அப்துல் சத்தார், நேற்று முன்தினம் (17) அந்த பதவியில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். முன்னாள் மேயரான காமினி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஹெலிகொப்டரில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளதன் காரணமாக பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டார். நாட்டில் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ காலம் இன்று (19) நள்ளிரவுக்குப் பின்னர் நிறைவடைவதால், அப்துல் சத்தார் (ஒரு நாள்) மிகக் குறுகிய காலமே மாநகர சபை உறுப்பினர் பதவியை வகிப்பார். சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர், மேயர் சுமேத அருணாசாந்த (ஐ.ம.ச.) தலைமையில் நடைபெற்ற குருநாகல் மாநகர சபையின் கடைசி அமர்விலும் சத்தார் கலந்து கொண்டார். நான்கு தடவைகள் குருணாகல் மாநகர சபையின் உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய அப்துல் சத்தார், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பருமாவார். காமினி பெரமுனகேயைத்தவிர, குருணாகல் மாநகர சபை உறுப்பினர்களான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரஜித் ஜயவர்தன மற்றும் பந்து ஜயசேக்கர ஆகியோரும் எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடாத காரணத்தினால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் சுயேச்சைக் குழுவின் கீழ் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

### இந்திய மீனவருக்கு...

இக்கலந்துரையாடலில் வடபகுதி கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முதற்கட்டமாக இங்கு இந்திய மீனவர்களது அத்துமீறல் மற்றும் இழுவைப் படகுத் தொழில் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது இலங்கை கடற்பரப்பில் ஒரு நிமிடம் கூட மீன்பிடிக்க அனுமதி கிடையாது, பாஸ் நடைமுறையும் இல்லையென திட்ட வட்டமாக வடக்கு கடற்றொழிலாளர்களிடம் தெரிவித்தார். தமிழக இராஜாங்க அமைச்சர் முருகன், இத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், பஜாக தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை ஆகியோரிடமும் இராஜதந்திர ரீதியாகவும் நட்பு ரீதியாகவும் இங்கு மீன்பிடிக்க அனுமதிக்க முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளமையையும் அமைச்சர் இங்கு குறிப்பிட்டார்.

இனி வரும் காலங்களில் இந்திய கடல் எல்லையில் வடக்கு கடற்றொழிலாளர்களின் படகுகளுடன் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தித் தான் எமது நிலைப்பாட்டை தமிழக மக்களுக்கு தெரிவிக்க வேண்டியுள்ளதென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது, இந்திய ஊடகவியலாளர்களும், இலங்கை ஊடகவியலாளர்களும் நேரில் வந்து செய்திகளை சேகரித்து நிலைமைகளை அவதானித்துச் செல்லட்டும். அப்போது தான் இந்தியாவிலுள்ள மக்களுக்கு இலங்கையின் நிலவரம் புரியுமென்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி சபைகள்; ஆய்வுக்கு வரும் ஓய்வு!


**சுஐப் எம்.காசிம்**

ஓய்வுக்கு வரும் உள்ளூராட்சிகளை ஆய்வுக்குட்படுத்தும் அலசலிது. ஊர் மட்டத்திலான அபிவிருத்திகளை முன்னெடுக்க அறிமுகமானதுதான் இந்தச் சபைகள். இன்றோ தேசிய அதிகாரங்களை ஆரூடங் கூறும் அடிமட்டக் கணிப்பீட்டுக் களங்களாக இவை அமைந்துவிட்டன. கடந்த சில காலங்களாக இச்சபைகளின் ஆயுட்காலங்கள் அரசாங்கத்தால் கெட்டியாக்கப்பட்டது. ஒரு வருடத்துக்கு மேல் இவற்றின் ஆயுளைக் கெட்டியாக்க முடியாது. அப்படியிருந்தும் ஆகுமானதை எல்லாம் ஆக்கப்பார்த்தது இந்த அரசாங்கம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு அடித்தளமிட்டதும் இந்த உள்ளூராட்சிகளால்தான். இதனால், இச்சபைகள் இல்லாமல் எந்தத் தேர்தலுக்கும் செல்வதில்லை என்றுதான் இந்த அரசு எண்ணியது. இந்த எண்ணத்தோடுதான் இச்சபைகளை ஓராண்டும் நீடித்தது. நீடித்த அதே ஆண்டில்தான் (2022) அரசியல் பூகம்பமும் வெடித்தது. பெப்ரவரியில் நீட்டப்பட, ஏப்ரலில் ஆட்டங்காண ஆரம்பித்தன ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கோட்டைகள். இதனால் பிரபலங்கள் பதவி துறந்து நாட்டை பிரதானமானவர் பாரமேற்றுள்ளார்.




இப்படியொரு பின்னணியில், மீண்டும் ஒரு ஆரூடத் தேர்தலுக்கு அரசாங்கம் செல்லப்போவதில்லை. காரணம், கை நிறைய இருந்தாலும் கை நீட்டிச் சொல்வதற்குப் பலமான ஒரு காரணம் இருப்பதால்தான். பொருளாதார நெருக்கடி நீங்கும் வரைக்கும் இந்தக் காரணம் கனதியுடனே இருக்கப்போகிறது. ஆம், தேர்தல் தேவைதான். நாடு உள்ள நிலையில் உள்ளூராட்சிகளுக்கு எட்டாயிரம் உறுப்பினர்கள் தேவையில்லையே! ஜனாதிபதியின் யதார்த்தம் எப்படிப் பொருந்துகிறது. பொருந்துகிறதோ அல்லது பொருத்தப்படுகிறதோ இன்றைய சூழலுடன் இயைந்தே செல்கிறது இக்காரணம்.



உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்த அதிக கொடுப்பனவுகளைக் கோருகையிலும் வரி உயர்வைக் குறைக்குமாறு கூப்பாடுகள் வைக்கப்படுகையிலும் தேர்தலையுமா கோருகின்றனர்? இன்று, நாலாபுறமும் இப்புதிய கருத்துக்களையே கேட்க முடிகிறது. எனவே, கை நீட்டிச் சொல்லப்படும் காரணம் கனதியாவதாகவே கருதத் தோணுகிறது. மக்களின் ஆணையை ஆகக் குறைந்தது நாலு வருடங்களுக்குப் பாதுகாக்க முடியாத இலட்சணத்தில்தான் இந்த உள்ளூராட்சி சபைகள் இருக்கின்றன. அதுவும், கலப்பு முறையில் (வட்டாரம், விகிதாசாரம்) தெரிவானதால் இம்முறை அசிங்கங்கள் அதிகம் இச்சபைகளில் அரங்கேறின.

ஒரு மாதத்துக்குள் பல தடவைகள் சில சபைகளின் ஆட்சிகள் கவிழ்ந்து புரண்டன. ஏழைகளின் வாழ்க்கை ஒரு கவளச் சோற்றுக்கு ஊசலாடுகையில் உள்ளூராட்சித் தலைவர்கள், உறுப்பினர்களின் ஆசைகள் ஒரு கோடிக்கு விலைபோகிறது. இதனால், உள்ளூராட்சித் தேர்தலுக்கு உத்தேச திருத்தத்தை (கலப்புமுறை) முன்மொழிந்த பல அரசியல்வாதிகளின் சபைகளிலும் மக்கள் ஆணைகள் கவிழ்க்கப்படுவதும் நிமிர்த்தப்படுவதுமாகவே நிலைமைகள் இருந்தன.

எனவே, எல்லோரும் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் மக்கள் ஆணையைப் பாதுகாக்கும் புதிய முறைபற்றிச் சிந்திக்க இச்சபைகளின் ஓய்வு காலத்தைப் பயன்படுத்தலாம். கலப்பு முறையிலுள்ள ஓட்டைகளை கண்டு களையலாம் ஒன்றுபடுங்கள். சபைகளின் அதிகாரங்கள் தனி ஒருவரிடம் குவிந்திராமல் கூட்டுக் குழுவிடம் ஒப்படைக்கலாம் என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, தவிசாளர் குழு, முதல்வர் குழு என்ற வட்டத்துக்குள் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் பரவலாக்கப்படலாம்.

---

# சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீடு



**AGS. சுவாமிநாதன் சர்மா**
**பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்**

2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு

உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் அமுலாக்கம் | SSCL

விதிப்பனவு

ஒக்டோபர் 01, 2022 முதல் 2.5% விதிக்கப்படும்.

பொறுப்பின் நோக்கம் (பிரிவு 2)

பின்வரும் ஒவ்வொரு நபரினாலும் சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீடு செலுத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் பொருட்களை இறக்குமதி செய்தோ, பொருட்களை உற்பத்தி செய்யும் வியாபாரத்தை மேற்கொண்டோ, எந்தவொரு வகையிலான சேவையை வழங்கும் வியாபாரத்தை மேற்கொண்டோ, அல்லது பந்தி (2)இன் ஏற்பாடுகள் ஏற்புடைய உற்பத்தியாளராக காணப்பட்டு, அந்த பொருட்களின் உற்பத்தியாளரின் விற்பனை தவிர்ந்த அத்தகைய பொருட்களின் இறக்குமதி மற்றும் விற்பனை அடங்கலாக ஏதேனும் பொருட்களின் மொத்த அல்லது சில்லறை விற்பனையின் வியாபாரத்தை மேற்கொள்ளும்;

**பதிவு (பிரிவு 4)**

ஏதேனும் பொருட்களை இறக்குமதி செய்யும் வரியிடற்பாலதான நபர்கள் தவிர்த்து, ஒவ்வொரு வரியிடற்பாலதான நபர்களும் (2ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள நபர்கள்), பதிவு செய்வதற்கு தேவைப்படுத்தப்படுகின்றனர்;

ஏற்கெனவே ரூபா 120 மில்லியன் இனை விஞ்சிய புரள்வை உடைய நபர் விலக்களிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளிலிருந்தான புரள்வினை தவிர்த்து, சா.பா.உ.அ சட்டம் செயற்பாட்டிற்கு வரும் திகதிக்கு உடன் முந்திய பன்னிரண்டு மாதங்களினுள் மொத்த புரள்வு ரூபாய் 120,000,000 இனை விஞ்சுமாயின் சா.பா.உ.அ சட்டம் செயற்பாட்டிற்கு வரும் திகதியிலிருந்து 15 நாட்களுக்குள்.

உதாரணம்: 01.10.2021 முதல் 30.09.2022 வரையிலான காலப்பகுதிக்கு புரள்வானது, (மொத்த புரள்வு

விலக்களிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள்) ரூபா 120 மில்லியனை விட அதிகமாயின், அத்தகைய நபர்கள் 2022 அக்டோபர் 15ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பதிவு செய்ய தேவைப்படுத்தப்படுகின்றனர்;

**வேறு எவரேனும் நபர்கள்**


வேறு எவரேனும் நபர்களுக்கு காலாண்டு ஒன்றுக்கு ரூபா 30,000,000 (மேலே விடயம் (i) இற்கு உட்படாத நபராயின்) புரள்வானது காலாண்டு ஒன்றுக்கு ரூபா 30 மில்லியனை விஞ்சும் திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் பதிவு செய்ய தேவைப்படுத்தப்படுகின்றனர்.

ச.பா.உ.அ. (SSCL) இற்கு பதிவு செய்த பின்னர் ச.பா.உ.அ. (SSCL) ஆனது, பதிவிற்கான புரள்வு எல்லையை பொருட்படுத்தாது செலுத்தப்படுத்தல் வேண்டும்.

வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) உள்ள நபர்கள், முறையாக பூரணப்படுத்தப்பட்ட வரி வகைப் பதிவுப் படிவத்தினை TPR_005 (SSCL) சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளலாம்.

ஏனைய நபர்கள் (வரி செலுத்துநர் அடையாள இலக்கம் அற்றோர்) வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பின்பு முறையாக பூரணப்படுத்தப்பட்ட வரி வகைப் பதிவுப் படிவத்தினை TPR_005 (SSCL) சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளலாம்.

பின்வரும் – அலகுகளில் (இறைவரித் திணைக்களம்) சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளலாம்.




தலைமைக் காரியாலயம் மற்றும் சாரணர் கட்டிடத்தில் கையாளப்படும் வரிக்கோவைகளுக்கு, தலைமை காரியாலயத்திலுள்ள வரி வகைப்பதிவு அலகு.

நகர / பிராந்திய அலுவலகம் எவற்றிலேனும் கையாளப்படும் வரிக்கோவைகளுக்கு ஏதேனும் நகர / பிராந்திய அலுவலகம்.

**ச.பா.உ.அ. இன் கொடுப்பனவு (பிரிவு 17)**

ச.பா.உ.அ. ஆனது சுய மதிப்பீட்டின் பேரில் 3 தவணைகளில் செலுத்தப்படத்தக்கது.

கொடுப்பனவை செலுத்துவதற்கான திகதிகள் பின்வருமாறு.

1 ஆம் தவணை முதலாம் மாதத்திற்கான வரிச்செலுத்துகையானது ஏற்புடைய காலாண்டின் இரண்டாவது மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

2 ஆம் தவணை இரண்டாம் மாதத்திற்கான வரிச்செலுத்துகையானது ஏற்புடைய காலாண்டின் மூன்றாவது மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

3ஆம் தவணை மூன்றாம் மாதத்திற்கான வரிச்செலுத்துகையானது ஏற்புடைய காலாண்டின் இறுதியின் உடன் அடுத்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

கொடுப்பனவு நறுக்கில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்கள்

கொடுப்பனவு காலப்பகுதிக் குறியீட்டு வடிவம்: (YY/Q/0/M)

(உதாரணம்: ஒக்டோபர் 2022 – கொடுப்பனவுக் குறியீடு: 22401)

வரி வகை குறியீடு: 32

வரி செலுத்துநர் அடையாள இலக்கம்

இலங்கை வங்கியின் (Bank of Ceylon) எந்தவொரு கிளையிலும் கொடுப்பனவினை மேற்கொள்ளலாம்.

பொறுப்புடைய புரள்வு (இரண்டாம் அட்டவணை)

ஏதேனும் பொருளின் இறக்குமதி (சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் சேகரிக்கப்படத்தக்கது) – இறக்குமதிப் பெறுமதியின் 100 %

**இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :**

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி IA இல் குறிப்பிடப்பட்டுள்ள எவையேனும் விலக்களிக்கப்பட்ட பொருளின் பெறுமதியை உள்ளடக்காத, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (VAT) பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் பெறுமதி சேர் வரிக்கு (VAT) அந்த பொருளுக்கு பெறப்பட்ட பெறுமதி" எனப் பொருள்படும்.

CIF Value + சுங்க தீர்வை + Cess + PAL + Exercise or any other duty payable to Customs + 10% of CIF Value

ஏதேனும் பொருளின் உற்பத்தி – புரள்வின் 85%

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி IA இற் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர்த்து அத்தகைய நபரினால், இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகும் எந்தவொரு பொருளிற்கும் அந்த காலாண்டில் பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை" எனப் பொருள்படும்.

சேவை வழங்குகை புரள்வின் 100 %

அ. நிதி சேவை சாற்றப்படத்தக்க பெறுமதி சேர்ப்பின் 100%

(நிதிச் சேவைகளுக்கு சாற்றப்படத்தக்க பெறுமதி சேர்ப்பு – 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (VAT) பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 25 இ ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சாற்றப்படத்தக்க முறையினைப் பிரயோகிப்பதன் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டது.)

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்து, இலங்கையில் ஏதேனும் நிதிச் சேவைகளை வழங்கும் வியாபாரத்தினை மேற்கொள்ளும் எவரேனும் நபரினால் ஏதேனும் நிதிச் சேவைகளில் இலங்கையில் வழங்குவதிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை" என பொருள்படும்.

ஆ . காணி மற்றும் சீராக்கல் (புரள்வு = விற்பனைப் பெறுமதி விற்பனை திகதி அன்றுள்ளவாறான காணியின் சந்தைப் பெறுமதி) ★ 100%

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3):

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்து, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (VAT) பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (7) ஆம் உபபிரிவின் கீழ் பெறப்பட்ட காணி மற்றும் சீராக்கல் வியாபாரத்திலிருந்து எழும் ஏதேனும் சேவையினது பெறுமதி" எனப் பொருள்படும்.

இ . (அ) மற்றும் (ஆ) தவிர்ந்த சேவைகள் – புரள்வின் 100%

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்து, இலங்கையில் சேவையின் வழங்குகையிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை" என பொருள்படும்.

மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை {வாங்கி விற்றல், இறக்குமதி செய்து விற்றல், தயாரித்து விற்றல் (உற்பத்தி செய்து விற்றலை உள்ளடக்காது)}

அ. இலங்கையில் எவையேனும் பண்டங்களின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பில் பதிவு செய்யப்பட்டவொரு விநியோகிப்பாளரினால் ஏதேனும் பொருள் விற்பனை செய்யப்படுதல் புரள்வின் 25%

(இலங்கையில் ஏதேனும் பண்டத்திற்கு எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர் என்பது, "காலத்திற்கு காலம் அத்தகைய உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரினால் அத்தகைய பண்டத்திற்கு நிர்ணயிக்கும் அத்தகைய விலையில், மொத்த விற்பனைச் சந்தையில் விற்பதற்காக அத்தகைய உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் அல்லது பங்குடமை (Partnership) " என பொருள்படும்.

ஆ. இறக்குமதி மற்றும் விற்பனை அடங்கலாக மேலே (அ) என்ற விடயம் தவிர்ந்த மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை புரள்வின் 25 %

**இங்கே புரள்வு என்பது (பிரிவு 3):**

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி IB இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர்த்து, இலங்கையில் ஏதேனும் பொருளின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை" எனப் பொருள்படும்.

குறிப்பு: பந்திகள் (b), (c) மற்றும் (d) இன் தேவைப்பாட்டிற்கு புரள்வானது பின்வருவனவற்றை உள்ளடக்கப்படமாட்டாது. (புரள்வு பிரிவு 3)

அந்த காலாண்டில் அத்தகைய நபரினால் ஏற்பட்ட ஏதேனும் அறவிடா கடன் .

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (VAT) பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் ஏற்புடைய காலாண்டிற்கு செலுத்தப்பட்ட ஏதேனும்பெறுமதி சேர் வரி (VAT)

அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சர்வதேச நிகழ்வு தொடர்பில் ஏற்றுமதி அபிவிருத்தி தள்ளுபடியின் கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் தள்ளுபடி.

பின்னர் சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவிடா கடனானது (Bad Debts), அத்தகைய அறவிடா கடன் சேகரிக்கப்பட்ட காலப்பகுதியில் புரளிற்கு சேர்க்கப்படுதல் வேண்டும்.

**ச.பா.உ.அ. விபரத்திரட்டினை சமர்ப்பித்தல் (பிரிவு 8)**

விபரத்திரட்டினை சமர்ப்பிக்க வேண்டிய திகதி ஏற்புடைய காலாண்டில் இறுதி மாதத்தை தொடர்ந்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர்.

**காலாண்டு சமர்ப்பிக்க வேண்டிய திகதி**

1 ஆம் காலாண்டு (1st January 31st March) April 20th

2 ஆம் காலாண்டு (1st April 30th June) July 20th

3 ஆம் காலாண்டு (1st July 30th September) October 20th

4 ஆம் காலாண்டு (1st October 31st December) January 20th

**சமர்ப்பிக்க வேண்டிய இடம்**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்புடைய நகர /பிராந்திய அலுவலகம் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தின் 1 ஆம் மாடியிலுள்ள மத்திய ஆவணப்படுத்துகை முகாமைத்துவ அலகு (CDMU)

**பற்று மற்றும் மீள்கொடுப்பனவு பொறிமுறை (பிரிவு 36)**

உள்ளீட்டுப் பற்று (Input Credit) அல்லது மீள்கொடுப்பனவு (Refund) பொறிமுறை சட்டத்தில் இல்லை

ஏதேனும் ஏற்புடைய காலாண்டிற்கு அத்தகைய நபரினால் ஏதேனும் மேலதிக தொகையாக அறவீடு அல்லது தண்டம் செலுத்தப்பட்டடிருப்பின், அத்தொகையானது ஏற்புடைய காலாண்டிற்கு தொடர்ந்து வரும் ஏதேனும் காலாண்டிற்கு செலுத்தப்பட்ட முற்பணமாக கருதப்படுதல் வேண்டும்.

**இணக்கமின்மைக்கான தண்டங்கள்**

குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பதிவிற்கு விண்ணப்பிக்கத்தவறின் ரூபாய் 25,000/ இனை விஞ்சாத தண்டம்.

விபரத்திரட்டினை சமர்ப்பிக்கத் தவறின் ரூபா 50,000/ இனை விஞ்சாத தண்டம்.

**தவறுகையிலுள்ள கொடுப்பனவு**

தவறுகையிலுள்ள தொகையின் 10%; மற்றும் தவறுகையிலுள்ள ஒவ்வொரு மேலதிக மாதத்திற்கும் 2% மேலதிகத் தொகை தண்டமாக செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகையானது அறவீட்டின் 100% விஞ்சுதல் ஆகாது.

**பதிவை இரத்துசெய்தல் (பிரிவு 10)**

பதிவு செய்துள்ள நபர் ஒருவர், அவர் பதிவு செய்த திகதியிலிருந்து 12 மாதங்கள் கடந்த பின்னர் எந்தவொரு வேளையிலும், கீழ்வரும் காரணங்களுக்காக பதிவினை இரத்து செய்வதற்கு ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்ளலாம்.

பிரிவு 2 இல் குறிப்பிட்டுள்ள வியாபாரத்தை முடிவுறுத்தி இருப்பின்,

ஏற்புடைய காலாண்டின் அதற்கு அடுத்த முந்திய 4 காலாண்டுகளின் போது மொத்த புரள்வானது, 120 மில்லியன் ரூபாக்களை விஞ்சாவிடின்.

தற்போது நிலவுகின்ற அதிஉச்ச வாழ்க்கை செலவு அதிகரிப்பினையே தாங்க முடியாத மக்கள், இந்த புதிய SSCL வரி காரணமாக பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலையானது 2.5% தொடக்கம் 6% அதிகரிப்பினை ஏற்படுத்தி உள்ளது. அது மாத்திரமல்லாது, Input Tax Claims இல்லாத காரணத்தினால் வியாபாரிகள் தங்களுடைய இருப்பினை தக்க வைப்பதற்காக (Survival) பொருள்களின் விலையினை அதிகரிப்பதன் வாயிலாகவே வியாபாரத்தில் நிலைத்து நிற்கக்கூடிய நிலையும் காணப்படுகின்றது.

---

# ரமழானை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகும் பாரம்பரியம்




இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 21ஆம் திகதி (21.03.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சி, தயாரிப்பாளரின் எண்ணக்கருவில், தொடங்க உள்ள புனித ரமழான் மாதத்தினை கருத்தில் கொண்டு, சிறப்பு நிகழ்ச்சியாக ஒலிபரப்பாக இருக்கிறது. இந்நிகழ்ச்சியை, சிரேஷ்ட ஒலிபரப்பாளரும், முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளருமான எஸ்.எம். ஹனிபாவும், இலங்கை வானொலி சிரேஷ்ட அறிவிப்பாளரும், நகைச்சுவை நாடகங்கள் எழுதி ஏராளமான நேயர்களை தன் வசப்படுத்திய முஸ்லிம் சேவையின் மூத்த கலைஞரும், எழுத்தாளருமான கலாபூஷணம், மஹ்தி ஹசன் இப்ராஹிமும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். இச்சிறப்பு பாரம்பரியம் நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்கிறார்.

# ஒருநாளின் இழப்பு ரூபா 460 கோடி!

## அரசியலைப் பின்புலமாகக் கொண்ட வேலைநிறுத்தங்களால், பொருளாதார நெருக்கடி வேளையில் நாட்டுக்கு ஏற்படுகின்ற பேரிழப்பு!

**தொழிற்சங்கப் போராட்டங்களின் ஒரு அங்கமாக மேற்கொள்ளப்படுகின்ற வேலைநிறுத்தங்கள் காரணமாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 46 பில்லியன் ரூபா (460 கோடி ரூபா) நாளொன்றுக்கு இழக்கப்படுகிறது. இதனைவிட மக்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்கள் மற்றும் கல்வித்துறையில் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு என்பன கணக்கிட முடியாதவையாகும்.**



இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி வருடமொன்றுக்கு 16,669 பில்லியன் ரூபாவாகும். ஆதனை 365 நாட்களினால் பிரிக்கும் பட்சத்தில் முழுநாளொன்றில் செயற்பாடுகள் செயலிழந்தால் 46 பில்லியன் ரூபா இழக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதிரீதியாகக் கணிப்பிடக் கூடிய தொகை இதுவாக இருக்கின்றபோதும், கல்வித் துறையில் ஏற்படக் கூடிய பாதிப்பு கணிப்பிட முடியாத பேரிழப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த 15 ஆம் திகதி பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்ததுடன், பொருளாதார ரீதியிலும் கணிசமான தாக்கம் ஏற்பட்டிருப்பதாக பொருளாதார வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர்.

துறைமுக அதிகார சபையின் தொழிற்சங்கங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம் இந்தப் பின்னடைவுக்கு வழிவகுத்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் விமானங்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டாளர்கள் இரண்டு மணித்தியாலங்கள் மெதுவாக வேலைசெய்யும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதேபோல, துறைமுக அதிகார சபையின் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டமையால் கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்கும் செயற்பாடுகளுக்கும் ஓரளவு பாதிப்புகள் ஏற்பட்டன. இதுபோன்ற செயற்பாடுகள் இலங்கைக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் துறைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.



வேலைநிறுத்தப் போராட்டங்கள் பொருளாதாரத்துக்கு நேரடியாக ஏற்படுத்தும் தாக்கங்களை விட மறைமுகமாகப் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பங்கேற்கும் வேலைநிறுத்தப் போராட்டங்களால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. அடிக்கடி அவர்கள் வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டால் மாணவர்கள் கல்வியை முடிக்கும் காலத்தில் இழுபறி ஏற்படும்.

கடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணியை ஆசிரியர்கள் இன்னமும் முடிக்கவில்லை. இதனால் அடுத்து நடைபெறவிருக்கும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையும் தள்ளிப் போகும் நிலை ஏற்படும். அது மாத்திரமன்றி உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகத் தாமதம் ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாகப் பல்கலைக்கழக நுழைவு, அதன் பின்னர் பட்டம் பெறுவது என சங்கிலிக் கோர்வைபோன்று காலதாமதங்கள் ஏற்பட்டு மாணவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படும்.



## மாணவர்களின் கல்வித்துறையில் ஏற்படுகின்ற பாதிப்பு பாரதூரம்! பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள், பல்கலைக்கழக அனுமதி என்றெல்லாம் தாமதங்கள் அதிகம்!



மறுபக்கத்தில், வேலைநிறுத்தப் போராட்டங்கள் குறித்த செய்திகள் சர்வதேச மட்டத்துக்குச் செல்லும்போது இலங்கைக்கு வருவதற்கு சுற்றுலாப் பயணிகள் தயங்குவார்கள். சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த காலங்களில் வீழ்ச்சியுற்றிருந்த நிலையில், படிப்படியாக இதில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. மார்ச் மாதத்தின் முதல் 13 நாட்களில் மாத்திரம் 53,800 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இந்த வருடத்தில் இதுவரை 2 இலட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்திருப்பதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சராசரியான நாளொன்றுக்கு 4 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதுவரையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் இலங்கைக்கு 330 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்திருப்பதுடன், இவ்வருடத்தில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.5 மில்லியன் என்ற இலக்கை எட்டும் என்றும் இதன் ஊடாக 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட முடியும் என்றும் அரசாங்கம் கணித்துள்ளது.

இதுபோன்ற முன்னேற்றத்தை அடைந்திருக்கும் சூழ்நிலையில், சூழ்நிலையில் தொழிற்சங்கப் போராட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்கள் இத்துறையிலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இது இவ்விதமிருக்க, இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாதத்தின் ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி குறித்த சாதகமான அறிவிப்பு வெளியிடப்படலாம் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. இலங்கை ரூபாவின் பெறுமதி ஸ்திரமான நிலைக்குச் சென்றிருக்கும் சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியும் கிடைக்குமாயின், இது நாட்டுக்குப் பாரியதொரு நிவாரணமாக அமையும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

இலங்கையின் கடனாளர்கள் வழங்கிய கடன் மறுசீரமைப்புக் குறித்த உத்தரவாதம் சர்வதேச நாணய சபையின் நிறைவேற்றுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதிலேயே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். இதில் சதகமான பதில் கிடைக்கும் என அரசாங்கம் சார்பில் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில், சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் ஒரு அங்கமாக மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் புதிய சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அரசியல் தலையீடுகள் இன்றி சுயாதீனமான நிறுவனமாக செயற்பட்டு நாடு தொடர்பில் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு வழிவகுக்கும் வகையில் இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் கடந்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொதுமக்களைத் தெளிவுபடுத்தும் நோக்கில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க செயலமர்வொன்றில் உரையாற்றியிருந்தார். மத்திய வங்கி ஏற்பாடு செய்திருந்த இந்தச் செயலமர்வில் குறித்த சட்டமூலத்தினால் ஏற்படக் கூடிய நன்மைகள் மற்றும் அதன் சாதகமான நிலைமைகள் பற்றி அவர் விரிவாக விளக்கமளித்திருந்தார்.

கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட தவறுகளிலிருந்து கிடைத்த படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் நேராதிருப்பதை உறுதி செய்யும் வகையில் குறித்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இது போன்று அரசாங்கம் பல்வேறு நடைமுறைககளை முன்னெடுத்திருக்கும் பின்னணியில் தொழிற்சங்கவாதிகள் அரசியல் கட்சிகளின் பின்னணியில் இருந்துகொண்டு செயற்படுவது நாட்டை மீண்டும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளுவதாகவே அமையும் என்பதுதான் பொதுவான கருத்தாக உள்ளது.

**பி.ஹர்ஷன்...**

# ஊழல் ஒழிக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகளாக தொடரும் சாதனைகள்!



**இந்திய நாட்டைப் பொறுத்தவரை அன்றைய காலத்தில் வளர்ச்சியென்பது மிகவும் மோசமாகவே இருந்தது. ஒட்டுமொத்த இந்தியாவிலும் எல்லாத்துறைகளிலும் ஊழல் என்பது சர்வசாதாரணமாகவே இருந்து வந்தது.**

இந்தியாவின் அன்றைய ஆட்சியாளர்கள் அடித்தட்டு மக்களுக்கு எந்தவிதமான நலத்திட்ட உதவிகளையும் செய்யாமல் அம்மக்களை வறுமையிலேயே வாழ வைத்து வந்தார்கள் எனலாம். அப்போதைய அரசுகள் மக்கள் நலனைப் பொறுத்தவரை மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வந்தன.

அதுவரை காலமும் மக்கள் பொறுமையாகவே இருந்து வந்தார்கள். தேர்தலொன்று வரும்வரை இந்திய மக்கள் காத்திருந்தார்கள். மக்கள் வெகுண்டெழுந்தவர்களாக அன்றைய அரசை வீழ்த்தினார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் அன்றைய அரசை வீழ்த்திய மக்கள் பாரதிய ஜனதா கட்சியை ஆட்சி பீடத்தில் 2014 ஆம் ஆண்டு அமர வைத்தனர். பதினைந்து ஆண்டுகள் குஜராத் மாநிலத்தில் நல்லாட்சி தந்த நரேந்திர மோடி அவர்களை இந்தியாவின் பிரதமராக மக்கள் ஆட்சிபீடமேற்றினர்.

குஜராத் மாநிலத்தை வெற்றிகரமான மாநிலமாக மாற்றியமைத்த நரேந்திர மோடி, ஒட்டுமொத்த இந்தியாவையும் உயர்நிலைக்குக் கொண்டு வருவாரென்ற நம்பிக்கையிலேயே மக்கள் அவரை ஆட்சிபீடமேற்றினார்கள்.

பிரதமர் நரேந்திர மோடி சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். பணக்கார பரம்பரை, அரசியல் பின்புலம் ஆகியவை இல்லாதவர். இதுவரை எந்த ஊழல் குற்றசாட்டிலும் சிக்காதவர். இத்தனை பெருமைக்குரியவராக கணித்தே அவரை இந்தியாவின் பிரதமராக மக்கள் ஆசனத்தில் அமர்த்தினர்.

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பொறுப்பேற்ற நாளிலிருந்து மக்களுக்கு பல்வேறான நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறார். இந்திய நாட்டின் மக்களை தன் பிள்ளைகளாகக் கருதி மக்கள் மீது அவர் காட்டிய அன்பின் காரணமாக மக்கள் மீண்டும் 2019 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியை வெற்றி பெறச் செய்து மீண்டும் நரேந்திர மோடியை பிரதமர் நாற்காலியில் அமரவைத்தனர்.



## இந்திய வரலாற்றில், நரேந்திர மோடி தலைமையிலான அரசில் இதுவரை காணாத மக்கள்நலத் திட்டங்கள்!

## நலிவடைந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் முற்போக்கு திட்டங்கள்!



அவர் இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்று 2014 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மொத்தம் சுமார் ஒன்பது ஆண்டுகளின் பல்வேறு சாதனைகளை செய்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி இதுவரை மக்களுக்கு அளித்த சிறப்பான திட்டங்களை அடுக்கிக் கொண்டே செல்ல முடியும்.

ஒரு நாட்டின் உயிர்நாடி விவசாயம் ஆகும். அந்த விவசாயத்திற்கும் விவசாயிக்கும் ரூபா 6000 வழங்கும் திட்டம் விவசாயிகள் மத்தியில் சிறப்பானதாகப் பார்க்கப்படுகின்றது.

கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு கழிப்பறை கட்டிக்கொள்ள ரூபா 12000 வழங்கும் திட்டம் மக்களின் அடிப்படை சுகாதாரத்தைப் பொறுத்தவரை மிக முக்கியமான திட்டமாகும்.

மலிவு விலையில் மக்களுக்கு மருந்துகள் வழங்கும் திட்டம், இளைஞர்களுக்கு தொழில் தொடங்க எளிதில் வங்கிகடன், பெண்களுக்கு பெரிதும் பயனளிக்கும் இலவச எரிவாயு இணைப்பு, செல்வமகள் சேமிப்பு திட்டம், ஏழை எளியோருக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் என்றெல்லாம் நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயற்படுத்தி வருகின்ற திட்டங்கள் ஏராளம்.

50 கோடி பேருக்கு ரூபா 5 இலட்சம் வரையிலான இலவச மருத்துவ காப்பீடு, அனைவருக்கும் இலவச வங்கிக் கணக்கு, மிகக் குறைந்த கட்டுப்பணத்தில் காப்புறுதி, மாநிலங்களில் அதிகப்படியான மருத்துவ கல்லூரிகள், மருத்துவமனைகள் கட்டிக்கொள்ள பல்லாயிரம் கோடி ரூபா நிதி உதவி, புதிய புதிய பல்கலைக்கழகங்கள், கேந்திர வித்யாலயா பாடசாலைகள் என்று குறுகிய காலத்திலேயே வெற்றிகரமான திட்டங்களை இந்தியாவில் செயற்படுத்திய பிரதமராக நரேந்திர மோடி திகழ்கின்றார்.

வரி சீர்திருத்தத்தின் பொருட்டு ஜி.எஸ்.டி ஐக் கொண்டு வருதல், நீதிமன்ற தீர்ப்பின்படி மிகவும் அமைதியான முறையில் அயோத்தியில் இராமர் கோவில், மிகப்பிரமாண்டமான மசூதியும் நிர்மாணிப்பதற்குத் தேவையானவற்றை செய்தல் என்றெல்லாம் வரலாற்றுப் பக்கங்களில் பார்க்கப்பட வேண்டிய விஷயங்களையும் பிரதமர் நரேந்திர மோடி செய்திருக்கிறார்.

கொவிட் தொற்று காரணமாக உலகமே அச்சத்தில் மூழ்கியிருந்தது. அவ்வேளையில் மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை அளித்தமை, முகக்கவசம் தயாரிப்பது, தடுப்பூசிகளை கோடிக்கணக்கில் தயாரிக்க வைத்தது, தடுப்பூசி உற்பத்தியை அதிகப்படுத்தியது போன்றவையும் அவரது சாதனைகள் எனலாம்.

கொவிட் தொற்று உலகத்தையே தாக்கியிருந்த வேளையில் இந்தியா முழுவதும் மெகா தடுப்பூசி முகாம் மூலம் கொரோனா பரவலை தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இன்றும் போற்றப்படுகின்றன. போரின் போது உக்ரைனில் சிக்கி தவித்த இந்திய மாணவர்களை மீட்டு வந்தது, பிரதமரின் மக்கள் நல திட்டங்கள் மற்றும் காப்பீடு திட்டங்களால் பொதுமக்கள் அடைந்த பலன்கள், ஏழைகள் வீடுகள் கட்ட மானியம் அளித்து வருவது உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கள் வெற்றியுடன் முன்னெடுத்து வருகின்றது.

மேலும் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டம், பிரதமரின் கனவு திட்டமான புல்லட் ரயில், வந்தே பாரத் ரயில், ரயில் நிலையங்களில் மேம்படுத்தப்பட்ட நவீன வசதிகள் போன்றவையும் மோடி அரசின் வெற்றிகரமான திட்டங்களாகும்.

எஸ்.சி.எஸ்.டி. மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக கொண்டு வரப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள், இளைஞர்கள், பெண்களுக்கான திட்டங்கள் என பல அம்சங்கள் பா.ஜ.க அரசின் சாதனைத் திட்டங்களாகும்.

**எஸ்.சாரங்கன்...**

# பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வின் மூலம் ஒரு சிறந்த எதிர்காலம்





ගොඩ යන්න, හරි පාරෙන් රට යන්න
சரியான வெளிநாட்டு வழி வெற்றிக்கான வழி

சிறு வயதில் ஒரு விமானம் பறக்கும் சத்தம் கேட்டவுடனேயே ஓடிவந்து அதற்கு கையசைத்த ஞாபகம் உங்களுக்கு இருக்கக் கூடும். அவ்வாறு கையசைக்கும் போது என்றாவது அவ்வாறானதொரு விமானத்தில் ஏறி வெளிநாட்டிற்கு பயணிக்க வேண்டும் என நீங்கள் கனவு கண்டிருக்கக்கூடும். அவ்வாறு கனவுலகில் தொடங்கிய உங்களது எண்ணத்தின் காரணமாக வெளிநாட்டிற்கு புலம்பெயர்வதற்கான எதிர்பார்ப்பில் நீங்கள் இருப்பீர்களாயின் இக்கட்டுரைத் தொடர் உங்களுக்கானதே.

தேச எல்லைகள் ஊடாக இடம்பெறும் புலம்பெயர்வானது தொழிலுக்காக, கல்விக்காக, சுற்றுலாவுக்காக, சுகாதார வசதிகளுக்காக, நிரந்தரமாக குடியேறுவதற்காக அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக இடம் பெறக்கூடும்.

இக்கட்டுரைத் தொடரின் ஊடாக நாம் எதிர்பார்ப்பது யாதெனில், தொழிலுக்காக புலம்பெயர்பவர்களுக்கு தேவையான முக்கியமான தகவல்களை வழங்குவதாகும். மேலும், இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள் அனைத்து புலம்பெயர்பவர்களுக்கும் பொதுவானதாக இருப்பதால் நீங்களும் இக்கட்டுரைத் தொடரை வாசித்து முறையான புலம்பெயர்வு தொடர்பாக அறிந்து கொள்ளுங்கள்.

விளக்கம் அளிப்பதற்கு வசதியாக நாம் புலம்பெயர்வினை 3 பகுதிகளாக பிரித்துக் கொள்வோம்

1. புலம்பெயர்வதற்கு முன்னர்
2. புலம்பெயர்வின் போது
3. புலம்பெயர்வு நிறைவடைந்த பின்னர்

## புலம்பெயர்வதற்கு முன்னர்

தொழிலுக்காக புலம்பெயர்வதற்கு முன்னர் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சில விடயங்கள் உள்ளன. அவை பின்வருமாறு,

### 1. நீங்கள் ஒரு தொழிலை பெற்றுக்கொள்வதற்கு நாடுகின்ற வெளிநாட்டு முகவர் / நிறுவனம் சட்டரீதியாக பதிவுசெய்து கொண்டுள்ள நிறுவனமா?

தொழில் நிமித்தமான உங்கள் புலம்பெயர்வு செயன்முறைக்கு உதவி செய்வதற்கு நீங்கள் சரியான வெளிநாட்டு தொழில் முகவர் ஒருவரை தெரிவு செய்துள்ளீர்களா என்பதை நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்வீர்கள்?



நீங்கள் இந்நாட்டில் பதிவு செய்து கொண்டுள்ள ஒரு தொழில் முகவர் ஊடாக தொழிலை பெற்றுக்கொள்வீர்களாயின் அத்தகைய முகவர் கட்டாயமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவினை கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்துகொண்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் முறைகளை பின்பற்றுதல் வேண்டும

(1.) (1) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளத்திற்கு (www.slbfe.lk) பிரவேசியுங்கள். அதில Recruitment Agencies எனும் பகுதிக்கு செல்லுங்கள்.

பின்வரும் படத்திற்கு அமைவாக அப்பக்கத்தின் இடது புறத்தில் உள்ள பகுதியிலிருந்து அகர வரிசையில் உள்ள எழுத்துக்களை தெரிவு செய்வதன் ஊடாக அவ்வெழுத்தில் தொடங்கும் அனைத்து முகவர்களையும் முறையே அறிந்துகொள்ள முடியும் என்பதுடன் வலது புறத்தில் உள்ள பெட்டியில் குறிப்பிடப்படும் எந்தவொரு தகவலையும் நிரப்புவதன் மூலம் அத்தகவலுடன் தொடர்புடைய முகவர் நிலையத்தின் தகவல்களை மாத்திரம் பெற்றுக்கொள்ளமுடியும்.

(2) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 1989 உடனடி தொலைபேசி இலக்கத்தின் வழியாக அல்லது 24 மணித்தியால தகவல் நிலையத்தின் 011-2880500 தொலைபேசி இலக்கத்தின் வழியாக தொடர்பு கொள்வதன் மூலம், அல்லது

(3) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தமது பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ், **வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் / நிறுவனம்** தமது அலுவலகத்தில் காட்சிப்படுத்த வேண்டும் என்பதால் அத்தகைய சான்றிதழின் செல்லுபடியாகும் காலத்தை ஆராய்வதன் மூலம் நீங்கள் தெரிவு செய்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரின் பதிவினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் முறையற்ற மற்றும் நெறிமுறையற்ற நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுவதால் இப்பதிவு முக்கியமானதாகும்.

### 2. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் பதிவு செய்து கொள்வதும் அத்தகைய பதிவும் ஏன் முக்கியமானது?

இலங்கையிலிருந்து தொழிலுக்காக ஒரு வருடத்திற்கு சுமார் 200,000 பேர் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். ஆயினும் கடந்த 2022 ஆம் ஆண்டில் பணியகத்தில் பதிவு செய்துகொண்டு வெளிநாட்டிற்கு சென்ற இலங்கையின் புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கை 311,095 ஆகும். இது பணியக வரலாற்றில் ஒரு வருடத்திற்குள் பதிவு செய்து கொண்டு வெளிநாட்டிற்கு சென்ற ஆகக்கூடிய எண்ணிக்கையாகும். இவ்வாறு வெளிநாட்டிற்கு செல்லும் இலங்கையர்களிடமிருந்து இவ்வாறு புலம்பெயர்பவர்களிடமிருந்து இலங்கைக்கு கணிசமானளவு பணத் தொகை அனுப்பி வைக்கப்படுவதுடன் அவ்வாறு அனுப்பப்படுகின்ற பணத்தொகை இலங்கை அரசின் அந்நியச் செலாவணிக்கு நேரடியாகவே பங்களிப்பு வழங்குகின்றது.

அரச பொருளாதாரத்தின் அந்நியச் செலாவணி பங்களிப்பு வழங்குவதற்கு மேலதிகமாக மேற்படி வெளிநாட்டு பணத்தின் ஊடாக இந்நாட்டில் வசிக்கும் புலம்பெயர்ந்தோரின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரமும் முன்னேற்றம் அடைகின்றது.

புலம்பெயர்ந்தோரிடமிருந்து இவ்வாறு கிடைக்கும் பல்வேறு சேவைகளை போலவே, புலம்பெயர்ந்தோரின் பாதுகாப்புக்காகவும் இலங்கை அரசாங்கம் ஒரு தேசியக் கொள்கையை தயாரித்துள்ளது. இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சார்ந்த ஒழுங்குறுத்தல் அதிகாரமுடைய நிறுவனமாக செயற்படுவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நிறுவப்பட்டுள்ளதுடன் அப்பணியகத்தின் பிரதான பணிகள் பின்வருமாறு:



- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையை ஒழுங்குபடுத்துதல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஆட்சேர்ப்பு செய்யும் முகவர் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல் (உரிமம் வழங்குதல் உள்ளிட்டவை)
- வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ,லங்கையர்களுக்கு பயிற்சி மற்றும் ஆற்றுப்படுத்துதல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
- புலம்பெயர்ந்தோரினதும் அவர்களின் குடும்பங்களினதும் நலன்புரி மற்றும் நல்வாழ்வு தொடர்பாக ஆராய்ந்தறிதல்
- வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு ஊடாக ,லங்கையர்களுக்கு மிகச்சிறந்த வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்தல்
- ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அதிகாரிகள், தொழில் தருணர்கள் மற்றும் தொழில் முகவர் நிலையங்களுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளுதல்
- ,லங்கைக்கு வெளியில் வேலை செய்துவிட்டு ,லங்கைக்கு திரும்பிவரும் ,லங்கையர்கள் மீண்டும் வெளிநாடு செல்லாத பட்சத்தில் அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு சுயதொழில் வழிவகைகளை ஊக்குவித்தல் அல்லது மீள் ஒருங்கிணைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்கின்ற அனைத்துப் புலம்பெயர் ஊழியர்களும் புலம்பெயர்வதற்கு முன்னர் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொள்ளுதல் கட்டாயமானதாகும்.

### 3. அதற்கு செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொள்வதற்கு ரூ.17,928.00 செலுத்துதல் வேண்டும்.


பணியகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பதிவுக்காக செலுத்தப்படும் பணத்தொகை மறைமுகமாகவும் நேரடியாகவும் புலம்பெயர் ஊழியர்களின் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றுக்கு ஈடுபடுத்தப்படும் பணத் தொகையாகும். பதிவினைப் பெற்றுக்கொண்ட ஒருவருக்கு ஏதேனும் நலன் கிடைக்காவிடினும் இவ்வாறானவர்கள் செலுத்தும் பதிவுக் கட்டணத்தைக் கொண்டு கற்பனை செய்ய முடியாத அளவிற்கு பெருந்தொகையான செலவுகள் புலம்பெயர் ஊழியர்களுக்காக பணியகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்விடயத்திற்கு அனைத்து பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்ந்தோரும் பங்களிப்பு வழங்கியுள்ளார்கள் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இப்பதிவின் செல்லுபடியாகும் காலம் 2 அல்லது 3 வருடங்களாகும். சம்பந்தப்பட்ட காலம் நிறைவடைந்து காலாவதியாவதற்கு முன்னர் ரூ.3,774.00 கட்டணம் செலுத்தி பதிவினைப் புதுப்பித்துக் கொள்வது அவசியமாகும். அனேகமான புலம்பெயர்ந்தோர் தங்களது புலம்பெயர் காலத்தை நிறைவு செய்த பின்னரும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நலன்களை பெற்றுக்கொள்ள முடியாமல் அல்லல்படுவதற்கு காரணம் இவ்வாறு பதிவினை புதுப்பித்துக் கொள்ளாமையாகும். இப்பதிவினை புதுப்பித்துக் கொள்ளும் விடயத்தை நீங்கள் சென்றடையும் நாட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக செய்து கொள்ள முடியும். இல்லையெனில் உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அல்லது மாவட்ட அலுவலகத்திற்கு வருகை தருவதன் ஊடாக செய்து கொள்ள முடியும்.



மேற்படி கட்டணத்தை செலுத்தி பதிவு செய்து கொள்வதன் ஊடாக புலம்பெயர் ஊழியர்களாகிய உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

- சுகாதார பிரச்சினைகள் / அவசர விபத்துக்களுக்கான காப்புறுதி கிடைத்தல்
- உங்கள் தொழில் ஒப்பந்தத்தை ஆராய்தல்
- வெளிநாடுகளில் ஏற்படக்கூடிய தொழில் பிணக்குகள் மற்றும் அவசர சந்தர்ப்பங்களின் போது உதவி வழங்குதல்
- செல்வதற்கு எதிர்பார்க்கும் வெளிநாட்டிற்கு பொருத்தமான வகையில் ஊழியர்களை தயார்படுத்துதல்
- சில வெளிநாட்டு தொழில்களுக்கான பயிற்சியினை வழங்குதல்
- வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லுதல் தொடர்பான சரியான தகவல்களை நம்பகமான மூலங்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு கிட்டுதல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் புலம்பெயர் ஊழியரின் வெளிநாட்டு கடவுச்சீட்டில் முத்திரையிட்டு முறையான புலம்பெயர்பவர் என்பதை உறுதிப்படுத்துதல்
- ஆட்கடத்தலுக்கு உள்ளாவதற்கான வாய்ப்புகளை தவிர்ப்பதற்குஆவன செய்தல்



### 4. நீங்கள் தொழிலுக்குச் செல்வதற்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டிய பயிற்சிகள் யாவை?

தொழிலுக்காக வெளிநாடு செல்கின்ற புலம்பெயர் ஊழியர்களின் பயிற்சி மட்டத்தை மேம்படுத்துவதன் ஊடாக இலங்கையின் மனித வளங்களுக்கு உயர்ந்த கிராக்கியும் பெறுமதியும் கிடைப்பதற்கு வழிசமைத்தல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் குறிக்கோளாகும்.

ஆகவே, சிற்சில தொழில் வகைகளுக்கு வெளிநாடு செல்லுகின்ற ஊழியர்களுக்கான பயிற்சி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்தகைய கட்டாய பயிற்சிகள் பின்வருமாறு.

| பாடநெறி | காலம | வயது (ஆண்டுகள்) | யாருக்காக? | பாடநெறி பயிற்சிக் கட்டணம் (ரூ) | NVQ பரீட்சைக் கட்டணம்(ரூ) | மொத்தக் கட்டணம் (ரூ) | பயிற்சி நிலையங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| வீட்டுப் பராமரிப்பு உதவியாளர் - மத்திய கிழக்கு நாடுகள் **(NVQ Level - 03)** | வதிவிட 28 நாட்கள | 18 - 55 | வீட்டு பராமரிப்பாளராக அல்லது நோயாளர் பராமரிப்பாளராக மத்திய கிழக்கு நாடுகளுக்கு முதல்முறையாக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கும் பெண்களுக்கு | 22,410.00 | 2,500.00 | 24,910.00 | தம்புள்ள புலம்பெயர்வு வள நிலையம்<br>தங்காலை புலம்பெயர்வு வள நிலையம்<br>பன்னிபிட்டிய பயிற்சி நிலையம்<br>இரத்தினபுரி புலம்பெயர்வு வள நிலையம்<br>கண்டி பயிற்சி நிலையம்<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>ஊவா மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - ஹாலிஎல<br>மத்துகம புலம்பெயர்வு வள நிலையம்<br>பொலன்னறுவை பயிற்சி நிலையம் |
| வீட்டுப் பராமரிப்பு உதவியாளர் - ஐரோப்பிய மற்றும் கிழக்காசிய நாடுகள் **(NVQ Level - 03)** | வதிவிட 28 நாட்கள் | 21 - 45 | வீட்டு பராமரிப்பாளராக ஐரோப்பிய நாடுகளுக்கும் கிழக்காசிய நாடுகளுக்கும் முதல்முறையாக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கும் பெண்களுக்கு | 22,410.00 | 2,500.00 | 24,910.00 | மத்துகம புலம்பெயர்வு வள நிலையம்<br>குருநாகல் பயிற்சி நிலையம் |
| நோயாளர் பராமரிப்பாளர் பெண்கள / ஆண்களுக்கான பயிற்சி பாடநெறி **(NVQ Level - 03)** | வதிவிட 45 நாட்கள் | 18 வயதுக்கும் மேற்பட்ட | முதல் முறையாக நோயாளர் பராமரிப்பாளராக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கும் பெண்களுக்கு / ஆண்களுக்கு | 18,792.00 | 3,250.00 | 22,042.00 | இரத்தினபுரி புலம்பெயர்வு வள நிலையம்<br>தங்காலை புலம்பெயர்வு வள நிலையம்<br>ஊவா புலம்பெயர்வு வள நிலையம் - ஹாலிஎல<br>பன்னிபிட்டிய பயிற்சி நிலையம்<br>(பெண்களுக்கு மாத்திரம்) |
| **IFE** ஊழியர் பயிற்சிப் பாடநெறி **(IFE ) Identification of Foreign Experience/** வெளிநாட்டு அனுபவங்களை அறிந்துகொள்ளுதல்) 07 நாட்கள் | வதிவிட 7 நாட்கள | 18 – 45 சவுதி அரேபியா 25 - 55 | தங்களது பயிற்சிநெறிகளை நிறைவுசெய்து, பாடநெறியின் செல்லுபடித்தன்மை கடந்துள்ள புலம்பெயர்வதற்கு இயலாமல் போனவர்களுக்கு அல்லதுர் வெளிநாட்டு அனுபவத்துடன் கூடிய ஆயினும் அதனை உறுதிசெய்ய இயலாதவர்களுக்கு | 9,719.00 | - | 9,719.00 | மேல் மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - மத்துகம<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையம் |
| எழுத்தறிவு பயிற்சிப் பாடநெறிகள் (சிங்களம் / தமிழ்) | வதிவிட 18 நாட்கள | 23 - 55 | சிங்களம்/தமிழ் மொழிகளைப் எழுதுவதற்கோ வாசிப்பதற்கோ தெரியாதவர்களுக்கு | 3,001.00 | - | 3,001.00 | சப்ரகமுவ மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - இரத்தினபுரி |
| அடிப்படை ஆங்கில மொழிப் பாடநெறி | 14 நாட்கள் | 18 - 55 | தமது ஆங்கில அறிவை விருத்தியாக்கிக்கொள்ள விரும்புபவர்கள் | 6,001.00 | - | 6,001.00 | பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையம்<br>குருநாகல் பயற்சி நிலையம்<br>சப்ரகமுவ மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - இரத்தினபுரி |
| ஜப்பான் மொழி **(National Aptitude Training NAT 04 & 05)** | 04 மாதங்கள் | 18 - 45 | முதல் முறையாக தொழிலுக்காக யப்பானுக்கு புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு | 24,000.00 ஒரு பாடநெறிக்கு ரூ.12,000.00 | - | 24,000.00 ஒரு பாடநெறிக்கு ரூ.12,000.00 | தம்புள்ளை மாவட்ட நிலையம்<br>தங்காலை / தென்மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - தங்காலை<br>பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையம்<br>சபரகமுவ மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - இரத்தினபுரி<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>வடமேல் மாகாண பயிற்சி நிலையம்<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>ஊவா மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - ஹாலிஎல<br>மேல் மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - மத்துகம<br>பொலநறுவை மாவட்ட நிலையம்<br>வடமத்திய மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - அநுராதபுரம்<br>காலி மாவட்ட பயிற்சி நிலையம்<br>சிலாபம் மாவட்ட நிலையம |
| கைத்தொழில் பயிலுனர்களுக்கான உள்ளக பயற்சி நிகழ்ச்சித்திட்டம் **(Technical Intern Training Programme/ TITP)**<br>1. நோயாளர் பராமரிப்பு<br>2. கட்டுமானத் துறை ஊழியர்கள் | வதிவிட 05 மாதங்கள் அல்லது 04 மாதங்கள் | 18 - 30 | முதல் முறையாக தொழிலுக்காக யப்பானுக்கு புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு | இரண்டு நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இப்பாடநெறிகளுக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை. பயிற்சிப் பாடநெறிக் கட்டணம் மற்றும் வசதிகள் இரண்டு நாடுகளாலும் வழங்கப்படுகின்றது. | | | தென் மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - தங்காலை |
| கொரியா நடைமுறை பயிற்சி பாடநெறி | வதிவிட 10 நாட்கள | 18 - 39 | முதல் முறையாக தொழிலுக்காக கொரியாவுக்கு புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு | 35,000.00 | - | 35,000.00 | ஹாலிஎல புலம்பெயர்வு வள நிலையம் |
| இரண்டு நாள் திசைமுகப்படுத்தல் பயிற்சி பாடநெறி | 01 நாள் | 18 - 45 | முதன்முறையாக வீட்டு வேலை அல்லாத தொழில்களுக்கு வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு | 1,799.00 | - | 1,799.00 | தம்புள்ளை பயிற்சி நிலையம்<br>தங்காலை புலம்பெயர்வு வள நிலையம்<br>பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையம்<br>இரத்தினபுரி புலம்பெயர்வு வள நிலையம்<br>கண்டி பயிற்சி நிலையம்<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>ஹாலிஎல புலம்பெயர்வு வள நிலையம்<br>மத்துகம புலம்பெயர்வு வள நிலையம்<br>பொலநறுவை பயிற்சி நிலையம்<br>அனுராதபுரம் பயிற்சி நிலையம்<br>காலி பயிற்சி நிலையம்<br>அம்பாறை பயிற்சி நிலையம்<br>சிலாபம் பயிற்சி நிலையம்<br>திருகோணமலை மாவட்ட நிலையம்<br>மட்டக்களப்பு மாவட்ட நிலையம்<br>வடமாகாண புலம்பெயர்வு வள நிலையம்<br>யாழ்ப்பாணம் மாவட்ட நிலையம |
| வீட்டு அடிப்படையிலான நோயாளர் பராமரிப்பு ஊழியர்கள் வெளிநாட்டிற்கு செல்வதற்கு முன்னர் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 07 நாட்கள் | 18 - 45 | இஸ்ரேல் நாட்டிற்கு பணியகத்தின் மூலம் வெளிநாட்டிற்கு செல்வதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு | இலவசம் | | | தென் மாகாண புலம்பெயர் வள நிலையம் - தங்காலை<br>சப்ரகமுவ மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - இரத்தினபுரி |

* மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு வீசா பெற்றுக்கொள்வதற்கு பூர்த்திசெய்ய வேண்டிய ஆகக்குறைந்த வயதெல்லையை அறிந்துகொள்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை தொடர்பு கொள்ளவும்.
மேற்படி ஒவ்வொரு பயிற்சிக்கும் பதிவு செய்து கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு அல்லது வேறு ஏதேனும் தகவல்களை அறிந்து கொள்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற இலக்கத்தை அல்லது 24 மணித்தியால தகவல் நிலையத்தினை 011 – 2880500 இலக்கம் வாயிலாக தொடர்பு கொள்ளவும்.



## புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (**International Organization for Migration**) என்பது ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான முதன்மையான சர்வதேச அமைப்பாகும்.

அதன் முக்கிய குறிக்கோள் யாதெனில் பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வினை ஊக்குவிப்பதாகவும். இதற்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு செயலமர்வுகளை நடாத்தி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு அவ்வமைப்பின் உதவிக்கான பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேற்படி செயலமர்வுகளில் புலம்பெயர்வினை பாதுகாப்பான முறையிலும் ஒழுங்கு முறையாகவும் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி புலம்பெயர்பவர்களுக்கு சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அப் பிரிவினால் பேணி வரப்படும் 077-4410086 தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ள முடியும்.

பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வின் மூலம் தனி நபர்களுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனும் கோட்பாட்டை புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

இன்றைய கட்டுரை கட்டாயமாக உங்களுக்கு பயனுடையதாக இருந்திருக்கும் என நம்புகின்றோம். இது போன்ற மற்றுமொரு கட்டுரை மார்ச் மாதம் 20ஆம் திகதி பிரசுரமாக இருப்பதோடு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் உங்களுக்கு அதுதொடர்பான விடயங்களை அறிந்து கொள்ள அந்த கட்டுரையையும் வாசித்தல் பயனுடையதாக இருக்கக்கூடும். கீழேயுள்ள கட்டத்தினுள் கேட்கப்பட்டிருக்கும் வினாவுக்கான விடையை SMS முறையில் தரப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் சீட்டிழுப்பு முறையில் தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி முற்கட்டண (ரீலோட்) அட்டைகளை வெற்றி பெற முடியும். தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி மூலம் அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

வெளிநாட்டிற்கு செல்லுதல் தொடர்பாக அல்லது ஒழுங்கற்ற பயணத்தின் ஊடாக இன்னலுக்கு உள்ளாகியுள்ள நபர்கள் தொடர்பான நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் 0774410086 தொலைபேசி இலக்கம் வாயிலாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**“இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை தொடர்பு கொள்ளக்கூடிய நேரடி தொலைபேசி இலக்கங்கள் யாவை?”**

இவ் வினாவுக்கான விடையை பின்வரும் முறையில் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (**IOM**) நேரடி தொலைபேசி இலக்கம் 0774410086 இற்கு **SMS** (குறுஞ்செய்தி) வாயிலாக மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலம் தொலைபேசி முற்கட்டண அட்டைகளை (ரீலோட்) சீட்டிழுப்பு முறையில் வெற்றி பெறலாம்.

**SMS** / குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முறை

செய்தி / பால் / வயது / மாவட்டம் / விடை .................................... 0774410086

உதாரணம்

**News/ M/ 14/ Colombo/ Answer**
செய்தி / ஆண் / 14 / கொழும்பு / சரியான விடை

SBFE

IOM UN MIGRATION

# BUDGET adz

தினகரன் வாரமஞ்சரி

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067


வீடு மற்றும் கட்டிடங்களுக்கான அத்திவாரமிடல், சுவர், கபராது, கொங்கிரீட், ஸ்லப் கட்டுமான வேலைகளுக்கு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி கட்டுமான பணி மேற்கொள்ளப்படும்.

ATHULORALA CONSTRUCTION
No. 8/2, Vidyala Road, Panadura.
Contact - 0719 561 671
Email : nalinathukora06@gmail.com

## வாடகைக்கு/ குத்தகைக்கு



இராஜகிரிய சில்வா ஒழுங்கை 4 படுக்கை அறைகள் முழுமையான வசதிகள் இல்லை 15 பேர்ச் மேல் மாடி வீடு வாகன நிறுத்துமிடம் மற்றும் தோட்டம். அலுவலகத்திற்கு/ இருப்பிடத்திற்கு உகந்தது.

தரகர் தேவையில்லை – நேரடியான விசாரணை மாத்திரம்.
077 7 306 207


## KADUWELA
AT VIHARA MAWATHA

34.8 perch land very close to Katunayake Express way with water, Electricity, Telephone facilities for IMMEDIATE SALE

VERY CLOSE TO SLIIT AND CINEC UNIVERSITIES

Call : 0777 300 688

## COCONUT ESTATE FOR SALE



PRICE NEGOTIABLAE

294 PERCHES ANCESTRAL COCONUT ESTATE IN ONE BLOCK, IDEAL FOR DEVELOPMENT OF HOUSING SCHEME (approved plans available). 7km from Nittambuwa Clock Tower. Nearby Freezone and Hospitals
Call Ms. Ranasinghe - 0771 717 211

இரு மாடி ஆடம்பரவீடு தெஹிவளை
விற்பனைக்கு

தெஹிவளை

தெஹிவளை நகரின் மையத்தில் திடமாக கட்டப்பட்டரூபவ் கட்டிடக்கலையில் வடிவமைக்கப்பட்ட இரு மாடி நவீன வீடு. மல்வத்த வீதியில் 15.5 பேர்ச் காணியில் காலி வீதிக்கு நடை தூரத்தில் உள்ளது.

6 படுக்கையறைகள் (இரண்டு வெந்நீர் இணைக்கப்பட்ட குளியலறைகள்), புணர்நிர்மாணிக்கப்பட்ட பான்றி கப்போட்டுக்களுடனான பெரிய சமையலறை, தரையிலிருந்து சீலிங் வரையிலான தேக்கு மரத்திலான யன்னல்களுடனான இரு அமரும் மற்றும் உணவருந்தும் இடங்கள், முன் பக்கத்தில் சிறிய தோட்டம், 4 கார்களை நிறுத்துவதற்கான இடப்பரப்புரூபவ் நுழை-வாயிலில் தொலையியக்கியுடனான உருளும் கேட், பணியாளர் அறை மற்றும் கழிவறை, அலுவலகத்திற்கு அல்லது வசிப்பதற்கு பொருத்தமானது.

தெளிவான உறுதி
தரகர் தேவையில்லை

0776 519 941
15/6, மல்வத்த வீதி, தெஹிவளை.

தினகரன் வாரமஞ்சரி
## சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 250/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## BEACH HOTEL FOR SALE



20 Rooms | Polhena Beach Matara
0740 966 221

ஹட்டனில் இனிமையான காற்றை தழுவுங்கள்
சிரிபெல LANDS
Rs. 245,000/-
ROZELLA HEIGHTS
ஹட்டனில் இருந்து கொழும்பு செல்லும் பாதைக்கு அருகாமையில்
0702 48 48 48

## Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

Is your Business Struggling? / ව්‍යාපාරය අමාරුවේද?
Is your Business Making Losses? / ව්‍යාපාරය අලාභද?
Does your Business Need Financial Support? / ව්‍යාපාරය මූල්‍ය පහසුකම් අවශ්‍යද?
Call us for Outright Purchase or Joint Ventures
අප අමතන්න 0722 40 11 04
123, Dudley Senanayake Mawatha, Colombo 08.

EastStar Handlooms
SALE
UP TO 20% OFF
IN OUTLETS & ONLINE SHOP TILL 14TH APRIL 2023
eshandlooms.com
00 94 77 8834 786
OUTLETS-DEHIWALA | MAHARAGAMA | ONE GALLE FACE | NATPIDDIMUNAI

## வாடகைக்கு/ குத்தகைக்கு



கொழும்பு – 09, புகையிரத இடப்பரப்பிற்கு அருகாமையில் அஸ்கொன் குடிமனைகள் தொடர்மாடி – முழமையான வசதிகளுடன் 3 படுக்கை அறைகள்/ குளம்/ ஜிம்/ நவீன சந்தை/ வாகன நிறுத்துமிடம்/ பாதுகாப்பு மற்றும் பிள்ளைகள் விளையாடுவதற்கான மைதானம்.

தரகர் தேவையில்லை – நேரடியான விசாரணை மாத்திரம்.
077 7 306 207
email : mhhsiddique@hotmail.com

ARIYARATHNE CONSTRUCTIONS
අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සහ කැනපි
සියලුම ඇලුමිනියම් වැඩ
Warehouse Construction
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම
Polycarbonate
අමානෝ පිලි 0.47 (mm)
නවීන විලාසිතාවේ ග්‍රිල්, ගේට්ටු, අත්වැල්
විශ්වාසයෙන්, වගකීමෙන් හා උසස් නිමාවෙන්...
0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction

தினகரன் வாரமஞ்சரி
போட்டோ குறும் விளம்பரம்
Amal - 077 7 270 443
Asela - 077 313 0 150

BUDGET வாரமஞ்சரி adz
It suits your budget

## Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

தினகரன் வாரமஞ்சரி
## திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 | ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 | கயனி - 011 2 429 342

## Sri Lanka's Largest Pipeline Company
Rs.150/- Upwards



ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD
SINCE 1930
# 301 OLD MOOR STREET, COLOMBO 12
Tel: 011- 739 7777 alliedint@eureka.lk www.allied.lk

# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## Unregistered UD Nissan



Luxury 43 seat bus, Main Engine for A/C, Cargo room, Toilet, Auto Door, Manual Gear

071 8 244 027 / 011 2 869 794

## மாதாந்தம் 1/2 மில்லியன் வருமானத்துடன்

## பன்னிப்பிட்டியவில்

வர்த்தக காணி விற்பனைக்கு.

150 மில்லியன்

- 11.7 பேர்ச்சில் 5 மாடி கட்டிடம்
- 11000 சதுர அடி
- 10 அலம்பகங்கள்
- 4 நீர் மாணிகள்ருபவ்
- 10 வாகனங்களுக்கான நிறுத்துமிடம்
- 3 வழி மற்றும் 2 தனி வழி மின்சாரம்
- கொட்டாவ-பொறளை பிரதான வீதிக்கான 70 அடி முகப்பு

கொட்டாவ நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு 3.5 கி.மீ. பத்தரமுல்ல செத்சிரிபாயவிற்கு மற்றும் பாராளுமன்ற பிரதேசத்திற்கு 4 கி.மீ. மருந்தகங்கள் மருத்துவ செனலிங் நிலையங்கள் கம்பனிகள்ருபவ் வங்கிகள் அரசு சார்பற்ற நிறுவனங்கள்ருபவ் அலுவலகங்கள் உதிரிப்பாகங்கள் கம்பனிகள் மற்றும் ஏனைய பொருத்தமான வர்த்தகங்கள்.

உரிமையாளர் வெளிநாட்டிற்கு செல்வதினால்ருபவ் உடன் விற்பனைக்கு.

விலை பேசித்தீர்க்கலாம்.

0773 060 448/ 0716 629 555

## கறையான்களை

கட்டுப்படுத்துவதற்கான தீர்வு

LEEMAKA PEST SOLUTIONS

## Solution to Get rid of Termites

**Pre & Post Construction treatments For Termites**

Rodent Control

FREE INSPECTION

Ants | Flies | Cockroaches
Mosquitoes | bed Bugs | Wood bores

Hotline
074 031 5517

To Minimize the Pest Attack & Usage of Pesticide
Keep Your environment Clean

Licence No - RP/PCR/WP/100
Approved by Registrar of Pesticides

Leemaka Industries (Pvt)Ltd.
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344
Email - Leemakaindustries@gmail.com
(PV 120625)

## வத்தளையில் காணி விற்பனைக்கு



வத்தளை முத்துராஜ மாவத்தையில் 25 பேர்ச்சுக்கள். வியாபாரத்திற்கு உகந்த ஆதனம். நீர்கொழும்பு வீதிக்கு 25 நிமிடங்கள். கொண்டெயினருக்கான நுழைவாயில் உண்டு.

077 0 112 650 / 077 3 448 687

## GAMPAHA

PRIME COMMERCIAL AND RESIDENTIAL PROPERTIES FOR SALE

ADJACENT TO OLD MINUWANGODA ROAD



**Walking Distance to Gampaha Railway station, Two storey commercial building, Two storey 6 Bedrooms, 3 Bathrooms House, 26 perch land**

IDEAL FOR BUSINESS OR LIVING

LAND - 4 MILLION PER PERCH COMMERCIAL BUILDING AND HOUSE: ADDITIONAL

0764 955 768, 0712 749 611




## வாடகைக்கு/ குத்தகைக்கு



கொழும்பு – 14, ஸ்டேஸ் வீதிக்கு முகப்பாகவுள்ள 56 பேர்ச் வெறுங்காணி. 2 நுழைவாயில்கள் உண்டு.

தரகர் தேவையில்லை – நேரடியான விசாரணை மாத்திரம்.

077 7 306 207

email : mhhsiddique@hotmail.com

* Trusted Marketplace of Classified Advertisers...

SUNDAY OBSERVER adz It's what you want **Classified**

Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

## வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்

### TOYOTA REGISTERED



Toyota KDH TRH 200v 2017 Engine capacity 1990 cc petrol Efi Alto Triptonic transmission Silver colour 12 air bages, Mileage 47790 km Price - Rs. 18,000,000/- Negotiable Contact No.
0753 944 872
017601



Toyota Landcruiser Prado TX 150 G frontier, Petrol, fully loaded, 2017/2018 first owner, Toyota Lanka maintained, tan leather electric seats,sunroof, 4 way camera, live sound system, electric foot step, climate control Dual AC, etc done only 15300km
077 9 232 207
017610




### TOYOTA REGISTERED



Toyota Cariana Diesel , GE - XXXX, 157000km (With Emision Test reports and Maintained Records ) 05 th Owner, Registration 2000, YOM- 97, Full option, Reverse Camera, Bluetooth Kenwood steup with handsfree mike, Automatic.
077 9 109 614
017631




### KIA REGISTERED



Kia Sorento 2011 Diesel Tiptronic transmission, beige leather interior, 5 seater, 2nd owner Rs 7950000.
077 7 840 141
017610

### BMW REGISTERED



BMW 520D year 2012 used triptronic Diesel,Engine Capacity,1995 cc, mileage 251000 km, AC, PS, Cruise control, Beige Leather interior Price - Rs 13,000,000/-Negotiable. Contact
0753 944 872
017601




### NISSAN REGISTERED



Nissan Petrol Y61 Diesel Automatic 4 WD 7 seater 2014 CAB Exchange with small vehicles too considered.
0773 885 254
(RPT 19/03)

### BMW REGISTERED



BMW X3 2011/2012 Petrol, 3000cc, Tiptronic transmission, beige leather interior with electric seats, 18" alloys, multi function steering, Dual zone climate control AC, xenon head lamps, premium audio, 8 airbags, 4wd, with full service records, carefully used, done 65000. Rs 12.9 million
077 9 232 207
017610



BMW E34 518i 1993 brand new imported, full option, 1800cc 4 cylinder petrol, manual transmission, 17" alloys, mint condition.
077 9 232 207
017610




### AUDI REGISTERED



Audi Q5 Quattro 2011 Brand new imported through agents, 1990cc Turbo petrol, 7 speed tiptronic transmission with Pedal shift, black leather interior with electric seats, B & 0 sound system, 18" alloys with new Dunlop tyres, Dual Zone climate control AC with Rear vents, Head lamp washers, 8 airbags, TCS, multi function steering, park sensors etc carefully used immaculate condition, exchange considered
077 9 232 207
017610



Audi A4 2017/2018 1400cc TFSi full option, black leather interior, 18" alloys, 7 speed tiptronic transmission, led head lamps etc
077 7 840 141
017610

### LAND ROVER REGISTERED



Land Rover Range Sport HSE 2018 used SUV/ 4x4, Engine Capacity 2000cc ,country of origin UK,Grey - Wrapped with white colour – leather Electric memory seats- triptronic Diesel Mileage 93000 km Price Rs. 60, 000, 000/-Negotiable Contact
0753 944 872
017601




### MITSUBISHI REGISTERED



Mitsubishi Montero sport wp KT. 2012 Diesel, beige interior, 7 seater, Dual AC, fully agents maintained, first owner
077 7 840 141
017610


### LAND ROVER REGISTERED



Land-rover Discovery 4 GS 3.0 SDV6 Diesel 2011 model registered 2013 full option, Tiptronic transmission with pedal shift, 20" alloys, Black leather interior, Harmon kardon audio, android multimedia with 3 way camera, Airmatic suspension, done 65000 Climate control dual ac, multi function steering, cruise control etc, immaculate condition
077 9 232 207
017610

DON'T TXT & DRIVE

வாரமஞ்சரி
போட்டோ குறும் விளம்பரம்



Amal
077 7 270 443
Asela
077 313 0 150

### OTHERS REGISTERED



Mercedes Benz S350 2011 registered. Black leather interior with electric memory seats, brand 19" Maybach alloys & tyres, climate control Dual AC, sunroof, airmatic suspension, etc done only 83000km RS 18.5 million exchange considered
077 9 232 207
017610



Jaguar S type 2005 face lift version, brand new imported, agent maintained, 2500cc V6 petrol, Tiptronic transmission, beige leather interior with electric seats, 8 air bags, Dual zone climate control AC, multi function steering, Premium audio system, 17" alloys with new tyres, done only 63000km, carefully used, immaculate condition. Exchange considered. Rs. 7450000
077 9 232 207
017610

### OTHERS REGISTERED



Tata Xenon Double Cab 2015 4wd, first owner, 2200cc common rail turbo Diesel, alloy wheels, manual transmission, rear canopy etc
077 7 840 141
017610



Mahindra Bolero wp LD 2006. Original 4wd, 2500cc Diesel, modified for safari purpose, rear 8 seater, matt finish paint mint condition
077 7 840 141
017610

DON'T TXT & DRIVE



Maszda 323 family 15-XXXX running, paint interior good Duplicate Book Book oner . Rs. 825000/= Delgoda TP
077 9 324 223
017618






# தங்கம் ஏன் இந்த விலை விற்கின்றது?

## விளக்குகிறார்கள் தங்கநகைக் கடை உரிமையாளர்கள்

தங்கம் ஏன் இந்த விலை விற்கின்றது என்பது பலருக்கும் புரியாத புதிர்.

70ம் ஆண்டில் ஐக்கிய முன்னணி அரசின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் என். எம், கொல்வின் போன்ற தலைவர்களை ஆட்சியில் இணைத்துக் கொண்டமையானது, அன்றைய அரசியலில் "தங்க மூளைகளை" இணைத்துக் கொண்டதாக பேசப்பட்டது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் பிரபல திரைப்பட நடிகரான எம். ஜீ.ராமச்சந்திரன் மரணித்த நேரம் தமிழ்நாடு முழுவதிலும் ஒட்டப்பட்ட போஸ்டர்களில் குறிப்பிடப்பட்டிருந்த விடயம் "பொன்னான இதயம் அமைதியானது" என்பதாகும்.

இந்த வாக்கியங்களின் அர்த்தம் புரியாத இலங்கையின் சிலர் விஜய குமாரதுங்க மரணித்த சந்தர்ப்பத்தில் "பொன்னான இதயம் அமைதியானது" என்பதாக போஸ்டர் ஒட்டினர். எனினும் இவர்கள் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜீ. ராமச்சந்திரன் ஒருநாளைக்கு ஒருவேளை தங்கத்தை சாப்பிட்டமையை அறிந்திருக்கவில்லை. எம். ஜீ. ஆர் தங்கத் தூளைக் கரைத்து சாப்பிட்டு வந்தது தனது சருமத்தின் நிறத்தை பொன் நிறமாக மாற்றுவதற்கேயாகும்.

தங்கத்தின் விலை தாங்கிக் கொள்ள முடியாதளவுக்கு உயர்ந்து செல்லும் போது சாதாரண மக்களுக்கு தங்கத் தூளைக் கரைத்துக் குடிப்பதை விடவும், தமது காதிலும், கழுத்திலும் இருந்த தங்க ஆபரணங்களை அடகு வைக்கும் நிலை ஏற்பட்டது, வயிற்றுப் பசிக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்குவதற்கேயாகும். எனினும் கொரோனாவிற்குப் பின்னர் திடீரென உயர்வடைந்த தங்கத்தின் விலையானது கடந்த வாரத்தில் திடீரென குறைவடைந்தது. எனினும் மறுநாளே தங்கத்தின் விலை மீண்டும் முன்னர் இருந்த நிலைக்கே உயர்வடைந்தது. நாம் இது தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த வாரம் தங்கத்திற்குப் பெயர் போன கொழும்பு செட்டியார் தெருவிற்குச் சென்றோம்.

ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கும் கட்டிடங்களில் அமைந்துள்ள தங்க நகைக் கடைகளில் மக்கள் இடைவெளி இல்லாமல் அமர்ந்திருந்தனர். அந்த மக்கள் அங்கு கூடியிருந்தது தங்க நகைகளை வாங்குவதற்காகவா, அல்லது தங்கத்தின் விலையினை விசாரிக்கவா என்ற கேள்வி வேறு விடயமாகும்.

செட்டியார் தெரு என்பது ஒருவழிப் பாதையாகும். அவ் வீதியில் 300 மீற்றர் தூரமளவில் பயணித்ததன் பின்னர் இடதுபுறத்தில் உள்ள முதலாவது வீதிக்குப் பிறகு தங்கக் கடைகளைக் காண முடியாது. அதற்குப் பிறகு இருப்பது மூன்று கோயில்கள், இரண்டு சைவ ஹோட்டல்கள், இலக்ட்ரோனிக் பொருட்கள் விற்கும் கடை மற்றும் காகித இறக்குமதியாளர்களின் கடைகள் என்பனவாகும். புகைப்படக் கலைஞருடன் தங்க நகைக் கடைகள் அமைந்துள்ள பக்கத்திற்கும், மீண்டும் ஐந்து லாம்புச் சந்திக்கும் பல தடவைகள் அங்குமிங்கும் அலைந்தது "தங்கத்தின் விலை" தொடர்பான கட்டுரைக்குரிய விடயங்களைத் தேடியாகும்.

மக்கள் கூட்டம் சற்று குறைவாக இருந்த தங்க நகைக் கடையின் முதலாளியிடம் அகில இலங்கை நகை வர்த்தகர் சங்கம் அமைந்துள்ள இடத்தைப் பற்றி விசாரித்தோம்.

இந்த சங்கத்தின் செயலாளர் ரத்னராஜா சரவணனாவார்.

"இலங்கையில் தங்கத்தின் விலை அதிகரிப்பதற்கு டொலரினை விடவும் தாக்கம் செலுத்தியது உலக சந்தையில் தங்கத்தின் விலை கூடியதேயாகும். கடந்த வருடத்தில் தங்கம் ஒரு பவுண் 225,000/= ரூபாய் வரையில் உயர்ந்து பின்னர் குறைவடைந்தது. கடந்த வாரத்தின் மார்ச் 09ம் திகதி தங்கத்தின் விலை 140,000/= ரூபாய் வரையில் குறைந்தது. 22 கரட் தங்கம் ஒரு பவுண் 134,000/= ரூபாயாகக் குறைவடைந்தது. டொலர் 362 ரூபாவிலிருந்து 307 ரூபாயாகக் குறைந்ததும் தங்கத்தின் விலைகளும் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு சுமார் 40,000/= அளவில் குறைவடைந்தது. எனினும் இது நினைத்துப் பார்க்க முடியாத விலைச் சரிவாகும்".

"கடந்த வாரத்தில் தங்கத்தின் விலை ஒரே நாளில் குறைவடைந்தது, டொலரின் விலை குறைவடைந்த போது விமானப் பயணிகள் வரையறையின்றி தங்க நகைகளைக் கொண்டு வந்ததாலா?" என நாம் ரத்னராஜாவிடம் கேட்டோம்.

"மங்கள சமரவீர நிதி அமைச்சராக இருந்த காலத்தில் தங்க இறக்குமதி நிறுத்தப்பட்டதன் பின்னர் இலங்கைக்கு தங்கம் கொண்டு வரப்படவில்லை. தற்போது வெளிநாடுகளிலிருந்து தங்கம் முறையற்ற வகைகளில் கொண்டு வரப்படுகின்றது. அல்லது வெளிநாடுகளில் வசிப்பவர்கள் அணிந்து கொண்டு வருவதும்தான். உண்டியல் முறையில் இலங்கையின் தங்கத்தை இந்தியாவுக்கு அனுப்பியதால்தான் மங்கல சமரவீர இந்த தடையினை கொண்டுவந்தார்".

ரத்னராஜாவுடன் நாம் பேசிக் கொண்டிருந்த போதே உலக சந்தையில் ஒரு பவுணின் விலை எவ்வாறுள்ளது என்பதை தனது ஸ்மாட் கைப்பேசியில் எடுத்துக் காட்டினார். அதில் LIVE GOLD MARKET ROUTEIN எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

"தங்கத்தின் விலை குறைந்தாலும் வியாபாரம் குறைவடையும். தங்க நகைகளை வர்த்தகம் செய்பவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றார்கள். கடவத்தை, காலி போன்ற பிரதேசங்களில் மிகத் திறமையான பொற்கொல்லர்கள் இருக்கின்றார்கள். இங்கு வேலை இல்லாத காரணத்தினால் அனேகமானோர் வெளிநாடு சென்றுவிட்டார்கள். இன்னும் சிலர் முச்சக்கர வண்டி ஓட்டுகின்றார்கள்"

இலங்கையில் களனி கங்கையில் தங்கம் இருப்பதாக கடந்த காலங்களில் புரளி பரவியது. 2014ம் ஆண்டில் இந்தக் கதை மிக வேகமாகப் பரவியிருந்தது. களனி ஆற்றில் தங்கமும் இரத்தினங்களும் கிடைக்க ஆரம்பித்தது நேற்று இன்றல்ல.

பூகொடையில் வசிக்கும் இரத்தினம் மற்றும் தங்கம் தொடர்பான விஷேட நிபுணரின் கருத்துப்படி, இந்த பிரதேசத்தில் காணப்படுவது "உண்மையான தங்கம்" ஆகும். இல்மனைட் கலந்த மணலில் இந்த தங்கம் உள்ளது. இரத்தினக்கல் எடுக்கும் கூடைகளில் இந்த சிறிய தங்கத் துண்டுகள் அகப்படுவதில்லை. ' என்றார்.

செட்டியர் தெரு தங்கப் பொருட்களின் விற்பனைக்கான மையமாக இருந்தது, இலங்கையில் தங்கச் சந்தையை ஒருங்கிணைக்க கொழும்பு கோல்ட் சென்டர் 2014 செப்டம்பர் 5ம் திகதியன்று திறக்கப்பட்டது. இந்த இடம் சென் ஜோன் மீன் சந்தை என்பதை இன்று பலரும் மறந்து விட்டார்கள். செட்டியார் தெருவைப் போல் இங்கு அதிக மக்கள் கூட்டத்தை காண முடியவில்லை. இந்த தங்க நிலையம் திறக்கப்பட்ட தினத்தன்று தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் அமித கமகே இவ்வாறு கூறியிருந்தார்.

"சீனா, டுபாய் போன்ற நாடுகள் அவர்களுக்கே உரிய நகைச் சந்தையினை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. அழகான புதிய வடிவமைப்புகள் மூலம் சந்தையைப் புதுப்பித்துக்கொள்வது அவர்களது சிறப்பம்சமாகும். அதேபோன்று மிக விரைவாகவே, வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அழகான நகைகளை உருவாக்குவதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. எம்மால் மிக வேகமாக அந்த நிலையை அடைந்து கொள்ள முடியாது போனாலும் படிப்படியாக அந்நிலையினை நெருங்குவதற்கான முதல் கட்டமாகவே இந்த தங்க மத்திய நிலையம் திறந்து வைக்கப்படுகின்றது. கொஞ்சம் கொஞ்சமாகவாவது சர்வதேச தரத்தினை நெருங்கிக் கொள்வதற்கான வாய்ப்பு எமக்குள்ளது. ஆபரணங்கள் ஊடாக நாம் எமக்கே உரிய அடையாளத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும். அதற்கான சிறந்த வர்த்தக நாமம் ஒன்று தேவை. அதன் மூலம் எமது ஆபரணங்களுக்காக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் கோரிக்கையினை அதிகரித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

இந்த தங்க மத்திய நிலையத்தை நிறுவுவதன் மூலம், இரத்தினக்கல் இருப்புக்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மூலம் உரிய தரத்தில், சர்வதேச மட்டத்திலான கோரிக்கைகளை நிறைவேற்றுவதே எங்கள் முக்கிய நோக்கமாகும்"

எனினும் செட்டியார் தெருவில் தங்க நகை வாங்குவதற்காக வந்திருந்த அனேக வாடிக்கையாளர்களிடம் நாம் விசாரித்த போதிலும், தங்க மத்திய நிலையத்தைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. அதனையும் விட தங்கம் வாங்குபவர்களுக்கு இலங்கை தங்க நிர்ணய பணியகத்தின் முத்திரை மற்றும் தங்கத்திற்காக வழங்கப்படும் தரநிலை முத்திரை பற்றிய புரிதல்கள் இருக்கவில்லை.

செட்டியார் தெரு நகை உற்பத்தியாளர்கள் தொடர்பில் விசாரித்த போது, தங்க நகை விலை உயர்வடைந்ததை விடவும் கூடிய நெருக்கடிக்கு இவர்கள் முகங்கொடுத்திருப்பதை எம்மால் கண்டு கொள்ள முடிந்தது.

டுபாய், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து தங்க நகைகளை இறக்குமதி செய்ததும் செட்டியார் தெரு பொற்கொல்லர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது. அதேபோன்று, கல்கத்தா, பம்பாய் போன்ற பகுதிகளிலிருந்து தங்கத் வர்த்தகத்தில் ஈடுபடும் தொழிலாளர்களின் வருகையும் இந்த பொற்கொல்லர்களின் வாழ்வாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்தது.

நாம் அடுத்ததாகச் சந்தித்தது, அகில இலங்கை தங்க நகை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஏ. விஜயகுமாரையாகும்.

"உலகில் தங்கத்தின் விலை நிமிடத்திற்கு நிமிடம் மாறுகின்றது. "லண்டன் கோல்டன் ஒக்ஷன்" ன் விலைக்கு இங்கு விலை சமப்படுத்தப்படுகின்றது. மார்ச் 10ம் திகதி பவுணின் விலை குறைவடைந்த போதும் இன்னும் குறைவடையும் என மக்கள் எதிர்பார்த்தார்கள். ஒரு பவுணின் விலை ஒரு இலட்சமாகக் குறையும் என மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். தங்க நகை விலை அதிகரித்த போது அனைவரும் தம்மிடமிருந்த நகைகளை விற்றார்கள். தற்போது குடும்பத்தில் தங்கத்தை வாங்குவதற்கு பணத்தைச் சேமிப்பதற்கு பொருளாதார நிலைகள் வலுவானதாக இல்லை. தற்போது வெளிநாடுகளிலிருந்து தங்கம் வருவதில்லை. நாட்டிலுள்ள தங்கத்தை வைத்தே நகைகள் செய்கின்றோம். (மீள உருக்கிச் செய்கின்றோம்). செட்டியார் தெருவில் கடந்த 10 வருடத்தில் தங்க நகைக் கடை ஒன்றேனும் புதிதாகத் திறக்கப்படவில்லை. நகை வேலைகளுக்கான பயிற்சியினை வழங்குவதற்கு 5 வருடங்கள் போகும். எனினும் வேலையினைப் பழகிய பின்னர் தற்போது நகை விற்பனை போதியளவில் இல்லாததால் அவர்கள் வெளிநாடு செல்கின்றார்கள்"

தங்க நகைகள் செய்யும் போது பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் சங்கிலி, காப்பு, மோதிரம் போன்றவற்றை வைக்கும் அலங்காரப் பெட்டிகள் விற்பனை செய்யும் நிலையமான சாந்தி ஜூவலர்ஸ் நிறுவன முகாமையாளரான முத்துராமனைச் சந்தித்தோம்.

"முன்னர் மோதிரம் வைக்கும் பெட்டிகள் 200 வரை விற்பனையாகும், இப்போது 50 பெட்டிகளே விற்பனையாகின்றன. நகைகளை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களும் குறைந்தளவே விற்பனையாகின்றன"

முத்துராமன் கூறுவதைப் போன்று முன்னைய காலங்களில் தங்கத் தொழில் கைவினைத் தொழிலாகவே இருந்தது. தற்போது மற்றைய அனைத்தையும் போன்று தங்கத் தொழிலுக்கும் இயந்திரங்கள் வந்து விட்டன. என்றாலும் இயந்திரங்களால் செய்யும் நகைகளை விடவும் கைகளால் செய்யப்படும் நகைகளே அதிக உறுதிமிக்கவையாக உள்ளன என பொற்கொல்லர்கள் கூறுகின்றனர்.

"எவ்வளவுதான் புதிய தொழில்நுட்பத்தில் நகைகளைச் செய்தாலும் கையால் செய்யப்படும் நகைகள் மிகவும் உறுதியானவையாகும். அதேபோன்று சிறப்பான டிசைனையும் பெறமுடியும். அதனால்தான் அதனை மெசின்களில் பெற முடியாது. அதேபோன்றுதான் அவை காலத்தால் நீடிக்கக் கூடியனவாகவும் உள்ளன. கைகளால் செய்யப்படும் நகைகளைப் போன்று மெசின்களில் செய்யப்படும் நகைகள் காலத்தால் நீடிப்பதில்லை எனக் கூறி வாடிக்கையாளர்கள் கேட்பது கைகளால் செய்யப்பட்ட நகைகளையேயாகும்".

இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படும் தங்க நகைகளை பொலிஷ் செய்யும் போது அவை உடைந்து விடக்கூடிய வாய்ப்புகள் அதிகம் என தங்க நகைககளை பொலிஷ் செய்யும் சகீம் தெரிவித்தார்.

செட்டியார் தெருவில் பெயர் போன நகைக் கடைகள் ஏராளமுண்டு. அவற்றுள் ரத்னமஹால் ஜூவலர்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர் எஸ். கதிரேசன் எம்மை மிகவும் உற்சாகமாக வரவேற்றார்.

"பெப்ரவரி 4ம் திகதி ஒரு பவுண் 193,000/= ரூபாயாக இருந்தது. மார்ச் 8ம் திகதி ஒரு பவுணின் விலை 145,000/= ரூபாயாகக் குறைந்தது. மார்ச் 10ம் திகதி அந்த விலை 161,000/= ரூபாயானது. மார்ச் 11ம் திகதி 167,000/= ரூபாயாக உயர்ந்தது. இந்த நேரத்தில் உலக சந்தையில் தங்கம் விலை மாற்றங்களுக்கு உள்ளாகவில்லை. இலங்கையில் டொலரின் விலை குறைவடைந்தமையே இவ்வாறு திடீரென நகை விலை குறைவதற்கு காரணமாக அமைந்தது" என்றவாறு தங்கம் ஒரு பவுண் அதிக விலைக்கு விற்பனையான சந்தர்ப்பம் தொடர்பில் கதிரேசன் விபரித்தார்.

"2022 மார்ச் மாதத்தில் ஒரு பவுணின் விலையானது 228,000/= என்ற அதிகூடிய விலை வரை உயர்ந்தது. எனினும் மார்ச் 31ம் திகதி அது 207,000/= ரூபாயாகக் குறைவடைந்தது. மார்ச் 09ம் திகதி ஒரு பவுணின் விலை 40 ஆயிரம் ரூபாவால் குறைந்தது என எவருக்கும் தெரியாது".

தங்க நகைகள் பிரதானமாகத் தேவைப்படுவது திருமண நிகழ்வுகளுக்கேயாகும். தற்போது ஒன்றே கால் பவுணில் செய்யப்படும் தாலிக்கு 246,000/= ரூபாய் தேவைப்படுகின்றது. மணமகளுக்கான கால் பவுண் மோதிரம் 95,000/= ரூபாயாகும். மணமகனுக்கான மோதிரம் முக்கால் பவுணில் செய்வதற்கு 142,000/= ரூபாய் செலவாகும். குறைந்த நிறையில் தங்கத்தைப் பயன்படுத்திச் செய்தாலும் இவை மூன்றுக்கும் நான்கு இலட்சத்து எண்பத்து நாலாயிரம் ரூபாய் செலவாவதால் தேன்நிலவுக்கு மணப்பெண்ணை அழைத்துச் செல்வது மிகவும் இலாபகரமானதாக ஆகியிருக்கின்றது.

நிலையான வைப்புகளுக்கான வட்டி வீதம் குறைவடையும் போது மக்கள் அதிக அதிகமாக தங்க நகைகளை வாங்குவதாக இந்த தங்க நகை விற்பனையாளர்கள் கூறுகின்றார்கள். என்றாலும் கடந்த காலங்களில் நிலையான வைப்புகளுக்கான வங்கி வட்டி வீதம் நூற்றுக்கு 26 வீதத்திற்கு உயர்ந்த சந்தர்ப்பங்களும் இருந்தன.

"எவரும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்க நகைகளை வாங்க மாட்டார்கள். சிலர் தம்மிடமுள்ள நகைகளையும் விற்று அந்தப் பணத்தை நிலையான வைப்பில் வைப்பிலிட்டார்கள்"

செட்டியார் தெருவில் அமைந்துள்ள கணேஷா ஜூவலர்ஸின் முகாமையாளரான என். நடராஜா இவ்வாறு கூறினார். நடராஜா தங்க நகை வியாபாரத்தில் காலடி எடுத்து வைத்தது இற்றைக்கு 37 வருடங்களுக்கு முன்னரான 1986ம் ஆண்டு காலப்பகுதியிலாகும்.

"1986ம் ஆண்டில் ஒரு பவுண் தங்கத்தின் விலை 3500/= ரூபாயாகும். கடந்த வாரத்தில் ஒரு பவுணின் விலை 135,000/= ரூபாயாகக் குறைந்த சமயம் மக்கள் இன்னும் விலை குறையும் என எதிர்பார்த்தார்கள். பணமிருந்திருந்தால் நாம் நகைகளை வாங்கி வைத்திருப்போம். முன்னர் திருமணத்திற்காக ஐந்து வகையான நகை செய்வதற்கு குறைந்தது 6 பவுண் தேவைப்படும். காதணி, இரண்டு மோதிரங்கள், காப்பு, சங்கிலி போன்றன மாத்திரமல்ல, மணமகனின் கால்களைக் கழுவும் மைத்துனருக்கும் மோதிரம் செய்வார்கள்".

செட்டியார் தெருவில் அமைந்துள்ள ஜயலலிதா ஜூவலர்ஸின் முகாமையாளர் பீ. நவநீதம் தங்க விலை தொடர்பில் இவ்வாறு கூறினார்.

"இன்று 24 கரட் தங்கத்தின் விலை 173,000 ரூபாயாகும். 22 கரட் தங்கத்தின் விலை 158,500/= ஆகும். மார்ச் 08ம் திகதி ஒரு பவுணின் விலை 135,000/= ரூபாயாகக் குறைந்த போது தெரிந்தவர்கள் நகைகளை வாங்கினார்கள். ஏப்ரல் புது வருடத்தின் பின்னர் திருமண சீசன் வரும். மே மாதத்தில் தங்கத்திற்கான தேவை அதிகரிக்கும். அப்போது தங்கத்திற்கு இன்னும் டிமாண்ட் ஏற்படும்"

தங்க நகைகளை அடகு வைக்கும் நிலையங்களும் செட்டியார் தெருவில் உள்ளன. சில நகைக்கடைகளில் நகைகளை வாங்கும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. இன்று வங்கி வட்டி வீதம் அதிகம் என்பதால் சாதாரண மனிதர்களால் அவசரக் கடனைப் பெற்றுக் கொள்வதற்கான இலகுவான முறையாக இருப்பது வங்கி அல்லது நிதி நிறுவனங்களில் தமது தங்க நகைகளை அடகு வைத்து பணத்தைப் பெற்றுக் கொள்வதாகும். நகைகளை அடகு எடுப்பது இன்று வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பிரதான வருமான வழியாக மாறியிருக்கின்றது. இதனால்தான் விளம்பரங்களைக் காட்சிப் படுத்தி போட்டித்தன்மையுடன் தங்க நகைகளை அடகு எடுப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. இதனால்தான் அதிகாலை வேளையிலேயே இந்த நிறுவனங்கள் திறக்கப்படும் நேரத்தில் அந்நிறுவனங்களுக்கு முன்னால் அடகு வைப்பதற்காக மக்கள் வரிசையில் நிற்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. மக்களின் அன்றாட உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு பணம் இல்லாததே தம்மிடமுள்ள தங்க நகைகளை அடகு வைப்பதற்கான முக்கிய காரணமாகும். இன்று அனேக தாய்மாரின் காதிலும், கழுத்திலும் தங்க ஆபரணங்கள் இல்லை. அனைத்து நகைகளும் அடகு நிலையங்களில் அடகு வைக்கப்பட்டுள்ளன. பேராதனை பல்கலைக்கழகத்தினால் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அடகு நிலையங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட விசேட ஆய்வின் போது நாடு முழுவதிலும் சுமார் 40 இலட்சம் அளவிலான மக்கள் 2022ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையான முதல் 10 மாதங்களினுள் மாத்திரம் சுமார் 16,900 கோடி ரூபாயை அண்மித்த பெறுமதியுடைய தங்க நகைகள் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் அடகு வைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

நாம் செட்டியார் தெருவில் செல்லும் போது பலர் நடைபாதையிலும், வீதியிலும் தூரிகையால் துடைத்து அந்த தூசிகளை ஒரு தட்டையான பாத்திரத்தில் போடுவதைக் காண முடிந்தது. நாம் அவர்களிடம் சற்று நெருங்கி இங்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்டோம்.


"நாம் தொழிலாகச் செய்வது தங்க நகைக் கடைகளில், வேலைத் தளங்களில் இருக்கும் குப்பை கூளங்களை சேகரிப்பதாகும்.

தங்க ஆபரண வேலைகளைச் செய்யும் போது எங்கு யார் எப்படிச் செய்தாலும் தங்கத் தூள் சற்றேனும் வீணாகவே செய்யும். அது வேண்டுமென்று இடம்பெறும் ஒன்றல்ல. தெரியாமலேயே அவ்வாறு இடம் பெறும்.

தங்கத்தை சூடாக்கும் போதும், உருக்கும் போதும், அச்சில் வடிக்கும் போதும் கண்ணுக்குத் தெரியாத துகள்கள் காற்றில் கலந்து அங்கும் இங்கும் படிந்திருக்கும். ஆபரண வேலை செய்பவர்கள் தங்கத் தூளினை தங்களது முழங்காலின் சருமத்தில் படியச் செய்வதற்கு கூடிய ளவுக்கு முயற்சிப்பார்கள். எனினும் அது முடியாத காரியமாகும். கொஞ்சமேனும் வீணாகவே செய்யும். அதேபோன்று அந்த வேலையில் ஈடுபடுபவர்களின் ஆடைகளில், காலணிகளில் படிந்து அவை வீதிக்கு வரும். அவற்றையே நாம் ஒன்று சேர்க்கின்றோம்"



சங்கத்தின் தலைவர் ஏ.விஜயகுமார்


செயலாளர் ஆர்.ரத்னராஜா சரவணன்


முத்துராமன்


எஸ்.கதிரேசன்


என். நடராஜா




வஜிர லியனனே
தமிழில்:
எம்.எஸ். முஸப்பிர்..







# ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற 'சதராவ தீபனி' விருது விழா









போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவுக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்ட "சதராவ தீபனி" விருது வழங்கும் விழா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் கடந்த 16ம் திகதி மாலை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிகக் கோலாகலமாக இடம்பெற்றது. மகாநாயக்க தேரர்கள், அநுநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகாசங்கத்தினர், பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேனா, வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆளும், எதிர்க்கட்சி அரசியல் பிரதிநிதிகள், கலைஞர்கள், ஊடகப் பிரதானிகள், ஊடகவியலாளர்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட ஏராளமான அதிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவிற்கு அமைய பாடசாலை மாணவர்களுக்காக வருடாந்தம் செயற்படுத்தப்படும் "பிரக்னா பந்து" புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டதோடு, இந்நிதியம் அமைச்சரின் சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.





பின்னர் இந்த மாணவர்களுக்காகச் செய்யப்பட்ட உன்னத செயற்பாட்டிற்கு ஆசீர்வாதம் வழங்கிய மற்றும் வாழ்த்துக்களைத் தெரிவித்த மக்களின் பங்களிப்பும் கிடைக்கப்பெற்றதால் இந்நிதியம் மேலும் வளர்ந்து சென்றது. இது யார் வேண்டுமானாலும் பங்களிப்புச் செய்யக்கக்கூடிய ஒரு நிதியம் என்பதோடு, இது மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய முறையில் செய்யப்படும் மிகவும் ஒரு புண்ணியகாரியமாகும்.

இந்நாட்டில் உயர்தரம் கற்கும் மாணவ, மாணவியருக்கு இவ்வாறான புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தை அமைச்சர் பந்துல குணவர்தன ஆரம்பிக்கும் வரைக்கும் இந்நாட்டில் உயர்தர மாணவர்களுக்காக இவ்வாறானதொரு திட்டம் ஆரம்பித்திருக்கப்படவில்லை. இவ்வாறான பின்புலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உன்னதச் செயற்பாடானது, அவரது பிறந்த தினமான கடந்த 16ம் திகதி இம்முறை உயர்தரம் கற்கும் சுமார் 251 மாணவ, மாணவிகளுக்காக மேற்கொள்ளப்பட்டது.







இச்சந்தர்ப்பத்தில் 25 மாணவ மாணவிகளுக்கு அடையாளமாக புலமைப் பரிசில் வழங்கி வைக்கப்பட்டதோடு, பிரதமர் திணேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த உள்ளிட்டோரால் இப்புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. உயர் தரத்தில் கற்கும் இந்த மாணவ மாணவிகளுக்கு இரண்டு வருடகாலத்திற்கு இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படும்.

அத்துடன் இந்த நிகழ்வின் சிறப்பான அம்சமாக அமைந்திருந்தது, கலாநிதி பந்துல குணவர்தனவின் பங்களிப்புடன் உருவான கலைப்படைப்புக்களுக்குப் பங்களிப்புச் செய்த கலைஞர்களான 91 வயதைக் கடந்துள்ள இந்நாட்டின் மூத்த நடிகரான சிறில் விக்ரமகே, விருது பெற்ற திரைப்பட இயக்குனர் தர்மசிறி பண்டாரநாயக்கா மற்றும் மூத்த கலைஞர் பராக்கிரம நிரியெல்ல ஆகியோர் ஜனாதிபதியின் கரங்களினால் கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட நிகழ்வாகும்.

அதேபோன்று விரைவில் திரையிடப்படவுள்ள "சகோ" திரைப்படத்திற்காக பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல, பல சர்வதேச விருதுகளைப் பெற்ற "த நிவுஸ் பேப்பர்" திரைப்படத்திற்காக குமார திரிமாதுர, சரத் கொத்தலாவல போன்ற நிபுணத்துவ கலைஞர்களும், முன்னணி நடிகர் ரவீந்திர ரன்தெனிய ஆகியோரும் கலாநிதி பந்துல குணவர்தனவின் கரங்களினால் கௌரவ விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கியல் துறையின் முன்னாள் பிரதானி, லேக்ஹவுஸ் நிதிப் பணிப்பாளர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் ஆகியோரால் ஆரம்ப உரை நிகழ்த்தப்பட்டதோடு, மூத்த திரைப்பட விமர்சகர் காமினி வெரகம விழாவின் பிரதான உரையினை நிகழ்த்தினார். இலங்கையின் சிறந்த சினிமாப் படைப்புகளுக்கு கலாநிதி பந்துல குணவர்தனவின் பங்களிப்பு பாராட்டப்பட வேண்டியது என்றும், அவர் இலங்கையின் சினிமாத் துறையின் முன்னேற்றத்திற்காக ஆற்றியுள்ள மற்றும் செய்துவரும் பணிகள் சிங்கள சினிமாவை உயர்த்துவதற்கு பெரும் ஆறுதலாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

கலாநிதி பந்துல குணவர்தனவின் சினிமா வாழ்க்கையை மையமாகக் கொண்டு பேராசிரியர் அபயசுந்தர, ரஞ்சித் குமார, அருண குணரத்ன, தினுஷ குடாகொடகே போன்ற முன்னணி ஊடகவியலாளர்களால் எழுதப்பட்ட "சுபந்து சினிமா வத"நூலும் இந்நிகழ்வின் போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

வாழ்வில் பல நிகழ்வுகளைக் கடந்து வந்துள்ள பந்துல குணவர்தனவை தர்மசிரி பண்டாரநாயக்கா சந்தித்தது ஹன்ச விலக் திரைப்படத்திற்காக இயக்குனர் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலாகும். பிரத்தியேக வகுப்புக்களை நடத்தி சிரமங்களுக்கு மத்தியில் சேமித்து வைத்திருந்த பணத்தையும், அவரிடமிருந்து வாகனம் மற்றும் நிலத்தையும் அடகு வைத்து பணம் சம்பாதிக்க முயற்சித்த போதிலும் அது தோல்வியடைந்தது.

பின்னர் பந்துல செய்தது தனது நண்பர் ஒருவரின் ஊடாக ஹன்ச விலக் திரைப்படத்திற்காக தனவந்தர் ஒருவரின் உதவியைத் தேடிக் கொடுத்ததாகும். சினிமாத் துறைக்காக அவ்வாறு தனது பங்களிப்பை வழங்கிய போதிலும், அவரது மனதில் இருந்த ஆசைகள் அதனால் நிறைவேறவில்லை. திரைப்படத்திற்கு திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்த கடன் போதுமானதாக இல்லாதிருந்ததால் அதற்கான இணைத் தயாரிப்பாளராகப் பங்களிப்புச் செய்வதற்கு பந்துலவுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

அதனடிப்படையில், சினிமாவின் தலைசிறந்த படைப்பான மூன்றாவது நகர்வு திரைப்படத்தின் மூலம் தனது முதல் படத்தைத் தயாரித்தார்.

அதன்பின்னர் சைமன் நவகத்தேகமவின் சிறப்பான சிறுகதையான வெள்ளைக்காரர்களின் கதையிலிருந்து (சுத்திலாகே கதாவ) திரைப்படத்தை உருவாக்குவதற்கு பந்துல சிந்தித்தார்.

இது தொடர்பில் நவகத்தேகமவுக்கும், தர்மசிறிக்கும் அறிவித்ததன் பின்னர் சைமன் நவகத்தேகமவின் முதலாவது திரைக்கதையாக பந்துல குணவர்தனவின் முழுமையான தயாரிப்பில் வெள்ளையர்களின் கதை (சுத்திலாகே கதாவ) திரைப்படம் உருவானது.

நடிகர்கள் மத்தியிலும், ரசிகர்கள் மத்தியிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய படமாக அது அமைந்திருந்தது. அவ்வாறே சிரிமெதுரவை தயாரிப்பதன் ஊடாக பராக்கிரம நிரியெல்லவை சினிமா துறைக்குள் அழைத்து வந்தது பந்துல குணவர்தனவாகும்.

பின்னது "அயோமா", "த நிவ்ஸ் பேப்பர்" மற்றும் திரையிடுவதற்கு இருந்த பேராசியர் ஆரியரத்ன அத்துகலவின் முதலாவது திரைப்படமான "சகோ" திரைப்படமும் பந்துல குணவர்தனவின் தயாரிப்பேயாகும்.

இந்த சினிமா உருவாக்கங்களையெல்லாம் பார்க்கும் போது, இலங்கைத் திரையுலகில் மிகச் சிறந்த திரைப்படங்கள் உருவாக அவர் எப்படிப் பங்களித்திருக்கிறார் என்பது நினைவுக்கு வருகிறது.

சன்ன உபுலி கலாநிறுவனத்தினரின் நடனத்தின் மூலம் இந்த பிரமாண்ட விழா மெருகூட்டப்பட்டதோடு, சத்துர சஹன் குணவர்தன மற்றும் தேவிகா சதுரனி சுமதுர ஆகியோர் தங்கள் இனிமையான பாடல்களால் விழாவை மேலும் கலகலப்பாக்கினர்.





ரசிக கொட்டுதுரகே

தமிழில்: எம்.எஸ். முஸப்பிர்







# இந்தோ - பசுபிக் பிராந்தியத்தை இராணுவமயமாக்கும் ஆக்கஸ் நாடுகளின் நீர்மூழ்கிப்படை உடன்பாடு!



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**இந்தோ பசுபிக் அரசியல் சீனாவுக்கு எதிரான நகர்வை முதன்மைப்படுத்துவதில் முனைப்புச் செலுத்துகிறது. உக்ரைன் போருக்கு பின்னர் கிழக்கு ஐரோப்பாவை நோக்கிய மேற்குலக அரசியல் சீனாவின் நகர்வை முற்றாக கைவிடாது செயல்படுவதாகவே தெரிகிறது. ரஷ்ய உக்ரைன் போர் எந்தளவுக்கு ரஷ்யாவுக்கு நெருக்கடியாக அமைந்துள்ளதோ, அதேயளவுக்கு அமெரிக்காவுக்கும் உண்டு. சீனாவின் விஸ்தரிப்பையும் அதற்கான உபாயங்களையும் இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் நகர்த்துவதில் ரஷ்ய உக்ரைன் போர் உதவியதாகவே தெரிகிறது. அந்தகைய போட்டி அரசியலில் இன்னோர் இராணுவ நகர்வாக நீர்மூழ்கிகப்பல் படையை அமைக்க AUKUS நாடுகள் திட்டமிட்டுள்ளன. அதற்கான உடன்பாட்டையும் அந்நாடுகளின் தலைவர்கள் மேற்கொண்டுள்ளனர். அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் 2021ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆக்கஸ் உடன்பாட்டின் பிரகாரம் இந்தோ பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நகர்வாக நீர்மூழ்கி கப்பல்படை அமைப்பதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இக்கட்டுரையும் உடன்பாட்டின் உள்ளடக்கத்தையும் விளைவையும் தேடுவதாக அமையவுள்ளது.**

15.03.2023 அன்று கலிபோர்னியாவிலுள்ள சாங்கிய நகரில் ஜோ பைடன், ரிஷி சுனக்,மற்றும் அன்ரனி அல்பினஸ் ஆகிய தலைவர்கள் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளனர். இதன் உள்ளடக்கம் அனைத்துமே மூன்று நாடுகளின் கடற்படையை பலப்படுத்துவதுடன் இராணுவ ரீதியில் இந்தோ பசுபிக் பிராந்தியத்தின் கண்காணிப்பையும் கட்டுபாட்டையும் உறுதிப்படுத்துவதாகவே தெரிகிறது. இந்த உடன்பாட்டின் அடிப்படையில் பிரிட்டனுக்கு அடுத்தபடியாக அணுசக்திகளைக் கொண்ட நீர்மூழ்கிகளை கடற்படையில் இணைக்கும் வலிமையை அவுஸ்திரேலியா பெறவுள்ளது. அமெரிக்காவினதும், பிரிட்டனினதும் நட்புநாடான அவுஸ்திரேலியா இதுவரை அணுவாயுதங்களை கொண்டிராத நாடாகவே உள்ளது. முதல் தடவையாக அணுசக்தியைக் கொண்ட நீர்மூழ்கிகளை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்க இராணுவ வளர்ச்சியாகவே உள்ளது. அது மட்டுமன்றி பிரிட்டனுக்கு அடுத்தபடியாக அமெரிக்காவின் நீர்மூழ்கித் தொழில்நுட்பத்தை பெறுகின்ற நாடாகவும் அவுஸ்திரேலியா மாறவுள்ளது. தற்போதுள்ள டீசல் இயந்திரங்களைக் கொண்ட நீர்மூழ்கிகளைவிட அணுசக்தியைக் கொண்ட நீர்மூழ்கிகள் நீண்டதூர இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறனை பெற்றுள்ளதுடன் நீண்ட தூரத்திற்கு சென்று தாக்கும் திறனையும் கொண்டதாக மாறவுள்ளது. இந்த உடன்பாட்டின்படி அவுஸ்திரேலிய கடற்படைகள் அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நீர்மூழ்கித் தளங்களுக்கு இந்த ஆண்டு முதல் அனுப்பி வைக்கப்படுவர். இதன் நோக்கம் அவுஸ்திரேலிய கடற்படையினர் நீர்மூழ்கிகளை கையாளுவது தொடர்பிலான பயிற்சியாக அமைவதுடன் அதன் தொழில்நுட்பத்தையும் பிரயோகிக்கும் திறனையும் பெறுவதாகவும் அமையும்.

மேலும் 2027இல் பிரித்தானியாவும் அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவிலுள்ள டேர்பன் துறைமுகத்தில் அமைக்கவுள்ள அணுசக்தியினாலான நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்ட துறைமுகத்தை பராமரிக்கும். 2030 களின் தொடக்கத்தில் மூன்று வேர்ஜினியா நீர்மூழ்கிக் கப்பல்களை அவுஸ்திரேலியா வாங்குவதுடன் தேவையின் நிமித்தம் மேலும் இரண்டு கப்பல்களை அமெரிக்காவிடமிருந்து வாங்குவதற்கும் உடன்பாட்டில் ஏற்பாடுகள் அமைந்துள்ளன. அதன்பின்னர் மூன்று நாடுகளும் இணைந்து புதிய வகை தொழில்நுட்பத்தைக் கொண்ட நீர்மூழ்கிகளை வடிவமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்தகைய புதியவகை நீர்மூழ்கிகள் எஸ்.எஸ்.என் ஆக்கஸ் என அழைக்கப்படும் எனவும் வரைபு முன்மொழியப்பட்டுள்ளது. இத்தகைய தாக்குதல் வகை நீர்மூழ்கிகள் பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியாவில் கட்டப்படுவதாகவும் உடன்பாடு குறிப்பிட்டுள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல்படை என்பது புதிய கடற்படை உபாயமாக அமைந்துள்ளது. உலக நாடுகள் மத்தியில் கடற்படை விரிவாக்கம் தொடங்கியது முதல் தற்போது வரை இவ்வாறான நடவடிக்கைகள் நிகழ்ந்ததாக தெரியவரவில்லை.

நாடுகள் தமது தனித்துவத்தையும் உலக ஆதிக்கத்தையும் வரையறுத்துக் கொள்ள கடற்படையை அதிகரிப்பதும் அதற்கான ஆயுததளபாட உற்பத்தியை முதன்மைப்படுத்துவதும் வழமையானதாக அமைந்திருந்தது. ஆனால் முதல்தடவையாக நீர்மூழ்கி கப்பல்படை எனும் உத்தியை ஆக்கஸ் நாடுகள் ஒன்றிணைந்து ஆரம்பித்துள்ளன.இதன் விளைவுகளை விரிவாக தேடவேண்டிய அவசியப்பாடு காணப்படுகிறது.



ஒன்று, சீனாவின் இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படுத்திவரும் இராணுவ விரிவாக்கத்தை தடுப்பதற்கான நகர்வாகவே தெரிகிறது. 2021இல் உடன்பாடு எட்டப்பட்ட ஆக்கஸ் அமைப்பை கண்டித்துவரும் சீனா, தற்போது எட்டப்பட்டுள்ள நீர்மூழ்கிகப்பல் படைக்கான நடவடிக்கையையும் சீனாவின் வெளிவிவகார அமைச்சு கண்டித்துள்ளது. சீனாவின் வெளியுறவு அமைச்சு இத்தகைய உடன்படிக்கை இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் ஆயுதப் போட்டியையும், அணுவாயுத உற்பத்திற்கான நகர்வுகளையும் அதிகரிக்க மேற்கத்திய நாடுகள் முயல்வதாக குற்றம்சாட்டியுள்ளது. இது பிராந்திய பாதுகாப்புக்கும் அமைதிக்கும் ஆபத்தானதென சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு, உடன்பாட்டு எட்டப்பட்ட போது ஆக்கஸ் நாடுகளுக்கு தலைமை தாங்கும் அமெரிக்க ஜனாதிபதி உரையாற்றிய சந்தர்ப்பத்தில்,இது ஜனநாயக நாடுகளின் உடன்படிக்கை என்றும், மரபான ஜனநாயக நட்பு நாடுகளின் கூட்டு உடன்பாடு எனவும் வர்ணித்ததுடன், இந்தோ பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு மட்டுமன்றி உலகளாவிய ரீதியான பாதுகாப்புக்கும் அமைதிக்குமான உடன்பாடு எனக்குறிப்பிட்டார். மேலும் அவர் இது அணுவாயுதங்களை கொண்ட உடன்பாடு இல்லை எனவும் அணுசக்தியைக் கொண்ட நீர்மூழ்கிக்கான உடன்பாடு எனவும் அவுஸ்திரேலியா அணுவாயுதமற்ற நாடு என்ற கொள்ளையை பாதிக்காது எனவும் தெரிவித்தார். ஆனால் அணுசக்தியை கொண்ட பயன்பாட்டுக்கு அணுக்கள் செறிவூட்டப்படுவது அவசியமான செய்முறையாகவே அமையும். அது படிப்படியாக அணுவாயுதத்தை நோக்கிய நகர்வுகளை நாடுகளின் அரசியல் ஏற்படுத்தும். உலகளாவிய ரீதியில் அணுவாயுத நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அவுஸ்திரேலியாவும் அதனை நோக்கி செயல்பட வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாக அமையும். அதுவே ஆக்கஸ் உடன்பாட்டின் இராணுவ வியூகமாக மாற்றம் அடையும்.

காரணம் உடன்பாடு தொடர்பில் உரையாற்றிய பிரித்தானியப் பிரதமர் உலகளாவிய மட்டத்தில் சீனாவின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும், வடகொரியா மற்றும் ஈரானின் அதீதமான இராணுவ வளர்ச்சி உலக அமைதிக்கும் மனித உரிமைக்கும் அச்சுறுத்தலாக மாறியிருப்பதுடன் ரஷ்யாவின் உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கை அதிக ஆபத்தை உலக அமைதிக்கு ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மூன்று, ஆக்கஸ் உடன்பாட்டில் இல்லாத குவாட் நாடுகளில் அங்கம் பெறும் இந்தோ பசுபிக் உபாயத்தில் பிரதான இந்து சமுத்திர நாடான இந்தியாவின் நிலை முக்கியமானதாக தெரிகிறது. ஏறக்குறைய ஆக்கஸ் உடன்பாட்டில் இந்தியா தவிர்க்கப்பட்டதன் விளைவே ரஷ்ய – இந்திய நெருக்கத்திற்கும் தீவிர போக்குக்கும் காரணமென குறிப்பிடப்படுகிறது.

அதாவது மேற்குலக நாடுகளான அமெரிக்காவோ, பிரித்தானியாவோ தமது இராணுவ தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்க தயாரில்லை என்பதே இதன் உள்ளடக்கமாகும். மாறாக தமது மூதாதையரைக் கொண்ட அவுஸ்திரேலியாவுக்கு வழங்குவதில் எத்தகைய குழப்பமும் இல்லை என்பதை ஆக்கஸ் உடன்படிக்கை வெளிப்படுத்தியிருந்தது. இதுவே இந்திய – ரஷ்ய நெருக்கத்திற்கும் மேற்குடனான முறுகலுக்கும் காரணமாகவுள்ளது. இதுபோன்ற மேற்குலகத்தின் நடவடிக்கைகளே இந்தியாவின் கீழைத்தேச நாடுகளுடனான ஒத்துழைப்புக்கு பிரதான காரணமாக உள்ளது. இலங்கைத் தீவிலும் அமெரிக்காவின் அண்மைய மென்மையான இராணுவ நடவடிக்கை இந்தியாவை அதிகம் பாதித்துள்ளது. விடுதலைப்புலிகளின் தலைமை தொடர்பிலான தமிழகத்தின் தகவல் சார்ந்து இந்திய புலனாய்வுத் துறையின் மௌனம் அதிக சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறே நீர்மூழ்கிப் படையின் நடமாட்டமும் இந்தியாவை பாதிப்பதாகவே அமையும். மேற்கின் நீர்மூழ்கிப்படை இந்தியாவுக்கும் எதிரானதே. தனித்து சீனாவுக்கு மட்டும் எதிரானதாக அமையுமென கணிப்பிடுவது தவறானது.

இது இந்துசமுத்திரத்தின் மீதான மேற்குலகத்தின் கண்காணிப்பும் நகர்வுகளும் அதிகரிக்கவும் மென்மையான இராணுவ நகர்வுகளை நிகழ்த்தவும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. மென்மையான இராணுவ நகர்வுகளில் மாற்றங்களையும் எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடிய சூழல் காணப்படுகிறது. இந்தியா, அமெரிக்காவின் கீழ்படிவுக்குள் இருக்கும் வரை உறவு சுமுகமானதாகவே அமைந்திருந்தது. அமெரிக்காவை கட்டுப்படுத்த முயலும் போதெல்லாம் அமெரிக்க – இந்திய உறவு விரிசலடைவதை காணக்கூடியதாக உள்ளது. இதன் எதிரெலிப்பு இந்தியா குவாட் அமைப்பிலிருந்தும், இந்தோ பசுபிக் உபாயத்தின் ஒத்துழைப்பிலிருந்தும் வெளியேற வேண்டும். அதனையே மேற்குக்கான இந்திய சந்தைகளிலும் ஏற்படுத்த வேண்டும்.

எனவே நீர்மூழ்கிப்படையின் பிரசன்னம் அதிக நெருக்கடியை இந்துசமுத்திரப் பிராந்தியத்திலும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது. இந்தோ பசுபிக் பிராந்தியம் என்ற உபாயம் நிலைத்திருக்க முயலுவதுடன் இது முழுமையாக மேற்கு நாடுகளின் இராணுவ பிராந்தியமாக மாறவாய்ப்புள்ளது.

அதேநேரம் ஈரான், சவுதி அரேபியா, துருக்கி போன்ற எண்ணெய்வள நாடுகளது நெருக்கமும் சீனா, ரஷ்யா, வடகொரியா ஒத்துழைப்பும் மேலும் பலப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படவுமான சாத்தியத்தை நீர்மூழ்கிப்படைக்கான உடன்பாடு உருவாக்கியுள்ளது. இத்தகைய நகர்வுகள் உலகத்தை மேலும் பிரிவினைக்கு தூண்டுவதாகவே அமையவுள்ளது. மேற்கு, கிழக்கு பிரிவினை ஊக்குவிக்கப்படுகிறது.

# கொவிட் நோயினால் பலத்த அடிவாங்கிய உற்பத்தித் துறை மீள்வது இலகுவானதல்ல




கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

மத்திய வங்கியின் உத்தியோகபூர்வத் தகவல்களின் படி இலங்கையின் பொருளாதாரம் கடந்த 2022ஆம் ஆண்டு 7.95 சதவீதத்தால் சுருங்கியுள்ளது. அதாவது முன்னைய 2021ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் மேற்படி சதவீதத்தினால் குறைந்துள்ளது என்பதே அதன் அர்த்தமாகும். ஆனால் 2021ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம், 3.66 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தமையையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதேவேளை கொவிட் நோய் இலங்கையைப் போட்டுத் தாக்கிய 2020இல் பொருளாதாரம் 3.62சதவீதத்தினால் சுருங்கியிருந்தது. ஆகவே கடந்த மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2022ஆம் ஆண்டிலேயே இலங்கை மிகமோசமான பொருளாதார வீழ்ச்சியை சந்தித்துள்ளமை தெளிவாகிறது. ஆனால் 2022இல் இலங்கையின் பொருளாதாரம் 9.2 சதவீதத்தால் சுருங்குமென உலக வங்கியும் அது 8.4 சதவீதமாக இருக்கலாமென ஆசிய அபிவிருத்தி வங்கியும் எதிர்வு கூறின. இலங்கை மத்திய வங்கி பொருளாதார சுருக்கம் 8.3 சதவீதமாக இருக்குமென எதிர்வு கூறியது. இறுதியில் இப்போது வெளியிடப்பட்ட கணிப்பீடுகளின் படி இந்த எதிர்வு கூறல்களை விடக் குறைவான 7.95 சதவீத வீழ்ச்சியே பதிவு செய்யப்பட்டிருப்பதாக சிலர் மகிழ்ச்சியடையலாம். ஆனால் இந்த வீழ்ச்சி இவ்வருடமும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக கடந்த ஆண்டு இலங்கையின் காலாண்டுப் பொருளாதாரச் செயலாற்றங்களை உற்று நோக்குமிடத்து இவ்வாண்டில் இடர்கள் அதிகரித்துச் செல்வதாகவே தோன்றுகிறது. 2022 முதல் காலாண்டில் பொருளாதார வீழ்ச்சி 0.5 சதவீதமாகவும் இரண்டாம் காலாண்டில் இது 7.4 சதவீதமாகவும் மூன்றாம் காலாண்டில் 11.5 சதவீதமாகவும் நாலாம் காலாண்டில் 12.4 சதவீதமாகவும் காணப்பட்டது. அதாவது இலங்கைப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து செல்லும் வேகம் அதிகரித்துச் சென்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது. பொருளாதாரத்தின் முக்கியதுறைகளாகிய விவசாயம் கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய அனைத்து துறைகளிலும் இந்தவீழ்ச்சி அவதானிக்கப்பட்டாலும் கைத்தொழில் துறையின் வீழ்ச்சியே மிக மோசமானதாக இருந்துள்ளது. விவசாய உற்பத்திகள் 4.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன. சேவைகள் துறை 2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. ஆனால் கைத்தொழில் துறையின் வீழ்ச்சி 16 சதவீதமாக இருந்துள்ளது. ஆகவே 2022இல் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு கைத்தொழிற்துறையில் ஏற்பட்ட மிகப்பெரிய சரிவே பிரதானமாகப் பங்களித்துள்ளதாகக் கூறலாம். இலங்கையின் சேவைத்துறை பொருளாதாரத்திற்கு 54 சதவீதப்பங்களிப்பைச் செய்துவருகிறது. அதில் ஏற்பட்ட வீழ்ச்சி 2 சதவீதம் மாத்திரமே. விவசாயத்துறையின் பங்களிப்பு 10சதவீதத்தை விடக்குறைவாகும். அத்துறை 4.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்திருப்பது கணிசமான பாதிப்பை ஏற்படுத்தினாலும் கைத்தொழிற்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறலாம். இலங்கை வங்குரோத்தடைந்த நாடாக தன்னை அறிவித்துக்கொண்டமையும் நாட்டின் பணவீக்கத்தில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பும் மத்தியவங்கி நட்டநடுவில் கட்டிவைத்திருந்த டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை ஓரிரவில் அம்போ என அவிழ்த்து விட்டமையால் எகிறிக்குதித்து 370 ரூபா என்ற மட்டத்தில் ஒருவாறு செட்டில் ஆனமையும் அதனால் ஏற்பட்ட இறக்குமதி உள்ளீடுகளின் விலையதிகரிப்பும் சென்மதி நிலுவையை சீராக்குகிறேன் பேர்வழி என்று அரசாங்கம் விதித்த தீவிரமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் இலங்கையின் கைத்தொழிற்துறை உற்பத்திகளில் சம்மட்டி அடியாக இறங்கின. தாக்குப்பிடிக்க முடியாமல் பெரும் எண்ணிக்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் மூடுவிழாக் கண்டன. பொருள்கள் சேவைகளின் விலை அதிகரிப்பு அரசாங்கம் அறவிடும் வரிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பவற்றுடன் மக்களின் வருமானம் வீழ்ச்சிடையவே பொருள்கள் சேவைகள் மீதான கேள்வி மிகவேகமாகக் குறைவடைந்தது. அதனால் பலநிறுவனங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. மிகப்பெரிய நிறுவனங்களும் கூட விற்பனையில் சரிவை எதிர்கொண்டன. உதாரணமாக இலங்கையின் பிரதான விசுக்கோத்து உற்பத்தியாளர்களின்




விற்பனை மிகமோசமாக வீழ்ச்சியடையவே அவர்கள் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தி தமது பொருட்களை பொதுமக்கள் வாங்கி தமது நிறுவனங்களின் தொழிலாளர்கள் வேலையிழப்பதைத் தவிர்க்க உதவவேண்டும் என கெஞ்சாத குறையாகக் வேண்டிநின்றமை பலருக்கு நினைவிருக்கலாம். பெரிய நிறுவனங்களின் கதியே இது வென்றால் சிறிய நிறுவனங்களின் நிலை குறித்து கூறுவதற்கு ஏதுமில்லை. மக்களின் செலவிடும் ஆற்றலை வரிகள் மற்றும் கட்டணங்களை அதிகரிப்பதன் மூலம் குறைவடையச் செய்து, அதன் ஊடாக விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் உத்தியை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. அதன் மூலம் மக்களின் கொள்வனவு ஆற்றல் குறைவடைந்து வறுமை, பசி, பட்டினி போசாக்கின்மை என்பன அதிகரித்துச் சென்றதுடன் உத்தியோகபூர்வத் தகவல்களின் படி பணவீக்கம் 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதை, ஒற்றை இலக்கமாக வெகுவிரைவில் குறைத்துவிடுவோம் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கையர்கள் கொடுத்துள்ள விலை மிக மிக அதிகம். கிட்டத்தட்ட 8 சதவீத பொருளாதார வீழ்ச்சியுடன் மக்களின் வாழ்க்கைத்தர வீழ்ச்சியும் அமைதியின்மையும் விரக்தி மற்றும் கையறுநிலையும் பொருளாதாரத்தில் நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தவல்லன. மறுபுறம் இலங்கையில் ஏற்பட்ட திடீர் விலை அதிகரிப்பு மக்கள் கட்டுப்பாடின்றி செலவு செய்ய முனைந்ததால் ஏற்பட்டதல்ல. மாறாக அதிகாரிகளின் பிழையான கொள்கைத் தெரிவுகளால் ஏற்பட்ட பொருளாதார அதிர்ச்சியின் விளைவாக ஏற்பட்டதாகும். நாணயமாற்று வீதத்தை ஒரேயடியாக அவிழ்த்து விட்டமை இதற்கு நல்லஉதாரணமாகும். மாறாக மக்கள் தேவைக்கு அதிகமாக செலவு செய்ததால் ஏற்பட்ட விலை அதிகரிப்பல்ல. அரசாங்கச் செலவீடுகள் அதிகரித்தமையினால் விலைகள் அதிகரித்தன என்றால் அது மக்களின் தவறல்ல.

மக்கள் தெரிவு செய்து அனுப்பிய ஆட்சியாளர்களின் தவறு. எவ்வாறாயினும் இலங்கை ரூபாவின் பெறுமதி குறுகிய காலத்துள் சடுதியாகச் சரிந்த சென்றமையால் இறக்குமதிப் பொருள்களின் விலை உயர்ந்தமை இறக்குமதி உள்ளீடுகளின் விலை அதிகரித்தமையினால் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்க உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலைகள் அதிகரித்தமை அத்துடன் பொருள்கள் சேவைகளின் விலைகள் மேலும் மேலும் அதிகரிக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தமை போன்ற நிரம்பல் பக்கக் காரணங்களே இலங்கையில் பணவீக்கம் எகிறிச் செல்லக் காரணமாகியது. ஆனால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி எடுத்த நடவடிக்கைகளோ கேள்விப்பக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகவே இருந்தது.

அது பொருளாதாரச் சுருக்கத்தை ஏற்படுத்தியது. ஏற்கெனவே கொவிட் கொள்ளை நோயினால் பலத்த அடிவாங்கிய உற்பத்தித் துறை அரசாங்கத்தின் கொள்கை நடவடிக்கைகளினால் மேலும் சுருங்கிப்போனது. இந்தச் சுருக்கத்தில் இருந்து மீள்வது எல்லோரும் நினைப்பது போல இலகுவாக இருக்கப்போவதில்லை. இப்போதுள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியல் பொருளாதார சூழ்நிலைகள் அதையே கோடி காட்டுகின்றன.

# SOS சிறுவர் கிராமங்களுடனான ஒப்பந்தத்தை புதுப்பித்துள்ள AkzoNobel



டியுலக்ஸ் பெயின்ட் உற்பத்தியாளரும், முன்னணி சர்வதேச பெயின்ட் மற்றும் மேற்பூச்சு வகைகள் உற்பத்தி நிறுவனமுமான AkzoNobel பெயின்ட்ஸ், தொடர்ச்சியான 5 ஆவது வருடமாகவும் இலங்கை SOS சிறுவர் கிராமங்களுடன் ஒப்பந்தத்தை புதுப்பித்திருந்தது.

24 பங்கேற்பு நாடுகளுடனான இந்த சர்வதேச பங்காண்மையானது, AkzoNobel இன் 'Let's Colour' திட்டத்தின் அங்கமாக அமைந்துள்ளதுடன், இளைஞர் தொழில் வாய்ப்பின்மை தொடர்பான பிரச்சினைக்கு நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கல்வி மற்றும் புதுப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது. உறுதியற்ற பின்புலத்தைச் சேர்ந்த இளம் வயதினரின் பணி வாய்ப்புகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சிகளில் நிபுணத்துவ பெயின்ட் பூச்சு மற்றும் புதுப்பித்தல், தொழில் முயற்சியாண்மை மற்றும் மென்திறன் விருத்தி ஆகியன தொடர்பில் ஆலோசனை மற்றும் பயிற்சிகள் வழங்கலினூடாக, தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் வசதிகளை மேம்படுத்தி, சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த நிலைகளை வகிக்கக்கூடிய சுயாதீனமான வயது வந்தவர்களை கொண்டிருப்பதற்கு பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

பெயின்ட் பூச்சின் வலிமையை மேலும் வலியுறுத்தும் வகையில், சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் குடும்பத்தாரின் வசிப்பிடங்களை மேம்படுத்துவதற்காக டியுலக்ஸ் பெயின்ட் வகைகளை கையளிக்கும் நடவடிக்கைகளும் அடங்கியிருந்தன.

AkzoNobel ஊழியர் தன்னார்வ செயற்பாட்டாளர்களின் ஆதரவுடன், இந்தப் பங்காண்மையினூடாக, SOS கிராமங்களைச் சேர்ந்த இளம் வயதினருக்கு ஆலோசனை வழங்கல் மற்றும் ஊக்குவிப்பு வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# The Dentsu Rise Up குளோபல் சவால் நிகழ்வில் வெற்றியாளர்கள் கௌரவிப்பு




The Dentsu Rise Up குளோபல் சவால் இலங்கை பதிப்பு நிகழ்வின் போது, 17 முதல் 27 வயதுக்குட்பட்ட இளைஞர்களால், இலங்கையர்களுக்கு உணவு விரயத்தை குறைப்பது தொடர்பான சிறந்த சிந்தனைகள் வெளிப்படுத்தியிருந்தமைக்காக கௌரவிக்கப்பட்டிருந்தனர். இந்த நிகழ்வு, ஹவ்லொக் சிட்டி க்ளப் ஹவுஸ் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

தமது சிந்தனைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்ததைத் தொடர்ந்து, அவற்றை நடுவர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தனர். இந்த நடுவர் குழாமில், களனி பல்கலைக்கழகத்தின் வணிகம் மற்றும் நிதிப் பிரிவின் பேராசிரியர் சி.என். விக்ரமசிங்க, ADA ஸ்ரீ லங்கா ஆக்கபூர்வ சேவைகள் பணிப்பாளர் அசேல டி சில்வா, TBWA ஸ்ரீ லங்கா ஆக்கத்திறன் பணிப்பாளர் ஹனிம் அப்துல் காதர், Dentsu Grant ஆக்கத்தின் பணிப்பாளர் ஷமீர் ஹுஸைன், AOD இன் தந்திரோபாய ஆலோசகர் மற்றும் MMCA இன் அலங்கார வடிவமைப்பாளர் சானி பெரேரா மற்றும் Dentsu Grant & Miami Ad School இன் ஆக்கத்திறன் பணிப்பாளரும் ஆலோசகருமான அமன்டா அலுவிஹார ஆகியோர் அடங்கியிருந்தனர்.

கடுமையான மதிப்பாய்வுகளைத் தொடர்ந்து, இறுதிச் சுற்றுக்காக சிறந்த 20 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். The Dentsu Rise Up குளோபல் சவால் – இலங்கை பதிப்பு 2022 நிகழ்வின் வெற்றியாளராக கயாங்கி செனெவிரட்ன தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், இவரின் 'Food Pulse' சிந்தனைக்காக புத்தம் புதிய MacBook Pro ஒன்றை பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

# தங்க சான்றிதழைப் பெறும்
# Aitken Spence இன் Heritance Hotels Travelife




பிரீமியர் விருந்தோம்பல் சங்கிலி, Aitken Spence Hotel Managements இன் Heritance Hotels அதன் நிலையான சுற்றுலா முயற்சிகளுக்காக மதிப்புமிக்க சர்வதேச அங்கீகாரமான Travelife Gold வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Heritance Kandalama, Heritance Ahungalla, Heritance Negombo, Heritance Tea Factory மற்றும் Heritance Ayurveda ஆகியவை செயல்பாடுகள், சேவைகள், விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் விருந்தினர் மனநிறைவு ஆகியவற்றில் தங்கள் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டு சான்றிதழ் பெற்றுள்ளன.

Travelife சர்வதேச நிலைத்தன்மை சான்றிதழ் திட்டம் அதன் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார தாக்கங்களை நிர்வகித்தல் மற்றும் அதன் ஹோட்டல் மார்க்கெட்டிங் மற்றும் செயல்பாட்டு உத்திகளின் ஒரு பகுதியாக நிலைத்தன்மையை ஆதரிப்பதில் ஹோட்டலின் செயல்திறனை மதிப்பிடுகிறது. Travelife இன் நிலைத்தன்மை சான்றிதழ் என்பது ஒரு இலாப நோக்கற்ற முதன்மை திட்டமாகும், இது சுற்றுலா தலங்கள், வணிகங்கள் மற்றும் பயணிகளுக்கு நிலையான சுற்றுலாவின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கான புதுமையான தீர்வுகளை செயல்படுத்த உதவுகிறது.

Travelife தங்கச் சான்றிதழைப் பெற, ரிசார்ட்டுகள் ஒரு சுயாதீனமான தணிக்கையாளர் ஆய்வு மூலம் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தன, இதில் நிலையான மேலாண்மை அமைப்புகள் வணிகக் கொள்கைகள், சட்டம், சமூகத் திட்டங்கள், மனித மற்றும் நிதி ஆதாரங்கள் மற்றும் ஆற்றல், நீர், திடக் கழிவு, சுற்றுச்சூழல் மேலாண்மை போன்றவை அடங்கும். மாசுபாடு, அரிப்பு மற்றும் வனவிலங்குகள். தொழிலாளர் மற்றும் மனித வளங்கள், சமூக ஒருங்கிணைப்பு, சப்ளையர்கள் மற்றும் விருந்தினர்கள் ஆகியவற்றிலும் ஒய்வு விடுதிகள் மதிப்பிடப்படுகின்றன.

## இலங்கையர்களை
# சேமிப்பாளர்களாக திகழ ஊக்குவிக்கும் SDB வங்கி

வாடிக்கையாளர்களின் பரந்தளவு தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு சேமிப்புக் கணக்குகளை SDB வங்கி வழங்குகின்றது.

சந்தையில் போட்டிகரமான உயர்ந்த வட்டி வீதங்கள் மற்றும் இதர பல பிரத்தியேகமான உள்ளம்சங்களைக் கொண்ட SDB வங்கியின் சேமிப்புக் கணக்குகள், சந்தையில் காணப்படும் ஏனைய தெரிவுகளை விட விசேடத்துவம் வாய்ந்தனவாக அமைந்துள்ளன.

சிறந்த சேமிப்புப் பழக்கம் என்பது, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டிய முக்கியமான பழக்கங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. உங்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் இது பங்களிப்பு வழங்கும் என்பதுடன், மனநிம்மதியையும் வழங்கும். சேமிப்புகளினூடாக உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்வதை நோக்கி பயணிக்க உதவுவதுடன், எதிர்பாராத சம்பவங்களின் போது, அவற்றுக்கு உறுதியாக முகங்கொடுக்கக்கூடிய தயார்நிலையில் உங்களை வைத்திருக்கும். குறிப்பாக, உங்கள் சேமிப்புகளின் மீது அதியுயர் வருமதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களில் இதனை எய்தக்கூடியதாக இருக்கும்.

SDB வங்கி போன்ற நம்பிக்கையை வென்ற, நிலைபேறான வங்கியியல் மற்றும் அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் அனுமதி பெற்ற வங்கியொன்றில் உங்கள் சேமிப்பை கொண்டிருப்பதனூடாக, அவை பாதுகாப்பாக இருப்பது மாத்திரமன்றி, சிறந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் உறுதி செய்து கொள்ள முடியும்.

SDB வங்கியின் சேமிப்புத் தீர்வுகளில், SDB Top Saver Plus என்பது முன்னிலை வகிக்கின்றது.

## தமிழ் விவசாய சமூகத்தினருடன்
# பண்டிகைக் கொண்டாட்டத்தில் பெல்வத்தை நிறுவனம்



இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமங்களில் ஒன்றான பெல்வத்தை (Pelwatte Dairy) நிறுவனம், அண்மையில் தமிழ் விவசாய சமூகத்திற்கு உதவிகளை வழங்கி, தைப்பொங்கல் பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தது. தமிழ் மக்கள் கொண்டாடும் மிக முக்கியமான பண்டிகைகளில் ஒன்று எனும் வகையில், இவ்விவசாயிகளுடன் வலுவான மற்றும் அர்த்தமுள்ள உறவுகளை கட்டியெழுப்பவும் அதனைத் தொடர்ச்சியாக பேணும் வகையிலும் பெல்வத்தை நிறுவனம் இப்பண்டிகையை தொடர்ச்சியாக கொண்டாடி வருகிறது.

அந்த வகையில் இவ்வருடம், தைப்பொங்கலைக் கொண்டாடும் விவசாயிகளுக்கு பெல்வத்தை நிறுவனம் சுமார் 2,000 பரிசுப் பொதிகளை வழங்கியது. இப்பரிசுப் பொதியில் பாரம்பரிய தைப்பொங்கல் பானைகள், அரிசி, சீனி, தேங்காய், கருப்பட்டி, போஞ்சி, ஊதுபத்தி குச்சிகள் போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்தன. இக்கொண்டாட்ட நிகழ்வின் ஒரு பகுதியாக பெல்வத்தை நிறுவனத்தின் பிராந்திய மற்றும் கள உத்தியோகத்தர்களும் அங்கம் வகித்ததோடு, இப்பொருட்களை அவர்கள் பால் விவசாயிகளது வீடுகளுக்கு கொண்டு சேர்த்தனர்.

பெல்வத்தை நிறுவனத்தின் தலைவர் ஆரியசீல விக்ரமநாயக்க, இக்கொண்டாட்ட நிகழ்வுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "விவசாயிகளுடன் கலாசார ரீதியாகவும் சமய ரீதியாகவும் தொடர்பைப் பேணுவதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இவ்வாறான கொண்டாட்டங்களின் போது, ஒவ்வொரு விவசாயிகளுடனும் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும், அவர்களின் உற்பத்தி செயன்முறை குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கவும், பல வருடங்களாக அவர்கள் வழங்கி வரும் பங்களிப்பு மற்றும் ஆதரவிற்காக எமது நன்றியைத் தெரிவிக்கவும் முடிந்துள்ளது." என்றார்.

# Edutoys நிறுவனத்துக்கு WCIC வெள்ளிப்பதக்கம்



ஆரம்ப கல்வித் தேவைகளுக்கான உபகரணங்களை வழங்கும் முதன்மையான நிறுவனமான Edutoys தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பஸ்லா மெயன் வெள்ளிப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மகளிர் கைத்தொழில் மற்றும் வணிகச் சபை ஏற்பாடு செய்த விருது வழங்கும் விழாவில் ஆரம்ப தொழில்முயற்சிகள் பிரிவில் இவருக்கு வெள்ளி விருது வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி விருது விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் அண்மையில் கோலாகலமாக நடைபெற்றது.

Edutoys தனியார் நிறுவனம் மொன்டிசோரி, முன் பள்ளிகள் மற்றும் பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகளுக்கு தேவையான உபகரணங்களையும் பிள்ளைகளுக்கு வீட்டின் அன்றாட தனிப்பட்ட பயன்பாட்டுக்கு தேவையான கற்கை உபகரணங்களையும் மாற்றுத் திறனாளி பிள்ளைகளுக்கு தேவையான கற்கை உபகரணங்களையும் உற்பத்தி செய்து விநியோகிக்கின்றது. கதிரைகள், மேசைகள், பெயர் பலகைகள், கல்வி சார்ந்த விளையாட்டுப் பொருட்கள், கபட், ஆசிரியர்களுக்கு தேவையான கற்கை உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை Edutoys நிறுவனம் உள்நாட்டில் உற்பத்தி செய்வதோடு சில பொருட்களை இறக்குமதி செய்கிறது.

மேலும், பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் சௌகரியம் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மொன்டிசோரி, முன்பள்ளிகள் மற்றும் பாடசாலையின் தேவைக்கேற்ப மேற்படி பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதோடு, அப்பொருட்களை பாவிப்பது தொடர்பான ஆலோசனைகளையும் நிறுவனம் இலவசமாக வழங்குகிறது.

## மெடிகெயார் மருத்துவ நிலையத்துடன்
# சுகாதார சேவைகளை விஸ்தரிக்கும் நவலோக்க



இலங்கையின் முன்னணி தனியார் சுகாதார சேவை வழங்குநரான நவலோக்க மெடிகெயார் மருத்துவமனை குழுமம், அதன் சர்வதேச மட்ட சுகாதார சேவைகளை தொடர்ந்து விரிவுபடுத்தியுள்ளதுடன், புத்தம் புதிய நவலோக மருத்துவ சேவை நிலையத்தை 2023 மார்ச் 7 அன்று குருநாகல் கொழும்பு வீதியில் இலக்கம் 317 இல் சம்பிரதாயபூர்வமாக திறந்துள்ளது.

நவலோக்க மெடிகெயார் தலைவர் ஹர்ஷித் தர்மதாச மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் பணியாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நவலோக மெடிகெயார் நிறுவனத்தின் தலைவர் ஹர்ஷித் தர்மதாச கருத்து தெரிவிக்கையில், "நாடு முழுவதும் சுகாதார சேவைகளின் தரத்தை அதிகரிப்பது எங்களின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும், மேலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த நவலோக்க மெடிகெயார் நிலையம் இந்த இலக்கை அடைய உதவும். குருநாகல் மாவட்ட மக்கள் இப்போது எங்களின் உயர்தர மருத்துவக சேவைகளை இலகுவாக அனுபவிக்க முடியும் மற்றும் எமது திறமையான மற்றும் தகுதி வாய்ந்த ஊழியர்களிடமிருந்து அதிக அர்ப்பணிப்பு மற்றும் கவனத்துடன் கூடிய சேவையைப் பெற முடியும்." என தெரிவித்தார்.

அதன் தரம், நிபுணத்துவம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கு பெயர் பெற்ற, நவலோக்க குருநாகல் மெடிகெயார் நிலையம் நூற்றுக்கணக்கான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளுடன் பல நன்மைகளை வழங்கும், இது பிரதேச மக்களை மேலும் பொருளாதார ரீதியாக வலுப்படுத்தும்.

# பவர் நுகர்வோர் வியாபார பிரிவின் சிரேஷ்ட பொது முகாமையாளராக டேனியல் ஹெஸ்



இலங்கையில் நுகர்வோர் பொருட்களை விநியோகிப்பதில் நம்பிக்கையை வென்ற விநியோகத்தராகத் திகழ்வதற்காக, நாட்டின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றும், பவர் என அறியப்படும், ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், தனது நுகர்வோர் பிரிவை வலிமைப்படுத்தி, தனது முகவர்களை இரட்டிப்பாக்குவதற்கும், தனது இலாகாவை விரிவாக்கம் செய்வதற்கும், நாட்டின் சகல பாகங்களையும் சென்றடையக்கூடிய வகையில் விரிவாக்கத்தை மேற்கொள்ளவும் முன்வந்துள்ளது.

முழு பெறுமதி சங்கிலியையும் விரிவாக்கம் செய்யும் பணிகளை பவர் முன்னெடுப்பதுடன், இதற்காக நிறுவனத்தின் வசம் காணப்படும் மதிநுட்பமான உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்துகின்றது. தனது முழு விநியோக செயன்முறையிலும் தரவுகள் அடிப்படையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க பவர் முன்வந்துள்ளதுடன், விற்பனை நிலையங்கள் மத்தியில் தனது பிரசன்னத்தை மேம்படுத்தவும், அதற்காக மேம்படுத்தப்பட்ட எதிர்வுகூரல் மற்றும் நிலைத்திட்டமிடலை பின்பற்றவும் முன்வந்துள்ளது.

இந்தப் பிரிவின் மாற்றங்களை வழிநடத்தும் பொறுப்பை, பவர் நிறுவனத்தின் நுகர்வோர் வியாபாரங்களின் சிரேஷ்ட பொது முகாமையாளர் டேனியல் ஹெஸ் வகிக்கின்றார். கடந்த ஆறு மாதங்களாக இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டவரான ஹெஸ், புதிய வியாபாரங்களை நிலைபேறான வகையில் கட்டியெழுப்பல் மற்றும் வியாபாரங்களை புதிய, நம்பிக்கையூட்டும் வழிகளில் கொண்டு செல்வதில் விசேடத்துவம் பெற்றுள்ளார்.

குறுகிய காலப்பகுதியில் அதன் விநியோக வலையமைப்பை 50,000 க்கு அதிகமானதாக இரட்டிப்பாக்குவதற்கான திட்டங்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளதுடன், நுகர்வோர் பொருட்கள் மற்றும் வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்ட இலங்கை மற்றும் சர்வதேச நிறுவனங்களை உள்வாங்கவும், அதன் முகவர்களை இணைத்துக் கொள்வதை இரட்டிப்பாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மஞ்சரி சிறுகதை

# தேடிய உறவு

கிழக்கு வானம் அந்தா இந்தா வென தனது நித்திய கடமையில் இயங்கிய வண்ணமாகவும் வானத்தில் பூத்து கண்சிமிட்டிய வெள்ளிகள் மங்கி மறைந்து கொண்டிருக்க, காகக் கூட்டங்கள் தத்தம் கூட்டைவிட்டு கா... கா... காக்... கா என்று கரைந்து இரைதேடும் படலத்தை தொடர்ந்த வண்ணமிருக்க... சில்வண்டுகளின் இரைச்சலும்... ஓநாய்களின் ஊளை இடும் ஓசையும் விடியலை பறைசாற்றிய வண்ணமிருந்தன.

ஓ... வெனப் பெய்த கச்சான் மழையினால், வெள்ளக்காடாக முந்தல் சிறுகடல் பரப்பு காட்சியளித்தது. அத்துடன் வரத்துத் தண்ணீரும் பறவைக் கடலை ஆக்கிரமித்தது. தொட்டக்களி கழிமுகத் தொடக்கம், உடப்பு தரவை வரையும் வெள்ள நீர் வழிந்தோடிக் காட்சியளித்தன.

இந்த வெள்ளத்தின் தாக்கத்தால் நீரோடைகள், கிணறுகள், வாய்க்கால்களும் நீர் நிரம்பி காணப்பட்டன.

வெள்ள நீரை கடலில் பாய்ச்ச உடப்பு அறுவாய் என்று சொல்லப்படும் முகத்துவாரம் வெட்டப்படும், வெள்ள நீரைக் கடலில் பாய்ச்சுவார்கள் இந்த கண் கொள்ளாக் காட்சியை கண்டுகளித்து இன்புறும் முகமாக அயல் கிராமத்தினர், உள்ளூர் சனங்கள் காலையும், மாலையும் பொழுது போக்காக வந்து கூடி அற்புதக் காட்சிகளைக் கண்டு மகிழ்வார்கள், குதூகலிப்பார்கள். சிறுவர்கள் கடல் தரையில் குளித்தும் ஓடி மகிழ்வார்கள், கொஞ்சிக் குலாவுவார்கள்.

உடப்பு அறுவாய் வெட்டப்பட்டால் போதும் இதை அறிந்த உள்ளூர், அயல் கிராமச் சிறுகடல் தொழிலாளர்கள் உஷாராகி விடுவார்கள் என்பது வழமையான சங்கதி ஆகும். இவர்கள் தமது வீட்டின் மூலையிலே உறக்கத்தில் தூக்கிக் கட்டியிருக்கும் படுப்பு வலை, போட்டு வலை, கூட்டு வலை, முரல் வலை, மணல் வலை போன்றவற்றை பிரித்து தத்தம் தொழிலுக்கு ஏற்ற முறையில் சென்று விடுவார்கள்.

முந்தல் தரைப் பரப்பிலே சோனாவாரியாகக் காணப்படும் வெள்ளத் தண்ணீரானது உடப்பு அறுவாய் வழியாக வழிந்தோடினால் போதும், தொட்டக் களிமுகத்தில் இறால், நண்டு, கணவாய், மணலை, விலாங்கு மீன்கள் அதிகளவில் உற்பத்தியாவதால் மீன்களின் இனப்பெருக்கம் இரட்டிப்பாகக் காணப்படும். அவ்வமயம் மணலை மீன்கள் பாய்ந்து சுழி போட்டு வேடிக்கை காட்டத்தவறாது.

இதைப் பார்த்தறிந்த சிறுகடல் தொழிலாளர்களின் கூட்டத்தை சொல்லவா வேண்டும். ஒரே குஷியாக இருப்பார்கள். தெப்பம் மூலம் மீன்பிடி துறைமுகத்தை அடைவார்கள். இடம் பிடிப்பது மட்டும்தான் இவர்களின் நோக்கமல்ல. அங்கே பொறாமைத் தீ உள்மனங்களில் வேரூன்றி வேட்காடு கொண்டு நிற்கும். இது யதார்த்தத்தின் வெளிப்பாடு.

வழக்கம் போல தொட்டக்களி முகப்பில் வலைகளை விரித்து படுப்பு வலை போட்ட தொழிலாளர்கள் குளிர் காற்று தாங்க முடியாமல் நடுநடுங்கி நடுக்கத்துடன் நிற்பார்கள். இந்த நடுக்கத்தை போக்க அருகில் கொப்பு விரித்து சுடர்விட்டு இருக்கும் கண்ணாக் காட்டை அடைந்தவர்கள் அங்கப்பனும் நண்பர் குல்லானும் ஆவார்கள்.

கண்ணா காட்டையடைந்த அங்கப்பன் அப்பனே...! முருகா...! என்றும்.. குல்லான் ஆத்தாளே...! திரௌபதி...! என்றும் கூறி ஆறுதல் கொள்வார்கள். குளிர் நடுக்கத்திலிருந்து இக்காடு ஓரளவு பாதுகாப்பு வழங்கியதென்றே கூறலாம்.

அவ்வமயம் அங்கப்பன் தான் கொண்டுவந்த ஓமலின் வெற்றிலை, களிப்பாக்கு துண்டு புகையிலை, சுண்ணாம்பு டப்பா, கரம்பு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து வாயில் போட்டு ருசி பார்த்ததான். குளிரைத் தாங்கிக் கொள்ள முடியாதவனுக்கு இந்த வெற்றிலைக் கூறு ஒரு தெம்பையும், உத்துணர்வையும், மனத்தெளிவையும் உண்டாக்கியது.

இதைப் போல்த்தான் குல்லானும் தனது கச்சாலில் வைத்திருந்த சுருட்டை எடுத்துப் பற்ற வைத்தான். பத்தின் சுருட்டை ஓர் இடம் இழுத்தான். அந்த சுகானுபவம், அவனுக்கு ஏற்பட்ட உத்வேகம் அந்த குளிர் நடுக்கம் உடம்பை விட்டு பறந்தது. அதனுடன் கொண்டுபோன கசிப்புச் சாராயத்தையும் உள்ளே விட்ட குல்லான், குதூகலத்தில் மிதந்தான். அவன் இனிய இன்ப சுகத்தில் திளைத்தவனாக காணப்பட்டான்.

தனிமையில் தோணியில் துவண்டிருந்த அங்கப்பனை நாடி குல்லான் சாவகாசமாக பேச்சை ஆரம்பித்தான்.

என்னப்பா...! அங்கப்பா...!! ஏ.. ஒன்ற ஒடம்பு எப்படி இரிக்கி. ஒன்ற சொகங்கள் எப்படியப்பா...! நல்லா ஈக்கிரியாப்பா...! அது சரியப்பா... அங்கப்பா...! ஒன்ற விஷயங்கள எந்தமாதிரி சமாளித்த.. போன்ற கேள்விகளை அடுக்கிக் கொண்டே கேள்விக் கணைகளை தொடுத்தவனாக இருந்தான்.

அதேண்டா...! கேக்கிரா குல்லா...! என்ற அந்த தொயர வாழ்வ ஏட்டில எழுத முடியா தப்பா...! புள்ளகளும் சொல்வெளி கேக்கமாட்டேங்கிதுகள்.

நா சொல்லி களச்சி போனேன் பாரு...! இந்த கால புள்ளங்க...! தாய் தவப்பங்க சொல்லையே கேக்க மாட்டேயிராங்க பாரு.. காலம் கெட்டுப் போச்சு தப்பா... நல்லாவே கெட்டுப் போச்சு.

அதுமட்டுமல்ல.. நா புடிச்ச முயலுக்கு மூன்று கால்கள் தான் என்கிறாங்க...! போகாத இடங்களுக்கு போகாத...! போகவிட்டுப் புறம் சொல்லித் திரியாத..! என்று நம்ம முன்னோர்கள் சும்மாவா சொல்லிருக்காங்க...! பாரு..!

படிக்கவைத்து.. பட்டதாரியாக்கினோம். அது பிழையப்பா. வெளிநாடாம், கை நிறைய சம்பளம் கிடைக்குதாம்: அவன் குடிகாரன் என்று தெரிந்தும் என் மகள் ராசாத்தி, மாமன் மகன் ரகுவை தான் விரும்புவதாக ஒத்தக்காலில் நிற்கிறாளப்பா.

நா... சொல்லிச் சொல்லி களைச்சிப் போனேன்ப்பா. ஆனால் அவனுக்கு நிரந்தர வதிவிட காட் இன்னும் கிடைக்கலப்பா..!

இதுக்குள்ள அந்த குடிகார மாமாவின் ரவிஸ்ஸ பார்க்க முடியல... பாரு

விஷம் போல் ஏறி விட்டது சாமான்களின் விலை. கையில் காசியில்லை. உழைப்பு உழைப்பு கண்டபலன் ஒன்றுமில்லயப்பா..!

பொருளாதார நிலை இப்படி இருக்கும் போது சிறுகடல் தொழிலாளர்களான நாம எப்படியப்பா வாழ்க்கையை ஓட்டுவது?

அது சரியப்பா. அட குல்லான் ஒன்ற நிலை எப்படியப்பா...! இருக்கி. இப்படியான அமைதியான இடத்தில் தான் நாம மனம் விட்டு நம்ம தத்தம் குறைகளை பேசிக் கொள்ள முடியும் என்றான் அங்கப்பன்.

என்மவன் மாயவன் முல்லைத்தீவுக்கு அண்மித்துள்ள செம்மலை என்ற இடத்திக்கு தொழிலுக்கு போனான்ப்பா..! அந்த இடத்தில் நல்ல முறையில் தான் தொழில் செய்தான். அது கடல் வளம் நிறைந்த பகுதியும் கூட. அங்கு இறால், நண்டு, கணவாய் போன்ற கடல் மீன்களுக்கு பஞ்சமில்லையப்பா...!

இப்படியாக மகனின் தொழில் எவ்வித விக்கினமின்றி சுமூத்தா ஓடிக்கொண்டிருந்தது. தெப்பத் தொழிலை அவன் சுதந்திரத் தொழிலாக செய்து கொண்டிருந்தான்.

யாரோ என் மகன் மாயவனை இயக்கமென்றும் தமிழரின் உரிமை என்றும் ஆசை வார்த்தை கூறி... இல்லாத.. பொல்லாததையெல்லாம் சொல்லி உசுப்பேத்தி மகனின் மூளையைக் கழுவிப் போட்டாங்கப்பா...!

நா... ஒரே ஒரு ஆண்பிள்ளையென்று கண்ணிமை போல் காத்து வந்தேன். படாத பாடுபட்டு வளர்த்தேன். அவன் கூடுவாரோடு கூடி கும்மாளம் அடித்தான். இரவென்றும்.. பகலென்றும் பாராமல் கூட்டம், பயிற்சி என நாயா ஓடித் திரிந்தான். இத கேள்விப்பட்டு பலமுறை எச்சரித்தேன்.

நான் அவன அந்தக் கூட்டங்களுக்குப் போகாதே...! போகாதே என்று கெஞ்சிக் கேட்பேன் ஆனால் அவன் என்ர சொல்ல கொஞ்சமாவது கேட்காமல் நடந்து கொள்வான். அது அவன் காதில் விழவில்லை.

ஏதோ ஒரு இயக்கமென்று சொல்லி அந்தப் பயிற்சி இந்தப் பயிற்சி என்று சொல்லி என் மாயவனை மயக்கி போர் வீரனாக்கி விட்டாங்கப்பா.

ஆனால் என் மகன் மாயவன் உதவியுடன் வந்தவங்க எங்க ஊரை அண்மித்துள்ள தோணிக் கலை என்ற இடத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியை உடைத்து கொள்ளையடிச்சு போட்டாங்கப்பா.. அந்த வங்கியிலிருந்த நக, பணம் என்பனவற்றை எடுத்து மூடையில் கட்டுக்கட்டா கட்டி எனது ஊரான முத்துப்பந்தி ஊடாக போட்டில் ஏறி கூட்டத்தோடு கூட்டமாக என் மகனும் ஏதோ ஓர் நாட்டுப் பக்கம் பறந்து போய் விட்டாம்ப்பா!

ஆனால்! இந்த நிகழ்வு துன்பியல் சம்பவமப்பா இதனால் நான் மவன இழந்த துயரம் என்னை வாட்டி வதைக்குது பார் மச்சான் அங்கப்பா.

இது பிழையான செயலால் நாம் சிங்கள, தமிழ் ஒற்றுமையை தொலைச்சிட்டம். இந்த அநியாய காரங்க நாசமா போவாங்க.

நாம நீண்டகாலமாக சகோதர நேயத்துடன் ஒன்றாக வாழ்ந்தோம். எம்மிடத்தில் இன சௌஜன்யம் சுடர் விட்டது. அன்னியோன்யமும் நல்லெண்ணமும் நிலவியது.

சரியப்பா ஒன்ற மகன் மாயவன் எமதூர் முத்துப்பந்தி கிராமத்தை காட்டிக் கொடுத்ததினால்தான் போலீஸ் நிலையமென்றும், கடற்படை முகாமென்றும் அமைக்கப்பட்டுள்ளன. இன்று நாம அடங்கி... ஒடுங்கி வாழ வேண்டியுள்ளது. இத யாரிடமப்பா சொல்லி அழ.

தங்களது துயரங்களை இருவரும் அக்குவேறு ஆணிவேறாக சொல்லித் தீர்த்தார்கள். மனக்குறையை தீர்த்து கொட்டினார்கள்.

குல்லானின் வருகையை மனைவி வீரம்மாள் எதிர்பார்த்து நிற்கின்றாள். கணவனின் தொழில் முயற்சிக்கு ஊன்றுகோலமாக இருக்கின்றாள். இரண்டாவது சின்னா வயது வந்த பிள்ளையாகி விட்டான். தொழில் நுட்ப கற்கை நெறியில் தேர்ச்சி பெற்றவனாக திகழ்ந்த சின்னா தன் கையே தனக்குதவியாக வாழ்ந்து வந்தான்.

குல்லான் தனக்கு அம்பிட்ட மீன்களை சந்தையில் விற்றான். விற்ற காசை எடுத்துக் கொண்டு சின்னப்பயனின் கடையை நாடினான்.

குடித்து வெறித்து தள்ளாடி... தள்ளாடி தன் இல்லத்தை நாடி மீன் வாடையுடன் அலங்கோல உருவத்தில் இல்லத்தை அடைந்தான் குல்லான்.

இந்த கோலத்தைக் கண்ட மனைவி வீரம்மாள் அட நீங்களேல்லாம் மனுசனா அல்லது மிருகங்களா..! என்று அங்கலாய்ந்தாள். அவன் வீரம்மாளை கொட்டித் தீர்த்தான்.

இருவருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்படவே மனைவி வீராம்மாளின் தலையில் தடியால் அடிக்க காயம் ஏற்பட்டு அருகில் உள்ள உடப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள்.

இருவரையும் விசாரணை செய்த பொலிசார், குல்லானை கடுமையாக எச்சரித்து நிபந்தனையின் கீழ் வீடு செல்ல அனுமதித்தார்கள்.

அங்கப்பன் காரியக்காரன்தான். சமயோசிதமாக நடந்து கொள்பவன். எதிர்காலத்தை பற்றியும் யோசிப்பான். படிக்காவிட்டாலும் கூட பண்புடன் நடந்து கொள்வான்.

ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவனாக தன்னை சுதாகரித்துக் கொண்டான். மனம் தெளிவு பெற்றான். நேரே குல்லானின் இல்லம் நோக்கி அங்கப்பனும் மனைவி ராசம்மாவும் விரைந்து சென்றனர்.

அவர்களைக் கண்டதும் குல்லான் ஆவலுடன் வரவேற்றான்.

அடே..! குல்லான்..! குடியைக் கெடுக்க கெடுக்கும் குடியை இத்துடன் மறந்து விட்டா போல் தெரிகின்றது. சமூகத்தில் நல்ல மனிதனாகவும் மதிப்புள்ளவனாகவும் வாழ இன்றிலிருந்து திடசித்தம் கொள்ள வேண்டுமடா.

அன்று நாம் நட்புடன் வாழ்ந்தோம். இன்றிலிருந்து சகோதர உறவுடன் சம்பந்திகளாகி விட இருக்கின்றோம் பார். இதற்கு எமது பிள்ளைகள் வழி வகுத்துள்ளார்கள்.

காதலைத் தடுத்தேன்..! வேலி போட்டேன்.. பல முனைகளில் தடைகளை ஏற்படுத்தினேன். காதல் தீ என் மகள் சரோவையும் உன் மகன் மாயவனையும் இணைத்துவிட்டது பார் என்றான்.



உடப்பூர்
வீர சொக்கன்

---

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 62

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | ■ | 04 | 05 | 06 |
| | ■ | 07 | | 08 | ■ | 09 | |
| 10 | 11 | ■ | 12 | | 13 | ■ | ■ |
| 14 | | ■ | | ■ | 15 | 16 | |
| ■ | ■ | 17 | ■ | 18 | | | ■ |
| 19 | 20 | | ■ | | ■ | 21 | 22 |
| 23 | | | | | 24 | ■ | |
| 25 | | | ■ | ■ | 26 | | |

**திரு/திருமதி.செல்வி** ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
**முகவரி** ..........................................
..........................................
..........................................
.................... ....................
**திகதி** **கையொப்பம்**

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 62
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 62

**இடமிருந்து வலம்**

1. பலரும் ஒன்றிணைந்து ஏற்படுத்தும் உறவு
4. இரத்தம்
7. பறவையினத்தைச் சேர்ந்த இது இரவில் இரை தேடும்
9. தண்டனை பெற்ற குற்றவவாளியை அடைத்து வைக்கும் கூடம்
10. திக்கு
12. கல்வி கற்பித்தல் அல்லது அறிவுரை செய்தல் (குழம்பியுள்ளது)
14. மயிலுக்கு இது உண்டு (திரும்பியுள்ளது)
15. போர்
18. அடாவடித்தனம், தொல்லை கொடுப்பவன்
19. மாற்ற முடியாத முடிவு
21. தூக்கிச் செல்லும் நிலை (திரும்பியுள்ளது)
23.பாதிக்கப்பட்டதை சீரமைத்தல் (குழம்பியுள்ளது)
25. ஒருவர் தன் இரக்கத்தை தெரிவிக்கும் சொல் இது
26. கை அல்லது காலுடன் இணைந்த உறுப்பு

**மேலிருந்து கீழ்**

1. ஒரு நிகழ்ச்சியை அரங்கேற்றுவதற்கு முன் அதனை சரிபார்க்கும் பயிற்சி
2. ஐந்துக்குப் பின் வந்தாலும், தலை கவிழ்ந்து விட்டது.
3. மகன்
5. சுவை
6. பழங்காலத்தில் சிற்றரசர்கள் பேரரசுக்குச் செலுத்திய கப்பம்
8. மது அருந்துவதால் ஏற்படும் ஒருவித மயக்கநிலை ( தலைகீழ்)
11.ஓர் உணவுப் பண்டம் (தலைகீழ்)
13.நறுமணம் (தலைகீழ்)
16. பொருட்களின் விலை குறைப்பு
17. வியப்பு, செய்தியையும் குறிக்கும்
18. இதனை பெண்கள் அணிவார்கள்
19. தந்தையை இப்படி அழைப்பார்கள்
20. ஏழ்மை நிலை (குழம்பியுள்ளது)
22. பாதுகாப்பு
24. பூமி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 61

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. ஊர்வசி
4. பாதம்
6. தந்திரம்
7. தனம்
8. பதில்
10. பனைமரம்
12. ஆதி
13. கால்
14. திரி
17.சயனம்
20. முக்கியம்
22. சாவு
23. குவளை
24. மகள்

**மேலிருந்து கீழ்**

1. ஊறு
2. வதனம்
3. சிந்தனை
4. பாரதி
5. தம்பதி
7. காரம்
9. ஆல்
10. பல்லக்கு
11. மதியம்
15. சரி
16. வயது
18. கனவு
19 . சாமம்
21. முளை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 61

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **1. பி. நடேசன்**<br>மூன்றாம் குறுக்குத் தெரு<br>435/36 ஏ பூம்புகார், மட்டக்களப்பு | **எம். பாஸிர்,**<br>22/2 ஏ, நுவரெலிய வீதி,<br>ஹாலிஎல | **வேல்நாயகம் ராஜேந்திரம்,**<br>இல 88, விபுலாந்த வீதி,<br>காரைதீவு 01 |

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். முஷாப் ஷம்ஸ் ரஸ்டீன்,**
அக்கரைப்பற்று
**2. ஹலீமா சித்தீக்கா அக்பர்,**
அவிஸ்ஸாவெல
**3. எஸ். பாக்கியநாதன்**
காரைதீவு
**4. எம்.எல். ஆதம் லெப்பை**
அக்கறைப்பற்று
**5. பிரனூகா பிரசாந்த்,**
மட்டக்களப்பு
**6. எஸ். தவநாயகி**
மட்டக்களப்பு
**7. எம்.எப்.அஹமட்**
பாணந்துறை
**8. என்.சிவசீலன்**
நீர்வேலி
**9. எம்.எம்.ஷரீஸ்**
மருதமுனை
**10. பி.குணசேகரன்**
கழுதாவளை



# விடைத்தாள் திருத்தும் பணிகளை தாமதப்படுத்தும் ஆசிரியர்கள்

# கேள்விக்குறியாகிறதா மாணவர் எதிர்காலம்?

அண்மையில் உறவினர் வீடொன்றுக்கு சென்றிருந்தேன். வழமையான நலன் விசாரிப்புக்கு பின்னர் அவரது மகனின் முதலாம் தரத்துக்கான பாடசாலை அனுமதி தொடர்பில் விசாரித்தேன். அவரது பதில் எனக்கு அதிர்ச்சியாகவிருந்தது. 'ஆமைவேகத்தில் செல்லும் உள்நாட்டு கல்வித் திட்டங்களை நம்பி பிள்ளையின் எதிர்காலத்தை பாழாக்கமுடியாது. பிள்ளை கடைசி வரை பரீட்சையோடு போராடவேண்டியிருக்கும். எனவே நான் பிள்ளையை சர்வதேச பாடசாலையொன்றில் சேர்த்துவிட்டேன் என்றார் அவர். இலங்கையின் இன்றைய கல்வித்துறை மீது பெற்றோர் நம்பிக்கையிழந்துள்ளதையே அவரது பதில் எனக்கு புலப்படுத்தியது.

இலவசக் கல்வியை வழங்கும் அநேகநாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையும் சாதி, மதம், பணக்காரன் என்ற வேறுபாடுகளின்றி முதலாம் தரம் முதல் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் வரை இலவசமாக படிக்கலாம். இதற்கு வித்திட்டவர் சுதந்திர இலங்கையின் கல்வியமைச்சராகவிருந்த CWW கன்னங்கர. நாட்டின் கிராமப்புறங்களிலுள்ள வறிய மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கினார். இலங்கையில் 14 வயது வரை கட்டாயக்கல்வி வழங்க வேண்டும் என்ற சட்டமும் உள்ளது. இலவசக் கல்வியை போன்று இலவச பாடநூல், இலவச சீருடை என்பனவும் வழங்கப்படுகின்றன. இதனால் தான் இலங்கை எழுத்தறிவு வீதம் கூடிய நாடுகளின் வரிசையில் உள்ளது. அதேபோல் இலங்கையில் கல்வித் தகைமை சர்வதேச ரீதியில் தரமுடையதாக காணப்படுகின்றது. முன்னைய காலங்களில் இலங்கையில் ஒருவர் பட்டதாரியாக அல்லது துறைசார் பட்டதாரியாக வருவதாயின் அவர் எவ்வளவு பணம் படைத்த குடும்பத்திலிருந்து வந்தாலும் போட்டிப் பரீட்சைகளினூடாகவே வர முடியும். ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தாலும் கற்பதன் மூலம் சாதிக்க முடியும் என்ற நிலை இப்போதும் காணப்படுகின்றது. அரசாங்க தொழில்கள், ஏனைய தொழில்வாய்ப்புகள் என்பவற்றுக்கு விதிக்கப்பட்ட கல்வித் தகுதிகளுடன் தொடர்புடைய பரீட்சைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

பரீட்சைகள் மாணவர்களின் கல்விக்காலத்தில் முக்கிய இடம்பிடிக்கின்றது. காலத்துக்கு காலம் பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதில் பெற்றோரும் ஆசிரியர்களும் நேரத்தை செலவிடுகின்றனர். மாணவர்களின் சாதனை மட்டுமின்றி பாடசாலைகளின் சாதனையும் பரீட்சை பெறுபேறுகளை கொண்டே மதிப்பீடு செய்யப்படுகின்றது.

எனினும் ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல், கொவிட் 19 தொற்று போன்ற காரணிகளோடு இலங்கையின் இலவச கல்விமுறைமை ஆட்டம்காண ஆரம்பித்தது. 2019ஆம் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலினால் பாதுகாப்புக் கருதி பாடசாலைகள் பல மாதங்கள் மூடப்பட்டன. அதனைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டு கொவிட் 19 தொற்று பரவலைத் தொடர்ந்து பாடசாலைகள் மூடப்பட்டு, பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன. இதனால் மாணவர்கள் இழந்த பாடங்களை ஈடுகட்ட இணையவழி கல்விமுறை கொண்டுவரப்பட்டது. ஆனால் எல்லா மாணவர்களுக்கும் அதற்கான வசதிகள் கிடைக்கவில்லை. கணனிகள், கையடக்கத் தொலைபேசிகள், இன்டர்நெட் வசதிகளின்றி மாணவர்களால் அதில் வெற்றிகரமாக பங்கேற்க முடியவில்லை. அதுமட்டுமின்றி உளரீதியாகவும் ஒருசில மாணவர்கள் இணையவழி கல்வியினால் பாதிக்கப்பட்டு ஒழுங்காக பரீட்சைகளுக்கு முகம்கொடுக்கவில்லை.

கொவிட் 19 தொற்றுக்கு பின்னர் பாடசாலை தவணைகள், பரீட்சைகள் என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. வழமையாக ஜனவரி மாதம் முதலாம் தரத்திற்கு உள்வாங்கப்படும் பிள்ளை தற்போது மார்ச், ஏப்ரல் மாதங்களில் முதலாம் தரத்திற்கு உள்வாங்கப்படுகின்றது. அதுவரை பிள்ளை தான் கல்விகற்ற முன்பள்ளி பாடசாலைகளில் கல்வி கற்கவேண்டும்.

இவ்வாறு முதலாம் தரம் முதல், பல்கலைக்கழகம் செல்லும் வரை சகல செயற்பாடுகளும் தாமதித்தே இடம்பெறுகின்றது. இதனால் மாணவர்களால் அவர்களுடைய இலக்கை உரிய காலத்தில் அடையமுடியாத துர்பாக்கிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு, மக்கள் போராட்டங்கள் காரணமாகவும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளும் காலவரையறையின்றி மூடப்பட்டிருந்தன. இதுதவிர நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் பொருளாதார நெருக்கடியும் மாணவர்களின் கல்வியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மின்சார துண்டிப்பு, கல்வி உபகரணங்களின் விலை உயர்வு, அத்தியாவசியபொருட்களின் விலை, மாணவர்களின் கல்வியை கேள்விக்குறியாகியது. பல மாணவர்கள் வறுமை, போசாக்கு பிரச்சினைகள், பாடசாலை இடைவிலகல்கள் என்பவற்றுக்கு முகம்கொடுக்கின்றனர். பெற்றோரும் பல சவால்களுக்கு மத்தியில் பெரும்பாடு பட்டு பிள்ளைகளை படிக்கவைத்து பரீட்சைகளுக்கு தயார்ப்படுத்துகின்றனர்.

எனவே நாளுக்கு நாள் மோசமடைந்துவரும் பொருளாதார சரிவுகளுக்கு மத்தியிலேயே இலங்கையின் பாடசாலைக் கல்வியானது பயணித்துக் கொண்டிருக்கின்றது. அரசாங்கமும் எவ்வாறான நிதி நெருக்கடி நிலவும் போதும் பெரியளவிலான நிதியை கல்வித்துறைக்கு ஒதுக்குகின்றது. சீனா, இந்தியா போன்ற நாடுகளும் இலங்கையின் இலவசக் கல்வித்துறைக்கு பல்வேறு உதவிகளை செய்துவருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் மாணவர்களின் கல்வி உரிமையை அடியோடு அழிக்கும் வகையில் ஆசிரிய தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக குற்றம் சாட்டப்படுகின்றது. இலவசக் கல்வியில் படித்து பட்டம் பெற்று கல்விச் சேவையில் இணைந்த ஆசிரியர்கள்,பேராசிரியர்கள் தங்களுடைய கடமையை புறந்தள்ளி வைத்து சலுகைகளை பெற தொழிற்சங்க போராட்டங்கள், பணிப் புறக்கணிப்புகளால் மாணவர்களின் எதிர்காலத்தை மேலும் மேலும் கேள்விக்குறியாக்கி வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடியினால் மின்சாரத் தடை, எரிபொருள் பிரச்சினை, போக்குவரத்து செலவினங்கள், கல்வி உபகரணங்களின் விலைஉயர்வு என்பனவற்றுக்கெல்லாம் மத்தியில் முட்டிமோதி படித்து க.பொ.த உயர்தர பரீட்சைக்கு முகம்கொடுத்த மாணவர்களின் விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதமாகியுள்ளமையால் மாணவர்களும் பெற்றோரும் பெரும் மனஉளைச்சலுக்குள்ளாகியுள்ளனர். உயர்தர பெறுபேறுகளை பெற்றவுடன் அடுத்த கட்ட தொழில், உயர்கல்வி போன்ற தீர்மானங்களை எடுக்கமுடியாமையால் ஏமாற்றத்துடன் இருக்கின்றனர். வழமையாக ஆகஸ்ட் மாதம் க.பொ.த உயர்தர பரீட்சைகள் நடைபெற்று அடுத்த வருடம் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் பரீட்சை பெறுபேறுகளும் வெ ளியாகிவிடும். எனினும் கடந்த ஆண்டு நடைபெறவிருந்த க.பொ.உயர்தர பரீட்சைகள் தாமதித்தே இவ்வருடம் ஜனவரி மாதம் ஆரம்பமாகி பெப்ரவரி மாதம் 17ஆம் திகதியளவில் முடிவடைந்தன.

நாடளாவிய ரீதியில் இரண்டாயிரத்து 200 பரீட்சை நிலையங்களில் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் இம்முறை மூன்று இலட்சத்து 31 ஆயிரத்து 709 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றினர். பெப்ரவரி மாதம் 22ஆம் திகதியளவில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் ஆசிரிய சங்கங்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக க.பொ.உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் ஒரு மாதம் கடந்துள்ள போதிலும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்நிலையில் ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.சாதாரணதர பரீட்சைகள் மேலும் தாமதமாகும் என கூறப்படுகின்றது. அப்படியானால் இம்முறை பரீட்சைக்கும் முகம்கொடுக்கவுள்ள பரீட்சார்த்திகள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியேற்படும். இதனால் மாணவர்கள் மனரீதியாக பாதிக்கப்படலாம். பொதுவாக இரண்டு பரீட்சைகளுக்கு இடையில் மூன்று மாதகால இடைவெளி இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாத பட்டசத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. எனவே வெற்றிகரமாக நடந்து முடிந்த க.பொ.த உயர்தர பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நிறைவுபெற்றாலே 2022ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை முழுமைபெற்று அடுத்தகட்ட பரீட்சை நகர்வுகளுக்கு செல்லாம். கல்வியமைச்சின் தகவலுக்கமைய கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளுக்காக 20ஆயிரம் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். இறுதி மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 1300 பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். எனினும் இதுவரை 16 ஆயிரம் ஆசிரியர்களே இதற்காக விண்ணப்பித்துள்ளனர். 4 ஆயிரம் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில் நாளாந்த சம்பளம் 2000 ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக ஆசிரியர்கள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கவில்லை.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கு வழங்கப்படும் தினசரி கொடுப்பனவு போதாது. நாளாந்த கொடுப்பனவு போதாதாகையால் அதனை 3,000 ரூபாவா க அதிகரித்து அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தார் கல்வியமைச்சர். ஆனால் அமைச்சரவைப் பத்திரத்தில் நாளாந்தக் கொடுப்பனவு 2,000 ரூபாவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது போதாது. பரீட்சையை சம்பந்தப்பட்ட ஆண்டிலேயே நடத்த விரும்புகிறோம். அப்படி நடந்தால் தான் இந்த நெருக்கடி முடிவுக்கு வரும் என தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த கருத்து தெரிவிக்கையில், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வேண்டுக்கோளுக்கமைய நடவடிக்கைகள் எடுப்பதற்கு என்னால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு இறுதி மதிப்பீட்டுக்கான கொடுப்பனவு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் முன்னரைவிட இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே கொடுப்பனவு தொடர்பில் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளாது மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு உயர்தர பரீட்சை திருத்தும் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கு ஒத்துழைக்குமாறும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்களிடம் வேண்டுக்கோள் விடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்விடயத்தில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களை அதற்காக ஊக்குவித்து மாணவர்களின் எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் ஆசிரியர் சங்கம் நடந்து கொள்ள வேண்டும் என்பதே பெற்றோரினதும் மாணவர்களினதும் எதிர்பார்ப்பாகும். நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியிலும் அரசாங்கம் அதுதொடர்பில் ஆராய்ந்து கொடுப்பனவில் அதிகரிப்பொன்றை மேற்கொண்டுள்ளது. நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் பொருளாதார பிரச்சினைகள் வேறுபாடின்றி அனைவரையும் பாதித்துள்ளது. விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும் என்றாலும், அதனை வலியுறுத்துவதற்கு மாணவர்களின் விடைத்தாள் திருத்தும் பணிகளை தாமதப்படுத்தி, மாணவர்களை பகடைக்காயாக்க ஆசிரியர்களே காரணமாக அமையக் கூடாது என்பதே அனைவரது கருத்தாகவுமுள்ளது. அர்ப்பணிப்பு மிக்க சேவையான ஆசிரியர் சேவை அர்த்தமிழக்கக் கூடாது.



வசந்தா அருள்ரட்ணம்...



# திருச்சியில் தீயாகப் பரவிய திருச்சி சிவா, - கே.என். நேரு

# உரசலும் புகைச்சலும்

தமிழக அரசின் முக்கியமான அமைச்சர்களில் ஒருவர் கே.என். நேரு. திருச்சிக்காரர். திருச்சி மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். தி.மு.க.வின் முதன்மை செயலாளர். கலைஞர் கருணாநிதியின் நம்பிக்கையை பெற்றவர். சென்னையில் ஒரு அண்ணா அறிவாலயம் போல திருச்சியில் கலைஞர் அறிவாலயம் என்ற விசாலமான ஒரு அரங்கத்தை அமைத்தவர். இன்று ஸ்டாலின் அரசில் நகர்புற வளர்ச்சி மற்றும் நீர் விநியோக அமைச்சராக விளங்குபவர். ஒரே வார்த்தையில் சொல்வதானால் தி.மு.க. உயர்மட்ட தலைவர்களில் ஒருவர்.

திருச்சி சிவா என அழைக்கப்படும் மூத்த தி.மு.க. உறுப்பினரான நடேசன் சிவா, திருச்சிக்கான பாராளுமன்ற உறுப்பினர். 2014ஆம் ஆண்டு தனிநபர் பிரேரணையாக திருநங்கைகள் உரிமைகள் சட்டவரைவை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து அதை ஏகமனதாக நிறைவேற்றவும் செய்தார் என்பது இவரது முன்னேற்றகரமான சிந்தனையை வெளிப்படுத்தும். 1996ஆம் ஆண்டுமுதல் இப்போது வரை பாராளுமன்றத்தில் தி.மு.க. எம்.பியாக இவர் பணியாற்றிவருவது, இவரது கட்சி அபிமானத்தையும் மக்கள் இவர்மேல் கொண்டிருக்கும் அபிமானத்தையும் பறைசாற்றும்.

இவர்கள் இருவருமே கழகத்துக்கு வேண்டப்பட்டவர்கள். திருச்சி அரசியலில் அ.தி.முக.வுக்கு எதிராக தீவிரமாக செயற்படக்கூடியவர்கள். எனினும் திருச்சி அரசியலில் எதிர் முகங்களிலிருந்து செயல்படுபவர்கள். எனவே தி.மு.க தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்களும் சிவா ஆதரவாளர்கள், நேரு ஆதரவாளர்கள் என்று கோஷ்டிகளாக பிரிந்து கிடக்கின்றார்கள்.

கடந்த 15ஆம் திகதி திருச்சியில் ஒரு பெட்மின்டன் மைதான திறப்பு விழா அதற்கு நேரு வந்திருந்தார். அவரை மைதானத்தை நோக்கி அழைத்துச் சென்றபோது ஊர்வலம் திருச்சி சிவாவின் வீட்டைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. வீட்டைக் கடந்து சென்றபோது திருச்சி சிவாவின் ஆட்கள் கறுப்புக் கொடியுடன் எதிர்ப்பட்டனர். நேருவின் காரை வழிமறித்த அவர்கள் தமது தலைவர் திருச்சி சிவாவின் பெயர், பெயர்ப்பலகைகளில் இல்லை என்றும் அவர் விழாவுக்கு அழைக்கப்படாமல் அவமதிக்கப்பட்டிருக்கிறார் என்றும் கூறி கூச்சலிட்டனர். அச்சமயத்தில் திருச்சி சிவா வீட்டில் இல்லை. ஒரு கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக பஹ்ரெயின் சென்றிருந்தார்.

விழா நிறைவு பெற்றதும் கூட்டம் கலைந்து திருச்சி சிவா வீட்டு வழியாக சென்றபோது கே.என். நேரு ஆதரவாளர்களில் சிலர் திருச்சி சிவா வீட்டுக்குள் புகுந்து அவரது கார் மீது தாக்குதல் நடத்தி முன் கண்ணாடியை நொருக்கினர். மோட்டார் சைக்கிளை இடித்து வீழ்த்தினர். ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கின. காலையில் அமைச்சர் நேருவின் காரை வழிமறிந்த தி.மு.க.வினரை பொலிசார் கைதுசெய்து காவலில் வைத்திருந்தனர். கே.என். நேரு ஆதரவாளர்கள் பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்து காவலில் வைக்கப்பட்டிருந்த திருச்சி சிவா ஆதரவு தி.மு.க. வினர் மீது தாக்குதல் நடத்தினர். இதைத் தடுக்க முனைந்த ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் கையில் முறிவு ஏற்பட்டது.

திருச்சி அரசியலில் இச்சம்பவம் அனலைக் கிளப்பியது. ஒரே கட்சியைச் சேர்ந்த இரு முக்கியஸ்தர்கள் வெளிப்படையாக மோதிக்கொள்வதாகவும் இதைக் கட்டுப்படுத்த முடியாமல் தலைமை தடுமாறுவதாகவும், தி.மு.க ஆட்சிக்கு வந்தாலேயே ரவுடிகளின் கொட்டம் என்பதே வழமையாகிவிட்டதாகவும் கருத்துகள் வெளியாகின.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று நான் ஏற்கனவே சொல்லிவருகிறேன். சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்? பொலிஸ் நிலையத்தில் புகுந்து ரவுடிகள் தாக்குகின்றனர், பொலிஸ் நிலையத்திலேயே பொலிஸ் பெண் காவலருக்கு பாதுகாப்பு இல்லை என்றாகிவிட்ட பின்னர் மக்களுக்கு என்ன பாதுகாப்பு கிடைக்கும்! என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் தன் கச்சேரியை ஆரம்பிக்க, மறுபுறம் ஸ்டாலினை நார் நாராகக் கிழிக்க ஆரம்பித்தார் நாம் தமிழர் சீமான்! ரவுடியிஸமும் பொலிசாரை பொலிஸ் நிலையம் புகுந்து தாக்குவதும்தான் திராவிட மொடல் ஆட்சியா? என அவர் கேட்க ஆரம்பித்தார்.

தி.மு.க பதவிக்கு வந்து பல முன்னேற்றகரமான விஷயங்களையும் சாதாரண மக்களுக்கு நன்மைகளையும் செய்துவருவது உண்மையானாலும், உட்கட்சி மோதல்கள் வலுத்துவருவதாகவும், கோஷ்டி மோதல்கள் மாவட்டங்களில் நிகழ்வதாகவும் வரும் தகவல்கள் ஸ்டாலினுக்கு தலைவலியை ஏற்படுத்தி வருகின்றன.

இக்குழப்பங்களை நினைத்தால் இரவில் எனக்கு தூக்கம் வருவதில்லை. விடிந்தால் எத்தனை பிரச்சினைகளை கழகத்தினர் கொண்டு வருவார்களோ என்று சங்கடப்படுகிறேன் என்று கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் சமீபத்தில் ஸ்டாலின் கூறவும் செய்தார். உட்கட்சிப் பிரச்சினையால் தூக்கம் இல்லை என்று ஒரு நிர்வாகி சொல்லலாமா என்கிறது எதிர்த்தரப்பு!

1967 முதல் ஆட்சிக் கட்டிலில் அவ்வப்போது ஏறி இறங்கும் பிரதான கட்சி என்ற வகையில் தி.மு.க.வில் உட்கட்சிப் பிரச்சினைகள், போட்டி பொறாமைகள் இருக்கத்தான் செய்யும். அவற்றை அவ்வப்போது தீர்த்து வைப்பதும், பிரச்சினைகளை சமாதானப்படுத்தி வைப்பதும்தான் தலைவர்களின் வேலை. இது எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானது. அண்ணா காலத்திலேயே ஈ.வே.கி. இளங்கோவனின் (ஈரோடு சட்டமன்ற தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்) தந்தையார் ஈ.வே.கி சம்பத் தி.மு.கவில் இருந்து பிரிந்து சென்றார். எம்.ஜி.ஆரும் கலகக் குரல் எழுப்பி பிரிந்து சென்றார். கருத்து முரண்பாடுகள், பிணக்குகள் ஏற்படுவது சகஜமே. கலைஞர் கருணாநிதி இப்பூசல்களை லாவகமாகக் கையாள்வார் என்றும் கடுமையாக பேசுதல், பதவிகளை பறித்தல், கட்சியில் இருந்து நீக்குதல் என நடவடிக்கைகளை தயவுதாட்சணியமின்றி செய்யக்கூடியவர் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஸ்டாலினின் கவனத்துக்கு இச்சம்பவம் போனதும் தலையில் கைவைத்துக் கொண்டாராம்! ஏனெனில் பூசல்கள், பிணக்குகள் தெரிந்த விடயம் என்றாலும் ஒருவரின் வீடு புகுந்து தாக்குவதும், பொலிஸ் நிலையத்தில் நுழைந்து தாக்குவதும் அநேகமாக இதுவே முதல்முறை.

இச்சம்பவம் நடைபெற்ற மறுதினம் 16ஆம் திகதி பஹ்ரேனில் இருந்து நேரடியாகவே திருச்சி வந்திறங்கினார் திருச்சி சிவா. விமான நிலையத்தில் வந்திருந்த ஊடகவியலாளர்களிடம், தான் களைத்திருப்பதாகவும், வருத்தத்தில் இருப்பதாகவும் எனவே இச்சம்பவம் பற்றி பேசும் நிலையில் தான் இல்லை என்றும் கூறியதோடு, பின்னர் உங்களை சந்திக்கிறேன் என்று கூறி விடைபெற்றார். வீட்டுக்குச் சென்று நிலைமைகளை பார்வையிட்டார். திருச்சியின் நம்பர்வன் பிரமுகர்களில் ஒருவராகவும் பாராளுமன்ற நீண்டகால உறுப்பினராகவும் விளங்கும் எனக்கே இப்படியா? என்ற மலைப்பிலும் வருத்தத்திலும் அவர் ஆழ்ந்துள்ளார் என்பதை அவரது முக பாவனைகளே பறைசாற்றின.

தி.மு.க தலைமைக் கழகம் முதல் நடவடிக்கையாக கே.என். நேருவின் நெருங்கிய ஆதரவாளர்களான திருச்சி தி.மு.க பிரதிச் செயலாளர் திருப்பதியை கைது செய்ய வைத்தது. திருச்சி மத்திய தி.மு.க. செயலாளர் கஜமலை விஜய், மாவட்ட தி.மு.க. செயலாளர் டி. முத்து செல்வம், மாவட்ட பொருளாளர் எஸ். துரைராஜ், 55 வது வட்டச் செயலாளர் வி. ராமதாஸ் ஆகியோர் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர். அடுத்ததாக தமிழக முதல்வர் நேருவுடனும் திருச்சி சிவாவுடனும் தனித்தனியாக பேசினார். தி.மு.க. ஆட்சி பற்றி குற்றங்களையும் குறைகளையும் எதிர்க் கட்சியினர் தேடிக்கொண்டிருக்கும் போது இவ்வளவு மோசமாகும் அளவுக்கு ஆதரவாளர்களை வளர்த்துவிட்டீர்களே எனக் கடிந்துகொண்டதாகத் தகவல்.

ஈரோடு இடைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக் கட்சியான காங்கிரசுக்கு அமோக வெற்றி என்பது தி.மு.க மீதான மக்கள் அபிமானத்தில் மாற்றம் இல்லை என்பதை உறுதிசெய்தாலும் எடப்பாடி படனிச்சாமி, பா.ஜ.க. அண்ணாமலை மற்றும் நாம் தமிழர் சீமான் ஆகியோர் தி.மு.க ஒரு ஊழல் கட்சி, ரவுடிக் கட்சி மற்றும் குடும்பக் கட்சி என்பதை திரும்பத் திரும்ப மக்கள் மனதில் பதிய வைப்பதில் மும்முரமாக இருக்கிறார்கள். ஸ்டாலின் திறமையற்றவர், நல்ல நிர்வாகி அல்ல, அவரால் கட்சியையே தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியாதவர் என்ற மற்றொரு கருத்தை உருவாக்குவதிலும் எடப்பாடியும் அண்ணாமலையும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அவர் அமைச்சரவையை மாற்றி அமைக்கக்கூட திராணியற்றவர். உட்கட்சி பூசல்களைக் கூட கையாளத்தெரியாதவர் என்பதால்தான் கே.என். நேருவும் திருச்சி சிவாவும் பகிரங்கமாக திருச்சியில் மோதிக்கொண்டார்கள்! என்று இவர்கள் புதிய தாக்குதலை ஆரம்பித்திருப்பது ஸ்டாலினுக்கு தலைவலியாக அமைந்திருக்கிறது.

திருச்சி சம்பவத்துக்கு நீங்கள் தான் காரணம் என்பதால் நீங்களே தான் இதை முடித்து வைக்க வேண்டும் என்று சென்னையில் இருந்து கே.என். நேருவிடம் ஸ்டாலின் கறார் காட்டினார். உண்மையைச் சொன்னால் மதுரையில் என் அனுமதியின்றி ஒரு துரும்புகூட அசையாது என ஒரு சமயத்தில் மதுரையை ஆட்டிவைத்த மு.க. அழகிரியின் வாயை ஒட்ட நறுக்கிவைத்தவர் அழகிரியின் தந்தையான கலைஞர் கருணாநிதிதான். மகன் பாசத்தைவிட கட்சியே முக்கியம் எனக் கருதுபவர் கலைஞர். மதுரையை அழகிரி தன் கைவசம் வைத்திருருந்தது போலத்தான் திருச்சியை நேரு தன் வசம் வைத்திருப்பதாக சொல்கிறார்கள். அதனால்தான் நேருவுக்கு நெருக்கமானவர்களை கடசியில் இருந்து இடைநீக்கம் செய்ததோடு ஒருவரை காவலில் வைக்கவும் உத்தரவிட்டாராம் ஸ்டாலின்.

ஸ்டாலினின் உத்தரவையடுத்து 17ஆம் திகதி காலையிலேயே திருச்சி சிவாவின் வீட்டுக்குச் சென்றார் கே.என். நேரு. இருவரும் சுமார் ஒரு மணித்தியாலம்வரை மனம்விட்டுப் பேசினார்கள். தான் திருச்சிக்கு வரும்போது தனது ஆதரவாளர்கள் பல்வேறு விழாக்களில் கலந்துகொள்ளுமாறு கேட்பார்கள் என்றும் அவை என்னவென்று தெரியாமலேயே அவற்றில் கலந்துகொள்வது வழக்கம் என்றும் கூறியுள்ள அவர், இந்த மைதான திறப்பு விழாவும் அவ்வாறான ஒன்றுதான் என தன்னிலை விளக்கம் அளித்தார் கே.என். நேரு.

(19 ஆம் பக்கம் பார்க்க)

அருள் சத்தியநாதன்...

# தன்னை மாற்றிக் கொள்ள வாய்ப்பு வழங்கும் ரமழான் நோன்பு



இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமான ரமழான் மாதம் அடுத்த வாரம் ஆரம்பிக்கிறது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஒரு மாதம் என்பது 29 நாட்கள் அல்லது 30 நாட்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. வருடம் என்பது 12 மாதங்கள் எனவும் முஸ்லிம்களின் வழிகாட்டியான அல் குர்ஆன் குறித்துக் காட்டியுள்ளது. மாதத்தின் முதல் நாள், பிறை வானில் தென்படுவதை வைத்து கணிக்கப்படுகிறது. பிறை தென்படாதவிடத்து முந்தைய மாதம் 30 நாட்களாகக் கணிக்கப்பட்டு புதிய மாதம் தீர்மானிக்கப்படுகிறது. இந்த வகையில் முதல் பிறை வானில் தென்பட ஆரம்பிக்கின்ற மாலைப் பொழுதிலிருந்தே முஸ்லிம்கள் நாளின் ஆரம்பத்தைக் கணிப்பிடுகின்றார்கள். சந்திரனை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட நாட்காட்டி தற்போது புழக்கத்தில் இருக்கும் கிரகோரியன் நாட்காட்டியை விட 11 நாட்கள் குறைவானதாகும். இதனால் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் பல்வேறு பருவ சூழ்நிலைகளிலும் நோன்பிருப்பதற்கான அவகாசம் கிடைப்பது இதன் சிறப்பம்சமாகும்.

ரமழான் மாதத்தின் தலைப்பிறை தென்படுவதை வைத்து முஸ்லிம்கள் நோன்பை ஆரம்பிக்கின்றார்கள். முஸ்லிம்கள் கடைபிடிக்க வேண்டிய ஐந்து கட்டாயக் கடமைகளில் நோன்பு நான்காவது கடமையாகும். ரமழான் மாதத்தில் நோன்பிருக்க வேண்டும் என்பது அல் குர்ஆன் ஊடாக இறைவன் வகுத்த விதியாகும். இது தொடர்பில் தனது இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவன் கூறும் போது, உங்களுக்கு முன்பிருந்த சமூகங்களின் மீது கடமையாக்கப்பட்டது போலவே உங்களது சமூகத்தின் மீதும் நோன்பு கடமையாக்கப்படுகிறது என்று கூறுகிறான். இறுதித் தூதராக முஹம்மத் நபியவர்கள் அனுப்பப்படுவதற்கு முன்னர் அனுப்பப்பட்ட நபி மூஸா (மோசஸ்) வின் சமூகமான யூதர்கள் 10 நாட்கள் நோன்பு அனுஷ்டிப்பவர்களாக இருந்தார்கள். நபி ஈஸா (யேசு) வின் சமூகமான கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கும் நோன்பு பற்றி பைபிளில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொடரிலேயே முஸ்லிம் சமூகத்தின் மீதும் நோன்பை விதியாக்கியதாக இறைவன் அல் குர்ஆனிலே குறிப்பிடுகின்றான். உலகில் எந்த மூலையில் ஒரு முஸ்லிம் இருந்தாலும் அவர்கள் அனைவருமாக ரமழான் மாதத்தில் நோன்பின் மூலமாக தமது சமூகத்துடன் இணைந்து கொள்கிறார்கள்.

நோன்பு நோற்பதன் மூலம் நீங்கள் இறையச்சம் உடையவர்கள் ஆகலாம் என அல்குர்ஆன் கூறுகிறது. இறையச்சம் என்பது வாழ்வின் அடிப்படையாகும். ரமழான் மாதத்தில் நோன்பு கடமையாக்கப்பட்டதற்கு அந்த மாதத்திலேயே அல் குர்ஆன் உலகுக்கான வழிகாட்டியாக இறக்கப்பட்டது என்பதனையும் காரணமாகக் காட்டுகிறார்கள். அல் குர்ஆனின் ஆரம்ப அத்தியாயத்தின் முதலாவது வசனத்திலே இந்த வேதநூல் இறையச்சம் உடையவர்களுக்கு நேர்வழியைக் காட்டும் என்று சொல்கிறது. ஆகவே ஒருவர் நேர்வழி பெற வேண்டுமாக இருந்தால் அவர் இறையச்சம் உடையவராக இருக்க வேண்டும். இறையச்சம் உடையவராக வேண்டுமானால் அவர் நோன்பிருக்க வேண்டும் என்பது தான் அல் குர்ஆனின் வழிகாட்டலாக அமைகிறது.

முஸ்லிம்களிடத்தில் நோன்பு என்பது அதிகாலையில் சூரியன் அஸ்தமித்தது முதல் மாலையில் சூரியன் மறையும் வரையுமான காலத்தில் இரைப்பைக்கு ஓய்வு கொடுத்து உண்ணாமல் பருகாமல் இருப்பதாகும். இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் உள்ளவர்கள் 12 முதல் 14 மணித்தியாலங்களும், மத்திய கிழக்கில் உள்ளவர்கள் 14 அல்லது 15 மணித்தியாலங்களும் ஆபிரிக்காவில் உள்ளவர்கள் 13 அல்லது 14 மணித்தியாலங்களும் வட மற்றும் தென் அமெரிக்கர்கள் 11 முதல் 13 மணித்தியாலங்களும் அவர்களிலும் கனடா மற்றும் அமெரிக்க நாட்டவர்கள் 15 அல்லது 16 மணித்தியாலங்களும் ஐரோப்பியர்கள் 16 முதல் 17 மணித்தியாலங்களும் இவ்வருடம் நோன்பு நோற்கிறார்கள். நோன்பிருக்கும் இந்த வேளைகளில் அவர்கள் தமக்கு ஆகுமான உண்ணுவதும் பருகுவதும் போன்ற விடயங்களையும் இறைவனின் கட்டளைக்காக தவிர்ந்து கொள்கிறார்கள். பசியும் தாகமும் தாங்க முடியாத நிலையில் அவர்கள் தனிமையில் இருந்தாலும் அவர்கள் உண்ணவும் பருகவும் மாட்டார்கள். யாரும் பார்க்காவிட்டாலும் இறைவன் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற அச்சமே அது. இந்த இறையச்சத்தைத் தான் நோன்பினூடாக இறைவன் ஏற்படுத்த விளைகிறான்.

இதன் மூலமாக மனிதன் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளும் சுய கட்டுப்பாட்டுக்குப் பழக்கப்படுகிறான். ஏனைய நாட்களிலும் பசியும் தாகமும் வந்தாலும் தனது பசியைப் போக்கிக் கொள்வதற்காக அடுத்தவனுடைய உணவைப் பறித்துண்ணுவதற்கு அவன் விளைய மாட்டான். அதனை விட இறைவனுடைய அன்பை எதிர்பார்த்து பசித்திருப்பது சிறந்தது என்ற உணர்வுக்கு அவன் பழக்கப்படுகிறான்.

இதேபோல நோன்பிருக்கும் நேரங்களில் பாவங்களில் இருந்து தவிர்ந்து கொள்ளுமாறு அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது. இது மனிதன் செய்யும் பெரும்பாவங்களுக்கு அப்பால் புறம் பேசுதல், வீணான விடயங்களில் நேரத்தைக் கழித்தல் போன்ற சிறிய விடயங்களில் இருந்தும் தவிர்ந்து கொள்ளுமாறு நோன்பாளிகளுக்கு ஏவப்பட்டிருக்கிறது. இது போன்ற விடயங்களில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கான முப்பது நாள் பயிற்சியின் மூலம் ஒருவர் ஏனைய காலங்களிலும் தீமையான மற்றும் பாவமான விடயங்களில் இருந்து விலகி இருப்பதற்கு முடியுமாகிறது.

நோன்பிருக்கும் காலங்களில் இறைவனுடனான நெருக்கத்தை அதிகரிக்கச் செய்யும் விடயங்களில் ஈடுபடுவதற்கு நோன்பாளி தூண்டப்படுகின்றான். இறைவனின் வசனங்கள் அடங்கிய அல் குர்ஆனுடனான தொடர்பை அதிகரித்தல், இரவு நேரங்களில் தொழுகையில் ஈடுபடுதல், நடுநிசியில் தனித்திருந்து இறைவனுடன் உறவாடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளல் என இறைவனுடனான நெருக்கத்தை அதிகரிக்கும் விடயங்களில் நோன்பாளி தன்னை ஈடுபடுத்திக் கொள்வான். தன்னைப் படைத்து பரிபாலித்து போஷித்து வரும் தனது இறைவனுடன் ஏற்படுத்திக் கொண்ட நெருக்கம் நோன்பாளியை முன்னரை நம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ள வைக்கிறது. எந்நேரமும் தனது இறைவன் தனக்குப் பாதுகாப்பளிக்கவும் வழிகாட்டவும் துணை நிற்கிறான் என்ற அபாரமான துணிச்சலை அது அவனுக்கு வழங்குகிறது. வாழ்க்கையை நேர் மறையாக எதிர்கொள்வதற்கான ஆற்றலை அவன் இதனூடாகப் பெறுகின்றான்.

நோன்பு மாற்றத்தின் துவக்கப் புள்ளியாகவும் ஒருவனுக்கு அமைந்து விடுகிறது. பகலில் பசித்தும் தாகித்துமிருப்பதால் தன்னால் வேலை செய்ய முடியாது, தன்னால் பிரயாணம் செய்ய முடியாது என்றிருந்த எடுகோள்களை எல்லாம் அவனால் மாற்றிக் கொள்ள முடிகிறது. இரவிலே விழித்திருந்து பணியாற்றவும் முடியும் என்ற மாற்றுச் சிந்தனையை அது மனிதனுக்கு வழங்குகிறது. நோன்பு காலங்களில் மனிதன் தனது வாழ்க்கை வட்டத்தையே மாற்றிக் கொள்கிறான். உண்பதற்குப் பழக்கப்படாத அதிகாலை வேளையில் எழுந்து சாப்பிடுகிறான். பகலிலே பழகிப் போன உணவுப் பழக்க வழக்கங்களை விட்டு ஒதுங்கிக் கொள்கிறான். நடுநிசியில் எழுந்திருக்கிறான். கொஞ்சமாகவே தூங்குகிறான் என தனது மொத்த வாழ்க்கை வட்டத்தையுமே அவன் மாற்றிக் கொள்கிறான். இதனால் மாற்றமொன்றுக்கு தன்னை உள்ளாக்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை மனிதன் பெறுகிறான்.

இவற்றுக்கும் மேலதிகமாக நோன்பு தரும் உடல்ரீதியான நன்மைகளைப் பற்றி மருத்துவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த அனைத்து நன்மைகளையும் அடக்கியதாக இந்த முறை ரமழான் எங்களை வந்தடைந்திருக்கிறது. நெருக்கடியான சந்தர்ப்பங்களில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான பயிற்சிக் களமாகவும், ரமழான் தூண்டுகின்ற அடுத்தவர்களுக்கு உதவி செய்வதை அதிகரிப்பதற்கான காலமாகவும் நாம் இதனை அமைத்துக் கொள்ள முடியும்.

பியாஸ் முஹம்மத்...

## ஹரக் கடா(ta), குடு சலிந்து

# மடகஸ்கரிலிருந்து அழைத்துவரப்பட்ட கடத்தல்காரர்கள்





### பாராட்டப்பட வேண்டிய பொலிஸ் அதிகாரிகளின் சவாலான பயணம்

வெளிநாடொன்றிலிருந்து மிகப் பெரிய சமூகவிரோத பாதாள, போதைப் பொருள் குற்றாவாளிகளை தப்பிச் செல்ல இடமளிக்காது இலங்கைக்கு அழைத்துவருவது என்பது மிகவும் ஆபத்தான சவாலான விடயமாகும். அந்தவரிசையில் தென்மாகாணத்தை இலக்காக கொண்டு இலங்கையில் மிகப்பெரிய போதைப்பொருள் வலையமைப்பொன்றை நிர்வாகித்து வந்த ஹரக் கடா என அழைக்கப்படும் நந்துன் சிந்தக விக்கிரமரத்ன மற்றும் குடு சலிந்து எனப்படும் சலிந்து மல்ஷித குணரத்ன ஆகிய இரு பாதாள உலகக் குற்றவாளிகளை மடகஸ்கரிலிருந்து இலங்கைக்கு அழைத்துவந்தமை இலங்கை பொலிஸாருக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். இதற்கு முன்னரும் மகடுரே மதுஷ்கா, வெலேசுதா போன்ற பாதாள உலக குற்றவாளிகளை வெளிநாடுகளிலிருந்து குற்றத்தடுப்பு பிரிவினர் அழைத்துவந்த சம்பவங்களை இங்கு குறிப்பிடமுடியும்.

ஹரக் கடா(ta), குடு சலிந்து இருவரையும் மடகஸ்காரிலிருந்து 48 மணிநேரம் கைவிலங்குகளின்றி மூன்று விமானங்களில் அழைத்துவருவது என்பது கடினமான பயணமாகவே குற்றத்தடுப்பு பிரிவினருக்கு இருந்தது.

ஹரக் கடா(ta), குடு சலிந்து என்ற போதைப்பொருள் கடத்தல்காரர்களை இலங்கைக்கு அழைத்து வருவது என்பது திட்டமிட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சூட்சுமமான ஒரு நடவடிக்கையாக இருந்தது. ஏனெனில் அவர்கள் சர்வதேச ரீதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சர்வதேச கடத்தல்காரர்கள். அதனால் இந்த இரண்டு குற்றவாளிகளும் வழியில் தப்பிக்க நிறைய வாய்ப்புகள் இருந்தன. எனவே மடகஸ்கரிலிருந்து இவர்களை இலங்கைக்கு அழைத்து வந்து விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் வரை பசி உறக்கமின்றி காவல் காத்தனர்.

மிகப்பெரிய பணக்கார பிரபுவாக தன்னை காட்டிக்கொண்ட, ஹரக் கடா பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி துபாயிலிருந்து மடகஸ்கருக்கு ஜெட் விமானத்தில் சென்றுள்ளார். இது தாவூத் இப்ராஹிமைப் பின்தொடர்ந்து வந்த பயணமாக குறிப்பிடப்படுகின்றது. தாவுத் இப்ராஹிம் என்பவர் இந்தியாவைத் துரத்தும் பாதாள உலகப் பலம் வாய்ந்த தலைவன். குடு சலிந்து தனது மனைவி மற்றும் சுத்தா, தரங்கா போன்ற குழுவினருடனே மடகஸ்கருக்கு வந்துள்ளார். சுத்தாவும் தரங்காவும் பாணந்துறை வைத்தியசாலையில் அம்புலன்ஸ் மீது துப்பாக்கிச் சூடு உட்பட பல குற்றங்களுடன் தொடர்புடையவர்கள். இருவரும் குடு சலிந்துவின் சீடர்கள்.

ஹரக் கடா(ta) விருந்தொன்றில் கலந்து கொள்ளவதற்காவே மடகஸ்கருக்கு வந்ததாக கூறப்படுகிறது. பிறந்தநாள் நிகழ்வு என்றே அது கூறப்படுகிறது. மடகஸ்காரில் தங்கியிருந்த குடு சலிந்துவே இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளார். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின்படி, மடகஸ்காரில் குடு சலிந்து திருமணம் முடித்து ஒன்றரை வயது குழந்தையும் இருப்பதாக கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் குடு சலிந்து துபாயில் தங்கியிருப்பதாகக் கூறப்பட்டது, ஆனால் உண்மையில் குடு சலிந்து மடகஸ்காரிலேயே தங்கியிருந்துள்ளார். ஹரக் கடா தனது போதைப்பொருளுடன் துபாய் செல்வதற்காக மடகஸ்காரிலுள்ள இவாடோ சர்வதேச விமான நிலையத்திற்கு குடு சலிந்துவுடன் வந்த போதே, கடந்த மார்ச் முதலாம் திகதி மடகஸ்கர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். ஹரக் கடா, மடகஸ்கார் நாட்டிற்குள் நுழைந்தது முதல் மடகஸ்கர் பொலிஸார் கண்காணித்து வந்துள்ளனர். சர்வதேச பொலிஸாரின் ஊடாக இந்நாட்டு அதிகாரிகளுடன் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றத்தின் பின்னரே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹரக் கடா மற்றும் குடு சலிந்து கைது செய்யப்பட்டதை சர்வதேச பொலிஸார் உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு அறிவித்ததையடுத்து, இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை குற்றப்புலனாய்வு பிரிவினர் மிகவும் இரகசியமாகவே மேற்கொண்டனர். அதற்கு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸாருக்கு பெரும் பலமாக இருந்தார். அமைச்சரின் தலையீட்டில் ஹரக் கடா மற்றும் குடு சலிந்து ஆகிய இருவரையும் இலங்கைக்கு கொண்டு வருவதற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அதுமட்டுமின்றி மடகஸ்கர் காவல்துறைக்கு பொறுப்பான அமைச்சருடன் அமைச்சர் டிரான் அலஸ் தொலைபேசியில் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொண்டமை குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு பெரும் உதவியாக விருந்தது.

இதன்படி கடந்த 11ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த நால்வர் அடங்கிய பொலிஸ் விசேட குழுவொன்று

ஹரக் கடா(ta), குடு சலிந்து ஆகிய இருவரையும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு மடகஸ்கார் நோக்கி புறப்பட்டது. இக்குழுவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பிரதான பொலிஸ் பரிசோதகர், விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் அடங்குவர். இக்குழுவினர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் வரை இக்குழுவில் பங்கேற்கும் பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் தொடர்பில் இரகசியம் பேணப்பட்டது.

நான்கு பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் கடந்த 11 ஆம் திகதி இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு முதலில் இந்தியாவின் மும்பைக்கு சென்றனர். பின்னர் மும்பை விமான நிலையத்திலிருந்து எத்தியோப்பியாவுக்கு அடுத்த விமானத்தில் பயணித்தனர். அதனைத்தொடர்ந்து எத்தியோப்பியாவிலிருந்து விமானம் மூலம் மடகஸ்கரில் காலடி எடுத்து வைத்தனர்.

இலங்கை பொலிஸ் குழு மடகஸ்கருக்குச் சென்றபோதும், பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிக்க ஹரக் கடா மற்றும் குடு சலிந்து பல முயற்சிகளை மேற்கொண்டனர். அதற்காக மடகஸ்கார் நாட்டு காவல் துறை அதிகாரிகளுக்கு 600,000 அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு தயாராகினர். எனினும் மடகஸ்கர் காவல்துறை அதற்கு தலைவணங்கவில்லை. குற்றவாளிகளை தப்பிக்க இடமளிக்கக்கூடாது என்பதில் உறுதியாகவிருந்தனர். அதனால் ஹரக் கடா, குடு சலிந்து ஆகியோருக்கு இவ்விடயத்தில் சுதந்திரம் இருக்கவில்லை. மடகஸ்கர் பொலிஸார் இருவரையும் பாதுகாப்பான இடமான்றில் தடுத்து வைத்திருந்தனர். அது மட்டுமின்றி

அவர்களை அந்த இடத்திலிருந்து விடுவிப்பதற்காக இலங்கையைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் குழுவொன்று கூட ஏற்கனவே மடகஸ்கருக்குச் சென்றிருந்தது. அந்த சட்டத்தரணிகள் குழுவில் இரண்டு பெண் சட்டத்தரணிகளும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் யார் என்பது தொடர்பில் இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை. இருப்பினும் அந்நாட்டு சட்டம் கடுமையாகவிருந்தமையால் இருவரையும் அங்கிருந்து அழைத்துச் செல்ல அவர்களால் முடியவில்லை.

மடகஸ்காரில் தடுத்து வைக்கப்பட்ட ஹரக் கடா மற்றும் குடு சலிந்து என்ற இருவரையும் அழைத்துவருவதற்காக இலங்கையிலிருந்து சென்ற பொலிஸ் குழு கடந்த 12ஆம் திகதி மடகஸ்காரில் தரையிறங்கியது. அன்று அங்குள்ள ஒரு ஹோட்டலில் இரவைக் கழித்த அவர்கள், 13ஆம் திகதி சில விசேட நபர்களைச் சந்தித்தனர். அவர்களில் அந்நாட்டின் பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் மற்றும் நீதித்துறைக்கு பொறுப்பான அமைச்சர் ஆகியோர் அடங்குவர். அங்கு நடந்த கலந்துரையாடலின் போது ஹரக் கடா,குடு சலிந்துவை விமானத்தில் கொண்டு வந்து இலங்கை பொலிஸ் குழுவிடம் ஒப்படைக்க இணக்கம் காணப்பட்டது. முன்கூட்டியே தீட்டப்பட்ட திட்டத்தின்படி மடகஸ்கரிலிருந்து இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் இந்தப் பயணத்திற்குத் தயாராக இருந்தனர். மடகஸ்கரிலுள்ள அன்டனானரிவோ சர்வதேச விமான நிலையத்திற்கு, அந்நாட்டு காவல்துறையினரின் பலத்த பாதுகாப்புடன், ஹரக் கடா மற்றும் குடு சலிந்து ஆகியோர் கொண்டு வரப்பட்டனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)



வசந்தா அருள்ரட்ணம்...

## மடகஸ்கரிலிருந்து சாதுர்யமாக... (18ஆம் பக்க தொடர்)

அவர்கள் விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்ட போது அந்த நாட்டின் பொலிஸ் குழுவொன்றும் விமான நிலைய வளாகத்தில் இருந்துள்ளது. இதன்போது விமான நிலைய வளாகத்திற்கு கொண்டு வரப்பட்ட ஹரக் கடா மற்றும் குடு சலிந்து ஆகியோர் அந்நாட்டுகாவல்துறையினருடன் மோதிக்கொண்டனர். இலங்கைக்கு அழைத்துச் செல்லப்படுவதைத் தடுக்கவே அவர்கள் அவ்வாறு நடந்துகொண்டனர். அதுமட்டுமின்றி அங்கு வைத்து இலங்கை மாஃபியா என்று கூறி கோஷமிட்டு பயணிகளை பயமுறுத்தி விமானத்தில் ஏற்றப்படுவதை தடுக்க முற்பட்டனர். மடகஸ்கர் காவல்துறை அதிகாரிகளையும், அந்நாட்டு மக்களையும் கேவலப்படுத்தும் வகையில் ஆங்கிலத்தில் அறிக்கைகளை வெளியிட்டனர். அங்கு மக்களைத் தூண்டிவிட்டு, பெரும் மோதலை உருவாக்குவது அவர்களின் நோக்கமாகவிருந்தது. இவ்வாறு விமான நிலையத்தில் பெரும் அட்டகாசம் புரிந்த ஹரக் கடா மற்றும் குடு சலிந்து ஆகியோர் இறுதியாக இந்நாட்டிலிருந்து வந்த பொலிஸ் குழுவின் தலையீட்டினால் கட்டுப்படுத்தப்பட்டனர். இதனையடுத்து இவர்கள் விமானத்தில் ஏற்றப்பட்டனர். ஆனால், விமானத்திலிருந்து குதிக்கப் போவதாகவும் கோஷமிட்டுள்ளனர். எனினும் பயணத்தின் போது, விமான நிலையத்தினரிக் நிபந்தனைக்கமைய குற்றவாளிகளுக்கு கைவிலங்கிட அனுமதிக்கப்ப டவில்லை. இதனால் சிறப்பு பாதுகாப்பு முறையைப் பின்பற்றி விமானத்தில் ஹரக் கடா மற்றும் கு டு சலிந்து ஆகியோரை அழைத்து வர வேண்டியிருந்தது. மடகாஸ்கரிலிருந்து கென்யா வழியாக விமானம் சென்றது.

கென்யாவின் நைரோபி சர்வதேச விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கிய பிறகு, அடுத்த பயணம் கென்யாவிலிருந்து இந்தியாவின் மும்பைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நைரோபியில் தரையிறங்கிய சுமார் 10 மணி நேரத்திற்குப் பிறகு கென்யாவின் நைரோபியில் இருந்து விமானம் புறப்படத் தயாரானது. இதன்போது சர்வதேச தொடர்புகள் மூலம் ஹரக் கடா மற்றும் குடு சலிந்து ஆகியோருக்கு விமான நிலையத்தில் சிறப்பு பாதுகாப்பை பெற முடிந்தது. இக்காலப்பகுதியில் அவர்களை தனி அறையில் வைக்க திட்டமிடப்பட்டது. எனினும் அவர்கள் அதற்கு ஒத்துழைக்கவில்லை. தனி அறைக்குள் அடைத்து வைத்தால் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டினர். கடும் எதிர்ப்பை வெளியிட்டனர் . இதனால் விமான சேவை நிலைய வளாகத்தில் உள்ள நாற்காலிகளில் அவர்களை அமர வைக்க வேண்டிய தேவை அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. நைரோபியிலிருந்து மும்பை செல்லும் விமானம் திட்டமிட்டபடி நைரோபி விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது. ஆனால் கடைசி சில நிமிடங்களில் பாதுகாப்பு அனுமதி தொடர்பாக எழுந்த சிக்கல்களினால் குற்றவாளிகளை விமானத்தில் ஏற்றுவதற்கு விமான சேவை நிறுவனம் ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் அந்த விமானத்தில் திட்டமிட்டப்படி செல்ல முடியவில்லை.

இதனையடுத்து விமான நிலையத்திலிருந்து சுமார் 8 மணிநேரத்துக்கு பின்னரே மும்பைக்கு திரும்பும் மற்றுமொரு விமானம் இருந்தது. அதனால் அதுவரை அங்கு காத்திருந்தனர். அந்த விமானத்தில் பயணிக்க விமான டிக்கெட்டுகள் ஏஜென்சிகளுடனான உறவின் மூலம் கொழும்பிலிருந்தே ஒதுக்கப்பட்டன. இக்காலப் பகுதியில் கழிப்பறை, உணவு, பானம் என்பனவும் விசேட கண்காணிப்பின் கீழ் வழங்கப்பட்டது. அவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் செய்துகொடுத்து அடுத்த விமானம் வரும் வரை பாதுகாக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அதிகாரிகள் குழுவினருக்கு இருந்தது. இதன்போது, ஹரக் கடா மற்றும் குடு சலிந்து ஆகியோர் தங்களை அழைத்துச் செல்லும் அதிகாரிகள் யார் என்பதை அடையாளம் கண்டு கொண்டனர். "ஏன் சார் எங்களை இலங்கைக்கு அழைத்துச் செல்கிறீர்கள்? நாங்களும் வாழ விரும்புகிறோம் 'என அதிகாரிகளை பார்த்து கேட்டனர். எனினும் அதிகாரிகள் இது எதை யும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. நைரோபியிலிருந்து மும்பை செல்லும் அடுத்த விமானத்தில் ஓரிரு மணி நேரத்தில் ஏறி, 14ஆம் திகதி அதிகாலை இலங்கையில் தரையிறங்குவது தான் அசல் திட்டமாகவிருந்தது. எனினும் கென்யாவின் நைரோபியில் திட்டமிட்டப்படி விமானத்தில் ஏற முடியாமல் போனமையால் மீண்டும் அனைத்து திட்டங்களும் மாறின. அதனால்தான், இந்தியாவின் மும்பை விமான நிலையத்தில், பயணிகள் முனையத்திலுள்ள சில நாற்காலிகளில் ஹரக் கடா மற்றும் குடு சலிந்து ஆகியோரை அமர வைத்து பாதுகாப்பு அளிக்கும் வகையில் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியேற்பட்டது. எதுஎப்படியோ ஒருவழியாக மும்பையிலிருந்து இலங்கைக்கு வருவதற்கு விமானத்தில் ஏறினர்.

எனினும் அங்கும் விமானத்தில் ஏறிய பயணி ஒருவர் உடல் நலக்குறைவால் விமானத்திலேயே இறந்துவிட்டமையால் ஒரு மணிநேர தாமதம் ஏற்பட்டது. எனவே, சுமார் ஒன்றரை மணி நேர தாமதத்திற்குப் பிறகு மும்பையிலிருந்து இலங்கைக்கு விமானம் புறப்படுகிறது. அதன்படி கடந்த 15ஆம் திகதி அதிகாலை 5.30க்கு இக்குழுவினர் இலங்கையை வந்தடைந்தனர். ஏற்கனவே, போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் கால்நடை கடத்துபவர்களை கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று விமான நிலைய வளாகத்திற்கு வந்திருந்தது. முதலில் ஹரக் கடா ஓகஸ்ட் 04ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கல்கிசை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பில் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டிருந்த சிவப்பு அறிவித்தலின்படி கைதுசெய்யப்பட்டார். அடுத்ததாக குடு சலிந்து பாணந்துறைக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பாணந்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்ட திறந்த பிடியாணையின் பிரகாரம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பாரிய போதைப் பொருள் மற்றும் கால்நடைகள் கடத்தல்காரர்களான ஹரக் கடா மற்றும் குடு சலிந்து ஆகியோர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் விசேட பாதுகாப்பின் கீழ் கட்டுநாயக்காவிலிருந்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பாதுகாப்பு வாகனங்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் தற்சமயம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளனர். அதாவது 90 நாள் தடுப்பு காவலில் வைக்க நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அவர்களுடன் தொடர்புடைய பாதாள உலக குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் வலையமைப்பு தொடர்பான பல தகவல்களை வெளிச்சத்துக்கு கொண்டுவர முடியுமெனவும் குற்றப்புலனாய்வு பிரிவினர் எதிர்பார்க்கின்றனர்.

## உரசலும் புகைச்சலும்...

(17 ஆம் பக்கத் தொடர்)

ஆர்ப்பாட்டக்காரர்கள், சிவாவின் பெயர் பலகையில் இல்லை என்று தன்னிடம் சொன்னபோது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் கேளுங்கள் என்றுதான் சொன்னதாகவும் அதனபின்னர் வேறு ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக தூர இடம் சென்றுவிட்டதால் சிவாவின் வீடு தாக்கப்பட்டு விவகாரமாகிப் போனது பற்றி தான் எதுவும் அறிந்திருக்கவில்லை என்றும் நேரு, திருச்சி சிவாவை அருகில் வைத்துக்கொண்டே சொன்னார்.

திருச்சி சிவாவும், நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; கட்சியின் வளர்ச்சிக்கும் திருச்சி கழகப் பணிகளுக்குமே முக்கியத்துவம் தருவோம் என்று சமாதானமாகப் பேசினார். தமக்கிடையே எந்தப் பிரச்சினையும் கிடையாது என இருவருமே பூசிமெழுகிவிட்டார்கள்.

முதல்வர் ஸ்டாலினுக்கு தலையிடி தரக்கூடாது, அண்ணாமலை வாய்க்கு அவலாகிவிடக்கூடாது என்ற மட்டத்தில் தமக்குள் சமரசமானதுபோல இருவரும் காட்டிக்கொண்டாலும் திருச்சி கோஷ்டி மோதல்களும் புகைச்சல்களும் அப்படியேதான் இருக்கின்றன நீறுபூத்த நெருப்பாக என்பதே திருச்சி அவதானிகளின் திடமான பார்வையாக உள்ளது.

"கொழும்பிலுள்ள தனியார் கம்பனியின் தலைமை அலுவலகத்திற்கு சுத்தம் செய்பவராக நடுத்தர வயதுடைய உடல் நலமுள்ள பெண் ஊழியரொருவர் தேவை. முன்னைய அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். விண்ணப்பதாரிகள் அவர்களின் சுயதரவுடன் எந்தவொரு வேலை நாளிலும் வருகை தந்து கொழும்பு-12, டாம் வீதி, 280 ஆம் இலக்கத்திலுள்ள மல்வத்த வெலி பெருந்தோட்டங்கள் பிஎல்சி இன் நிருவாகம் மற்றும் பெருந்தோட்டங்களுக்கான நிறைவேற்று பணிப்பாளரை சந்திக்கவும்"

**நிறைவேற்றுப் பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் பெருந்தோட்டங்கள்-**
**மல்வத்த வெலி பெருந்தோட்டங்கள் பிஎல்சி**
**கம்பனி இல.: பிகியு 111**
**280 டாம் வீதி, கொழும்பு-12, இலங்கை**
**தொலைபேசி: பொது +94 11 5388800 - +94 11 5388815**
**மின்னஞ்சல் - goudian@malwatte.lk :- www.malwatte.lk**

## தொண்ணூறாவது ....(02ம் பக்கதொடர் )

கட்டுக்கோப்பும் வித்தியாலய வரலாற்றில் கோடிட்டுக் காண்பிக்கப்பட வேண்டியவை. மாணவியரின் கல்வித்தேர்ச்சி மட்டத்திலும், மனிதநேயப் பண்புகளை வளர்ப்பதிலும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும், தொடர்பாடல் திறன்விருத்தியை ஏற்படுத்துவதிலும் அதிபரின் நேரடிப்பங்களிப்பு மகத்தானது.

உறுதியும், தன்னம்பிக்கையும், அரவணைப்பும் ஒருங்கே இணையப்பெற்ற மகளிர் சமூகத்தை உருவாக்குவதை நோக்காகக் கருதிய செயற்திட்டத்தில் இறைவழிபாடு, சைவவிழுமியங்களைப் பேணுதல் ஆகியவற்றை இலக்காகக் கருதி வித்தியாலயத்தின் பூசை அறை 1939ம் ஆண்டு திருமதி செல்லையாவின் வழிகாட்டுதலில் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை சமய வழிபாட்டு நிகழ்வுகளுடனும், இறை ஆசியுடனும் வித்தியாலயத்தின் அனைத்து நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. தன்னாளுமைமிக்க பெண்கல்வியை வழங்குவதிலும் கலை, அழகியல் விளையாட்டுத்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சியை பெற்ற மாணவியரை உருவாக்குவதிலும், அத்திறன்களை அகில இலங்கை ரீதியில் மாணவிகள் வெளிப்படுத்தி வெற்றியை தமதாக்கி பாடசாலைக்கு பெருமைசேர்கின்றனர். இவ்வருட பல்கலைக்கழகத்தேர்விலும் மருத்துவத்துறைக்கு பத்து மாணவியர் தெரிவாகியமையும், ஏனைய துறைகளிலும் பிரகாசிக்கின்றமையும் வித்தியாலயத்திற்கு பெருமை சேர்ப்பதாகும். பாரம்பரியம் மாறாத் தன்மையும், புதுமைப் பெண்களுக்குரிய சிந்தனைப் போக்கும் ஒன்றிணைந்த வெளிப்பாடாகவே வித்தியாலயம் தனது பயணத்தை தொடர்கிறது.

தனியார் பள்ளிக்கூடங்களை அரசு பாடசாலைகளாக உள்வாங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதும், அதன் விளைவாக தனியார் பாடசாலைகள் அரச பாடசாலைகளாக மாற்றம் பெற்றன. திடமான மனத்துடனும், முடிவில் சிறிதும் சலனமின்றி 'இலங்கையில் பெண்களுக்குரிய ஒரேயொரு தனியார் சைவப் பாடசாலையாக' சைவ மங்கையர் வித்தியாலயம் தன்னை தனித்து அடையாளப்படுத்தியமை 'நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்' எனும் கவிக்கூற்றிற்கு இலக்கணமாயிற்று.

சைவமங்கையர் கழக முகாமையாளர்களின் முழுமையான பங்களிப்பு வித்தியாலய விருத்தியிலும் வளர்ச்சியிலும் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றமையும் சிறப்பிற்குரியது. அவ்வகையில் முன்னாள் முகாமையாளர் சிவானந்தினி துரைசுவாமி அம்மையாரின் பாடசாலைச் சமூகத்தின் மீதுள்ள அளவுகடந்த வெளிப்பாடே தளர்வின்றி வித்தியாலயத்தினை செம்மையும் மேன்மையுமுற வழிநடத்திற்று. தற்போதைய முகாமையாளர் சட்டத்தரணி செல்வி மாலா சபாரட்ணம் அம்மையாருடைய சேவைமனப்பான்மையும், வழிப்படுத்தலிலும் வித்தியாலயத்தின் அடுத்த கட்ட பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமையும் போற்றுதற்குரியதாகும். 'அறிவு யாவும் பயிற்சியில் வென்றே கடமை செய்விர் நந்தேசத்து வீரக்காரிகைக் கணத்தீர்' கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமாயின் கற்றறிந்த கல்வியூடாகவே நிகழவேண்டும். இன்றைய சூழலில் பாடசாலையில் ஏற்படுத்தப்படும் மாற்றமும், பாரம்பரியக் கல்வி முறையுடனும், புதிய மாற்றங்களை ஆரோக்கிய சிந்தனையுடன் உள்வாங்கி செயற்படுத்துவதிலுமுள்ள ஆளுமைப்பண்பின் வெளிப்பாட்டிற்கு அகவை தொண்ணூறு. இவ் தொண்ணூறாவது நிறைவைக் கொண்டாடி மகிழ்வதற்கும், நினைவுகளை மீட்டெடுப்பதற்கும் சைவமங்கையர் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் நடைபவனி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

## விமானப்படையின்... (02ம் பக்கதொடர் )

பின்னர் பரிந்துரைகளின்படி அதிக புள்ளிகளைப் பெறும் விமானப்படை வீரர் மற்றும் விமானப்படை வீராங்கனை ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்த அடிப்படையில் 2022ம் ஆண்டுக்கான சிறந்த விமானப்படை வீரராக சீனக்குடா விமானப்படை கல்விப்பீடத்தின் இல 01 ஒய்வு மற்றும் பொழுதுபோக்கு பிரிவில் கடமையாற்றும் வாரெண்ட் அதிகாரி ப்ரியங்கர தேர்வுசெய்யப்பட்டதுடன் சிறந்த விமானப்படை வீராங்கனையாக கட்டுநாயக்க விமானப்படை தளத்தின் அதிகாரிகள் உணவகத்தின் உதவியாளராக கடமையாற்றும் கோப்ரல் லக்ஷிகா தெரிவுசெய்யப்பட்டார். மேலும் குழுக்களுக்கான பிரிவில் சிறந்த சூழ்நிலை கட்டுப்பாட்டு அணியாக தியத்தலாவ விமானப்படைத் தளமும், சிறந்த சுற்றாடல் முகாமைத்துவ திட்ட குழுவாக பாலவி விமானப்படை தளமும், சிறந்த ஆய்வுக் குழுவாக மீரிகம விமானப்படை தளத்தில் அமைந்துள்ள வான் பாதுகாப்பு ரேடார் படைப்பிரிவும் விருதுகள் பெற்றதுடன் சிறந்த விமானப்படை வீர வீராங்கனைகளுக்கான ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

## வ/ப தெஹிவளை கல்கிசை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## பகிரங்க விலைமனுக் கோரல்

மேற்படி சங்கத்திற்கு சொந்தமான, 2023.02.19ம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் மீளளிக்கப்படாத வைப்பு கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதாக தயவுடன் அறிவிக்கிறேன். காசு செலுத்தும் நிபந்தனைகள் பேசித் தீர்க்க முடியும். அத்துடன் மேற்படி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் தொடர்ந்து செல்லுபடியாகும் என அறிவிக்கிறேன்.

| காணி | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|
| நுகேகொட | ரூ. 10,000.00 |
| கிருளப்பன | ரூ. 10,000.00 |
| வுட்லண்ட் | ரூ. 4,000.00 |
| கடவத்த | ரூ. 4,000.00 |
| இரத்மலானை | ரூ. 4,000.00 |

**விசாரணைகள்**
**0763186530**
**0716939908**
**0762761968**
**0741246725**

**தலைவர்,**
**வ/ப, தெஹிவளை கல்கிசை ப.நோ.கூ. சங்கம்,**
**இல. 169, ஹைலெவல் வீதி,**
**நுகேகொடை.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.03.16
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5061 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,511,288.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 9 6 4 8 0 9

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3303 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,311,854.40
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 20 32 58 78

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 370 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,590,632.00
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 16 45 50 59 — விசேட இலக்கினம் தனுசு

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1409 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 308,104,630.00
ஆங்கில எழுத்து D — சுப்பர் இலக்கம் 16 — வெற்றி இலக்கங்கள் 30 41 63 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1091 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,210,831.60
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 51 63 68 78

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1516 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,822,950.80
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 2 2 5 4 8 5

## தினகரன் வாரமஞ்சரி — சிறு விளம்பரங்கள்

THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

**வர்த்தகம்**

206 **நிதி மற்றும் குத்தகைக்கு/ சேவைகள் வர்த்தகம்**

மில்லியனுக்கு 15 மாதங்களுக்கு மில்லியன் 1.5 (100,000/x 15) செலுத்தக்கூடிய ஒருவர் தேவை. காசோலை சட்டபூர்வ முறையில் எழுதப்ப டும். தொடர்பு 038212 1481 017592



**வேலைவாய்ப்பு**

309 **வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

கொழும்பு05இல் உள்ள ஓர் நிறுவனத்திற்கு 01 02 வருட அனுபவமுள்ள அடிப்படை ஆங்கில அறிவுடைய கனிஷ்ட கணக்காளர் உடனடியாகத் தேவை. தயவு செய்து உடனடியாக அழைக்கவும். 0777999682. 016941

319 **வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கட்டுபெத்த பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. 56 வயதிற்குக் குறைந்தவர்கள் வெளிநாடு சென்று திரும்பியவர்கள் விரும்பப்படுவர். 0777776549. 016655

கம்பஹா யக்கல மூவர் வசிக்கும் இல்லத்தில் தங்கி சேவையாற்ற 35 55 வயதிற்கிடைப்பட்ட ஆரோக்கியமான நம்பிக்கையான பெண் தேவை. தங்குவதற்கு வேறு வசதியான அறை உண்டு. தூரப் பிரதேசத்தவர்கள் விரும்பத்தக்கது. (ஹட்டன்/ நுவரெலிய) சம்பளம் 40,000/ = 076026 7169, 0771165365. 017535

நீ ர்கொழும்பு, குரண வெளிநாட்டில் வசிக்கும் தம்பதியின் பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள மாடி வீட்டில் சுத்திகரிப்பு வேலைகள் மற்றும் வீட்டை கவனித்துக் கொள்ள 45 60 வயதிற்கிடைப்பட்ட சுறுசுறுப்பான நம்பிக்கையான ஆண் தேவை. கூடுதல் சம்பளம் வழங்கப்படும். தங்குவதற்கு தனி அறையுடன் வசதிகள் வழங்கப்படும். கிராம சேவகர் சான்றிதழுடன் தேசிய அடையாள அட்டையை எடுத்து வாருங்கள். தொ.பே. 0706906639. 017334

பொரளையில் உள்ள முஸ்லிம் அப்பாட்மென் இற்கு, ஆரோக்கியமான, சிறந்த தோற்றமுடைய 40 வயதிற்கு குறைந் த ப குதிநேர வீட்டுப் பணிப்பெண், சுத்திகரிப்புக்கு மட்டும் தேவை. ஆரம்பம் ரூ பா 1 200/ தினமும் 0772287000. 016799

**பொது**

427 **டியூஷன்**

ஹெந்தல, வத்தளையில் தரம் 1 முதல் 5 வரையிலான மாணவர்களுக்கு ENGLISH TUTI ON CLASSES ஆரம்பம். LOCAL SYLLABUS. அழைக்கவும். Alex Master (Diploma in English, UK) 072-6186633 016143



**காணி/தோட்டம்**

616 **வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

கொத்தட்டுவ புதிய நகரத்திற்கு அருகில் (IDH சந்திக்கு அருகில் மொரவிடிய வீதியில்) 14 பேர்ச் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. 0760314112, 0774543746. 017486

கொள்ளுப்பிட்டி முஹந்திரம் வீதி 03 அறைகள் மற்றும் 02 குளியலறைகளுடன் இரு மாடி வீடு வி ற்பனைக்கு (பிரதமர் அலுவலகத்திற்கு பின்னால்) 0775262362 012364

கொழும்பு3, புத்தம் புதிய வீடு, தரைமாடி மற்றும் 3 மாடிகள் விஸ்தீரணம் 3 பேர்ச்சுக்கள். காலி வீதிக்கு, லிபர்ட்டி பிளாசா அனைத்து மு தன்மையான பாடசாலை கள், வைத்தியசாலைகள், கொழும்பு சிட்டி சென்ரருக்கு நடைதூரம். அமரும் இடம், உணவருந்துமிடம், பான் ரி. 5 படுக்கை யறைகள் இணைக்கப்பட்ட குளியலறைகள், கராஜ் மற்றும் அனைத்து வசதி களுடன் மிகவும் வசதியான அமைவிடம், வியாபாரத்திற்கு பொ ருத்தமான இடம், முன்னேற்பாட்டு சந்திப்பின் மூலம் பரீட்சிக்கலாம் தயவு செய்து 7 7 9546446, 777747648 ஆகிய இலக்கங்களி னூடாக தொடர்பு கொள்ளவும். 017299

போக்கந்தரயில் 2 அறைகள், 2 குளியலறைகள் களஞ்சிய அறை, சுற்றிவர சுவர், ஓடு ப தித்த, சீலிங்குமுடைய வீடு வி ற்பனைக்கு . 2 00 இலட்சம் தர கர் தேவையில்லை. 07 66 865699 017653

வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு. இடம் வெலிவிட்ட கடுவல. காணியின் விஸ்தீரணம் 07 பேர்ச். தொலைபேசி இலக்கம் 0777267068. 016764



617 **வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட, இரண்டு வாகன தரிப்பிட வசதி களைக் கொண்ட. முற்றிலும் Tile ப திக்கப்பட்ட 7P காணியுடன் கூடிய வீடு வத்தளை, மாபோலை பங்களா வத்தையில் விற்ப னைக்கு உண்டு. 0773960964 017608

621 **வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

0777282147 கண்டியில் வீடு ஹோட்டல், தோட்டம் வெற்றுக்காணி, வியாபாரஸ்தல ம் கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் 0 7 77438169, 0775 4 8 6262. 013892

623 **வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு**

பிரமிக்க வைக்கும் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் அழகை அனுபவிப்பதற்கு விருப்பமான உங்களுக்கு ஹ ட் டன் கொ ழு ம் பு பிரதான வீதிக்கு முகப்பாக, பெறுமதியான வியாபா ர மற்றும் வதிவி ட 100 காணித்துண்டுகள். ஒரு பேர்ச் ரூபா 245, 000/ தொடக்கம் விஷேட கழிவுடன் வட்டியில்லாத இலகுக்கொடு ப்பனவு முறை. தொடர்பு கொள்ளவும். சிறிபெல லேண்டஸ். 0702484848. 017893

ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக 10 பேர்ச் கொண்ட பெறுமதியான 100 காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு குழாய் நீர் மற்றும் மூன்று பேஸ் மின்சாரம் கொண்டது. ஒரு பேர்ச் ரூபா 245,000/ தொடக்கம் இலகு கொடுப்பனவு முறை மற்றும் விஷேட கழிவொன்று ச கி தம் உங்கள் காணி யை இன்றே ஒ துக்கிக்கொள்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள் சிறிபெல லேண்ட்ஸ். 0702484848 017899



Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer aDZ it's what you want Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 500/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / Gayani - 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை

## வெற்றிடங்கள்

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையில் கீழ்க்காணும் வெற்றிட பதவிகளை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. பிரதம நிறைவேற்று அதிகாரி (மார்ஷல்) பதவி

விண்ணப்பங்களை 2023.03.31ம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு கீழ்க்காணும் இணைய தளத்திற்கு பிரவேசியுங்கள்

https://moi.gov.lk/images/SCCB/Vacancy.pdf

**மார்ஷல்**
**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி**
**த.பெ. 223, புதுக்கடை,**
**கொழும்பு -12**
**தொ.பே. 011-2437501**

---

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியின் முகாமைச் சபை

## வெற்றிடங்கள்

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியின் முகாமைச் சபையில் பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பராமரிப்பு அதிகாரி (மின்னியல்) தரம் II (01 பதவி)**
2. **பராமரிப்பு அதிகாரி (வளிச்சீராக்கம், நீர் வழங்கல் மற்றும் செயற்பாடுகள்) தரம் II (01 பதவி)**

விண்ணப்பப் படிவங்களை 2023-03-31ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இணையதளத்திற்குப் பிரவேசியுங்கள்.
https://moj.gov.lk/images/SCCB/MaintenanceVacancey.pdf

**மார்ஷல்,**
**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி,**
**த.பெ. இல. 223, கொழும்பு 12. தொலைபேசி: 011-2437501**

---

## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

### பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

இந்த நிறுவனத்தின் கீழ்க்காணும் நிரந்தர பதவிக்காக தகைமையுள்ள இலங்கையரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பயிற்சி நிபுணர் (கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம்) - MM 1.1 (IIம் தரம்)**

**வேலை விபரம்** :- விடயம் சார்ந்த விரிவுரைகளை நடத்துதல், பெருந்தோட்டத் துறையில் பயிற்சி தேவைப்பாடுகளை மதிப்பிடுதல், கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவ துறையுடன் சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் பாடநெறிகளை தயாரித்தல், பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு குறித்த நிகழ்வுகள் மற்றும் பாடநெறிகளை திட்டமிடல் மற்றும் நடத்துதல், பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தலுக்கு துணைச் செயற்பாடுகளை தயாரித்தல், நிறுவனத்தின் பாடநெறி/ நிகழ்ச்சித் திட்டங்களின் முகாமைத்துவ திறனை மேம்படுத்துவதற்காக புதிய தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடித்தல்.

**தகைமைகள்** :- **வெளி விண்ணப்பதாரிகளுக்கு**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட அரச நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ விவசாயம்/ பொருளியல் ஆகிய துறைகளில் தரச் சித்தியுடன் விசேட பட்டம் மற்றும் பட்டத் தகைமையை பெற்றுக்கொண்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரச கூட்டுத்தாபனம்/ சபை/ அரச திணைக்களத்தில் அல்லது தனியார் நிறுவனத்தில் விடயத் துறையுடன் சம்பந்தப்பட்ட குறைந்த பட்சம் மூன்று வருட (03) சேவை அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**

குறித்த துறையில் கனிஷ்ட முகாமைத்துவ (1ம் தரம்) பதவியொன்றில் ஐந்து வருட (05) சேவை அனுபவம்

**சம்பள அளவு** :- MM 1.1 - ரூ (53,175 - 10x1,375 - 15x1,910 - 95,575)

(ஆரம்பத்தில் ரூ. 53,175/- மற்றும் அரசு அனுமதித்த ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிமை பெறுவர்)

**வயதெல்லை** :- 25 வருடத்திற்கு குறையாது இருப்பதுடன், 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இந்த கூடிய வயதெல்லை பொருந்தாது.

**2. பயிற்சி அதிகாரி (கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம்) பதவி JM 1.1 (IIம் தரம்)**

**வேலை விபரம்** :- விடயம் சார்ந்த விரிவுரைகளை நடத்துதல், பயிற்சி நிபுணருக்கு பயிற்சி தேவைப்பாடுகளின் ஆய்வை மேற்கொள்வதற்கு உதவுதல் பயிற்சி நிகழ்வுகளைத் திட்டமிடல், பயிற்சி நிகழ்வுகளுக்காக செலவு மதிப்பீடுகளை தயாரித்தல், பயிற்சி நிகழ்வுகளை நடத்துதல் மற்றும் பயிற்சி நிகழ்வுகளின் பாதிப்புகளை மதிப்பிடுதல்.

**தகைமைகள்** :- **வெளி விண்ணப்பதாரிகளுக்கு**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட முகாமைத்துவம்/ வர்த்தகம்/ அரச நிர்வாகம்/ கணக்கியல் ஆகிய துறைகளில் நான்கு வருட விசேட பட்டத்துடன் பட்டத் தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரச/ தனியார் நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஒரு வருட (01) சேவை அனுபவம்.

**சம்பள அளவு** :- JM 1.1 - ரூ (42,600 - 10x755 - 18x1135 - 70,580)

(ஆரம்பத்தில் ரூ. 42,600/- மற்றும் அரசு அனுமதித்த ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிமைபெறுவர்)

**வயதெல்லை** :- வயது 25 வருடத்திற்கு குறையாது இருப்பதுடன், 45 வயதிற்கு மேற்படாத இருத்தல் வேண்டும்.

**சேர்த்துக்கொள்ளும் முறைமை:**

எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது தொழில்சார் நேர்முகத் தேர்வு சபையினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**பொது விடயங்கள்:**

மேற்படி சகல பதவிகளுக்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஆங்கில மொழியை நன்றாக கையாளக்கூடிய திறமை மற்றும் பொது கணனி பிரயோக கையாள்தல் பற்றிய அறிவு இருத்தல் வேண்டும். மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் குறித்த அலுவலக விடயங்களை முறையாக நிறைவேற்றுவதற்காக உடல் உள தகுதியுடன் இருப்பதுடன் சேவையின் தேவையை பொருத்து தலைமையகத்தில் அல்லது நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

**வேறு அனுகூலங்கள் :-**

- ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் பொறுப்பு நிதிக்கு முறையே ஆரம்ப சம்பளத்தில் 12% மற்றும் 3% பங்களிப்பை நிறுவனத்தினால் வழங்கப்படும். (ஊழியர் சேமலாப நிதிக்கு ஊழியர் பங்களிப்பு அடிப்படை சம்பளத்தில் 10% ஆகும்)
- அங்கத்தவர் மற்றும் அவரது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுக்கு பங்களிப்பு சுகாதார காப்புறுதித் திட்டம்.
- கிட்டிய நகரத்திற்கு போக்குவரத்து வசதிகள் (கடுவளை/ கொட்டாவ)

**விண்ணப்பிக்கும் முறை:**

உறவினரல்லாத பரிந்துரைப்பவர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் உங்களது முழுமையான சுயதரவுக் குறிப்பு, குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு 2023 ஏப்ரல் 03ம் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கச் செய்தல் வேண்டும். அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், குறித்த நிறுவனத்தின் தலைமையூடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். எந்த நிலைமையின் கீழும் பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

**கவனிக்கவும் :-**

- அதி கூடிய தகைமையைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு சமுகமளிப்பதற்கு தகைமை பெறுவர்.
- இந்த அறிவித்தல் www.nipm.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**
**எம்.டி.எம். ஜயவர்தன மாவத்த, அத்துருகிரிய.**
**தொலைபேசி : 011-2770232**

---

கைத்தொழில் அமைச்சு – ஆரம்பக் கைத்தொழில் பிரிவு

## இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட்

Lanka Phosphate Limited

விலைக்கோரல் குறியீட்டிலக்கம்: LPL/SUP-HO/FI-BID/2023/01

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### எப்பாவல - இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட்டிற்கு 800,000 எண்ணிக்கையான HDPE Inner Liner சகிதம் புதியதாக நெய்யப்பட்ட பொலிபுரபலின் (WPP) பைகளை (அச்சிடப்பட்டவை) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. எப்பாவல ரொக் பொஸ்பேற் (ERP) மற்றும் உயர் தர எப்பாவல ரொக் பொஸ்பேற்றை (HERP) இறுதி உற்பத்தி வடிவில் தூள்களாக பொதியிடுவதற்குப் பயன்படுத்துவதற்காக 800,000 எண்ணிக்கையான HDPE Inner Liner சகிதம் புதியதாக நெய்யப்பட்ட பொலிபுரபலின் (WPP) பைகளை (அச்சிடப்பட்டவை) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்காக தங்களது முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை பொஸ்பேற் லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழுத் (மேல்நிலை) தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல் ஆவணங்களை 2023 மார்ச் 20ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023 மார்ச் 31ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக வேலை நேரங்களில் கொழும்பு-14, இல. 73/1/1, புதிய களனி பால வீதி, இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட், நிதி முகாமையாளர் அலுவலகம் அல்லது எப்பாவல, இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட், வழங்கல் பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. விலைக்கோரல் படிவத்துடனான விலைக்கோரல் ஆவணங்களை 2023 மார்ச் 20ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023 மார்ச் 31ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான சாதாரண அலுவலக வேலை நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 இல. ரூபாவை ரொக்கப் பணமாக அல்லது இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட் பெயரிலான வங்கி வரைவாக செலுத்துவதன் பேரில் கொழும்பு-14, இல. 73/1/1, புதிய களனி பால வீதி, இலங்கை பொஸ்பேற் லிமிடெட், நிதி முகாமையாளர் அலுவலகம் அல்லது எப்பாவல, இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட், வழங்கல் பிரிவு அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட்ட விலைமனுக்களை முடிவுறுத்தல் நேரம் அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது 2023 ஏப்ரல் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையில் இந்நோக்கத்திற்காக எப்பாவல, இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட் வழங்கல் பிரிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
5. எப்பாவல, இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட் வழங்கல் பிரிவு அலுவலகத்தில் 2023 ஏப்ரல் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
6. மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்புகொண்டு இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112 459906/7, 025-2249647, 077 3275847)

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை பொஸ்பேற் லிமிட்டெட்,**
**இல. 73/1/1, புதிய களனி பால வீதி, கொழும்பு 14.** **2023 மார்ச் 19ஆம் திகதி**

---

www.adz.lk
it's what you want

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைத் துறைமுக அதிகார சபை

## கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் – சிவில் வேலைகள்

**(ஒப்பந்த இலக்கம் SLPA/CD/ECT/OPER/01)**

1. இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணித்தல் - சிவில் வேலைகள் (ஒப்பந்த இலக்கம் **SLPA/CD/ECT/OPER/01**) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தலைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரின் சார்பில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின், அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. தேவையான முடிவுறுத்தல்கள் மற்றும் சேவைகள் சகிதம் நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதானமான வேலையை உள்ளடக்குகின்றது. மொத்தத் தரைப் பரப்பளவானது ஏறக்குறைய $4500m^2$ ஆகும்.
2. இந்த ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - கட்டிட நிர்மாணத்துறையில் விசேடத்துவமாக CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்பட்டது) C2 அல்லது C1 தரத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள்
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்திருத்தல் வேண்டும். இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ்நிலை (Online) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
3. கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023-04-03ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
4. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 35,000.00 ரூபா (வரிகள் உட்பட) மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பிரிவின் பிரதான பொறியியலாளரினால் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) 2023-03-24ஆம் திகதி முதல் 2023-04-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. விலைமனுக்கள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
6. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து ''கொழும்புத் துறைமுகத்தில் கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கான செயற்பாட்டுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - சிவில் வேலைகள் (ஒப்பந்த இலக்கம் **SLPA/CD/ECT/OPER/01**)'' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியிலுள்ள துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
7. சகல விலைமனுக்களுடனும் 5,000,000.00 ரூபாவுக்கான விலைமனு பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை முறிகள் 2023-09-11ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 180 நாட்களாகும்.
9. 2023-04-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
10. ஏதேனும் மேலதிக விபரங்களுகளை பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி இல. 011-2380517)
    மேலுள்ள அனைத்தும் eroc.drc.gov.lk எனும் இணையதள நிகழ்நிலையில் (online) பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு 01.**

---

SPC

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் பின்வரும் பொருட்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. அதேபோல் கேள்வி ஆவணங்களை ''மெஹெவர பியச'', 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் வரவேற்பு கருமபீடத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| தொ. இல. | விபரங்கள் | கேள்வி இலக்கம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| 01 | Tender for Purchase of Data Cartridge Tapes<br>Data Cartridge Tape (SLR 60-60 GB) & Data Cartridge Tape (SLR 5 – 8GB) | AD/1/ DCT-II/18/2023 | 2023-04-04 | மு.ப. 11.30 | 3,000.00 + VAT | 2023-03-20 முதல் 2023-04-03 வரை |

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், ''மெஹெவர பியச'', 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்டி எனும் முகவரிக்கு மேற்கூறப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லாவிடில் இந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி கோரல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விப் படிவங்களைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியஸ'' 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்டி.**
**தொலைபேசி: 2320356-9**



## கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா,

ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம்
சோபகிருது வருடத்தின் 12 ராசிகளின்
பொதுப் பலன்கள், வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி
(மினி சனி மாற்றம் மார்ச் 29 )

# மினி சனி மாற்றம்

### சனி கிரகம் பற்றி தெரிந்து கொள்ள...

ராசி – மகரம், கும்பம்
நட்சத்திரங்கள் – பூசம், அனுஷம், உத்திரட்டாதி
நட்பு கிரகங்கள் – புதன், சுக்ரன், ராகு, கேது
சமமான கிரகம் – குரு
பகையான கிரகங்கள் – சூரியன், சந்திரன், செவ்வாய்
காரகன் – ஆயுள், தொழில், எண்ணெய் பொருட்கள், கடின உழைப்பு, அடிமைத் தொழில், நீதித்துறை
தேவதை – ஈஸ்வரன்
தானியம் – எள்
உலோகம் – இரும்பு
நிறம் – கருப்பு
குணம் – தாமஸம்
சுபாவம் – குரூரர்
சுவை – கசப்பு
திசை – மேற்கு
உடல் அங்கம் – தொடை



தாது – நரம்பு
நோய் – வாதம்
பஞ்சபூதம் – காற்று
சிறப்பு பார்வை – 3,7,10ஆம் பார்வை
பாலினம் – ஆண் பெண் இல்லாத தன்மை
உபகிரகம் – குளிகன்
ஆட்சி ராசி – மகரம், கும்பம்
உச்ச ராசி – துலாம்
மூலத்திரிகோண ராசி – கும்பம்
நட்பு ராசி – ரிஷபம், மிதுனம், கன்னி
சமமான ராசி – தனுசு, மீனம்
பகை ராசி – கடகம், சிம்மம், விருச்சிகம்
நீச ராசி – மேஷம்
திசை ஆண்டுகள் – பத்தொன்பது ஆண்டுகள்
ஒரு ராசியில் சஞ்சரிக்கும் காலம் – இரண்டரை ஆண்டுகள்
இதர பெயர்கள் – கரியவன், அந்தகன், காளி, கௌரி, மந்தன், முதுமகன், முடவன்

### மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்) மார்ச் 29 முதல் சனி பகவான் உங்கள் ராசிக்கு 11 ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். 11ல் சனி உங்களுக்கு எதிர்பாராத செல்வத்தை தருவார். ஏப்ரல் 23ல் குரு பகவான் ஜென்ம குருவாக உங்கள் ராசியில் சஞ்சரிப்பதால் பிரயாணங்களை தருவார்.

### ரிஷபம்

(கார்த்திகை 2ம் 3ம் 4ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1ம் 2ம் பாதம்) மார்ச் 29 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு 10 ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். இதனால் 10ல் சனி காரணமாக தொழிலில் சிறு இடஞ்சல்கள் ஏற்படும். ஏப்ரல் 23ல் குரு பகவான் 12ல் அமைவதால் மங்களகரமான செலவுகள் உருவாகும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3ம் 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம். 3ம் பாதம்)

மார்ச் 29 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு 9ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். இதனால் 9ல் சனி காரணமாக காரியங்கள் கைகூடுவது தாமதமாகும். ஏப்ரல் 23ல் குரு பகவான் 11ல் அமைவதால் திடீர்பண யோகம் ஏற்படும்.

### கடகம்

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

மார்ச் 29 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு 8 ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். இதனால் 8ல் சனி காரணமாக போக்குவரத்தில் அவதானம் தேவை.மருத்துவ செலவுகள் ஏற்படலாம். ஏப்ரல் 23ல் குரு பகவான் 10 ல் அமைவதால் தொழில் மாற்றம் அல்லது இடமாற்றம் ஏற்படலாம்.

### சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்)

மார்ச் 29 முதல் சனி பகவான் உங்கள் ராசிக்கு 7ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். 7ல் சனி காரணமாக கூட்டு வியாபாரத்தில் பிணக்கு, கணவன் மனைவி இடையே வாக்குவாதம் ஏற்படலாம். ஏப்ரல் 23ல் குரு பகவான் 9ல் அமைவதால் ஓடிப் போனவருக்கு ஒன்பதில் குரு என்றது போல அதிர்ஷ்டத்தை தரும்.

### கன்னி

(உத்தரம் 2ம், 3ம் 4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1ம், 2ம் பாதம்)

மார்ச் 29 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு 6ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். 6ல் சனி காரணமாக எதிர்பாராத விதத்தில் பணம் வந்து சேரும். கடன் வாங்க நேரிடலாம். ஏப்ரல் 23 ல் குரு பகவான் 8 ல் அமைவதால் போக்குவரத்தில் கவனம் தேவை.

### துலாம்

(சித்திரை 3ம் 4ம் பாதம், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதம்)

மார்ச் 29 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு 5ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். 5ல் சனி காரணமாக பதவி உயர்வும் பிள்ளைகளால் பெருமைகளும் ஏற்படும். ஏப்ரல் 23ல் குருபகவான் 7ல் அமைவதால் திருமணம் கைகூடும்.

### விருச்சிகம்

(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை) மார்ச் 29 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு 4ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். 4 ல் சனி காரணமாக வாகன யோகம் ஏற்படும். ஏப்ரல் 23ல் குருபகவான் 6ல் அமைவதால் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்படலாம்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)

மார்ச் 29 முதல் சனி பகவான் உங்கள் ராசிக்கு 3ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். 3ல் சனி காரணமாக லட்சுமிகரம் ஏற்படும். ஏப்ரல் 23 ல் குரு பகவான் 5ல் அமைவதால் பதவிஉயர்வு, அந்தஸ்து, பிள்ளைகளால் உயர்வு ஏற்படும்.

### மகரம்

(உத்தராடம் 2ம், 3ம், 4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ம் 2ம் பாதம்) ஏப்ரல் 29 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு 2ல் தனது சொந்த வீடான கும்பராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். 2ல் சனி காரணமாக பண விரயம் ஏற்படும். ஏப்ரல் 23ல் குரு பகவான் 4ல் அமைவதால் தாயாரின் மீது அக்கறை காட்டவும்.

### கும்பம்

(அவிட்டம் 3ம் 4ம் பாதம், சதயம், புரட்டாதி 1ம், 2ம், 3ம் பாதம்)

மார்ச் 29 முதல் சனிபகவான் உங்கள் ராசிக்கு ஜென்மச்சனி தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். ஜென்மத்தில் சனி சஞ்சாரம் செய்வதால் எல்லா விடயங்களிலும் அவதானம் தேவை. ஏப்ரல் 23ல் குரு பகவான் 3ல் அமைவதால் பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது.

### மீனம்

(புரட்டாதி 4ம் பாதம்,உத்திரட்டாதி,ரேவதி)

மார்ச் 29 முதல் சனி பகவான் உங்கள் ராசிக்கு 12ல் தனது சொந்த வீடான கும்ப ராசியில் சுமார் 4 மாத காலம் அதிசாரத்தில் சஞ்சாரம் செய்கின்றார். பின்னர் மீண்டும் மகர ராசியில் வக்கரித்து டிசம்பர் மாத இறுதியில் கும்பத்தில் சஞ்சாரம் செய்வார். 12ல் சனி சஞ்சாரம் செய்வதால் விரயங்கள் ஏற்படும்.

ஏப்ரல் 23ல் குரு பகவான் 2ல் அமைவதால் சமூக அந்தஸ்து உயரும், பணவரவு தாராளம்.

# உருவத்தைக் கொண்டு எடை போடக்கூடாது

## லட்சுமி பாட்டியின் அனுபவ பேச்சு



ஆறு மணி ஆனாலும் இன்னும் அரை நிமிட தூக்கம் என தூங்கும் எம்மவர் மத்தியில் நான்கு மணிக்கு தூக்கம் கலைந்து கால் வலிக்க வெகு தூரம் நடந்து 5 மணி பஸ்ஸுக்கு அரை நிமிடம் காத்திருந்து வெகு தூரம் தொழிலுக்கு செல்லும் ஒரு 80 வயது பாட்டியின் கதை இது. தினமும் 65 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து மீன் விற்கும் தொழிலில் ஈடுபடுபவர் தன் கையே தனக்கு துணை என்கிறார். சொருகிய சேலையும் சுருட்டி முடிந்த கொண்டயும் ஆயிரம் கதை சொல்லும் கண்கள் அப்போதும் ஏதோ சொல்கிறது.

ஒரு நாள் மூன்று மணிக்கு எழும்புங்கள் என்றதுமே அதற்கே சினந்து கொண்டு செல்லுபவர்களுக்கு இவர் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. பேருந்தில் சாதி பேதம் அற்று சகலரும் பயணிப்பதால் அங்கு எத்தனையோ கதைகளும் கற்பிதங்களும் கிடைக்கின்றன. ஒவ்வொருவரின் பின்னாலும் ஓராயிரம் கதைகளும் எண்ணிலடங்கா அனுபவங்களும் நிறைந்து இருக்கின்றன. நிறைகுடம் தளம்பாது என்பார்கள். இவர் அனுபவத்தை முழுமையாகக் கற்ற ஒரு நிறைகுடம். புதிதாகக் காண்பவரிடம் புன்னகை மாத்திரமே பெரிதாக பேச்சு ஏதும் கிடையாது.

வெற்றிலை பையை மாத்திரம் அவ்வப்போது துணைக்கு அழைக்கிறார்.பாட்டி எங்க போகிறீர்கள் என வினவினேன் " அட நீங்க எல்லாம் கதைப்பிங்களா நான் நினைச்சேன் என் மேல மீன் மணக்குது என்று கதைக்க மாட்டீர்கள் என்று, இங்கே நிறைய பேர் கதைக்க மாட்டீனம், ஏதோ வேற்றுக்கிரகவாசி மாதிரித் தான் பாப்பினம் எல்லாரும் அப்படி இல்ல. ஒரு சிலர் தான் நான் நினைக்கிறேன் இந்த டிக்கெட் போடுற தம்பி டிக்கெட் எடுக்க வேண்டும் என்பதற்காக கதைக்கிறார் போல, சரி விடுங்கோ அது அவையிட விருப்பம். யாருக்கோ பிடிக்கலை என்பதற்காக நான் இந்த தொழில விட முடியாது. அவையல் ஏதும் நினைப்பினம் என்று பார்த்தா நாளைக்கு நான் நடுரோட்டிலதான் நிக்கணும் நாலு பேரும் நல்லா இருந்து கதைக்க முடியும். உழைச்சி களைச்சி வாரவனுக்குத்தான் தெரியும் அதுட வலி "எத்தனை வலிமையான பேச்சு அத்தனையும் உண்மையே லட்சுமி பாட்டி கொஞ்சம் மா நிறம் (பெயர் மாற்றப்பட்டுள்ளது)

மகன், மகள் என பலர் இருந்தும் கிட்டத்தட்ட 12 வருடமாக மீன் விற்று வருகிறேன். நான் இருக்கும் வரை என்னை நானே பார்த்துக் கொள்ள வேண்டும். அதுவே என்னுடைய ஆசை. யாரிடமும் எதற்காகவும், கைகட்டி நிற்கக் கூடாது. அதிகாலை எழுந்து வருவது உங்களுக்கு சிரமமாக இல்லையா? நான் ஆரம்ப காலங்களில் இருந்தே அதிகாலையில் எழுந்து விடுவேன். அவ்வாறு அதிகாலையில் எழும்பாது விட்டால்தான் அன்றைய பொழுது ஏதோ விடியாதது போல் இருக்கும். நான் நினைக்கிறேன் நீங்கள் எழும்பும்போது நான் என் வேலையை தொடங்கி இருப்பேன் என்று. எதற்காக இவ்வளவு தூரம் பயணம் செய்து தொழில் செய்கிறீர்கள்? என்னுடைய பிள்ளைகளுக்கு நான் இந்த தொழில் செய்வது பிடிப்பதில்லை. தாயும் பிள்ளையுமாக இருந்தாலும் வாயும் வயிறும் வேறு என்பார்கள். என் தேவைக்கு நான் உழைக்க வேண்டும்" அவர்களுக்கும் குடும்பம் பிள்ளைகள் உண்டு. அவர்களது தேவைகளுக்கு மத்தியில் அவர்களை சிரமப்படுத்த முடியாது. அத்தோடு என்னால் வேலை செய்யாமல் இருக்க முடியாது. நான் சமைத்து சாப்பிடுகிறேன். காலையில் எழுந்து தேநீர் குடித்துவிட்டு இங்கு வந்து விடுவேன். இங்கு மீன் வாங்கிக்கொண்டு ஒரு டீயும் பணிசும் சாப்பிடுவேன். அப்படியே வெற்றிலையை போட்டுவிட்டு வேலையை முடித்துவிட்டு மீண்டும், ஒரு டீயுடன் ஏதேனும் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு பஸ் ஏறி விடுவேன். எனக்கும் நிறைய வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் என்னை தேடி வந்து மீன் வாங்குவார்கள். என்னுடன் மீன் விற்பவர்களும், என்னை நன்றாக நடத்துவார்கள். நான் மீன் விற்பதை மிகவும் சந்தோசமாக செய்கிறேன் ஒரு நாளும் சலித்ததோ வெறுத்ததோ இல்லை".

கொரோனா காலப்பகுதியில் அதாவது ஊரடங்கு கால பகுதியில் தொழிலுக்குப் போக முடியாத போது என்ன செய்தீர்கள். ?

உழைச்சிட்டு போற காச உடனே முடிகிறது இல்லை. இன்றைக்கு இருக்கிறவன் நாளைக்கு இருக்க மாட்டான். எப்ப என்ன நடக்கும்னு தெரியாது. என்ன வேணும் என்றாலும் நடக்கலாம். நான் அங்க இங்க காசு சேர்த்து வைத்திருந்தேன். அதோட வீட்டில சும்மா இருக்க முடியாது. எனக்கு வேலை செஞ்சு கொண்டே இருக்கணும். அதால வீட்டுல தோட்டம் செஞ்சேன். தினமும் ஏதாவது செய்து கொண்டே இருப்பேன்.

பஸ் பயணம் உங்களுக்கு சிரமம் இல்லையா? பயணம் எனக்கு சிரமம் கிடையாது. பல நாட்கள் இருப்பதற்கும் சீட் கிடைக்காது ஏன் சில வேலைகளில் ஒழுங்காக நின்று கூட செல்ல முடியாது. இளம் வயசுக்காரர் என்னைப் பார்த்த உடனே ஆழ்ந்த நித்திரைக்கு போயிருவாங்க ஏன்டா முழுச்சா எனக்கு சீட் கொடுக்கணும் என்று, சிலர் இந்தாங்கம்மா இருங்கன்னு குடுப்பாங்க சிலர் சிரமப்பட்டு எழும்பும்போது நானே இருங்கையா என்றிடுவேன். நித்திரை போன்று நடிப்பவர்களை பார்த்தால் தான் எனக்கு சிரிப்பாக இருக்கும். இவன் எவ்வளவு தூரம் நடிப்பான் என்று சிலர் போன் பார்ப்பார்கள். சிலர் அப்போதுதான் இயற்கை ரசிப்பார்கள். நான் யாரும் சீட் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்து வருவதில்லை எப்படியாவது நேரத்திற்கு போய் விட வேண்டும் என்றே வருவேன் என்னால் ஒன்றரை மணித்தியாலயம் நின்று பயணிக்க முடியும் மீன் விற்கும் போது பாதி நேரம் நின்று தானே விக்கிறேன் அதுவும் பழகி விட்டது எனக்கு.

வயது என்பது ஒருவரின் தோற்றத்தை மட்டுமே குறிக்கிறது. தைரியம் தன்னம்பிக்கை என்பது வயதுக்கும் தோற்றத்திற்கும் அப்பாற்பட்டது. வெறும் வாய்ப்பேச்சில் வாக்குவாதம் செய்யும் எம்மவருக்கு இந்த லட்சுமி பாட்டி ஒரு சிறந்த படிப்பினை. உருவத்தைக் கொண்டு ஒருவரையும் எடை போடக்கூடாது. தோற்றத்திற்கும் செயலுக்கும் ஒருபோதும் தொடர்பு கிடையாது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமையும் எண்ணப் போக்குகளும் உண்டு அது உருவத்திற்கு உருவம் மாத்திரமே வேறுபடுகிறது. இறக்கும் வரை என் உழைப்பில் வாழ வேண்டும் என்பதே என் ஆசை அதற்காக முடிந்தவரை உழைப்பேன் என்கிறார்.

**இராமையா அனுஷி...✍**

# மு. நித்தியானந்தன் நூல் வெளியீடும் பவளவிழாவும்



அரசியல், கலை, இலக்கிய ஆய்வாளரான பேராசான் மு. நித்தியானந்தனின் பவளவிழாவும் நூல் வெளியீடும் அவரது எழுபத்தைந்தாவது பிறந்த தினமான எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியன்று (01.04.2023) லண்டனில் நடைபெறவிருக்கிறது. முதன்மை அரங்காக, மலையகம் 200 நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மலையக புரட்சிப் பாவலர் பி. ஆர். பெரியசாமியின் புதல்வன் பெரியசாமி சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'மலையகத் தேசிய இன அடையாளம், சில கட்டவிழ்ப்புகள்' என்ற தலைப்பில் நோர்வேயில் முன்னணி எழுத்தாளரும், ஆய்வாளரும், தமிழக அரசின் விருது பெற்றவருமான ந. சரவணனும், 'கடல் கடந்த நாட்கள்' என்ற பொருண்மையில் மு.நித்தியானந்தனும் சிறப்புரையாற்றுகின்றனர். வீரகேசரி, வீரகேசரி வாரவெளியீட்டின் பிரதம ஆசிரியரான ஸ்ரீ கஜன், சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் மு. நித்தியானந்தன் எழுதிய நான்கு நூல்களின் அறிமுகம் வழக்கறிஞர் செ.சிறீக்கந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

'மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்' என்ற நூலை ஜெர்மனியிலிருந்து வருகை தரும் ந.சுசீந்திரனும், 'ஆடல் எங்கேயோ அங்கே' என்ற நூலை க.சிவானந்தனும், 'மலையகச் சுடர்மணிகள்' என்ற நூலை பூங்கோதையும், 'பெருநதியின் பேரோசை' என்ற நூலை மாதவி சிவலீலனும் அறிமுகம் செய்கின்றனர். எம். பௌசர் நூல்களின் வெளியீட்டுரையினை நிகழ்த்துகிறார். ஆவணப்பட இயக்குனரும் ஒளிப்பதிவாளருமான ஸ்ரீதரன் மு.நித்தியானந்தனின் ஆவணப்படத்தினை இவ்வரங்கில் வெளியிடுகிறார்.

'நித்தியம்' என்ற தலைப்பில் வெளியாகும் நித்தியின் பவளவிழா மலரில் உலகளாவிய அளவில் அரசியல் செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் என 80 ற்கும் அதிகமான ஆளுமைகளின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இம்மலர் கடந்த ஐம்பது ஆண்டுகால இலங்கை அரசியல், மலையக இலக்கிய வளர்ச்சி, பாசிச எதிர்ப்பு ஆகியவற்றின் முக்கிய பதிவாகவும் அமைந்துள்ளது.

அருண் சிறீக்கந்தராசா குழுவினரின் மெல்லிசைப்பாடல்கள், கும்மி நடனம், பாரத நாட்டியம், மிருதங்கம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. நிகழ்ச்சியினை சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். என். அனஸ் தொகுத்து வழங்குகிறார். இந்நிகழ்வைத் தொடர்ந்து தமிழகத்திலும் அவரது பிறந்ததினத்தை நடாத்துவதற்கு அவரின் நண்பர்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

**எச்.எச் விக்கிரமசிங்க...✍**



# படித்ததும் பகர்வதும் 135



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

**பெண்களுக்கு சம உரிமை!**




கடந்த மார்ச் 8ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சர்வதேச மட்டத்திலும், நாடளாவிய ரீதியிலும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. கருத்தரங்குகள், கவியரங்குகள், கண்காட்சிகள், கலாசார நிகழ்வுகள், இசை நிகழ்வுகள், சொற்பொழிவுகள், போட்டி நிகழ்ச்சிகள், பாராட்டு வைபவங்கள் என தாராளமாக இடம் பெற்றன. நாட்டின் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்களின் சிறப்பு செய்திகளும் வெளியிடப்பட்டன.

இத்தினத்தில் முக்கியமாக ஒலித்த கோசம் 'பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும்'. 'அவர்களுக்கு உரிய சரியான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்' போன்றனவாகவே இருந்ததை காணமுடிந்தது. 'பெண்களுக்கு ஆண்களைப் போன்றே சம உரிமை வேண்டும்' என்று ஒரு சாராரும் 'நாம் வேண்டுவது பெண்களுக்குரிய சமத்துவமே' என்று இன்னொரு சாராரும் கூறி வருகின்றனர்.

நமது நாட்டில் பெண்களுக்கு எல்லா வகையான உரிமைகளும் வழங்கப்பட்டே இருக்கின்றன எனலாம். உலகின் முதலாவது பெண் பிரதமரை உருவாக்கி நாட்டின் தலைமைத்துவத்தை பெண்களுக்கு வழங்கிய முதல் நாடாக உலகுக்கே முன்மாதிரி காட்டியுள்ளது. இலங்கையில் ஜனாதிபதியாக, பிரதமராக, அமைச்சர்களாக, பிரதம நீதியரசராக, அரசாங்க அதிபர்களாக, நிறுவனங்களின் தலைவிகளாக என்று பல பெண்கள் அதி உயர் பதவிகளை வகித்திருப்பத்தையும், இப்போதும் அதிக அளவில் உயர் பதவிகளை வகித்துக் கொண்டிருப்பதையும் காண முடியும். பல அரச நிறுவனங்களின் தலைமைத்துவம் பெண்கள் வசமே இருப்பதை இன்று நடைமுறையில் பரவலாகக் காணலாம்.

உதாரணமாகக் கூறுவதானால், கொழும்பு, கம்பஹா, நுகேகொட, கண்டி போன்ற பல பிரதான காணிப் பதிவகங்களில் பொறுப்பான பதிவாளர்களாகவும், தொடர்ந்து இரண்டாம், மூன்றாம், நான்காம் தரங்களிலுள்ள உத்தியோகஸ்தர்களாகவும் அதிக அளவில் பெண்களே காணப்படுகின்றனர். பெரும்பாலான அரச நிறுவனங்களில் பெண்களின் ஆதிக்கமே அதிகரித்து இருக்கின்றது.

பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றி உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்போரில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பெண்களாகவே இருப்பது எதிர்காலத்தில் அவர்களது கரமே மேலும் ஓங்கியிருக்கும் என்பதற்கான எதிர்வு கூறலாக எடுத்துக் கொள்ள முடியும்.


இலங்கையின் இத்தகைய சூழலில் பெண்கள் 'சம உரிமை' என்று போராடுவதை விட, பெண்களுக்கு இருக்கின்ற சகல வாய்ப்புகளையும், சகல வளங்களையும் தமது தனித்துவத்தை நிலைநாட்டும் வகையில் சிறப்பாக பயன்படுத்தி, செயல்படுவதே பொருத்தமாகும். இறைவன் ஆண்களையும் பெண்களையும் வெவ்வேறாக, தனிப்பட்ட குணாம்சங்களுடன் படைத்துள்ளதை புரிந்து கொண்டு, தமது பலம், அறிவு, ஆற்றல், வளங்கள், வாய்ப்புகள் போன்றவற்றுக்கு ஏற்ப தமது வரையறைகளை உணர்ந்து சிறப்பாக செயல்படுவதே, பெண்களின் நலன்களை உயர்வாக்கும் என்ற யதார்த்தத்தை எல்லோரும், குறிப்பாக மாதர்கள் சரியாக புரிந்து, ஏற்று செயல்படுவதே நல்லது.

## நெஞ்சுக்கு நீதி

மாதர்கள் உலகினில் மகோன்னதர் புரிந்திடுவோம்
மாசில்லா அன்பினை அவர்கட்கு அளித்திடுவோம்
பாதகங்களின்றி சம உரிமைகளை வழங்கிடுவோம்
பாரெங்கும் சந்தோசம் பரவிட வழி செய்திடுவோம்

## புது வரவு

**அறிவுச் சுடர் எம்.ஏ. இனாயதுள்ளாஹ்**



எத்தனையோ எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களையும் படைப்புகளையும் நூலுருவாக்கமாலேயே இவ்வுலகைப் பிரிந்துள்ளார்கள். இது ஒரு துரதிஷ்ட நிலையாகும். பல்வேறு துறைகளில் எண்ணற்ற ஆக்கங்களை படைத்த, பல்துறை ஆளுமை மிக்க 'திக்கு வல்லை இனாயாஹ்' எனப் புகழ் பெற்ற எம். ஏ. இனாயதுள்ளாஹ்வின் ஆக்கங்கள் பலவற்றை தொகுத்து "அறிவுச் சுடர் எம்.ஏ. இனாயதுள்ளாஹ்" எனும் நூலை வெளியிட்டு சிறப்பு செய்துள்ளது திக்குவல்லை 'ஒஸ்டம்' (OSDEM) நிறுவனம்.

திக்குவல்லையில் மிகச் சிறப்பான சமூக சேவைகளை தொடர்ந்து செய்து வரும் 'ஒஸ்டம்' நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, அதன் உயிர் நாடியாக இருந்து செயல்பட்டவர் காலஞ்சென்ற இனாயதுள்ளாஹ். கவிஞர், எழுத்தாளர், சமூக சேவையாளர், சிந்தனையாளர், மொழிபெயர்ப்பாளர் என பல்துறை ஆளுமைமிக்கவர் இவர்.

சிறந்த இலக்கியவாதியான இவர், கவிதை, கட்டுரை, சிறுகதை, உருவகம், மொழிபெயர்ப்பு என பலதரப்பட்ட துறைகளிலும் எழுதி குவித்துள்ளார். இவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த, பத்தொன்பது தலைப்புகளிலான ஆக்கங்கள் இந்நூலில் இடம் பிடித்துள்ளன.

பேருவலை அல் ஹுமைசரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும் கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி கல்லூரியின் தற்போதைய அதிபருமான எம்.ஆர்.எம். ரிஸ்கி, பிரபல எழுத்தாளர்களான திக்குவல்லை கமால், திக்குவல்லை ஸும்ரி, ஒஸ்டம் நிறுவனத்தின் பொருளாளர் எம்.எச்.எம். நஸார் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்நூலை சிறப்பாகத் தொகுத்துள்ளார்.

திக்குவல்லை இனாயாவின் எழுத்தாற்றலை வெளிக்கொணரும் நோக்கில் சிறுகதை, கட்டுரை கவிதை மொழிபெயர்ப்பு, உருவகம் என சகல பிரிவுகளையும் சார்ந்த ஆக்கங்களையும் கலவையாக தொகுத்திருப்பது, மறைந்த எம். ஏ. இனாயதுள்ளாஹ்வுக்கு ஒஸ்டம் நிறுவனம் செய்துள்ள நிலையான, சிறந்த, தனித்துவமான ஒரு கௌரவிப்பாக சிறப்பிடம் பெறுகிறது. அவரை நூலாசிரியராகவும் ஆக்கியுள்ளது.

நூல்: அறிவுச் சுடர் எம். ஏ. இனாயதுள்ளாஹ், தொகுப்பாசிரியர்: எம்.ஆர்.எம். ரிஸ்கி, முதற்பதிப்பு: 2022, பக்கங்கள்: 88, விலை: ரூபா. 400/=, வெளியீடு: 'ஒஸ்டம்' நிறுவனம், திக்குவல்லை

## சிந்தனை செய் மனமே

**கடமையிற் கண்ணாயிரு!**



அது ஒரு அடர்ந்த காடு. அதன் ஒரு பக்கம் தீப்பற்றி எரிகிறது. மெது மெதுவாய் நடந்து வந்த, வயிறு பெருத்த மான் ஒன்று, சூடு தாங்க இயலாது, இடையில் திகைப்புடனே நிற்கிறது. அங்கேயொரு வேடன் அம்பை எடுத்து மானைக் குறி வைத்து நிற்கின்றான். அந்த மான் பயந்து ஓடவில்லை. அரவங் கேட்டு மறுபுறத்தே தலையைத்திருப்பிப் பார்த்தது அங்கே தன் மேலே பாயத் தயாராக உறுமியபடி புலியொன்று நிற்கின்றது. அப்போதும் அம்மான் ஓடவில்லை.

அப்போது பளிச்சிடும் மின்னலொளி, காதைக் கிழிக்கும் இடியினொலி. வானம் வீழ்ந்துவிடத் தயார் போன்ற நிலை. இவற்றினாலே தடுமாறிட்ட வேடனின் அம்பு புலியின் பக்கம் பாய்கின்றது. குறி தவறி புலியின் அருகில் குத்திட்டு நின்ற அம்பினைக் கண்டு சினங்கொண்டு உறுமிக் கொண்டே புலி, அம்பு எய்த அவனை துரத்துகின்றது.

அவனும் தனது மான் வேட்டையை மறந்து, தப்பிவிட எண்ணி ஓட்டமெடுத்தான். தன்னைச் சூழ்ந்து பேராபத்துகள் இருப்பதைக் கண்டும், மான் தன்னைக் காத்துக் கொள்ள ஓடாததேன்? அது தனது குட்டியை ஈன பிரசவ வலியில் இருந்ததனால்தான் அசையாதிருந்தது. பின்னால் காடு தீப்பற்றி எரிய, ஒருபுறம் வேடன் குறி பார்க்க, மறுபுறம் ஒரு புலி பாயத்தயாராக, இருந்தபோதும், மான் அசையாதிருக்க அதுவே காரணம்.

புலி பிரசவ வாசனையை நுகர்ந்து, தன்மேல் பாய்ந்து, குதறவிடாமல், பத்திரமாக தனது குட்டியை ஈன்று விடுவதே முக்கியம் எனக் கொண்டே மானின் கவனம் முழுதும் அதிலேயே இருந்தது. ஆபத்துக்கள் சூழ்ந்த போதிலும் சிறிதும் கவனம் சிதறாது தன் கடமையை கண்ணாகக் கொண்டே மான் அசையாதிருந்தது.

மின்னலும் இடியும் ஒன்று சேர பெருமழை பெய்ய ஆரம்பித்தது. அதனால் தீயும் அணைந்தது. மானும் தன்குட்டியை பத்திரமாக ஈன்றது. பெய்த மழை நீர், தாய்க்கும் குட்டிக்கும் பெரிதும் உதவியது. தீ அணைந்து ஓய்ந்ததும் மான், தன் குட்டியை தூக்கிக் கொண்டு மெதுவாகக் காட்டுக்குள் சென்றது.

எத்துயர் நேரினும் நமது கடமையில் கவனம் சிதறாமல், பதறியோடாதிருந்து வென்ற மான்போல், நாமும் இருக்க வேண்டும். சிக்கல்கள் நிறைந்த சூழ்நிலைகளிலும் கடமையிற் கருத்தாய் இருந்தாலே, இயற்கையே உதவி செய்யும், வந்திடும் தடைகளை நீக்கும். தடுமாறாதிருந்தால் இலக்கையும் அடைய முடியும். இயற்கையென்ன, செயற்கையென்ன எல்லாம் இறைவனின் செயல்கள்தானே.

## தகவல் களஞ்சியம்

**பெண்கள் விமானம்!**




இவ்வருட சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் 'ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்' பெண் விமானிகளையும் மற்றும் ஏனைய ஊழியர்களாக பெண்களையும் மாத்திரம் கொண்ட விமானக் குழு உறுப்பினர்களுடன் விமானம் ஒன்றை பறக்க விட்டது.

'ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்'ஸின் இந்த விமானம் இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் திருச்சிக்கு, சர்வதேச மகளிர் தினத்தன்று காலை சென்றது. ஏ320 எயார்பஸ் ரக விமானமே இவ்வாறு அனுப்பப்பட்டது,

கெப்டன் சாமிக்க ரூபசிங்க பிரதான விமானியாகவும், பிமாலி ஜீவந்தர துணை விமானியாகவும் செயலாற்றினர். இவ்விமானத்தில் பணியாளர்களாக 05 பெண் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். அவர்களில் விமான நடவடிக்கைகளின் பிரதானி ரோஷனி திஸாநாயக்க, கெபின் மேற்பார்வையாளர் உபுலி வர்ணகுலசூரிய, விமானப் பணிப்பெண் லக்மினி திஸாநாயக்க, ஜெயகலனி கின்சன் மற்றும் ஹர்ஷி வல்பொல ஆகியோர் அடங்குவர். 67 பயணிகள் இவ்விமானத்தில் பயணித்தனர்.

சர்வதேச மகளிர் தினத்தில் பெண்களின் ஆற்றலையும், துணிவையும், சிறப்பையும் ஒன்றாக உலகறியச் செய்த, தனித்துவமான ஒரு நிகழ்வு எனலாம்.

## 'கண்'ணெனும் கேமரா



மனிதனின் ஒவ்வொரு உறுப்பும் தனித்துவமானது. இன்றைய நவீன கால கண்டுபிடிப்புகளை விடவும் பன்மடங்கு சிறப்பு மிக்கது. ஆராய்ந்து பார்த்தால் ஆச்சரியமே ஏற்படும்.

மனிதனுடைய கண்ணானது ஒரு வினாடிக்கு 10 படங்களை பிடித்தெடுக்கும் ஆற்றல் மிக்கது.. ஒரு மனிதன் 8 மணி நேரம் தூங்கினால் கூட ஒரு நாளைக்கு 576,000 படங்களைப் பிடிக்க முடியும். நம் கண்ணின் படப்பிடிப்பின் துல்லியமானது 576 மெகாபிக்சல்களை கொண்டது. வண்ணங்களை படம் பிடிக்கவென அதி விசேட அமைப்பை அது கொண்டுள்ளது. மற்றும் அசையும், அசையாத படங்களை சேமிப்பதற்கான வலுவான நினைவகத்தையும் அது கொண்டுள்ளது.

மனிதனின் ஒரு கண்ணில் அமைந்துள்ள படப்பிடிப்புக்கான விசேட தரங்களைக் கொண்ட ஒரு தகுதிவாய்ந்த கேமராவை நாம் வடிவமைக்க முயற்சிப்போமேயானால் 35 மில்லியன் டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு அதன் நிறை சுமார் நான்கு டன்கள் வரை இருக்குமாம். இத்துணை சிறப்புகளைக் கொண்ட கேமராவைத்தான் நாம் வெறும் 7 கிராம் எடையுடன் "கண்"களாக சுமந்து கொண்டிருக்கின்றோம். என்னே இறைவன் படைப்பின் விந்தை?!

## வா(வீ)ழும் தமிழ்




இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207



# திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 35



கே. பத்மானந்தன்

# ஊழியருக்கான தண்டனைகள் (Staff Punishment)



முகாமையாளர்கள் எதோ ஒரு காரணத்திற்காக ஊழியர்களைத் தண்டிக்கும் போது பெரிய தண்டனை தருவதாகக் காட்டிக் கொண்டு உண்மையில் சிறிய தண்டனைகளையே கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவ்வூழியர்களை இழக்காது, நிறுவனம் அவர்களைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். இல்லாவிட்டால் அவர்கள் வேறு நிறுவனங்களை நாடிச் சென்று விடுவார்கள். இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"( குறள் 562)

நெடுங்காலம் ஆட்சி செய்ய விரும்புகின்ற அரசன் குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது கடுமையாகத் தண்டிப்பவர்போல போல் காட்டிகொண்டு அளவு மீறாமல் தண்டனையைச் செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

இங்கு கடிதோச்சி என்ற சொல்லிற்கு வன்மையாக ஓங்கி என்றும், மெல்ல எறிக என்ற தொடரிற்கு மெதுவாக அடிக்க என்றும், நெடிது ஆக்கம் என்ற தொடரிற்கு நீண்ட கால மேம்பாடு என்றும், நீங்காமை என்ற சொல்லிற்கு நீங்காமலிருக்க என்றும் பொருள். அதாவது நெடுங் காலம் நிலைத்திருக்க வேண்டுமென விரும்பும் ஆட்சியாளர் தண்டனை வழங்கும்போது கடுமையாகத் தொடங்குவதுபோலப் பாவனை செய்து அளவுடன் வழங்கவேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது தண்டனை வழங்கும்போது கோலைக் கடுமையாக ஓங்கிப் பின் கடுமையைக் குறைத்துத் தண்டிக்க வேண்டும் என்கிறார். குற்றம் செய்தவர் மீண்டும் குற்றத்தைத் தொடராமல் இருக்கும் நோக்கில் அவரை வன்மையாகக் கண்டிக்கவேண்டும். ஆனால் தண்டனையை வழங்கும்போது அதில் மென்மை தோன்றும் வகையில் அளவுக்கு மிஞ்சாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஏனெனில் தண்டனை வழங்கப்பட்டவருக்கு குற்றத்திற்கேற்றாற் போலல்லாமல் மிகையாகத் தண்டனை வழங்கப்பட்டால் அவர் வெறுப்புகொள்வார். அவரைத்தொடர்ந்து நாட்டிலிலுள்ளோரும் அரசு மீதான நம்பகத்தன்மையை இழப்பர். அதனால் ஆட்சிக்கு சில சவால்கள் ஏற்படலாம். எனவே திருவள்ளுவர் கூறியது போலத் தண்டனை வழங்கப்பட்டால் ஆட்சி நீண்டு நிலைக்கும்.

எனவே நீண்ட காலம் நிறுவனத்தை தக்க வைத்துக் கொள்ள விரும்பும் முகாமையாளர்கள் ஊழியர்களை தண்டிக்கும்போது கடுமையாகத் தண்டிக்கக் கூடாது என்கிறார் திருவள்ளுவர். கம்பினை ஓங்கிய மாதிரியே அடிக்காமல் கொஞ்சம் குறைத்து அடிப்பது என்பதில் அச்சமும் தரவேண்டும் ஆறுதலும் தரவேண்டும் என்ற நோக்கம் இருப்பதனால் முகாமையாளர் தண்டனையில் கடுமையும், அதை நிறைவேற்றுவதில் கருணையும் காட்டவேண்டும். அதாவது முகாமையாளர் தனது தோரணையில் கடுமையாக இருந்தாலும் உண்மையில் குற்றவாளிகளை தண்டிப்பதில் மென்மையாக இருக்க வேண்டும் என்பதனை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

தண்டனை வழங்கப்படுவது குற்றவாளியை அழிப்பதற்கல்ல மாறாக அவனைத் திருத்த வேண்டியதே நோக்கமாகக் கொண்டதாகும். எனவே முகாமையாளர் வழங்கும் தண்டனை பணியாளரிடம் அச்சத்தைத் தோற்றுவிக்க வேண்டும் ஆனால் அவனை அழித்துவிடக் கூடாது. ஒரு பணியாளன் தொடர்ந்து குற்றங்கள் செய்யாதிருக்கவும் ஏனைய பணியாளர்கள் அம்மாதிரிக் குற்றம் செய்யாமலிருக்கும் பொருட்டு அச்சமூட்டவும் தான் தண்டனைமுறை உள்ளது. கடுமையான விசாரணை கூட ஒருவன் செய்த குற்றத்தின் அளவினை அதற்கான காரணங்களை விசாரித்து உணர்ந்து கொள்ள வழிசெய்யும். பின்னர் குறைவான தண்டனை அளிப்பதன் மூலம் குற்றம் குறைய வாய்ப்பு உள்ளது என்பதே திருவள்ளுவர் முகாமையாளர்களுக்குத் தரும் செய்தியாகும் .

இங்கு குற்றம் இழைத்ததாகக் கருதும் பணியாளர்களை விசாரணை செய்யும்பொழுது முகாமையாளர்கள் நடுநிலமையாக நின்று பக்கச் சார்பற்ற விதத்திலே விசாரணை செய்யவேண்டும் என்பதனைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் வலியுறுத்துகின்றார்.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"( குறள்118)

சமமாக நின்று பின் தன்னிடம் வைத்த பொருளின் எடையை நிறுத்துக் காட்டும் கோல் போல் நெஞ்சத்தில் நடுநிலையாக நின்று ஒரு பக்கம் சாயாமையே சால்புடையார்க்கு அழகாகும் என்பது இக்குறளின் பொருள். ஒரு பொருளை எடைபோடும் முன் துலாக்கோலை முதலில் எடுத்து துலாக்கோலின் சமநிலையைப் பார்த்து அதாவது எடைக்கற்களும் பொருட்களும் இல்லாமல் வெறும் நிலையில் கோலைத் தூக்கிச் சரிபார்த்து பின் எடை போடுவர். அதுபோல விசாரணை செய்பவர் விசாரணை செய்யும் முன் நெஞ்சத்தால் பக்கம் சாராது நடுநிலையாக நிற்பார. நீதி வழங்கும்போது எவர் பக்கமும் சார்ந்திராமல் நீதி வழங்குவார். எனவே முகாமையாளர் பல்வேறு கருத்துக்களைச் சமநிலையில் கேட்டல், ஆய்வு செய்தல், ஏற்கக் கூடியவற்றை ஏற்றல், ஏற்க முடியாதவற்றைத் தொடர்ந்து விவாதித்துச் செழுமைப்படுத்தி ஏற்றல் முதலிய இயல்புகளைக் கொண்டிருந்து முடிவுகளை எடுக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் எண்ணமாகும்.

சிலவேளைகளில் விசாரணையின்போது குற்றம்சாட்டப்பட்ட பணியாளர்கள் பற்றி உண்மைக்கு முரணான முறைப்பாடுகள் அல்லது செய்திகள்கூட முகாமையாளரிற்குத் தெரிவிக்கப்படலாம் . அத்தகைய சந்தர்ப்பங்களில் முகாமையாளர் சொல்லப்படும் செய்திகளைக் கவனமாக ஆராய வேண்டும். இதனையே திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் கூறுகின்றார்.

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"( குறள் 355)

அதாவது எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும் அத் தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல் அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்அறிவாகும்.அதாவது எந்த ஒரு பொருளும் எத்தன்மையதாக இருப்பினும் அப்பொருளின் உண்மையை உணர்வதே அறிவாகும். எனவே முகாமையாளர் என்பவர் எத்துறையிலும் உண்மையை அறிய விரும்புபவராகவும் அதற்கு முயற்சி செய்பவராகவும் உண்மையறிவில் நாட்டம் உடையவராகவுமே இருக்க வேண்டுமெனத் திருவள்ளுவர் விரும்புகிறார். எனவே திருவள்ளுவர் கூறுவதுபோல முகாமையாளர் விசாரணையின்போது பணியாளர் தொடர்பாக உண்மையினை அறிந்து அதற்கேற்பத் தண்டனைகளைத் தீர்மானிக்க வேண்டும்.

உண்மையில் முகாமையாளர்கள் பணியாளர்களைத் தண்டிக்கும் போது எடுத்தஉடனேயேதண்டனை வழங்கும் படிமுறையின் உச்சப் படிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் கிடையாது. தண்டனை வழங்குவதில் நிதானம் தேவை. அது எல்லைகடந்து போகாமல் இருக்க வேண்டும். சில வேளைகளில் வாய்மூல எச்சரிக்கையே போதுமானது இத்தகைய எச்சரிக்கையே கூடப் பணியாளரைத் திருத்திவிடும். எனினும் எச்சரிக்கும்போது கடும் சொற்களைப் பிரயோகிப்பதை முகாமையார் தவிர்க்கவேண்டும். இத்தகைய வார்த்தைகள் பணியாளரின் மனதிலும் அவர்களின் சுயமரியாதையிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். அதன் மூலம் நிறுவனத்திற்கான அவர்களின் பங்களிப்பில் பாதிப்பினை ஏற்படுத்தலாம்.இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்"( குறள்567)

அதாவது கடுமையான சொல்லும் முறைகடந்த தண்டனையும் அரசனுடைய வெற்றிக்குக் காரணமான வலிமையைத் தேய்க்கும் அரம் ஆகும். அரசன் குடிகளிடம் கடுமையான மொழிபேசிக் குற்றம் செய்தோருக்கு அளவுக்கு மிஞ்சிய தண்டனையும் கொடுத்து அச்சுறுத்தும்படியாக நடந்து கொண்டால் அவனது அத்தகைய பண்பற்ற செயலும் முறையில்லாத தண்டனையும் அரசின் வலிமையைச் சிறுகச் சிறுகக் குறைத்துத் தேய்க்கின்ற அரமாக மாறிவிடும் என்கிறார் திருவள்ளுவர். செய்த குற்றத்திற்கு எவ்வகையிலும் பொருந்தாத அளவுக்கு மீறிய தண்டனை தருவதை கையிகந்த தண்டம் என்று கூறும் திருவள்ளுவர் அவ்வகையான தண்டம் செய்தல் தொடருமானால் அது, குடிமக்களுக்கு ஆட்சியின் மீதுள்ள பற்றையும் நம்பிக்கையையும் குறைத்து அதன் மூலம் ஆட்சிக்கவிழ்ப்பிற்கு வழிவகுக்கும் என்கிறார். எனவே முகாமையாளர்கள் தண்டனை வழங்கும்போது கடுமையான சொற்களைப் பயன்படுத்தியும் அதேவேளை அளவுக்கு மிஞ்சிய தண்டனையும் கொடுப்பார்களாக இருந்தால் பணியார்கள் முகாமையாரின் மீதும் நிறுவனம் மீதும் வெறுப்பு அடைவதுடன் நம்பிக்கையையும் இழப்பார்கள். இதன் மூலம் நிறுவனம் தோல்வி அடையும் நிலைக்குச் செல்லலாம்.

எனவே பணியாளர்களுக்குத் தண்டனை வழங்கும் விடயத்தில் மிகவும் நிதானமாக இருப்பதுடன் பயன்படுத்தும் சொற்களில் வழங்கும் தண்டனைகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் அறிவுரையாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 55

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ■ | ■ |
| 05 | ■ | 06 | ■ | 07 | ■ |
| 08 | ■ | 09 | 10 | 11 | 12 |
| 13 | 14 | ■ | 15 | 16 | ■ |
| ■ | ■ | 17 | 18 | ■ | 19 |
| 20 | 21 | 22 | ■ | 23 | 24 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) ஒளியை ஊடுருவும் தன்மையும், நொருங்கும் இயல்பும் கொண்ட திண்மப் பதார்த்தம். எமது வீடுகள் உட்பட அனைத்துக் கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் இதனைக் காணலாம்.
(9) சிரட்டையும், மரத்தடியும் கொண்டு தயாரிக்கப்படும் உபகரணம். சமையலறையில் சோறு, கறி போன்ற உணவுகளைப் பரிமாறும் போது இதனைப் பயன்படுத்துவர்.
(13) தந்திரமான இயல்பு கொண்ட காட்டு மிருகம். நாயின் உருவத்தையொத்த மிருகம். (தலைகீழான சொல்)
(15) பூமி, உலகம், வையகம், தரணி, அகிலம் என்றெல்லாம் பல பெயர்களில் சொல்கிறோம். அந்த அர்த்தம் தருகின்ற மற்றொரு சொல் இது. (தலைகீழான சொல்)
(17) நாம் பயணம் செய்கின்ற வழி.
(20) பழங்கால இலக்கியங்கள், கவிதைகள் பலவற்றில் குறிப்பிடப்படுகின்ற அழகும், நறுமணமும் கொண்ட மலர்.
(23) எமது சுற்றாடலுக்கு பாதிப்புக்கு உண்டாக்குவது இது. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) மாணவர்கள் தங்களது கல்வி அறிவைப் பெருக்குவதற்கான கல்விக்கூடம்.
(3) மூத்த சகோதரனை இவ்வாறு அழைப்பர். (தலைகீழான சொல்)
(7) எமது அன்றாட உணவுகளுக்கு சுவையூட்டுவது இது. சோடியம் குளோரைட் என்ற இரசாயனவியல் பெயரால் அழைக்கப்படுவது. கடல் நீரில் இருந்து இயற்கையாகக் கிடைக்கும் கனியம்.
(10) கவிஞர்களின் கலைப்படைப்பு இது.
(17) மணலும் மணல் சார்ந்த இடமுமான பிரதேசம். ஐவகை நிலங்களில் ஒன்று.
(19) அந்திப் பொழுதைக் குறிக்கும் பெயர்ச்சொல். கழுத்தில் அணியும் ஆபரணத்தையும் இவ்வாறு கூறலாம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 54

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. மருத்துவர் 10. தேர் 12. வளி 15. மக்கா
21. இஞ்சி 24. புறா

**மேலிருந்து கீழ்**

01. மலர் 04. துருவம் 06. பார் 11. தேரை
13. களி 17. காப்பு 18. இலை 19. சிறை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 53

### பாராட்டு பெறுவோர்

**1. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, வெலிப்பன்னை ரஹ்மானிய்யா ம.வி,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**3. நவாப் பாத்திமா ரிப்தியா**
தரம் 06, அல் - அமான் மு.ம.வித்தியாலயம்,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**4. சித்தீக் முகம்மட் அர்கான்**
தரம் II, அக்/ ஆண்கள் பாடசாலை,
இல. 129/1, கவுன்சிலர் நூறுல் ஐன் வீதி, அக்கரைப்பற்று

**6. எம்.எம்.எம். அப்ராஸ்**
மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை
இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**7. யும்னா மின்ஹாஜ்**
தரம் 05A, மா/ ஆமினா ம.தே.பாடசாலை, மாத்தளை,
வறக்காமுளை, உக்குவளை.

**8. ஜே. றஸ்விந்த்**
தரம் 03A, சாவகச்சேரி ஆண்கள் பாடசாலை,
அம்மன் வீதி, மீசாலை கிழக்கு.

**9. ஹகீமா ஹாரிஸ்**
தரம் 03, அல் ஹஸனியா ம.வி. மக்கொன,
இல. 53, இந்திரிலிகொட, மக்கொன.

**10. எம்.என். அம்மார்**
தரம் 05L, ஹ/இக்ரா ஆண்கள் வித்தியாலயம்,
இல. 21/1, சிப்பிக்குளம், அம்பாந்தோட்டை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 55
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**பழைமை: பழைமை எனப்படுவ தியாதெனின் யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு**


**தெளிவுரை :**
பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினா வினால் அது பழகியவர் உரிமைப் பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.

## இவ்வார மழலை



சிராஜுத்தீன்/நூருஸ் ஷப்னா தம்பதிகளின் புதல்வன்

# தோமஸ் அல்வா எடிசன்



ஒரு நாள் பள்ளியிலிருந்து வந்த தோமஸ் எடிசன் கையில் ஒரு கவரில் உள்ள கடிதத்தை தன் அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் என தன் ஆசிரியர் கூறியதாக சொல்லி கொடுத்தான்.

அந்த கடிதத்தை அந்த தாய் கண்ணீரோடு சத்தமாக தன் மகன் கேட்கும் படி இப்படி படித்தாள். 'உங்கள் மகனின் அறிவுத் திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்கு கற்பிக்க திறமையான ஆசிரியர்கள் எங்களிடமில்லை. அதனால் தயவுசெய்து நீங்களே உங்கள் மகனுக்கு கற்பிப்பது நல்லது" என்று.

பல ஆண்டுகளுக்கு பிறகு எடிசனின் தாயாரும் காலமாகிவிட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் கண்டுபிடிப்பாளராகவும் ஆனார்.

எடிசன் ஒரு நாள் தனது வீட்டின் பழைய பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த போது அவர் தன் அம்மாவிடம் முன் பொரு முறை பள்ளியிலிருந்து கொண்டு வந்து கொடுத்த கடிதம் எதேச்சையாக கண்ணில் பட அதை எடுத்து படித்துப் பார்த்தார்...

அதில் இப்படி எழுதியிருந்தது. 'மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்ப வேண்டாம்" என்று...

இதைப் படித்த எடிசன் கதறி அழுதார். பின் அவரது டைரியில் கீழ்க்கண்டவாறு எழுதினார். "மூளை வளர்ச்சியற்ற தோமஸ் அல்வா எடிசன் தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனானான்" என்று.

நம் பிள்ளைகள் மீதான நேர்மறையான எண்ணங்கள் அவர்களை மிக உயரத்துக்கு கொண்டு செல்லும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் அறிந்திருக்க வேண்டும். நம்மாளும் பல எடிசன்களை உருவாக்க முடியும். குழந்தைகள் மனதில் தன்னம்பிக்கையை விதைப்போம்!

## உலகை மாற்றிய புகைப்படம்



முடங்கிய கை கால்களுடன், உருக்குலைந்த தேகத்துடன் தண்ணீர் தொட்டியில் கிடத்தப்பட்டு இருக்கும் இந்தப் பெண்ணின் புகைப்படம் வில்லியம் ஈஜின் ஸ்மித் என்ற புகைப்படக் கலைஞரால் எடுக்கப்பட்டது. நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டதால் இந்த நிலையில் இருக்கும் பெண்ணின் படம்தான் இது. பாதரசத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பின் கோர முகத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டியது இப் புகைப்படம் தான். இந்த நோயின் பெயர் மினமாட்டா.

## பணத்தின் வரலாறு



கி.மு 700ஆம் ஆண்டு லிடியா நாட்டு மன்னர் கயியாசு (ஜாஸ்) என்பவர் எலேக்டிரம் என்னும் நாணயத்தை அறிமுகப்படுத்தினார். 25 சதவீதம் வெள்ளியும், 75 சதவீதம் தங்கமும் கலந்து இதை உருவாக்கினார். இந்த நாணயம் அவரை விதையின் உருவத்தில் இருந்தது. கொடுக்கல் வாங்கலில் இந்த நாணயம் நீண்ட நாட்கள் அதிக வசதியை ஏற்படுத்தியது. கிரேக்க வர்த்தகர்கள் இதன் வசதியை உணர்ந்து இந்த நானையத்தை பயன்படுத்தத் தொடங்கினர்.

இதில் இருந்து மிகக் குறுகிய காலத்திலேயே பல நாடுகளுக்கும் நாணய செலாவணி முறை பரவத் தொடங்கி யது. நாட்கள் செல்ல செல்ல தங்கத்துக்கு பதிலாக செம்பு பயன்படுத்தத் தொடங்கினார்கள். வியாபாரத்தில் அதிக அளவில் நாணயங்கள் பிரச்சினைகளை தீர்த்து வைத்த போதும். அதிக அளவிலான நாணயங்களை தூக்கி செல்வதில் சிரமங்கள் இருந்தது. அதன்பிறகுதான் இதை சரி செய்யும் ஒரு முயற்சியாக முதன் முதலில் காகிதத்தில் அச்சடிக்கும் நோட்டு முறையை கொண்டு வந்தனர். இதில் சீனர்கள் தான் முதன் முதலில் காகித செலாவணி முறையை பணமாக கொண்டு வந்தார்கள் என்று சொல்லவேண்டும்.

கி.மு 119ஆம் ஆண்டிலியே காகித நோட்டுக்களை பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர் சீனர்கள். நாணயம் மிக்க ஒரு வங்கி காகிதத்தில் அச்சடித்துள்ள தொகையை தருவதாக அளிக்கும் உறுதி மொழியை அடிப்படை யாகக்கொண்டுதான் காகிதநோட்டு பணம் புழக்கத்திற்கு வந்தது.

கி.பி 1661ஆம் ஆண்டு ஆடி மாதம் (July) சுவீடன் நாட்டில் ஸ்டாக் கொ (ஹோ)மில் (Stockholm) உள்ள ஒரு வங்கிதான் உலகத்திலேயே முதன் முதலில் அனைவரும் ஏற்று கொள்ளும் வகையில் காகிதத்தில் அச்சிட்டு பணம் என்று வெளியிட்டது.

இன்று காகித நோட்டுக்கள் வளர்ச்சி அடைந்து காசோலைகள், கடன் அட்டைகள் என்று பல்வேறு வடிவில் உருமாற்றம் பெற்று இன்று உலகமெங்கும் கை மாறத் தொடங்கிவிட்டது.

## அறிந்து கொள்வோம்

★ அட்லாண்டிக் பகுதியில் ஆண்டிற்கு ஒரு முறைதான் சூரியன் உதயமாகிறது.

★ கைரேகையை வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.

★ முதன் முதலில் கேள்விக் குறியை பயன்படுத்திய மொழி இலத்தின் மொழி.

★ இந்தியர்களே முதன் முதலில் பருத்தியை உபயோகித்து ஆடை நெய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அதுவரை விலங்குகளின் ரோமங்களினால் மட்டுமே ஆடைகள் தயாரித்து உபயோகிக்கப்பட்டன.

★ உலகின் அமைதியான நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ள ஐஸ்லாந்தில் இராணுவம் கிடையாது.

★ ஆண் மயில்கள் மட்டுமே peacock என அழைக்கப்படுகின்றன. பெண் மயில்கள் PEAHENS என்றே அழைக்கப்படுகின்றன.

## சிறுவர் சித்திரங்கள்






Maryam Sara,
Grade 07, Zam Rifai Hajiar Nationa School



M.S.M. Marjan
Grade 05, G/ Thunduwa Muslim M.V

## வாரம் ஒரு பெரியார்

# தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்



தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ் நாடக உலகின் தனிப்பெரும் தகைமையர்களாக விளங்கிய சிலருள் குறிப்பிடத்தக்கவர். கூத்து மரபிலிருந்து உருவாகி வளர்ந்த தமிழ் நாடக அரங்கம், பெட்டி அரங்க (Proscenium) மரபிற்கேற்ப உருபெற்றது. கலைவாணர் என். எஸ்.கிருஷ்ணனால் "நாடக உலகின் இமயமலை" என்று வர்ணிக்கப்பட்டது சங்கரதாஸ் சுவாமிகள் காலத்தில் தான். தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என அழைக்கப்படும் இவர் சுமார் 40 நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றில் இப்போது 18 நாடகங்களுக்கான பனுவல்களே கிடைத்துள்ளன.

சங்கரதாஸ் சுவாமிகள், தூத்துக்குடிக்கு அருகிலுள்ள காட்டுநாய்க்கன்பட்டி என்னும் சிற்றூரில் இராமாயணப் புலவர் என அழைக்கப்பட்ட தாமோதர கணக்கப்பிள்ளை, பேச்சியம்மாள் இணையருக்கு மகனாக 1867ஆம் ஆண்டு செப்டெம்பர் 7ஆம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்குச் சங்கரன் எனப் பெயரிட்டனர்.

தொடக்கக் கல்வி தன் தந்தை தாமோதரனாரிடம் பெற்ற சங்கரதாசர், பின்னர் பழனியில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகளிடம் பெற்றார். சங்க இலக்கியங்கள், நீதிநூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியன போன்றவற்றைக் கற்றார். இதனால் வெண்பா, கலித்துறை, இசைப்பாடல்களான வண்ணம், சந்தம் ஆகியவற்றைப் பாடும் திறனைப் பெற்றார்.

சங்கரதாசர் தூத்துக்குடி உப்புப் பண்டகசாலையில் சிறிதுகாலம் கணக்கராகப் பணியாற்றினார். 1891ஆம் ஆண்டில் தனது 24ஆவது அகவையில் அப்பணியைத் துறந்து நாடகத்துறையில் ஈடுபட்டார்.

**துறவு வாழ்க்கை**

சாமி நாயுடு குழுவில் பணியாற்றும்பொழுது வாழ்க்கையில் வெறுப்புற்ற சங்கரதாசர் தன் வழிபடு கடவுளாகிய முருகனின் அருள்வேண்டி அருட்செலவு (தீர்த்த யாத்திரை) மேற்கொண்டார். அரையில் மட்டும் உடையுடுத்தி அருட்செலவில் ஈடுபட்ட சங்கரதாசரை பலரும் சுவாமிகள் என அழைக்கத் தொடங்கினர். இதனால் அவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் ஆனார்.

அருட்செலவின் இறுதியில் புதுக்கோட்டை மகாவித்துவான் கஞ்சிரா மான் பூண்டியா பிள்ளை என்பவருடன் சங்கரதாசர் தங்கினார். அவர் சங்கரதாசரை தன்னுடைய மகனாக தத்து எடுத்துக்கொண்டார்.

**மறைவு**

1921 ஆம் ஆண்டில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட சங்கரதாசருக்கு வலதுகையும் இடதுகாலும் முடங்கிவிட்டன. வாய்திறந்து பேச இயலாது போய்விட்டது. இந்நிலையிலேயே 1922ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி அன்று இரவு பாண்டிச்சேரியில் மரணமடைந்தார். அவர் உடல், புதுச்சேரியின் கருவடிக்குப்பம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**பாராட்டுகள்**

சங்கரதாஸ் சுவாமிகள் இலங்கைக்கு வந்திருந்த பொழுது, யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தில் அவரது முத்தமிழ்ப் புலமையை ஆராய அங்குள்ள புலவர்களால் வினாக்கள் தொடுக்கப்பட்டன. அவற்றிற்கு சங்கரதாசர் வழங்கிய விடைகளைப் போற்றிய அச்சங்கத்தினர் அவருக்கு வலம்புரிச் சங்கு ஒன்றைப் பரிசளித்தனர்.

**நினைவேந்தல்கள்**

சங்கரதாசர் நூற்றாண்டு நிறைவையொட்டி, 1967ஆம் ஆண்டில் சென்னையில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி, தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு மலர் ஒன்றை வெளியிட்டும் 1968 ஆம் ஆண்டில் மதுரை தமுக்கம் திடலின் வாயில் அவருக்குச் சிலை எழுப்பியும் அவருக்குத் தி. க. சண்முகம் சிறப்புச் சேர்த்தார். மேலும் சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம் என்னும் அமைப்பைத் தொடங்கி ஆண்டுதோறும் சங்கரதாசர் பிறந்தநாளை தி.க. சண்முகம் கொண்டாடி வந்தார்.

மதுரை தமுக்கம் திடலில் உள்ள நாடக அரங்கிற்குத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் அரங்கம் எனப் பெயரிடப்பட்டு உள்ளது. மதுரை ஒப்பனைக்காரத் தெருவில் இயங்கிவரும் நாடகக் கலைஞர்கள் சங்கத்திற்கும் சங்கரதாசரின் பெயர் இடப்பட்டு உள்ளது. புதுச்சேரியில் உருவாக்கப்பட்டுள்ள பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் நாடகத்துறைக்குத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைத் துறை எனப் பெயரிடப்பட்டு உள்ளது.

சங்கரதாசர் தனது 31 ஆண்டுகால நாடகப்பணி வாழ்க்கையில் எண்ணற்ற நாடகக் கலைஞர்களை உருவாக்கினார்.

# விளையாட்டு

# இலங்கை அணி போராட்டம்



நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றி ஒரு பக்கம் இருக்க தோல்வி ஒன்றை தவிர்க்க வேண்டிய பெரும் போராட்டத்திற்கு முகம்கொடுத்திருக்கிறது.

வெலிங்டனில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (18) நியூசிலாந்தின் துடுப்பாட்டத்தை கைகெட்டி பார்த்திருக்கும் அளவுக்கு இலங்கையின் பந்துவீச்சு பலவீனமாக இருந்தது. கடைசியில் நியூசிலாந்து அணி 123 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 580 ஓட்டங்களை பெற்ற நிலையில் முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது.

பின்னர் இரண்டாவது நாள் ஆட்டத்தின் கடைசி நேரத்தில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி ஆட்ட நேரம் முடிவதற்குள் இரண்டு விக்கெட்டுகளை பறிகொடுத்தது. ஓஷத பெர்னாண்டோ 6 ஓட்டங்களுடன் வெளியேறியதோடு குசல் மெண்டிஸ் பூஜ்யத்திற்கே ஆட்டமிழந்தார்.

ஆட்டநேர முடிவில் இலங்கை 17 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 26 ஓட்டங்களை எடுத்துள்ளது. அதாவது நியூசிலாந்தை விடவும் இலங்கை 554 ஓட்டங்களால் பின்தங்கி இருக்கிறது.

இதனால் முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்தை முந்துவதற்கு முன்னர் பலோ ஓன் ஒன்றை தவிர்க்க போராட வேண்டி இருக்கிறது. அதாவது தோல்வியை விட முதலில் இலங்கை இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்க வேண்டி உள்ளது.

அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 16 ஓட்டங்களுடனும் நைட் வொட்ச்மனாக வந்த ஓஷத பெர்னாண்டோ 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் இன்னும் துடுப்பெடுத்தாட வேண்டி உள்ளனர்.

தனது கன்னி டெஸ்ட் போட்டியில் களமிறங்கி இருக்கும் நிஷான் மதுஷ்கவும் இன்னும் துடுப்பெடுத்தாட வேண்டி உள்ளார். முதல்தர போட்டிகளில் சோபித்துவரும் மதுஷ்கவுக்கு தனது திறமையைக் காட்ட இது முக்கிய களமாக உள்ளது.




இந்த டெஸ்டின் முதல் நாள் ஆட்டம் 48 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று நியூசிலாந்தின் துடுப்பாட்டம் மாறுபட்டிருந்தது. 155 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்து நேற்று முதல் இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து அணி டெஸ்ட் போட்டியில் வேகமாக ஓட்டங்களை குவிக்கும் பாஸ் போல் துடுப்பாட்ட பாணியை பின்பற்றியது.

நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த கேன் வில்லியம்சன் மற்றும் ஹென்ரி நிகோல்ஸ் இருவரும் 3 ஆவது விக்கெட்டுக்கு 361 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

இது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி பெற்ற ஐந்தாவது அதிகூடிய இணைப்பாட்ட ஓட்டமாகும். இந்த ஐந்து அதிகபட்ச இணைப்பாட்ட ஓட்டங்களில் மூன்று இலங்கைக்கு எதிராக பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது கேன் வில்லியம்சன் 296 பந்துகளில் 215 ஓட்டங்களை பெற்றதோடு ஹென்ரி நிகோல்ஸ் ஆட்டமிழக்காது 240 பந்துகளில் 200 ஓட்டங்களை பெற்றார். அதாவது நியூசிலாந்து அணிக்காக ஒரே டெஸ்ட் இன்னிங்ஸில் இருவர் இரட்டைச் சதம் பெற்ற முதல் போட்டி இதுதான். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வது இது 18ஆவது தடவையாகும்.



குறிப்பாக கேன் வில்லியம்சன் டெஸ்ட் கிரிக்கெட்டில் முக்கியமான ஒரு வீரராக மாறி வருகிறார். அவர் கடைசியாக ஆடிய நான்கு இன்னிங்ஸ்களில் மூன்று இலக்க ஓட்டங்களை பெறும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்த இன்னிங்ஸில் அவர் டெஸ்ட் போட்டிகளில் 8000 ஓட்டங்களை பெற்ற முதல் நியூசிலாந்து வீரராகவும் பதிவானார். அவரது தற்போதைய ஓட்ட சராசரி 54.89 ஆகும். அதாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் 8000க்கும் மேற்பட்ட ஓட்டங்களை பெற்றிருக்கும் 35 துடுப்பாட்ட வீரர்களில் இந்த ஓட்ட சராசரி ஐந்தாவது சிறந்ததாகும்.

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் வில்லியம்சன் பெற்ற சதங்கள் 41ஆக அதிகரித்திருக்கிறது. இதன் மூலம் அவர் நியூசிலாந்து அணிக்காக அதிக சர்வதேச சதங்கள் பெற்ற ரொஸ்ட் டெய்லரின் (40) சாதனையையும் முறியடித்தார்.

நியூசிலாந்து அணி இப்படி சாதனைகளை முறியடிக்கும்போது இலங்கை பந்துவீச்சாளர்கள் எதிரணியின் விக்கெட்டுகளை சாய்க்க முடியாமல் தட்டுத் தடுமாறினார்கள். கசுன் ராஜித்த, அசித்த பெர்னாண்டோ மற்றும் லஹிரு குமார மூவரும் நூறுக்கும் மேல் ஓட்டங்களை விட்டுக்கொடுத்தனர். சரியான இலக்கைக் கொண்டு ஒரு திட்டத்தில் பந்துவீச அவர்களால் முடியாமல்போனது.

இலங்கை அணி பெரும் எதிர்பார்ப்புடனேயே நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டது. முதல் டெஸ்டில் கடைசி பந்தில் தோற்றதால் உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பையும் இழந்தது. இந்நிலையில் தொடர் தோல்வி ஒன்றை தவிர்க்க இந்த டெஸ்டில் இலங்கை அணி வெற்றி பெறுவது கட்டாயமாக உள்ளது.

என்றாலும் தற்போதைய நெருக்கடியில் இந்த டெஸ்டை குறைந்தது சமநிலை செய்தாலே பெரும் கௌரவமாக இருக்கும்.

## குறிப்புகள்

### வரலாற்றில் அரிது

கிறைஸ்சேர்ச்சில் நடந்த இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில் நியூசிலாந்து அணி போட்டியின் கடைசி பந்தில் வெற்றியீட்டியது ஐந்து நாட்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட்டில் இது மிக அரிதான சம்பவம். மூன்று விக்கெட்டுகள் கைவசம் இருக்க கடைசி ஓவருக்கு நியூசிலாந்து அணி 8 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தது.



ஆனால், முன்னணி துடுப்பாட்ட வீரர் கேன் வில்லியம்சன் சதம் பெற்று களத்தில் இருந்தார். அசித்த பெர்னாண்டோ வீசிய முதல் இரு பந்துக்கும் இரண்டு ஓட்டங்கள் பெற மூன்றாவது பந்தில் இரண்டாவது ஓட்டத்தைப் பெற முயன்று மட் ஹென்ரி ரன் அவுட் ஆனார்.

நான்காவது பந்தில் கேன் வில்லியம்சன் பௌண்டரி விளாசியதால் நியூசிலாந்து அணி கடைசி இரு பந்துகளுக்கும் ஒரு ஓட்டத்தை பெற வேண்டி இருந்தது. ஆனால் அந்த பந்துகள் இரண்டையும் பௌன்சராக வீசி துடுப்பாட்ட வீரருக்கு அடிக்க முடியாமல் செய்தாலும் கடைசி பந்தில் விக்கெட் காப்பளருக்கு பந்து சென்றபோது ஒரு ஓட்டத்தை பெற்று நியூசிலாந்தால் வெற்றி பெற முடிந்தது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே அணி ஒன்று போட்டியின் கடைசி பந்தில் வெற்றி பெறுவது இது இரண்டாவது முறைதான். இதற்கு முன்னர் இவ்வாறான ஒரு சம்பவம் நிகழ்ந்தது இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்னராகும். தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு 128 ஓட்டங்கள் தான் வெற்றியிலக்கு. ஆனால் கடைசி நாளில் கடைசி ஓவருக்கு அந்த அணி எட்டு ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது. ஆனால் அப்போதெல்லாம் ஓவருக்கு எட்டு பந்துகள் வீச வேண்டும்.

எப்படியோ கடைசி பந்தில் ஒரு ஓட்டத்தை பெற வேண்டி இருந்தபோது காலில் பட்ட பந்துக்கு மறுமுனைக்கு ஓடி இங்கிலாந்து வெற்றியீட்டியது.

இதற்கு அடுத்து டெஸ்ட் போட்டியில் குறைந்த பந்துகளை மிச்சம் வைத்து வெற்றியீட்டிய ஆட்டம் 1983ஆம் ஆண்டு கிங்ஸ்டனில் நடந்தது. இந்தியாவுக்கு எதிரான இந்தப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி கடைசி ஓவருக்கு 5 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தபோது அந்த அணி நான்கு பந்துகளை மிச்சம் வைத்து வெற்றியீட்டியது.

### டி20இல் ஓட்டங்கள் விட்டுக்கொடுக்காதவர்

டி20 கிரிக்கெட்டில் நான்கு ஓவர்களையும் வீசி ஓட்டங்கள் விட்டுக்கொடுக்காமல் இருக்க முடியுமா? பொதுப் புத்திக்கு எட்டிய வரை இது நடக்க முடியாத ஒன்றாக இருக்கலாம், ஆனால் இப்படி ஒரு சாதனையும் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

2021 நவம்பரில் அன்டிகுவாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத்திற்கான அமெரிக்கப் பிராந்திய தகுதிகாண் போட்டியில் கனடா மற்றும் பனாமா அணிகள் விளையாடியபோதே இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது.




கனடாவின் மிதவேகப் பந்துவீச்சாளர் சாத் பின் சபர் தனது நான்கு ஓவர்களுக்கும் ஒரு ஓட்டத்தைக் கூட விட்டுக்கொடுக்காமல் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா ஒரு விக்கெட் இழப்புக்கு 245 ஓட்டங்களை பெற்ற நிலையில் பனாமா அணி 37 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இந்தப் போட்டிக்கு ஆறு நாட்கள் முன் நிகழ்ந்த இந்தியாவின் மாநில அணிகளுக்கு இடையிலான டி20 போட்டியில் மனிப்பூர் அணிக்கு எதிராக விதர்பா அணியின் அக்ஷை கார்ன்வர் சரியாக 4 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டத்தையும் விட்டுக்கொடுக்காமல் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

எனினும் டெஸ்ட் ஆடும் அணிகளுக்கு இடையிலான டி20 போட்டிகளில் தனது நான்கு ஓவர்களுக்கும் குறைந்த ஓட்டங்களை விட்டுக்கொடுத்தவராக இந்தியாவின் புவனேஷ்வர் குமார் உள்ளார். 2022 செப்டெம்பரில் டுபாயில் நடந்த ஆப்கான் அணிக்கு எதிரான போட்டியில் அவர் 4 ஓவர்களுக்கும் வெறும் 4 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

# வரலாற்றை மாற்றியவரின் கதை





"போஸ்பரி பிளப்" என்பது உயரம் பாய்தல் விளையாட்டின் மரபை மாற்றிய உத்தி. கம்பத்திற்கு மேலால் பின்புறமாக பாயும் உத்திதான் இது. இப்போது எல்லோரும் பயன்படுத்தும் உத்தியாக இருந்தாலும் 55 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பாணி பெரிதாக அறியப்படாத ஆபத்தான ஒன்று.

இதனை முழுமையாகத் தகர்த்தெறிந்தவர் அமெரிக்க தடகள வீரர் டிக் போஸ்பரி. இதனாலேயே இந்த உத்திக்கு அவரது பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. போஸ்பரி கடந்த மார்ச் 12 ஆம் திகதி தனது 76ஆவது வயதில் காலமானார். புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் அமெரிக்காவின் சோல்ட் லேக் சிட்டியில் இருக்கும் பராமரிப்பு இல்லத்தில் வைத்து மரணித்தார்.

டிக் போஸ்பரியின் பாணி உயரம் பாய்தல் விளையாட்டின் வரலாற்றையே தலைகீழாக புரட்டியது என்ற வகையில் அவர் நினைவுகூறத்தக்க ஒருவர். "இந்த பாணி இயற்கையான ஒன்று, அதனை நான்தான் முதலில் கண்டுபிடித்திருந்தேன்" என்று போஸ்பரி ஒருதடவை கூறியிருந்தார்.

உயரம் பாய்தலுக்கு முன்னரெல்லாம் தனித்த ஒரு முறை இருக்கவில்லை. சிலர் நேராக ஓடிவந்து முன்னால் பாய்வார்கள். சிலர் தலைகுப்புற பாய்வார்கள். மற்றது கத்தரிப் பாய்ச்சலுக்கு அதிக செல்வாக்கு இருந்தது. அதாவது கம்பத்திற்கு மேலால் குறுக்காகப் பாய்ந்து இரு கால்களையும் லாவகமாக நகர்த்தும் ஒரு பாணி.

1947 மார்ச் 6 ஆம் திகதி அமெரிக்காவின் போர்ட்லாண்ட், ஓரேவில் பிறந்த டிக் போஸ்பரிக்கு உயர் பாடசாலையில் உயரம் பாய்தல் விளையாட்டை தேர்ந்தெடுத்தபோது இந்த உத்தி எதுவும் பழக்கப்படவில்லை. உண்மையில் அவரை திறமையான விளையாட்டு வீரராக யாரும் பார்க்கவில்லை. பாடசாலை கால்பந்து, கூடைப்பந்து விளையாட்டில் எல்லாம் பங்கேற்றபோதும் எதுவும் வெற்றி தரவில்லை.

அப்போதுதான் அவர் ஒருநாள் புதிய பாணி ஒன்றை முயற்சித்தார். தனது இடுப்பினால் கம்பத்தை தாண்ட முயன்றார். அது இயற்கையாக அவருக்கு வந்தது. ஆனால் பயிற்சியாளர்களுக்கு இந்த பாணி ஆரம்பத்தில் பிடிக்கவில்லை. சட்டப் புத்தகத்தை புரட்டி இது அனுமதிக்கப்பட்டதா என்று தேடினார்கள். இந்த உத்தியை பயன்படுத்தினால் வெற்றி பெற முடியாது, காயத்தை ஏற்படுத்தக் கூடும் என்றெல்லாம் எச்சரித்தார்கள்.

ஆனால் பயிற்சியாளர்களின் அறிவுரைகளை அவர் பொருட்படுத்தவில்லை. எல்லாமே குண்டு சட்டியில் குதிரைகள் என்பது அவரது எண்ணம். தொடர்ந்து பயிற்சி எடுத்தார். தனது உத்தியை மேம்படுத்தினார். அவர் பாய்வது எல்லோருக்கும் விசித்திரமாக இருந்தாலும் அது வெற்றி தர ஆரம்பித்தது. அவர் ஒரு தேர்ந்த உயரம் பாய்தல் வீரராக உருவெடுத்துக் கொண்டிந்தார்.

"உயரம் பாய்தலில் கம்பத்திற்கு மேலால் உயர பாயும்போதும் பறப்பது போல உணர்வீர்கள்" என்று 2002 ஆம் ஆண்டு டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் போஸ்பரி கூறுகிறார்.

1968 ஆம் ஆண்டு மெக்சிகோ சிட்டியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் போஸ்பரி மாத்திரம் பின்பக்கமாக பாயும்போது சிலருக்கு அது நகைச்சுவையாக இருந்தது. மேல் மாடியில் இருந்து பிணத்தை தள்ளிவிடுவது போல் இருந்தது. சிலர் நையாண்டி கூச்சலும் இட்டார்கள்.

ஆனால் போஸ்பரி படிப்படியாக உயரங்களை தாண்டும்போது நகைச்சுவை மாறி பலருக்கு ஆச்சரியமாக இருந்தது. 2.18 மீற்றர் உயரக் கோடு தாண்டப்பட்ட பின் மூன்று பதக்கங்களுக்கான போட்டியில் போஸ்பரியுடன் வலன்டின் கவ்ரிலோவ் மற்றும் எட் கருதஸ் இருந்தனர். மூவரும் 2.20 மீற்றர் உயரத்தை பாய்ந்துவிட்டார்கள். 2.22 உயரத்தை கவ்ரிலோவ் இரண்டாவது முயற்சியில் தாண்டிவிட்டார், கருதஸினால் முடியவில்லை.

எனவே போஸ்பரி 2.24 உயரத்தை வெற்றிக்காக நிர்ணயித்தார். கவ்ரிலோவினால் அதனை தாண்ட முடியவில்லை. போஸ்பரி மூன்றாவது முயற்சியில் அதனைத் தாண்டி தங்கப் பதக்கத்தை வென்றது மாத்திரமல்ல புதிய ஒலிம்பிக் சாதனையும் படைத்தார்.

ஒருசில ஆண்டுகளுக்குள்ளேயே "போஸ்பரி பிளப்" உத்தி பட்டி தொட்டி எல்லாம் பிரபலமானது. 1972 ஆம் ஆண்டு மியுனிச்சில் நடந்த அடுத்த ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற 40 உயரம் பாய்தல் வீரர்களில் 28 வீரர்கள் இந்த பாணியை பயன்படுத்தினார்கள்.

இன்றாகும்போது "போஸ்பரி பிளப்" பாணிதான் உயரம் பாய்தலில் பாடப்புத்தக பாணியாக மாறியிருக்கிறது.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram

# செந்தூரம்

2023 மார்ச் 19 ஞாயிற்றுக்கிழமை



தமிழ் எப்.எம் பணிப்பாளர்

**ஹோஷியா அனோஜன்**

# உயிர்களை காத்த ‘சிண்ட்ரோம் கே’ நோய்






சிண்ட்ரோம் கே நோய் பற்றி தெரியுமா. மருத்துவ புத்தகங்களில் இந்த தொற்று நோய் பற்றி எந்தக் குறிப்பும் இருக்காது, ஆனால் நாஜிப் படைகளைப் பொறுத்த வரை இந்த வைரஸ் பயங்கரமானது. இத்தாலிய மருத்துவர்கள் சிலரால் கண்டுபிடிக்கப்பட்ட போலி நோய்தான் இந்த சிண்ட்ரோம் கே.

1943 செப்டெம்பரில் ரோமில் ஜெர்மனிய ஆக்கிமிப்பை அடுத்து அங்குள்ள யூதர்கள் சித்திரவதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் நீடித்த நாஜி ஆக்கிரமிப்பில் 8,564 யூதர்கள் வதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.


அப்போது டைபர் நதிக்கரைக்கு அருகில் இருக்கும் மருத்துவமனை ஒன்று யூதர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததோடு அவர்களை காப்பற்ற என்ன வழி என்று தேடியபோதே சிண்ட்ரோம் கே வைரஸை கண்டுபிடித்தார்கள்.

மருத்துவமனையில் யூதர்களை தனியாக ஒரு பகுதியில் வைத்தார்கள். அவர்களுக்கு சிண்ட்ரோம் கே வைரஸ் ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. அருகில் செல்பவர்களுக்கு இந்த பயங்கய வைரஸ் தொற்றும் என்று எச்சரிக்கப்பட்டது.

மருத்துவமனையை சோதனையிட நாஜிப்படையினர் வந்தபோதும் அந்த யூதர்கள் பயங்கரமாக இருமியும், கூச்சலிட்டும் படையினரை பயமுறுத்தினார்கள்.

வந்த படையினர் அவர்களுக்கு அருகிலும் செல்லாமல் திரும்பிப்போய்விட்டார்கள்.

# 17 ஆண்டுகள் மௌனம் காத்த பிரான்சிஸ்



அமெரிக்க சுற்றுச்சூழலியலாளர் ஜோன் பிரான்சிஸின் குரலை அவரால் கூட அடையாளம் காண முடியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தால் யாரும் இருக்கவில்லை. அப்போதுதான் அது தனது குரல் என்று அவருக்கு தெரிந்தது. ‘சத்தமாக சிரிக்க ஆரம்பித்தேன்’ என்று தனது ஆச்சரியத்தை ஒரு முறை அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு பகிர்ந்து கொண்டார்.

பிடிவாதமாக 17 ஆண்டுகள் பேசாமல் இருந்தால், எப்படி அவருக்கு அவரது குரல் ஞாபகம் இருக்கும்? உண்மையில் பிரான்சிஸ் ஒரு பிடிவாதக்காரர்தான்.

1971ஆம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோ விரிகுடாவில் ஏற்பட்ட எண்ணெய் கசிவால், விலங்குகளின் அழிவை கண்ணால் பாத்தவர் அவர். எல்லாவற்றுக்கும் காரணம் எண்ணெய்தான் என்று மோட்டார் வாகனங்களை ஓட்டுவதை மாத்திரம் அல்ல அதில் பயணிப்பதையும் நிறுத்திக் கொண்டார்.

எங்கே போவதென்றாலும் கால் நடைதான். ஆனால் அவரது செயல் பார்ப்பவர்களுக்கு முட்டாள்தனமாகத் தெரிந்தது. வீதியில் பார்ப்பவர்கள் எல்லோரும் அவரிடம் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள், அது விவாதமாக மாறியது, தனது கருத்தை ஒருவரும் கேட்பதாகவும் இல்லை.

எனவே, 1973 ஆம் ஆண்டு ஒருநாள் மௌனம் இருப்பதாக முடிவு செய்தார். பின்னர் அது இரண்டு நாளானது கடைசியில் 1990 ஆம் ஆண்டு வரையில் 17 ஆண்டுகள் அவர் வாய் திறந்து பேசவே இல்லை. இந்தக் காலப்பகுதியில் அவர் நில முகாமைத்துவத்தில் கலாநிதிப் பட்டம் கூட பெற்றார்.

அதேபோன்று 1972 ஆம் ஆண்டு வாகனங்களில் போவதில்லை என்று அவர் எடுத்த முடிவில் 1994 ஆம் ஆண்டு வரை இருந்தார். இந்தக் காலப்பகுதியில் அவர் அமெரிக்காவின் 48 மாநிலங்களுக்கு, ஏன் தென் அமெரிக்காவுக்குக் கூட நடந்தே சென்றிருக்கிறார்.

# ஜுவானா மரியாவின் கதை




அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரைக்கு அப்பால் இருக்கும் சான் நிகொலாஸ் என்ற குட்டித் தீவில் நிகொலினோ என்ற பூர்வீக அமெரிக்க பழங்குடியினர் வாழ்ந்து வந்தார்கள். அமெரிக்க கண்டத்தில் மனிதக் குடியேற்றம் நிகழ்ந்த 10,000 ஆண்டுகளுக்கு மேலாக இந்த மக்கள் அந்தத் தீவை வாழ்விடமாகக் கொண்டிருந்தார்கள்.

அதாவது அவர்களின், மொழி, பழக்க வழக்கங்கள் எல்லாமே தனித்தது. வெளி உலகத்துடன் கலக்காததால் அவர்களின் வாழ்வியலில் எந்தக் கலப்படமும் இருக்கவில்லை. ஆனால் அமெரிக்காவின் காலனித்து யுகம் ஆரம்பத்தபோது பழங்குடியினரின் அழிவும் ஆரம்பமானது. அது நிகொலினோ மக்களுக்கும் பொருந்தும்.

ரஷ்ய உரோம வேட்டைக்காரர்கள் தீவுக்கு வந்து அங்குள்ள மக்களை படுகொலை செய்தும் பெண்கள் மீது பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டும் அட்டூழியங்களை செய்தனர். தவிர, அந்நிய வைரஸ்களால் தாக்கப்பட்ட அந்த மக்களின் பெரும் பகுதியினர் உயிரிழந்தனர்.

கிறிஸ்தவ மிசனரிகள் தீவில் இருந்த எஞ்சியவர்களை மதமாற்றி தலைநிலத்திற்கு அழைத்து வந்தனர். இது நிகழ்ந்தது 1835 வாக்கில். ஆனால் அந்த தீவில் ஒரே பழங்குடிப் பெண் மாத்திரம் எஞ்சியிருந்தார். அவரை ஜுவானா மரியா என்று அழைத்தபோதும் அவரது உண்மையான பெயர் தெரியவில்லை.

அந்த யாரும் இல்லாத தீவில் அவர் தனியாக 18 ஆண்டுகள் வாழ்ந்தார். அதாவது நிகொலினோ பழங்குடியினரின் எஞ்சிய கடைசி மனிதன் இவர்தான். அந்த மொழியை பேசிய கடைசியானவரும் இவர்தான். என்றாலும் அவரும் 1853 ஆம் ஆண்டு அந்தத் தீவில் இருந்து அகற்றப்பட்டார். தீவில் இருந்து வெளியேறிய அந்தப் பெண் ஒரு சில வாரங்களிலேயே உயிரிழந்துவிட்டார்.



அவரோடு 10,000 ஆண்டுகள் பாரம்பரியத்தைக் கொண்ட நிகொலினோ என்ற இனமும் அழிந்துவிட்டது.

அமெரிக்கா செய்த ஆயுதப் பரிசோதனைகளால் இன்று அந்த தீவு புல் பூண்டு கூட முளைக்காத வெற்று பூமியாகிவிட்டது.



கிருஷன்யா (21.03.23)
ரசிக்கா மனோகரி, ரகுபிரதீப்



Zaid Dilshad
17.03.2017



தமிழ் நாட்டு மரபு மாமணி கவிஞர் சரஸ்வதி பாஸ்கரனுடன் கவிஞர் தாமரைச் செல்வி



மணிமாறன், சுவேதா



அஹானா, மாவன்



Benaya, Ashruthi, Thrisha, kimsuka, Aisha

# விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பின் விருது வழங்கும் விழா

கனடாவில் உள்ள விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பு இலங்கையில் பல்துறைகளில் சாதனைப் படைத்த 50க்கும் மேற்பட்ட பெண்களை விருது வழங்கி கௌரவிக்க இருக்கிறது. இந்த விருது வழங்கும் விழா கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பின் தலைவி திருமதி சசி நரேன் ஏற்பாட்டில் கோலாகலமாக இடம்பெறவுள்ள இவ்விழாவில், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், தொழில் அதிபர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.



kali

# முஹம்மட் இர்பானின் பொன்மாலைப் பொழுது



தென்றல் எப்.எம்மின் அறிவிப்பாளரும் பொன்மாலைப் பொழுது ஏற்பாட்டாளருமான முஹம்மட் இர்பானின் தென்றல் எப்.எம்.மின் பொன்மாலைப் பொழுது Unwind இசை நிகழ்ச்சி இன்று 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

நம் நாட்டின் முன்னணி இசைக் குழுவினரின் இசையில் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்ச்சி தினகரன், வார மஞ்சரி ஊடக அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கான அனுமதி முற்றிலும் இலவசம். இதில் குடும்பத்தோடும் நண்பர்களோடும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கிறார்கள்.



























# ஆடற்கலைப் போட்டியில் வெற்றிக் கொடி கட்ட களம் அமைத்து கொடுத்த நடன ஆசிரியை பிரேமா ஷாருந்தன்

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் நாடு முழுவதிலும் உள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய ஆடற்கலைப் போட்டியில் முதலாம் இடத்தை திருகோணமலை அலஸ் தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நாகம்மாள் அறநெறிப் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்று 50,000 ரூபா பணப்பரிசையும் வெற்றிக் கிண்ணத்தையும் பதக்கங்களையும் சுவீகரித்துக் கொண்டது. இந்த அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகள் வெற்றியீட்ட பலர் காரணமாக இருந்தாலும் அவர்களில் முக்கியமானவர் இவர்களுக்கு நடனம் கற்றுக் கொடுத்து வரும் நடன ஆசிரியர் தான். இவர்களுக்கு நடனம் கற்றுக் கொடுத்த நடன ஆசிரியர் திருமதி பிரேமா ஷாருந்தன்.

இவர் இந்த அறநெறிப் பாடசாலையில் நீண்ட காலமாக நடனம் கற்றுக் கொடுத்து வருகின்றார். இவர் முறையாக பரதநாட்டியக் கலையை கற்றவர். அவர் கற்ற நடனத்தை அவர் பலருக்கும் கற்றுக் கொடுத்து வருகின்றார்.

திருகோணமலை நிலாவெலியில் வசித்து வரும் இவரை அண்மையில் சந்தித்து உரையாடிய போது இவர் அளித்த விபரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

**நீங்கள் பரதநாட்டியத்தை எங்கு கற்றீர்கள்?**

திருமதி பிரேமா ஷாருந்தன் ஆகிய நான், திருமதி தவசிலிங்கத்தின் வழிநடத்தலின் கீழ் இயங்கும் முத்துக்குமாரசுவாமி கோவில் இசை நடன கலாலயத்தில் பரதநாட்டியத்தினை தரம் 6ம் வகுப்பில் இருந்து கற்று வந்தேன்.

**பரதநாட்டியத்தை யாரிடம் கற்றீர்கள்?**

கீதா ஆசிரியர், சிவதர்சினி ஆசிரியர் ,சிவரஞ்சினி ஆசிரியர், கேதாரணி ஆசிரியர், சசிகலா ஆசிரியர், ஜெகதீஸ்வரி ஆசிரியர் ஆகியோரிடம் கற்றுக் கொண்டேன்.

**நீங்கள் கலைத் துறையில் பெற்ற சித்திகள் எவை?**

வட இலங்கை சங்கீத சபை பரீட்சை தரம் 4இல் 2 ம் தர சித்தி பெற்றேன். வாய்ப்பாடு தரம் 1இல் 2ம் தர சித்தியை பெற்றேன். மிருதங்கம் தரம் 2இல் 1ம் தர சித்தியினை பெற்றுள்ளேன்.

**இதைவிட மேலதிகமாக வேறு ஏதும் கற்றுக் கொண்டீர்களா?**

இசை நடன கலாலயத்தில் உயர்தர பரீட்சைக்காகவும் கல்வி கற்றேன்.

**இதனை யாரிடம் கற்றுக்கொண்டீர்கள்?**

சசிகலா ஆசிரியரிடம் பயின்று யாழ்ப்பாண இராமநாதன் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகினேன்.

முதுகலைமாணி பட்டத்தை எங்கு பெற்றீங்கள்?

இந்தியாவில் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டேன். திருமதி வி.தவசிலிங்கத்தின் வழிகாட்டலின் கீழ் இயங்கும் இசை நடன கலாலயத்தின் மூலமே என் உயிருக்கும் மேலான பரதத்தை இலவசமாக பயின்றேன்.

**நீங்கள் இப்போது கலைத்துறையில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

இலங்கை ஆசிரியர் சேவைப் பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் சிறந்த புள்ளிகளைப் பெற்று ஆசிரியராக தெரிவாகி தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியில் நடன பாட ஆசிரியராக 5 வருடங்கள் பணியாற்றி வருகின்றேன்.

**நடனத் துறை கற்பித்தலில் நீங்கள் கண்ட முன்னேற்றங்களாக எதை கூறலாம்?**

மாணவர்களை சாதாரண தரத்தி்லும் உயர் தரத்திலும் தயார்படுத்தி A, B சித்திகளைப் பெற வைத்ததை குறிப்பிட்டுக் கூறலாம்.

**நீங்கள் இதைவிட வேறு ஏதாவது துறைகளில் ஈடுபாடு காட்டி வருகின்றீர்களா?**

தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியில் நடன பாட ஆசிரியராக இருந்து வருவதுடன் அறநெறி பாடசாலையிலும் கற்றுக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

**இங்கு அறநெறியை மட்டும் தான் போதித்து வருகின்றீர்களா?**


இல்லை, நடன ஆசிரியராக நடனத்தையும் போதித்து வருகின்றேன்.

**கலைத்துறை அல்லது நடனத்துறையில் வேறு ஏதாவது முறையில் உங்கள் பணிகளை மெருகூட்டி வருகின்றீர்களா?**

எனது கலைத்துறை மற்றும் நடன அனுபவங்களை உலகறியச் செய்யும் வண்ணம் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி "பிரேமா நாட்டியாலயம்" என்ற பெயரில், " யூ டியூப் செனல்" என்ற அலைவரிசையை ஆரம்பித்து பரதநாட்டியம் சம்பந்தமான கலை அனுபவங்களை பகிர்ந்து வருவதுடன் கற்றுக் கொடுத்து வருகின்றேன்.

**அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் அண்மையில் நடத்திய ஆடற்கலைப் போட்டியைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

மனிதன் எப்போது இந்த உலகில் தோன்றினானோ அப்போதே அவனுடன் கலைகளும் தோன்றி விட்டன. மக்களின் வாழ்வோடு பின்னிப் பினணந்த கலைதான் கிராமியக் கலை. ஆனால் நாகரீகம் என்ற பெயரில் தமிழரின் பாரம்பரியம் சிறிது சிறிதாக அழிவடையத் தொடங்கியது. ஆனால் கிராமியக் கலைகளை மூச்சுப்போல் சுவாசிக்கும் கலைஞர்கள் இன்னும் இந்த மண்ணில் இருக்கிறார்கள் என்பதையும் தாண்டி அதை அழிவடையாமல் பாதுகாக்க வேண்டும் அடுத்த அடுத்த சந்ததிகளுக்கும் கொடுக்க வேண்டும் என நினைக்கும் கலைஞர்கள் தான் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் கலைஞர்கள். அவர்களது இந்தப் பணியைப் பாராட்டலாம்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# சர்வதேச மகளிர் தின விருது விழா












சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நந்தவனம் பவுண்டேசன் வருடாந்தம் நடத்தும் விருது வழங்கும் விழா சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பார்க் எலேன்ஸ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. லிம்ரா பேக்ஸ் பிரைவட் லிமிட்டட் நடத்திய இவ்விழாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், சென்னை மதுரா டிரவல்ஸ் நிறுவனத்தின் தலைவர் வி.கே. டீ. பாலன், கனடா விழித்தெழு பெண்கள் அமைப்பின் இயக்குனர் சசிகலா நரேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். நந்தவனம் பவுண்டேசனின் தலைவர் நந்தவனம் சந்திசேகர் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டு இருந்தார். இந்த விழாவில் 25 பெண்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இலங்கையைச் சேர்ந்த அமிர்தரத்தினம் ருத்ரா, சந்திரிக்கா நிரோசன், கீர்த்திகா மித்ரன், தஸ்யானி ரந்தீப், கவிதா பாரதி, பிரபா அன்பு ஆகியோர் உட்பட 25 பேர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களைத் தவிர இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்களும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.
















நாடறிந்த சிரேஷ்ட எழுத்தாளர் உமா வரதராஜன் எழுதிய 'எல்லாமும் ஒன்றல்ல' நூல் வெளியீட்டு விழா (12.03.2023) நிகழ்வுகளிலிருந்து...

(ஏ.எல்.எம்.சினாஸ்)

# இலக்கிய உலகின் ஆளுமை மிக்க இலக்கியவாதி தர்காநகர் ஸபா



**உங்களைப்பற்றி இலக்கிய உலகம் அறிந்திருந்தாலும் மேலதிகமான தகவல்களுக்காக நேர்காணலின் ஆரம்பமாக......**

நான் தாஜுதீன் முஹம்மத் ஸபா, தர்கா நகர் எனது பிறந்தகம். இது களுத்துறை மாவட்டத்தில் மேல் மாகாணமும் தென் மாகாணமும் இணையும் பூகோள தளத்தில் அமைந்துள்ளது. இன்னும் இங்கேயே எனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.எனது பாடசாலை, தர்கா நகர் ஸாஹிரா கல்லூரி. இங்கேயே நான் GCE உயர் தரம் வரை பயின்று இலங்கை வங்கிச் சேவையில் 1973ம் ஆண்டு இணைந்து கொண்டேன்.

எனது teen களிலான பாடசாலை நாட்களில் இருந்தே வாசிப்பு பழக்கம் எனக்கு இருந்து வந்தது. புனித குர்ஆனை தினந்தோறும் பாராயம் செய்து வரும் வழமையிலிருந்து இதர நாட்கள் மற்றும் சஞ்சிகைகளை வாசிக்கும் பழக்கம் என்னில் உண்டானது.



தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற எனக்கு வங்கிச் சேவையில் சேர்ந்து கொண்டது முதல் சிங்கள மொழியில் புலமை உண்டானது. இதனால் நம் நாட்டு பிற மொழி இலக்கியங்களில் ஈடுபாடு காட்டும் படியான ஒரு ஆர்வம் எனக்கு ஏற்பட்டது.

கடந்த ஐந்து தசாப்தங்களாக இலக்கியத் துறையில் எனக்கு ஈடுபாடு உண்டு. எழுபதுகளில் தினகரன் பத்திரிகையில் மறைந்த இலக்கிய ஜாம்பவான் ஜனாப் எச்.எம்.பி.முஹிதீனால் கொண்டு நடாத்தப்பட்ட "கண்டதும் கேட்டதும்" என்ற பகுதியில் புதுக்கவிதைகளை எழுதுவது கொண்டு ஆரம்பித்த எனது இலக்கிய படைப்பாற்றல் காலப் போக்கில் மேலும் விருத்திபெற ஆரம்பித்தது.

இதன் மூலம் கடந்த 2000ம் ஆண்டு "விடைக்குள் வராத வினாக்கள்" என்ற கவிதை தொகுப்பும், 2017 ஆண்டில் "Snow Rain" என்ற ஆங்கில மொழியிலான கவிதைத் தொகுப்பொன்றையும் இதுவரை வெளியிட்டிருக்கிறேன்.

**பாடசாலை காலகட்டங்களில் அதிவிஷேட திறமைகள் மற்றும் இலக்கிய உலகின் ஆரம்ப அனுபவம்பற்றி கூறுங்கள்...?**

எனது பாடசாலை என்னுள் சில ஆளுமைகள் வளர ஏதுவானது. அ ங்கு சில காலம் ஒரு மாணவ தலைவனாக தெரிவு செய்யப்பட்டதால் அதன் மூலம் சில தலைமைத்துவ ஆற்றல்களை என்னுள் எடுத்துப் பூட்டிக் கொள்ளக்கிடைத்தது. நான் எனது பாடசாலை சாரணீய குழுவில் இணைந்தது முதல் என்னுள் ஊருக்கு உதவும் மனித நேயம் அபிவிருத்தியானது. பாடசாலை விளையாட்டுத் துறையே பல விளையாட்டுப் பிரிவுகளில் நான் பங்கெடுத்துக் கொண்டு பிரகாசித்தது இன்னும் மறையாமல் என் நினைவில் இருக்கிறது. பாடசாலை உதைபந்தாட்டக் குழுவில் பங்கெடுத்து ஒரு குழுத் தலைவராகவும் தெரிவாகி, விளையாட்டு மூலம் எனது பாடசாலைக்கும் பெருமை தேடிக்கொடுக்க என்னாலும் முடியுமானதில் எவ்வளவு சந்தோசம்?

பாடசாலை தமிழ் மன்றத்தின் செயலாளராகத் தெரிவாகிய எனக்கு நல்ல பல நிகழ்ச்சிகளை மேடையேற்றக் கிடைத்ததும் பாக்கியமே.மறைந்த கவிஞர் ஏ இக்பாலின் ஒரு சிஷ்யனாக அப்போது நானும் இருந்ததால் பாடசாலைக் காலத்தே தமிழ் இலக்கியம் பற்றி நிறையப் படித்துக் கொள்ளக்கிடைத்தது. எமது பாடசாலையின் பழைய மாணவர்களில் ஒருவராகிய நண்பன் கவிஞர் திக்குவெல்லை கமால் போன்றோரால் பாடசாலையில் கொண்டு நடாத்தப்பட்ட "சுவை" எனும் கையெழுத்து

சஞ்சிகையின் ஒரு வாசகனாக நானும் இருந்து வந்தது ஒரு புதிய அனுபவமாகும்.

**தர்கா நகர் ஸபா என்ற பெயர் மாத்திரம் தான் உங்களுக்கு உள்ளதா...?**

ஆம், தர்கா நகர் ஸபா என்ற பெயரில் மட்டுமே நான் எனது இலக்கிய படைப்பகளை வெளிக்கொணர்ந்தேன்.எனது ஆங்கில மொழி மூல கவி ஆக்கங்களையும் தமிழ் மொழியிலான படைப்புகளில் போல Dharga Nagar Safa என்று குறிப்பிட்டே எழுதி வருகிறேன். சர்வதேச ரீதியிலான இந்த இலக்கிய பங்களிப்பு வாரியாக தர்கா நகர் எனும் எனது ஊரை எனது ஆக்கங்களுடன் சேர்த்து பூகோளமய படுத்தப்பட எனக்கு கிடைத்த அவகாசம் கொண்டும் என்னுள் ஒரு வித மகிழ்ச்சி உண்டு.

**இலக்கிய அடக்கத்தில் நீங்கள் கவிதைகளுக்கு மாத்திரம்தான் அதிகம் முன்னுரிமை கொடுக்கிறீர்களா...என்னென்ன மொழிகளில் கவிதைகள் வெளிவந்துள்ளன....?**

எனது ஆக்கங்கள் கவிதைகளுக்கு மட்டுமாக கட்டுப்படுத்தப்படவில்லை. குட்டிக்கதைகள், கட்டுரைகள் எனவும் எனது படைப்புகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. எனது தாய் மொழியான தமிழ் மொழியை மையப்படுத்தியே எனது ஆக்கங்கள் இருந்தாலும் ஆயிரக்கணக்கான ஆங்கில மொழி கவிதைகளையும் தற்போது எழுதியுள்ளேன்.சில சிங்கள மொழி கவிதைகளை தமிழில் மொழிபெயர்த்த அனுபவமும் எனக்கு உண்டு.

**ஐக்கிய அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஆங்கில மொழிமூல கவிதைக்கான ஒரு வலைத்தளமே *Poetry Soup* என்பதாகும்.இதனைப்பற்றி சற்று விரிவாக கூறுங்கள். உங்கள் கவிதைகளும் இடம் பெற்றுள்ளனவா...?**

உண்மை தான் Poetry Soup என்பது உலகின் நான்காவது பெரிய ஆங்கில மொழி சாரந்த கவிதைக்கான வலைத்தளமாகும். இங்கு உலகின் 186 நாடுகளைச் சேர்ந்த 43,000 கவிஞர்கள் அங்கத்துவம் பெற்றிருக்கிறார்கள். இதில் அநேகமானோர் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள்.மேலும் இங்கு சுமார் 10,00,000 கவிதைகள் இதுவரைக்கும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதில் எனது கவிதைகள் 2014 ஆகும்.நமது இலங்கை நாட்டைச் சேர்ந்த 72 கவிஞர்களும் இங்கு அங்கத்துவம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் அனைவராலும் இங்கு 3446 கவிதைகள் எழுதப்பட்டுள்ளன். இதில் 2014 அல்லது 61% எனது கவிதைகளாகும்.இந்த தளத்தில் அதிக கவிதைகளை எழுதியுள்ள முதல் 100 பேரை தேர்ந்தெடுத்துள்ளார்கள் இதில் எனது இடம் 47வது ஆகும்.

**உங்களது கவிதைகளில் கற்பனை கவித்துவம் உணர்வுமயமான அணுகுமுறை சமூகப் பார்வை என அனைத்தையும் கலந்து சமூகத்திற்கு எப்படிப்பட்ட கவிதைகள் தந்தால் வெற்றி பெறலாம் என நினைக்கிறீர்கள்?**

கற்பனை வடிவ கவிதைகளை நான் பெரிதும் விரும்புகின்றேன். இவ்வித ஆக்கங்களுக்கே எமது கவிதை தளத்தில் அதிக வரவேற்பு உண்டு . உலகின் நாலா பக்கங்களிலும் வாழும் கவிஞர்கள் அவ்வப்போது தமது கற்பனையை தட்டிவிட பெரியதொரு ஆக்க இலக்கிய mix,கலவை ஒரிடத்தில் இங்கு வந்து குவிந்து நிற்பது இதிலுள்ள ஒரு கவர்ச்சியாகும்.இங்கு ஒரு பெரிய கவிஞர்கள் சமூகமே தமது கற்பனைத் தேர்களை ஓட்டியவாறு நாளும் பொழுதும் ஒன்றி இணைந்திருக்கிறது.

**குறும்பாக்களில் உங்களது கவனம் திசை திரும்பியதுண்டா...?**

குறும்பாக்கள் நல்லதொரு கவிதை அணுகு முறையாகும் அற்றில் பலதை தான் வாசித்திருக்கிறேன். இருந்தாலும் அவை போல நானும் எழுத முயற்சிக்கவில்லை. குறும்பாக்களை ஆங்கிலத்தில் limerick என அழைப்பார்கள்.எனது ஆங்கில மொழியிலான கவியாக்கங்களில் அனேகமானது free verse எனும் பிரிவைச் சார்ந்திருக்கிறது.எமது ஆங்கில மொழி கவிஞர்களில் சிலர் குறும்பாதினுசில் எழுதுவார்கள் அவற்றை நான் வாசித்து சுவைப்பதுண்டு. The tree என்ற தலைப்பில் எமது தளத்தில் ஒரு கவிஞர் எழுதியுள்ள ஒரு குறும்பாவை இங்கு தருவது பொருத்தமென நினைக்கின்றேன்.

*The tree*
*There was a tree*
*It was attracted to bees*
*When the bees left*
*It liked to drink tea*
*By the sea*
*Emily Krauss*

(அங்கு ஒரு மரம் இருந்தது, அது தேனீக்களால் ஈர்க்கப்பட்டுக் கிடந்தது,தேனீக்கள் அதனை விட்டு வெளியேறிப் போனதும் அது கடலிலே தேனீர் குடிக்க விரும்பியது.)

(7 ஆம் பக்கம் பார்க்க)

**உங்களது வங்கி சேவைகள் பொற்காலமென வர்ணிக்கப்படுகிறது. அதனைப்பற்றி சற்று கூறுங்கள்.**

பாடசாலை கல்வியை வர்த்தகப் பிரிவில் சேர்ந்து கற்றுக் கொண்ட எனக்கு, நான் கற்றவற்றை பிரயோகத்தில் கொண்டு வர வங்கிச் சேவை பெரிதும் உதவியது என்றே சொல்ல வேண்டும். 1973ம் ஆண்டு இலங்கை வங்கியில் சேர்ந்து கொண்ட நான் 2012 வரையான சுமார் 39 வருட காலம் இந்த அரச வங்கியில் தொழில் பார்த்து வந்தேன். வங்கி டிப்ளோமா பரீட்சையில் கற்றுத் தேறிய எனக்கு வங்கி முகாமையாளர் பதவி மிக குறுகிய சேவைக் காலத்திலேயே கிடைத்து விட்டது. இதனைத் தொடர்ந்து இலங்கை வங்கியின் எனது ஊர் கிளையிலும் ஊரைச் சூழவுள்ள மேலும் சில கிளைகளலுமாக ஒரு வங்கி முகாமையாளராகக் கடமையாற்றினேன். அதனைத் தொடர்ந்து ஒரு மாவட்ட முகாமையாளராக 2014ம் ஆண்டு எனக்கு பதவி உயர்வு கிடைத்ததுடன் மாத்தறை மாவட்டத்துக்கு எனக்கு இடமாற்றமும் கிடைத்தது. அப்போது தான் சுனாமி அனர்த்தம் நிகழ்ந்தது.

இதனால் எனது பொறுப்பின் கீழ் வரும் பல வங்கிக் கிளைகள் பாதிப்புக்குள்ளாகின. சில வங்கி ஊழியர்களும் அவர் தம் குடும்ப அங்கத்தவர் சிலரும் இதனால் மரணமடைந்தார்கள்.

பாதிக்கப்பட்ட வங்கி வாடிக்கையாளருக்கும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்து. இதனால் எனது சில கிளைகளை சென்றடைவதிலும் அசௌகரியம் ஏற்பட்டது. இந்த துரதிஷ்ட வசமான நிலைமைகளை வழமைக்குக் கொண்டு வர கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.

எனது இன்னொரு தரத்துக்கான அடுத்த பதவி உயர்வுடன் தென் மாகாணத்தின் Operation Manager ஆக வங்கியின் காலி அலுவலகத்திலிருந்து தொழில் பட்டேன். ஒட்டு மொத்தமாக தென் மாகாணத்தின் 55 கிளைகள் எனது மேற்பார்வையில் வந்தது. தென் மாகாணத்தின் கதிர்காமத்தில் இருந்து பெந்தோட்டை வரையுமான ஒரு நீண்ட தொலை தூரத்தின் இடைக்கிடையே அமைந்திருந்த பல வங்கிக் கிளைகளுக்கு தொழில் ரீதியாக அடிக்கடி போய் வர வேண்டியிருந்தது. கடல், வயல்கள், மலைகள் என பல வகைப்பட்ட புவியல் அமைப்புக்களைக் கொண்ட பல இடங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்வதில் எனக்கு ஒரு அலாதிப் பிரியம். பிரயாண நேரத்தில் கண்ணில் காணும் காட்சிகளையும் சம்பவங்களயும் கருவாகக் கொண்டு பல கவிதைகளையும் யாத்திருக்கிறேன். இது ஒரு சுவாரஸ்யமானதும் எல்லோருக்கும் கிடைக்காததுமான ஒரு தனி அனுபவமாகும். இறுதியாக எனது வங்கியில் எனக்கு ஒரு உதவிப் பொது முகாமையாளர் (Assistant General Manager) தரத்துக்கு இன்னொரு பதவி உயர்வு கிடைத்தது. இத்துடன் என்னை இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள எமது சென்னைக் கிளையின் அந்நாட்டு முகாமையாளர் (Country Manager) ஆக தெரிவு செய்து அங்கு அனுப்பி வைத்தார்கள். இங்கு நான் எனது வங்கித்தொழிலிருந்து ஓய்வு பெறும் வரை கடமையாற்றினேன். கடல் கடந்து அங்கு போன எனக்கு பல புது அனுபவங்கள் கிடைத்தன. சென்னையில் இந்தியாவின் மத்திய வங்கியான "ரிசவ் பேங்க் ஒப் இந்தியாவுடன் மிக நெருங்கிய தொடர்பை ஸ்தாபித்துக் கொண்டு தொழில் பார்க்க வேண்டியிருந்தது. மேலும் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம், "ஏயர் லங்கா நிறுவனம், சென்னை வர்த்தக சம்மேளனம் ஆகிய நிறுவனங்கள் எமது வங்கியின் பிரதான வாடிக்கையாளராக இருந்ததால் அவைகளுடனான தொடர்பு அலாதியானது எனலாம். எனது இந்திய பதவிக்காலத்தில் எமது வங்கி அதிகம் அபிவிருத்தியுற்று முன்னேற்றம் கண்டது. அப்போது வங்கி கண்ட நிகர் லாபம் முன் எப்போதும் இல்லாதவாறு அமைந்தது. எமது சென்னை வங்கிக் கிளை அப்போது தினத்தந்தி பத்திரிகை காரியலயத்தை அடுத்து இருந்தது. வங்கியின் வியாபார முயற்சிகளுக்கும் வங்கியின் அபிவருத்திக்கும் அதன் அமைவிடம் தடையாக இருந்ததால் சென்னையின் பிரிதொரு இடத்துக்கு வங்கிக் கிளையை எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. வெளி நாடொன்றில் இப்படியான முயற்சிகளில் ஈடுபாடு காட்டுவது ஒரு இலேசுப்பட்ட காரியமல்ல. இருந்தாலும் இம்முயற்சியில் வெற்றி கண்டது எனது நீண்ட வங்கி வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.


மேலும் அங்கே எனது சேவைக் காலத்தில் பல தமிழக பிரபல படைப்பாளிகளைச் சந்தித்துள்ளேன். நூல் வெளியீட்டு விழாக்களிலும் சென்னை புத்தக கண்காட்சிகளிலும் கலந்து கொண்ட அனுபவமும் எனக்கு உண்டு. பல தமிழ் திரைப்பட நடிகர்களை சந்திக்கவும் நேரம் கிடைத்தது. அதிகாலையிலேயே உடுத்துப் படுத்துப் போய் "ஆறாம் அறிவு" எனும் தமிழ் சினிமாப்படம் வெளியாகும் அன்றே அதன் முதல் காட்சியைப் பார்த்ததில் ஒரு திருப்தியே.

இந்த நேரத்தில் எனக்கு ஒரு சுவையான சம்பவம் எனது நினைவுக்கு வருகின்றது. அதாவது சென்னை, எழும்பூரில் பூந்தமல்லி நெடுஞ்சாலை வழியாக அப்போதைய இலங்கை வங்கி, சென்னைக் கிளைப் பணிமனை அமைந்திருந்தது. இதற்குப் பிடித்தாற் போல் சென்னை தினத்தந்தி பத்திரிகை அலுவலகம் காணப்படுகின்றது.

நான் இவ்வங்கியின் Country Manager ஆக வேலை பார்த்த 2009 – 2012 காலப் பகுதிகளில் தினத்தந்தி பத்திரிகையை வாங்கி வாசிக்கும் வழக்கம் உண்டாயிற்று.

கடந்த 2003ம் ஆண்டு மார்ச் 3ம் திகதி முதல் வரலாற்றுச் சுவடுகள் என்ற தொடரை தினத்தந்தி வெளியிட ஆரம்பித்தது. இதனைத் தொகுத்து "வரலாற்றுச் சுவடுகள்" என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட உத்தேசக்கப்பட்டிருந்தது. இந்நூலின் வெளியீடு 30.11.2010 அன்று சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளதாக இப்பத்திரிகையின் வாயிலாகத் தெரிந்து கொண்டேன். நானும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவென அங்கு போயிருந்தேன். மண்டபம் நிறைந்து வழியும்

சனக்கூட்டம். மேடைக்கு முன் வரிசையில் தமிழ் சினிமா பிரபலங்கள் பலர் உட்கார்ந்திருந்தார்கள். பலத்த கரகோஷத்தின் மத்தியில் கலைஞர் மேடைக்கு வந்து தமது பிரஸ்தாப நூலின் ஒரு பிரதியை வாங்கி, 800 பக்கங்களைக் கொண்ட அந்நூலைப் போட்டுப் புரட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். தினத்தந்தி அதிபர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் முதல்வருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். முதலில் இந்நூலுக்கு ரூ. 375 என விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் கருணாநிதி நூலை ரூ. 300க்கு விற்குமாறு கேட்டுக் கொண்டார். காகித விலை, அச்சுச் செலவு முதலியன அதிகமாக இருந்ததால் முகவிலைக்கே நூல் விற்கப்படுவதாக மேடையில் இருந்த ஆதித்தன் அவர்கள் இடையில் எழுந்து கூறினார். இருந்தாலும் முதல்வரின் வேண்டுதலை மதித்து நூலின் விலை ரூ. 300 ஆகக் குறைக்கப்பட்டது.





அப்போது நான் ஏற்கனவே பழைய 375/ரூபா விலைக்கு நூலின் ஒரு பிரதியை வாங்கியாயிற்று.

பல நூல் வெளியீட்டு விழாக்களில் கலந்து கொண்டுள்ள எனக்கு இது ஒரு புது அனுபவமாக இருந்தது.

இலங்கை வங்கித் துறையே ஒரு Fellow அங்கத்தவனாக இலங்கை வங்கியாளர் நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட நான் இலங்கை வங்கியில் இப்போது அமுலில் இருக்கும் "அந்நூர்" எனும் வட்டியில்லா இஸ்லாமிய வங்கிக் கணக்குகளை இலங்கை வங்கியில் அறிமுகம் செய்யும் யோசனையை வங்கிக்கு முன் வைத்தேன். இது வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. இதில் எனக்கு ஒரு ஆத்ம திருப்தி உண்டு. ஏனெனில் இது ஒரு வழமையான வங்கி வணிக முயற்சிக்கு சற்று அப்பால் போன ஒரு முறை என்பதாலாகும். இஸ்லாத்தில் தடை செய்யப்பட்ட வட்டியைத் தொடாது தவிர்ந்து கொள்ள முடியுமான இந்த திட்டம் ஆன்மீக சிந்தனைகளுடன் தொடர்புபடுவதால் இது எனது வங்கிச் சேவைக் காலதத்தே நான் அடைந்த ஒரு பெரிய அடைவு என்றே கருதுகிறேன். எனது இந்த ஓய்வு காலத்திலும் எனது கடந்த வங்கிச் சேவைக் காலத்தை மீட்டிப் பார்க்கும் போது நீங்கள் கூறியவாறு அது எனக்கு ஒரு பொற்காலமாகவே எண்ணத் தோன்றுகின்றது.

**நீங்கள் எத்தனை புத்தகங்கள் இதுவரையில் வெளியிட்டிருக்கிறீர்கள்...அவைகள் எந்தெந்த மொழிகளில் வெளிவந்துள்ளன...?**

நான் இதுவரைக்கும் இரண்டு நூல்களை வெளியிட்டுருக்கிறேன். "விடைக்குள் வராத வினாக்கள்" என்ற பெயரில் 2000 ஆண்டில் வெளிவந்தது. இநதப் புத்தகம் எனது 30 கவிதைகளை உள்ளடக்கிய ஒரு தொகுப்பாகும்.

மேலும் 2017ம் ஆண்டில் அச்சேரிய "Snow Rain" என்ற நூல் எனது 100 ஆங்கில மொழிவழி கவிதைகளின் ஒரு தொகுப்பாகும்.

**உங்களுக்கு கிடைத்த விருதுகள்பற்றி...?**

எனக்கு கிடைத்த விருதுகள் பற்றிச் சொல்ல என்று பெரிதாய் அப்படி ஒன்றுமில்லை. சென்ற 2002ம் ஆண்டு எமது தலைநகர் கொழும்பில் நடந்த உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் எனது இலக்கிய பங்களிப்புக்காக ஒரு விருது கிடைத்தது அவ்வளவு தான் மேலும் எமது Poeyrysoup கவிதை தளத்தில் அவ்வப்போது பதிவேற்றப்படும் கவிதைகளை வாசிக்கும் சக கவிஞர்கள் அந்த ஆக்கம் பற்றி தமது கருத்துக்களுடன் கூடவே தமது வாழ்த்துக்களுயும் சொல்லி அனுப்புவார்கள். இது எமக்கு மிகவும் ஊக்கம் தந்து உற்சாகம் தருவதாகவும் இருக்கும். மேலும் இது முழு உலகமும் ஒருங்கே தொடர்புபட்ட முறையிலான ஒரு விருது கிடைத்த மகிழ்ச்சியையும் தரும். ஒரு கவிஞனுக்கு இது போதாதா என்ன?

பாத்திமா நளீரா

# இலக்குகள் சரியானால் நினைத்ததை எட்டி விடலாம்!



## தமிழ் எப்.எம் பணிப்பாளர் ஹோஷியா அனோஜன்

**ஹோஷியா அனோஜன் எனும் அடையாளம் இன்றைக்கு நேற்றைக்கு அல்ல, பதினெட்டு வருடங்கள் தொட்டு வானொலி மற்றும் ஊடகத்துறையில் தன்னை நிலை நிறுத்தியிருக்கும் ஒருவர். பெண் ஆளுமையாக பல புதுமைகளை நிகழ்த்தியிருக்கும் இவர், சிறந்த அறிவிப்பாளினி மற்றும் சிறந்த செய்தி வாசிப்பாளர் போன்ற நம் நாட்டின் தேசிய விருதுகளையும், அரச அங்கீகாரங்களையும் பெற்றவர். தற்பொழுது இன்னுமொரு பரிணாமத்தில் தமிழ் எப்.எம்மின் அலைவரிசைப் பிரதானி எங்கும் அடையாளத்தோடு இரண்டு வருடங்கள் பயணித்து மூன்றாவது ஆண்டுக்குள் நுழைந்திருக்கிறார். அந்த மகிழ்ச்சிப் பூரிப்போடு பிறந்தநாள் கொண்டாடடங்களில் இருந்தவரை செந்தூரத்திற்காக சந்தித்தோம்.**




**கே: தொகுப்பாளராக, முகாமையாளராக, இப்பொழுது 99.5 | 99.7 தமிழ் எப்.எம்மின் அலைவரிசைப் பிரதானியாக.. எப்படி இந்த மாற்றங்களை பார்க்கிறீர்கள்?**

இதுதான் காலவோட்டமும் முயற்சியும், எங்களது உழைப்புக்கான அங்கீகாரமும் என்று சொல்லலாம். எல்லோருடைய வாழ்வியல் ஓட்டத்தின் கோலங்களும் இப்படியான மாற்றங்களை உருவாக்கிக்கொள்வதற்காகவே அமைகிறது.



நானும் ஒரு சாதாரண தொகுப்பாளராக இருந்து, என்னால் கொடுக்க முடிந்த உழைப்பைக் கொடுத்து உண்மையாய் பணியாற்றியிருக்கிறேன். இதுவரைக்கும் கடமையாற்றிய இரு நிறுவனங்களுக்கும் நேர்மையாய் உழைத்துக் கொடுத்திருக்கிறேன். அதனாலோ என்னவோ இப்பொழுது என் அடுத்த கட்டம் ஆரோக்கியமாய் ஆரம்பித்திருக்கிறது. வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதுவுமொரு சவால்; இந்த சவாலையும் செய்து முடிக்கலாம் என்ற ஒரு சுவாரஸ்யமான எதிர்பார்ப்போடு இந்தப்பயணத்தை ஆரம்பித்தேன். ஆரம்பித்து இரண்டு வருடங்களில் எட்டமுடியாத, பிற வானொலிகளால் செய்ய முடியாத பல சிறப்புக்களை அடைந்த திருப்தி இன்று எனக்கு. நிச்சயமாக தமிழ் எப்ப.எம்மின் படைப்புக்கள் உங்களை திருப்திப்படுத்துகின்றது என்றும் எண்ணுகிறேன். அந்தளவுக்கு உங்களது அன்பும் ஆதரவும் அள்ளிச் சேர்ந்திருக்கிறது. இதைத்தான் எதிர்பார்த்தோம். இன்று அது இந்த குறுகிய காலத்துக்குள் எங்களை சேர்ந்திருப்பது மகிழ்ச்சி.

**கே: இலங்கையின் வானொலித்துறை வரலாற்றில், முதலாவது பெண் அலைவரிசைப் பிரதானியாக தமிழ் எப்.எம் எனும் புதிய வானொலியைப் பொறுப்பெடுத்த உங்களுக்கு, இப்போதுள்ள சவால்கள் எப்படிப்பட்டவை?**

கண்டிப்பாக, ஏற்கனவே இடம்பிடித்த சில வானொலிகள் இங்குள்ளன. அவைகளின் ஆட்சியை மீறி, ஒரு புதிய வானொலிச் சேவையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தலையாய கடமை எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அரைத்த மாவை அரைப்பதான நிகழ்ச்சிகளும், தொகுப்பு அமைக்கலும் இல்லாதவாறு, இன்றுள்ள எல்லா தரப்பினரையும் கவர்ந்திழுக்கும் விதத்தில் தமிழ் எப்ப.எம்மின் தரம் என்றும் இருக்கும். அதற்கான வகையிலேயே எமது நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

கட்டாயப்படுத்தி நிகழ்ச்சிகளை கேட்க இழுக்கும் சூட்சுமங்களை கடந்து, எம் நிகழ்ச்சித் தரத்தாலும், புதுமையான முயற்சிகளாலும் இரசனையாளர்களை கேட்க வைக்க முனையும் முயற்சி இது என்பதும் பொருத்தம். கட்டாயப்படுத்தி கேட்க வைக்கும் நேயர்கள் தொடர்ந்து எம் நிகழ்ச்சிகளை மற்றும் வானொலியை ஆதரிக்கப் போவதோ அல்லது பின்தொடர போவதோ இல்லை.

அதனால், ரசனையான, புதுமையான நிகழ்ச்சிகள் கொடுக்க வேண்டும் என்று அதில் நிறைய உழைத்திருக்கிறோம். அந்த மாற்றமும் உங்களுக்கு தமிழ் எப்.எம் கேட்கும்போது புரியும். அத்துடன், முன்புபோல இல்லாமல், டிஜிட்டல் தளத்திலும் எமது வானொலியின் பங்களிப்பும் ஈடுபாடும் அதிகமாக இருக்கிறது. வணிக ரீதியாகவும் வானொலியினை திறம்பட நடத்துவதோடு, நாடு முழுவதும் ஒலித்தெளிவுடன், 99.5 | 99.7 அலைவரிசையினூடாக தெளிவாக எமது நிகழ்ச்சிகளை வழங்குவது மட்டுமில்லாமல், இரசனைத் தன்மை கொஞ்சமும் குறைவில்லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்கிறேன்.



**கே: ஏற்கனவே இருக்கின்ற வானொலிகளில் இல்லாத எப்படியான அம்சங்களை, தமிழ் எப்.எம் தருகின்றது?**

இங்கு, இல்லாத அல்லது இருக்கின்ற என்றாலும், கேட்பதற்கு சலிப்புத் தட்டாமல் இருக்கக் கூடிய நிகழ்ச்சிகளாகவே எமது நிகழ்ச்சிகள் உங்களிடம் வந்து சேர்கின்றன. மேலும், கேட்டுக் கேட்டு சலித்துப் போன குரல்களில்லாமல், புதிதாக தெரிவு செய்யப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட பல புதிய குரல்களை தமிழ் எப்.எம் வழியாக நீங்கள் சந்திக்க முடியும். அந்த புதிய குரல்களும், புதிய திறமைகளும் உங்களுக்கு இன்னும் ஒருபடி மேலே போய் நிகழ்ச்சிகளைக் கொடுக்கின்றன.

இருப்பதை விட இன்னும் புதிதாய் எதோ ஒன்றைக் கொடுக்கும் உத்வேகத்தோடு உழைக்கிறோம். நிச்சயம் உங்கள் விருப்பங்கள், மற்றும் தேடல்களுக்கு இதுவொரு வாய்ப்பாகவும் தீனியாகவும் அமையும். இந்த இரண்டு ஆண்டுகளில் அத்தனை உழைப்பையும் அர்ப்பணிப்பையும் எமது குழுமம் கொடுத்திருக்கிறது. அது உங்களுக்கும் புரிந்திருக்குமென்று நம்புகிறேன்.

**கே: இதுவரைக்கும் இருக்கும் தமிழ் வானொலிகளில் எல்லோருமே ஆண் தலைமை நிர்வாகிகளே இருக்கிறார்கள்; இருந்திருக்கிறார்கள். இந்நிலையில், முதல் பெண் அலைவரிசைப் பிரதானியாக பொறுப்பேற்றிருக்கும் உங்களுக்கு சமூகத்திலிருந்து எப்படியான ஆதரவு மற்றும் விமர்சனங்கள் வருகின்றன?**

முதலில் ஊடக நண்பர்கள் பலரும் வாழ்த்துக்களையும், சில ஆலோசனைகளையும் கொடுத்திருக்கிறார்கள். அத்தோடு, மக்கள் மத்தியில் இவர் வந்தால் ஏதோவொரு புது அம்சம் வானொலி வழியாய் நமக்கு வருமென்று எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை ஒட்டிய விதமாய், எங்களது உழைப்பும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். வாழ்த்துக்களோடு எதிர்பார்ப்பும் அதிகமாக இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதாய் எல்லாமே அமையும் தமிழ் எப்.எம்மில் என்று நம்பிக்கையோடு குறிப்பிட முடியும்.

விமர்சனங்கள் என்று ஒன்றுமில்லை. எனக்கான பொறுப்பும், எடுத்த வேலையை திறம்பட சரியாக முடித்துக்கொடுக்க வேன்றுமென்ற நோக்கமும் என்னிடமுள்ளன. அதை நோக்கியே ஓடுகின்றோம்.

**கே: பல அறியப்பட்ட அறிவிப்பாளர்கள் இருக்கையில், தமிழ் எப்.எம்மில் அதிகம் புதிய குரல்களை அறிமுகம் செய்திருப்பதற்கான காரணம் என்னவோ?**

கேட்டுக் கேட்டு சலித்துப் போன, அல்லது பழக்கப்பட்டுப் போன குரல்கள் இல்லாமல், புதுமையான திறமையான பல இளைய குரல்களை இங்கு அறிமுகம் செய்ய வேண்டுமென்று விரும்பினோம். அதன் வெளிப்பாடே இந்த புதிய குரல்களின் வரவு.

வெறும் பெயருக்கு அனுபவம் வாய்ந்த அறிவிப்பாளர்கள் என்று காலம் முழுக்க அப்படியே ஒரு வட்டத்துக்குள் இருந்து வருகிறவர்களை விட, இப்பொழுதுள்ள இளையவர்கள் தேடலும், அர்ப்பணிப்பும் அதிகம் தேவையாக இருக்கிறது. அப்படியாவனவர்களைக் கண்டுபிடித்தே இங்கு கொண்டு வந்திருக்கிறோம். அப்படியானவர்கள் இன்றைய கால ஓட்டத்தின் தேவை மற்றும் வேகத்துக்கேற்ப செயற்பட தயாரானவர்கள். அதனால், அவர்களால் இன்றைய வானொலி கலாசாரத்தில் மாற்றம் நிகழுமென்று திடமாக நம்புகிறேன். ஆகவே தான், இந்த புதிய குரல்களை நம்பிக்கையோடு களமிறக்கியிருக்கிறேன்.

**கே: ஹோஷியாவுக்கு ஊடகத்துறை இதுவரைக்கும் சொல்லி கொடுத்திருக்கும் விடயங்கள்?**

ஹ்ம்.. தொழில்முறையாக நிறைய கற்றுக்கொண்டிருக்கிறேன். அதிலுள்ள நுணுக்கங்களை தெரிந்துகொள்ளவும், காலவோட்டத்திற்க்கேற்ப நம்மை புதுமைப்படுத்திக்கொள்ளவும் இந்தத் துறை நிறைய சொல்லித் தந்திருக்கிறது. விஷேடமாக, மனிதர்களை படிக்கவும், அவர்களது சவால்களை இலகுவாக கடந்து போகவும், எதிர்மறை விமர்சனங்களையும், வியாக்கியானங்களை தவிர்த்து விட்டு நமது வழியில் எப்படி உழைப்பது, முன்னேறுவது என்பதெல்லாம் இங்கு கற்றுக்கொண்டதுதான். ஆக, இந்தத் துறை நிறைய நல்லது கெட்டதுகளை கற்றுக் கொடுத்திருக்கிறது. அதில் தேவையானதை தெரிந்தெடுத்து பயணப்படுகிறேன். அவ்வளவுதான்!

**கே: குறுகிய காலத்தில் பல தேசிய விருதுகளை தமிழ் எப்.எம். சுவீகரித்துக்கொண்டது. அந்த விருதுகள் பற்றி..**

நிச்சயமாக !! இதுவெல்லாம் நேயர்கள் எனும் பேரன்பாளர்களால் நிகழ்ந்தவை தான். அவர்களின் இரசனைக்குத் தீனி போட்டோம் என்று நம்புகிறேன். இன்னும் இந்த விருதுகளின் பின்னால் நாங்கள் இன்னுமின்னும் கடினமான உழைப்பைக் கொடுக்க வேண்டுமென்றும் புரிந்து செயற்படுகின்றோம். எமது நிகழ்ச்சிகள் மற்றும் நிலையைக்குறியிசை, செய்தி வாசிப்பு போன்ற பலவற்றுக்காக தேசிய விருதுகள் கிடைத்தன. எமது நிறுவனத்திற்கும் வானொலிக் குழுமத்திற்கும் இதுவொரு உத்வேகத்தைக் கொடுத்திருக்கிறது.

இன்னுமின்னும் ஓடி, உழைக்க எம்மவர்களை தள்ளி விட்டிருக்கிறது. அத்தோடு, எங்களை அங்கீகரித்து, அடையாளப்படுத்தி, விருதுகளைக் கொடுத்து இன்னும் உழைப்பதற்கான வேகத்தையும் கொடுத்திருக்கிறீர்கள்.

உங்கள் அனைவருக்கும் அதாவது நேயர்கள் அனுசரணையாளர்கள் அனைவருக்கும் இந்த வாய்ப்பில் கனிந்த நன்றிகளையும் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும் உங்களது எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யுமளவுக்கு தமிழ் எப்.எம் அனைத்து வழிகளிலும் உழைக்காத தயார். இனிவரும் காலங்களிலும் உங்களை பூரணமாய் மகிழ்ச்சிப்படுத்துவோம் என்றும் சொல்லி வைக்கிறேன்.

கே. ஈஸ்வரலிங்கம்

# முகத்தை பளிச்சிட வைக்கும் தக்காளி



பெரும்பாலானபெண்கள் முகத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கழுத்திற்குகொடுப்பதில்லை. இதனால் கழுத்தில் கறுப்புக்கயிறு கட்டியது போல்கருவளையம்தோன்றி விடும். இதனை தக்காளி பேஸ்ட்டால் விரட்டி விடலாம். தக்காளி முகத்தில்சுருக்கம் விழாமல் தடுக்கிறது. மேலும் இது தோல்களைபளபளக்க செய்கிறது. பழுத்த தக்காளியை நன்கு பசைப்போல விதையுடன் சேர்த்து அரைத்து, முகத்தில் தடவி, 20 முதல் 30 நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் சருமத்தில் உள்ள எண்ணெய் பசை, கருமை நிறம் மறையும்.

தக்காளி குளிர்ச்சியானது. இதனுடன் வெள்ளரிச்சாறை சம அளவில் எடுத்து பஞ்சில் நனைத்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் கழுவ வேண்டும். தொடர்ந்து செய்து வந்தால், பருக்களால் ஏற்பட்ட தழும்புகள் மறையும்.

தக்காளி சாறு அரை டீஸ்பூன் தேன்அரை டீஸ்பூன் சமையல் சோடா ஒரு சிட்டிகை இந்த மூன்றையும் கலந்து கொள்ளுங்கள். இந்த பேஸ்ட்டை கருவளையத்தின் மேல் பூசி 10 நிமிடம் கழித்து கழுவுங்கள். கருவளையங்கள் காணாமல் போகும்.

நீண்ட நாட்களாக முகத்தை சரிவர பராமரிக்காதவர்களின் முகத்திலுள்ள செல்கள் இறந்து போய் முகம் பொலிவிழந்து விடும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியின் சாறுடன் கால் டீஸ்பூன் ரவையைக் நன்றாக கலந்து முகத்தில் தேய்த்து கழுவி வந்தால் முகம் பளபளப்பாகும்.

# அழகு மயக்கத்தில் அல்லலுறும் மனித இனம்



'பெண்கள் ஒன்றும் நகை மாட்டும் ஸ்டாண்ட் அல்ல! பெண்களை அழகின் அடிப்படையில் பார்ப்பதே ஆணாதிக்கச் சிந்தனையாகும்'. ஐந்தே வயதுடைய ஒரு பிள்ளை அவ்வப்போது அவள் அம்மாவிடம் சென்று, “ஏன்மா என்னை கறுப்பா, அசிங்கமா பெத்த?” என்று கேட்டு அழுகிறாள். அந்தப் பிஞ்சு மனத்தி்ல் யார் விதைத்தது கறுப்பு அசிங்கம் என்கிற சிந்தனையை? கறுப்பாக இருக்கும் பெண்களுக்குத் திருமணத்தின்போது எத்தனை தடைகள் ஏற்படுகின்றன?

பெண்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள கல்வியும் அரசியல் தெளிவும் பெறவேண்டும். அப்போதுதான் இந்த வியாபார, ஆணாதிக்கச் சிந்தனைகளுக்கு இடம்கொடுக்காமல் இருப்பார்கள்.

அறிவியல் ரீதியாகப் பார்த்தாலும்கூட கறுப்புத் தோல்தான் நல்லது. பாதுகாப்பானது. ஏனெனில் நமது உடல் சுரக்கும் 'மெலனின்' என்ற பொருளால் நமது தோல் கறுத்து, சூரிய ஒளியிலிருந்து ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கிறது. ஆனால் சிவப்புத்தோல் உள்ளவர்களுக்கு சூரிய ஒளி மூலம் தோல் வியாதிதான் வருகிறது.

பெண்களை இந்த உலகம் வெறும் போகப் பொருளாக, காட்சிப் பொருளாக, சதைப் பிண்டமாகத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆண்கள் பயன்படுத்தும் ரேசர் விளம்பரத்துக்கும், பைக் விளம்பரத்துக்கும் அரைகுறை ஆடையுடன் பெண்களை ஆபாசமாகக் காட்டுகிறார்கள். இங்கு பொருளைவிட அந்தப் பெண்ணின் உடல்தான் விளம்பரப்படுத்தப்படுகிறது.

'அழகு' என்று போற்றி அந்த மயக்கத்திலேயே பெண்களை மூழ்க வைத்திருக்கிறார்கள். மயக்கம் தெளிவதற்கு ஆண்கள் சமுதாயம் விடுவதாயில்லை. மயக்கத்திலிருந்து தெளிவதற்கு பெண்களுக்கும் விருப்பம் இல்லை. இதுதான் உண்மை.

பெண்களைத் தெய்வமாகப் போற்றி ஆராதனை செய்ய வேண்டாம். குறைந்தபட்சம் அவளும் தன்னைப் போல் ஒரு மனிதப் பிறவி என்று சக தோழியாய் மதித்தால் போதும்.

# அன்னாசி பழத்தில் அடங்கியுள்ள சத்துக்கள்



100 கிராம் அன்னாசிப்பழத்தில் 88 சதவிகிதம் ஈரப்பதமும், 0.5 சதவிகிதம் புரதமும், 10.8 சதவிகிதம் மாவுச்சத்தும் 17 சதவிகிதம் கொழுப்புச்சத்தும் 63 மில்லிகிராம் வைட்டமின், கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து, கரோட்டின், தயாமின் ஆகிய தாது உப்புகளும் நிறைந்துள்ளன.

'அனீமியா' எனப்படும் ரத்தச்சோகை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்னாசிபழத்தின் சாறு ஒரு சிறந்த டானிக்காக செயல்படுகிறது.

அன்னாசியில் மாங்கனீஸ் உள்ளிட்ட பல சத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது.

அன்னாசிபழத்தில் புரதத்தை செரிக்கக் கூடிய புரோமலைன் என்ற என்சைம் அதிக அளவில் நிறைந்துள்ளது. வைட்டமின் சி சத்தும் அன்னாசியில் அதிகம் உள்ளது. அன்னாசி பழம் சாப்பிடுவதால் காது மற்றும் சளித்தொல்லை, ப்ளூ காய்ச்சல் உள்ளிட்டவற்றில் இருந்தும் பாதுகாப்பு கிடைக்கும். இப்பழத்தில் உள்ள மாங்கனீஸ் உடலில் ஆன்டி ஆக்சிடன்ட்களின் சக்தியை அதிகரிக்கும்.

மேலும் இதில் உள்ள தையாமின் மற்றும் வைட்டமின் பி சத்து, உடலில் உள்ள சுரப்பிகளின் செயல்பாட்டை சீராக்குகிறது. இதனால் உடலுக்கு அதிக சக்தி கிடைக்கிறது.

# நிலவொளியில் நீராடுவது நலமா?



நமது உடலின் ஆரோக்கியத்திற்கும், சுகாதாரத்திற்கும் தினமும் குளிப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். காலையில் குளித்து விட்டு வெளியில் சென்றால்தான் அந்த நாள் முழுவதும் உற்சாகமாகவும், புத்துணர்வோடும் இருப்போம்.

காலையில் குளிப்பதை விட இரவில் குளிப்பது உங்கள் உடலில் பல நல்ல மாற்றங்களை உண்டாக்கும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். இது உங்களின் தூக்கத்தின் தரத்தையும், சுகாதாரத்தையும் மட்டும் உயர்த்தாமல் உளவியல்ரீதியாகவும் உங்களுக்கு பல நன்மைகளை வழங்குகிறது.

நாள் முழுவதும் வெளியில் அலைந்து விட்டு இரவு நேரத்தில் முகத்தில் இருக்கும் எண்ணெய் பசையுடன் அப்படியே சென்று தூங்கும்போது அது உங்கள் முகத்தில் பருக்களை உண்டாக்கலாம். எனவே இரவு தூங்கும்முன் குளிப்பது முகப்பருக்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கும்.

பருவக்காலத்திற்கு ஏற்றார் போல அலர்ஜிகள் ஏற்பட்டால் வெளியில் நீங்கள் செல்லும்போது கிருமிகள் உங்கள் சருமம் மற்றும் உடையின் மூலம் உங்களை தொற்றிக் கொள்ளும். இந்த சூழ்நிலையில் நீங்கள் இரவில் குளிக்காமல் தூங்கினால் உங்கள் உடலில் இருக்கும் கிருமிகள் அலர்ஜியின் தாக்கத்தை அதிகரிக்கும். மேலும் இது தூக்கமின்மை போன்ற பிரச்சினைகளையும் ஏற்படுத்தும்.

உங்கள் சருமம் சீராக இருக்க ஹார்மோன்களின் உற்பத்தி சீராக இருக்க வேண்டியது அவசியமாகும். மேலும் உடலுறவில் ஈடுபடும் போது வெளிப்படும் ஹார்மோனும் சருமத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்தும். இந்த இரண்டு ஹார்மோன்களின் உற்பத்தியும் இரவு நேரத்தில் அதிகமாக இருக்கும்.

எனவே இரவு நேரத்தில் குளிப்பது உங்கள் உடலின் மேற்புறத்தில் இருக்கும் ஹார்மோன்களை சுத்தம் செய்வதன் மூலம் ஹார்மோன்களின் அளவை சமநிலையில் வைத்துக் கொள்ள முடியும்.

இரவில் குளிப்பதால் அதிக பலனடைவது உங்கள் முடிதான். இது உங்கள் முடியில் ஈரப்பதத்தை தக்கவைத்து கொள்ள உதவுகிறது. மேலும் இரவு தலைக்கு குளித்து விட்டு காலையில் எழுந்தால் உங்கள் முடி மிருதுவாக இருக்கும். இரவில் குளித்து விட்டு தூங்குவது உங்கள் முடி வளர்ச்சியையும் அதிகரிக்கும்.

# காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழக பெண் ஆளுமைகள் கௌரவிப்பும் விசேட கவியரங்கமும்



உலகம் முழுவதும் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினத்தையொட்டி காத்தான குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் ஏற்பாடு செய்த தமிழ் முஸ்லிம் பெண் ஆளுமைகள் கௌரவிப்பும் விசேட மகளிர்தின கவியரங் கும் கழகத்தின் தலைவர் கவிமாமணி ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் காத்தான்குடி கலாநிதி அலவி சரிபுத்தீன் முன்னோடிகள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.


காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி றிப்கா சபீன், காத்தான்குடியின் முதல் பெண் இலிகிதர் திருமதி பரீனா றூஹுல்லாஹ், காத் தான்குடியின் முதல் பெண் நூலகர் திருமதி ஹமீதா சுபைர், இன்றைய காத்தான்குடி பொது நூலக பிரதம நூலகர் திருமதி கமலினி புஸ்பராஜா ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரி எம்.எம்.ஹாரீஸ் மதனி கழகத்தின் செயலாளர் கலாபூசணம் காத்தான்குடி பாத்திமா உட்பட பலர் அதிதி களாகக் கலந்து கொண்டனர். கவிக்கோன் இல்மி அஹமட்லெப்பை தலைமையில் உஸனார் ஜாபீர், அஜீரா ஹலீல்தீன், காத் தான்குடி பௌஸ், கலைமதி றபாய்தீன், முகைதீன்சாலி, அப்துல் றஹீம், செல்வி ரிஸ்லா ரியாஸ், செல்வி ரீமா ஹாரீஸ், ஷாஹிர் ஹுசைன், எம்எச்எம்.இக்பால் மௌலவி, ஏ.ரீ.எம்.ரியாஸ், ஏ.எல்.எம். சப்ரி ஆகிய 11 ஆண், பெண் கவிஞர்கள் சர்வதேச மகளிர் தினத்தில் பெண்களைப் போற்றி கவிதை பாடினர். கவிஞர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(படங்கள் தகவல்: ரீ.எல்.ஜவ்பர்கான் மட்டக்களப்பு குறூப் நிருபர்

## மணவையின் மருத்துவ குறிப்பு

# சிறுநீரக பிரச்சினை



மனிதன் உயிர் வாழ அத்தியாவசியமானது கழிவு நீக்கம். சிறுநீரக மண்டலம் நமது உடற்கழிவுகளை வெளியேற்றும் பணியை திறம்படச் செய்தால் மட்டுமே வாழ்வை நாம் முழுமையாய் அனுபவித்து வாழ முடியும்.

சிறுநீர் உருவாக மற்றும் வெளியேற காரணமாக இருக்கும் இரண்டு சிறுநீரகங்கள், யூரட்டர் எனப்படும் குழாய்கள், ப்ளாடர், இவற்றை கட்டுப்படுத்தும் தசைகள், நரம்புகள் இவற்றை சிறுநீரக மண்டலம் என்கிறோம். சிறுநீரக மண்டலமானது, நுரையீரல், சருமம், குடல் இவற்றுடன் சேர்ந்து உடலில் உள்ள நீர் மற்றும் தாதுப்பொருட்களை சமன் செய்கிறது.

18 வயதிற்கு மேற்பட்டவர் சுமாராக ஒரு நாளில் ஒன்றரை லீட்டர் சிறுநீர் கழிக்கின்றார். ஆனால் பருகும் தண்ணீர் மற்றும் பானங்களைப் பொறுத்தும், வியர்வை மற்றும் மூச்சுக் காற்றில் வெளியேற்றும் நீரைப் பொறுத்தும் இந்த அளவு வேறுபடலாம். சிலவகையான மருந்துகளாலும் வெளியேறும் சிறுநீரின் அளவு மாறுகிறது.

சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு, குடும்பத்தில் ஏற்கனவே சிறுநீரக பிரச்சினை உள்ளவர்கள் மற்றும் 60 வயதிற்குமேல் உள்ளவர்களுக்கு சிறுநீரக மண்டலத்தில் நோய் வரும் வாய்ப்பு அதிகம். சிறுநீர் கழிப்பதில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் தாமதிக்காமல் மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

**சிறுநீரக மண்டலம் எவ்வாறு செயல்படுகிறது?**

ஜீரண மண்டலம் உணவிலிருந்து அதற்குத் தேவையான சத்தை எடுத்துக் கொண்டபின், கழிவுப் பொருட்களை இரத்தத்திலும் குடலிலும் விட்டுவிடுகிறது.

இரத்தம் சிறுநீரகங்களுக்கு சென்றவுடன் அங்கு கழிவுப்பொருட்கள் வடிகட்டப்பட்டு நீருடன் யூரட்டர்கள் மூலம் சிறுநீராக ப்ளாடருக்கு வந்து சேருகிறது. இந்த நிலைக்கு மேல் சிறுநீர் பிரச்சினைகள் வராமல் தடுப்பதில் தசை மற்றும் நரம்புகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

ப்ளாடரில் இருந்து யுரத்ரா என்னும் துவாரம் மூலமாக சிறுநீர் உடலிலிருந்து வெளியேற்றப்படுகிறது. சிறுநீர் வெளியில் ஒழுகாத வண்ணம் தசைகள் பாதுகாக்கும். எப்பொழுது சிறுநீர் கழிக்க வேண்டும் என்பதை ப்ளாடரிலிருக்கும் நரம்புகள் நமக்கு உணர்த்தும்.

ஒருவரின் ப்ளாடர் சரிவர செயல்படுமானால் 600 முதல் 800 மில்லி வரை சிறுநீரை பிடித்து வைத்திருக்க முடியும். இருப்பினும் 150 முதல் 300 மில்லி சிறுநீர் பிளாடரில் சேர்ந்தவுடனேயே சிறுநீர் கழிக்கும் உந்துதல் ஏற்படுகிறது. வயதாக ஆக சிறுநீரகங்களிலும் மாற்றம் ஏற்படுவதால், சிறுநீரகத்தால் திறம்பட கழிவுகளை அகற்ற முடிவதில்லை.

வயதான நிலையில், யூரட்டர், ப்ளாடர் மற்றும் யூரத்திராவில் உள்ள தசைகளும் இடுப்புத் தசைகளும் தங்கள் வலுவை இழக்கக்கூடும். எனவே சிறுநீரை திறம்பட கட்டுப்படுத்த முடியாமலோ அல்லது சரிவர அகற்ற முடியாமலோ போய்விடும். இதனால் தேவையற்ற நேரத்தில் சிறுநீர் ஒழுகல் ஏற்படும். அடிக்கடி தொற்றும் ஏற்படலாம். இதற்கு பொதுநல மருத்துவரை அணுகலாம். இவர் நெஃப்ராலஜிஸ்ட், சிறுநீரகங்களில் ஏற்படும் வியாதிகளை கையாள்வார். யூராலஜிஸ்ட் சிறுநீரக மண்டலம் மற்றும் பிறப்புறுப்புகளில் ஏற்படும் பிரச்சினைகளை சரி செய்வார். பெண்கள் சிறப்பு மருத்துவர் பெண்களின் சிறுநீரக மண்டலத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளை சரிசெய்ய முடியும்.



தமிழகத்தில் மருத்துவ சிகிச்சைகளை பெற விரும்புவோருக்கு இலவசமாக வழி–காட்டி உதவிகளைப் பெற்றுக்கொள்ள


**மணவை அசோகன்**
(0778978792)


# கிராமிய கலைகள் ஒன்றியத்தின் மென்பந்து கிரிக்கெட் போட்டி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் எதிர்வரும் 2023.04.29ஆம் திகதி கொழும்பில் கலைஞர்களுக்கு இடையே மென்பந்து கிரிக்கெட் போட்டியொன்றை நடத்தவுள்ளது. அணிக்கு 9 கலைஞர்களைக் கொண்ட இப்போட்டியில் கட்டாயம் இரண்டு பெண் கலைஞர்கள் இணைந்து விளையாட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் வருடாந்தம் நடத்தும் இப்போட்டியில் 12 அணிகளுக்கு மட்டும் தான் விளையாடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

இதற்கு நுழைவுக் கட்டணமாக 7000 ரூபா அறவிடப்படும். முதலாம் இடத்தைப் பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 15 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் இப்போட்டி நடைபெறவுள்ளது.


6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





பசியைப் போக்க தவளைக்குட்டி களுக்கு வழிகாட்டுங்கள்...


புள்ளிகளை இணைத்து அழகான வாத்தின் உருவத்தை முழுமைப் படுத்துங்கள்...




அழகாக நிறம் தீட்டி மகிழுங்கள்...



மேலுள்ள உருவங்களை வெட்டி கீழுள்ள உருவங்களின் பொருத் தமான இடங்களில் ஒட்டவும்...





நான் ரொம்ப பிஸி...

## மூன்றாவது ஆண்டை நோக்கிய பயணத்தில்

# வெண்ணிலா கவிதை மஞ்சரி இதழாசிரியர் எஸ். ஏ. கப்பார்

இலக்கியத்தின்பால் பலரை ஈர்த்தெடுத்து ஆக்கத் திறனை வெளிகாட்டுகின்ற பெருமை சஞ்சிகைக்குரியதாகும்.அந்த வகையில் இலக்கிய சஞ்சிகைகள் பல்வேறு தளங்களில் இன்று வெளியாகி மகிழ்வை ஏற்படுத்தி நிற்கின்றன.

அண்மையில் வெண்ணிலா கவிதை மஞ்சரி எனும் சஞ்சிகை எட்டாவது காலாண்டிதழ், இரண்டாவது ஆண்டு நிறைவு இதழாக கவிஞர் எஸ். ஏ.கப்பாரினால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது மிக மகிழ்ச்சியாக உள்ளது.



ஒரு சஞ்சிகையினை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ச்சியாக வெளியிடுவது எவ்வளவு சிரமம் என்பது அனுபவ ரீதியாக புரிந்து கொள்ளலாம்.

அதுவும் இக்காலகட்டத்தில் அச்சுப் பதிப்பாக வெளியிடுவது என்பது மிகச் சிரமமான ஒரு விடயம்.

1978 ஏப்ரல் 10 ஆம் திகதி வெண்ணிலா என்ற சஞ்சிகையை காவியன் என்ற புனைப் பெயரில் இதன் இதழாசிரியர் எஸ். ஏ.கப்பார் தனது பாடசாலை காலத்தில் நண்பர் எம். எம். எம்.அபுல்கலாமுடன் சேர்ந்து , அச்சுப்பிரதியாக 12 இதழ்கள் வரை வெளியீடு செய்துள்ளார். அதன் பின்னர் தொழில் நிமித்தம் நண்பர் வெளிநாடு சென்றதன் காரணமாக அது தொடர முடியாமல் போயின. இது வெண்ணிலாவின் கடந்தகால வரலாறாகும்.


அக்காலத்தில் வெண்ணிலா சஞ்சிகையில் சிறுகதை, நாடகம்,கலைஞர் பேட்டி,கவிதை போன்ற ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு இதழ்கள் வெளிவந்தன.

மீண்டும் 2021 ஏப்ரல் மாதம் 43 வருடங்களின் பின் வெண்ணிலா கவிதை மஞ்சரி காலாண்டு எட்டாவது இதழாக மலர்ந்து நமது கைகளிலே தவழ்ந்து 45 வயதை எட்டியுள்ளது அதுவொரு சாதனைப் பயணம் என்று சொல்லலாம்.

நன்றி மறப்பது நன்றன்று என்பதற்கிணங்க வெண்ணிலா கவிதை மஞ்சரியின் தொடர்ச்சியான வருகைக்கு பல வழிகளிலும் ஆதரவு வழங்கும் சந்தாதாரர்களுக்கும் விளம்பர அனுசரணையாளர்களுக்கும் ஆக்கங்கள் தந்து உதவியவர்களுக்கும் இதழாசிரியர் கவிஞர் எஸ் ஏ கப்பார் முதலில் நன்றியை இவ்விதழிலே தெரிவிக்கின்றார்.

அச்சுப் பதிப்பு மற்றும் தொழில்நுட்ப வேலைகளில் ஒவ்வொரு இதழையும் அழகிய முறையில் உரிய நேரத்தில் அச்சிட்டுத் தரும் கவிஞரின் இளைய சகோதரர் எஸ். ஏ.ஜெஸீமுக்கும் தகவல் தொழில் நுட்ப உதவிகளை வழங்கி வரும் அவரது இளைய மகன் ஏ.ஜி. அப்ரான் முஹம்மதுக்கும் (றுஹுணு பல்கலைக் கழகம்) இதழினை வெளியிடும் DIS நிறுவனத்திருக்கும் சஞ்சிகையை வடிவமைப்பு செய்வதற்காக பிரான்சில் இருந்து வெளிவரும் பொன் விழாக் கண்ட தமிழ் நெஞ்சம் இதழின் ஆசிரியர் இணைய வழியாக ஆலோசனைகள் வழங்கியமைக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றார்.






33 கவிஞர்களின் கவிதைகள் வெண்ணிலா கவிதை மஞ்சரியில் இடம் பெற்றுள்ளன. தடம் பதித்த மூத்த கவிஞர் மருதமுனை ஹஸன், தீரன், ரோஷான் ஏ.ஜிப்ரி, டீன் கபூர், எழுகவி ஜலீல், மருதூர் ஜமால்தீன், பாரதி மைந்தன்,ராஜகவி ராகில், வசந்த தீபன், செம்மைத்துளியான், இமையி, சிக்கந்தர் அகமது, கமலாதேவி தனபாலன், மாஹிரா ஹமீட் அஸ்ஹர், மற்றும் Dr.ஜலீலா முஸம்மில், வசீம் அக்ரம்,ஏ.எம். கஸ்புள்ளா,மயிலிறகு மனசு ஷிபானா அஸீம், மருதமுனை முனாஸ், சுமதி, சம்மாந்துறை சந்தக்கவி, மலேசியா ஏ.தேவராஜன், வடக்கத்தியான் பட்டி கே.பாலன், ரத்னா, தாரமங்கலம் அ.முத்துசாமி, சிமாரா ஊதாப்பூ, வானம்பாடி முஜா, இந்தியா மாலதி வெங்கடேசன், இந்தியா கனியமுது அமுதமொழி, சென்னை ராம்ப்ரசாத், திருச்சி கவிசெல்வா, எச்.ஜி.ரசூல் இந்தியா போன்ற கவிஞர்களால் வ கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.










மற்றும் கட்டுரைகள் இளம் கவிஞர், எழுத்தாளர் கவிப் பொய்கை ஜெவ்ஸன் அகமட், எழுத்தாளர் ஏ.எம். கஸ்புள்ளா, இலக்கிய செயற்பாட்டாளர் றியாஸ் குரானா,நாடறிந்த எழுத்தாளர்,பத்திரிகையாளர்,சிரேஷ்ட ஊடகவியலாளர், ஆசிரிய ஆலோசகர் எம். ஐ.எம். முஸாதிக் என்பவர்களின் ஆக்கங்களையும் சுமந்து வெண்ணிலா கவிதை மஞ்சரி மலர்ந்துள்ளது பாராட்டத் தக்க விடயமாகும். மேலும் இவர் இலங்கை வங்கி முகாமையாளராக பணி புரியும் இவர் " நிலவு அவள்" என்ற கவிதையையும் வெளியீடு செய்துள்ளார்.

நேர்காணல்: கவிச்சுடர்
**–ஏ.எம். கஸ்புள்ளா–**


தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# எம்.எம்.நௌஷாத்தின் கதீஜா பேகம்

ஈழத்தின் முக்கிய கதை சொல்லியாக பூச்செண்டு போல் ஒரு மனிதன் மதிப்பிடப்படுகிறான். அவனது கதை சொல்லும், பொருளும், சொல் முறையும், சொல் புதுமையும் இலக்கியப்பரப்பில் பூச்செண்டு போல் பூத்து நிற்கிறது.



கதைப்பரப்பில் புத்தம்புதிய செல்நெறியை தொடக்கிய பூச்செண்டு மனிதனின் நாவல் பனுவல் கதீஜா.

தான் சந்தித்த கதீஜா பேகத்தை அவளுடனான கதையாடலில் இருந்து கற்றுக்கொண்ட அனுபவங்களை மொழிவழி தரும் பனுவலாக எம்.எம்.நௌஷாத்தின் பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம் படைப்பு உருப்பெறுகிறது. நாவலெழுத்தென்பது சிறப்பான ஆரம்பம், தொடர்ச்சி அறாமலிருத்தல். சம்பவங்களைக் கோர்த்தல், சுவாரஷ்யமான கதையோட்டம், தொய்வின்றிய கதைப்பின்னல், ஆழமான விபரிப்பு, நேர்த்தி, பொருத்தமான முடிவு என்று பல விஷயங்களை உள்ளடக்கிய நுட்பமான விஷயம் எனக்கூறும் நௌஷாத், அவற்றை தன் கதீஜா நாவலில் தரவிறக்கம் செய்யும் முயற்சியை மேற்கொள்கிறார். டிசம்பர் 2022இல் சம்மாந்துறை, தேசிய கலை இலக்கியத் தேனகம் வெளியிட்டுள்ள இந்நாவல் பனுவல் மன்சூர்.ஏ.காதிர் எழுதிய அணிந்துரையில் அறிமுகம் பெறுகிறது.

சிறுகதைப் பனுவல்களூடாக புத்தம் புதிய செல்நெறியைத் தொடங்கியவர். அதனால் கதையெழுத்தின் அடையாளமாக இருந்தவர். ஆனால் நாவல் பனுவலில் மொழிநடைப் புலமை முதிர்வு தளர்ந்துள்ளதை ஜனரஞ்சக வெகுஜனக் கையாளுகை மேற்கிளம்புவதை உணர்த்துகிறார்.

படைப்புத் தொழில் நுட்பம், பாத்திர வார்ப்பின் உளவியல் பாங்கு, யதார்த்த இயல்பு நிலை குறித்து இந் நாவல் பனுவல் மேலெழுவதையும் எழுதுகிறார். அட்டை வடிவமைப்பின் பிரதானி லார்க் பாஸ்கரனின் கைவண்ணத்தில் கதீஜா அழகு பெறுகிறாள்.

இருபதாம் நூற்றாண்டின் சாம்பல்மேடு என்ற கிராமத்தில் பிறந்த பேகம் கதீஜா என்ற சாமானியப் பெண்ணின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு என்னுடைய பயிற்சி நாவலாக இங்கு விரிகிறது எனத் தொடங்கும் நௌஷாத் முப்பத்திரெண்டு அத்தியாயங்களில் அல்லது தொடர்களில் கதீஜாவை எழுதுகிறார்.

உம்மம்மா ஹலீமா உம்மா அவர்களுக்கும் அப்பா அப்துல் காதர் ஆலிம் அவர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்ட இந் நாவல் பனுவலில் அவர்களும் பாத்திரங்களாக அல்லது அனுபவக்கூறுகளாக வந்து போகின்றனர். இனி நீங்களும் பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதத்தை வாசிக்கலாம்.

# வீடு



எழுபத்தைந்து வருஷம் கடந்து விட்டது. வீட்டின் நினைவுகளில் உறைகிறது மனசு. அது எலும்பும் தோலுமாகக் கிடக்கிற காட்சியில் ஒரு கண்ணீர்த்துளி. ஒருகறை. ஒருவலி. ஒருவரலாறு.

அந்த வீடு, பெத்தவனின் வியர்வையாலானது. அவன் தன் ஊர் மண் பிசைந்து கட்டிய கனவு வீடு அது. கடைசியாய் இவனும் இங்கு தான் பிறந்திருக்கிறான். தவண்டிருக்கிறான், தத்தித்தத்தி நடந்திருக்கிறான், விழுந்திருக்கிறான், எழுந்திருக்கிறான், கனவில் பறந்திருக்கிறான், கற்பனையில் மிதந்திருக்கிறான்.

கனவும் கற்பனையும் இன்றுமிருக்கிறது, கண்ணீரும் கறையும் இருக்கிறது.

அவன் வீட்டின் அண்மையில் நின்றான். முற்றத்து மாமரத்தின் அடர்த்தி ஒடுங்கியிருக்கிறது. மண்ணின் செழுமை கரைந்திருக்கிறது.

அவனைப் பெத்தவனின் வியர்வை வீடு, சுவர் கரைந்திருக்கிறது, கூரை உடைந்திருக்கிறது. குந்தியிருந்து விளையாடிய குந்து அழிந்திருக்கிறது.

வீடு, நினைவுகளை மீட்டு அசை போட வைத்தது. உள் உலாவித் திரிந்த காலடிகளின் சப்தம் காதுகளில் கேட்டது. இவனும் மற்றோரும் பேசி முடித்த கோடிச் சொற்களின் அர்த்தம் நெஞ்சில் அலையென மீண்டது. சிரிப்பு, அழுகை, துன்பம், இன்பம், துயரென உணர்வுகளின் கோலமொன்று இவனது தொண்டையை அடைத்தது.

இவன் சுவர்களில் எழுதிவைத்த கவிதைகள், காற்றில் வாசித்து வைத்த கதைகள், கற்பனையில் சேமித்து வைத்த இன்னும் புனையா படைப்புகள் எல்லாமாக நினைவில் மிதந்தன. பிரிவு வீட்டின் முன்னால் இவனை நிறுத்தி வைத்தது. ஐம்பது வருஷம் எங்ஙனம் கடந்தான். பேரப்பிள்ளைகளும் அதிர்ச்சியுறப் பார்த்தனர். இவன் வாழ்ந்த வீடு இவனுக்கு கம்பீரம்தான். உருவழிந்த வீட்டின் ரேகை நெஞ்சில் படர்ந்தது.

கதவுகளும் யன்னல்களுமற்ற வாழ்வு எனும் வீட்டில் இவன் அலைந்துழல்வு முடிவற்றது. ஆயிரம் கதவுகளைத் திறந்துகொண்டு அல்லது உடைத்துக்கொண்டு அல்லது கடந்துகொண்டு வெவ்வேறு வீடுகளில் வெவ்வேறு வசிப்புகளில் வாழ்ந்து தொலைந்திருந்தது இவனது வீடு.

எத்தனை யன்னல்கள் திறந்திருப்பான். வெளிச்சத்தின் துளிக்காய் இவன் ஏங்காத ராத்திரிகள் இல்லையென்றான். நட்சத்திரங்களுக்காக, நிலவின் வரவுக்காக இவனது யன்னல்கள் திறக்கும் போதெல்லாம் இருளின் கருமை இவனது வீட்டை நிறைத்தது.

இவன் இப்போது முதல் வீட்டு முன்றிலில் வந்து நின்றான். இதனிடையே ஆயிரத்தொரு வீடு கடந்தான். வீடு கடந்ததென்பதுதான் வாழ்தல் என்றானது.

இப்போது மெல்லிய தூறல் மழை, இதமான காற்றின் அசைவு, பகலொளியின் பரவசம் யன்னல் மெல்லத் திறக்கிறது. கதவின் அண்டை ஒரு காலடி பூக்கிறது. பின் நூறாகி..... ஆயிரமாகி...... கோடிக் காலடிகள் பூக்கின்றன. இவனது வீடு இவனைச் சுமக்கிறது. இவன் பறக்கத்தொடங்குகிறான்.

**பொன்மீரா...**

## மறுவாசல்


### முல்லை முஸ்ரிபா

# சிங்கார நினைவு 02

முல்லைமணியை முதலில் வாசித்தது பாடநூலில். பண்டாரவன்னியன் வரலாற்று நாடக ஆசிரியராகத்தான். அது படிக்கும் காலம். பாடப் பனுவலுக்குள் வாசிப்பும் நேசிப்புமாய் மிளிர்ந்த பருவம். பண்டாரவன்னியன் கதையின் ஒரு பகுதியை முற்றுருவப் பாங்காய் பாத்திர உரையாடல்களுக்குள் நானும் பாத்திரமாகி நடித்திருந்தேன். முல்லைமணியின் கனகச்சிதமான சொற்கள் எனக்குள் வெளிப்பட்டன.

நான் அப்போது நினைத்திருக்கவில்லை முல்லைமணியைக் காணக்கிடைக்குமென்று. பின்னர் எண்பதுகளில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் அவர் அதிபராக இயங்கிய காலத்தில் கண்டிருக்கிறேன். கதைத்திருக்கிறேன். இலக்கிய உறவில் பூத்திருக்கிறேன்.

வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் முல்லைமணியானார். அவரது கமுகஞ்சோலையை வாசித்தபோது நாவல் ஒரு சமூக வரலாற்றின் அடையாளம் என உணர்ந்தேன். அவர் வரையும் கமுகஞ்சோலை சின்ன வயசில் நான் நண்பர்களோடு விளையாடிய சோலை மரமேறி மகிழ்ந்தாடிய களம் கமுகஞ்சோலையை வாசித்தபோது அதற்குள் இருக்கிற வரலாற்றைத் தெரிந்து கொண்டேன். கமுகஞ்சோலைப் போரில் முஸ்லிம்கள் விதேசிகளுக்கெதிராய்ப் போராடிய கதை படித்தேன்.



மூத்த இலக்கிய ஆளுமை முல்லைமணி மகுடிக்கூத்துப் பற்றியொரு புனைவு செய்திருந்தார். ஒரு காலத்தில் முல்லைத்தீவில் மகுடிக்கூத்து ஆடப்பட்டிருக்கிறது. இது நாடகப் பாங்கிலமைந்தது.

இதில் முஸ்லிம் வியாபாரிகளை அவமானப்படுத்தும் வகையிலான கதையோட்டம் இருக்கும். குறித்த புனைவைப் படித்த பின் முஸ்லிம்களுக்கெதிரான அல்லது முஸ்லிம் பண்பாட்டியலை இழிவுபடுத்துவதான செயலிது என உணர்ந்தேன். இதற்கெதிரான எனது பதிவை எங்கள் தேசத்தில் அப்போது எழுதியிருந்தேன்.

இளைய முஸ்தபாவின் முல்லையில் நம்மூவர் நூலில் வரும் மூவரில் ஒருவர் முல்லை மணிதான். அவரது ஆளுமையை அவர் வரைந்திருப்பார்.

முல்லைத்தீவின் இன்மை ஆளுமைகளுக்கு மத்தியில் தன் ஆற்றல் சிறகுதைத்தெழுந்த இலக்கிய ஆளுமை முல்லைமணி, 'எனது பிறந்த ஊரான முள்ளியவளை கலை வளம் மிக்கது. அண்ணாவிமார்களும் நாடக ஆசிரியர்களும் வாழ்ந்த மண்ணிலே வாழ்கின்ற மண்ணிலே நாட்டுக் கூத்துகளும் அண்ணாவிமாரின் மரபு நாடகங்களும் இறாம எனும் நவீன மேடை நாடகங்களும் இசைக் கச்சேரிகளும் எப்போதும் நடந்து கொண்டு இருக்கும்' என முல்லையின் கலைவளம் குறித்து முல்லைமணி குறிப்பிடுவார்.

கலைவளமும் மொழிவளமும் மிக்க இவர் ஆசிரியராக அதிபராக விரிவுரையாளராக கல்விப்பணிப்பாளராகப் பணி செய்தவர். இருபது நாடகங்கள் ஐம்பது கதைகள் ஐந்து நாவல்கள் என எழுதியவர்.

இவரது இலக்கியப் பணிக்காக 2005 ஆம் வருடம் யாழ். பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது.

பண்டாரவன்னியன் நாடகத்திற்கு பாரதி கலைமன்றம் 'கலைஞர் திலகம்' பட்டம் சூட்டியது. இலங்கை அரசின் உயர் இலக்கிய விருதான சாகித்ய ரத்னாவை 2015 இல் சூடி மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை சேர்த்தவர்.

சக்கர நாற்காலியில் விருதுபெற வந்த பேராளுமையை நானும் வாழ்த்தி மகிழ்ந்தேன். புன்னகை தந்தார். பூத்த இளநிலவு.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் -3

சில நாட்களின் பின் நாராயணன் சக்கரபாணியையும் எம்.ஜி.ஆரையும் அழைத்து செல்வதற்கு வந்தார். சத்தியபாமா அவர்களிடம் நாடகக் கம்பனியின் விதிமுறைகளை எடுத்துக் கூறினார். அதாவது மதுரையில் இயங்கும் அந்த நாடகக் கம்பனியின் விதிமுறை யார் எந்த வேலைக்கு சேர்ந்தாலும் அவர்களுக்கு சாப்பாடு, அணிவதற்கு உடுப்பு, தங்குவதற்கு இடம் கொடுப்பார்கள். சம்பளம் உடனே கொடுக்க மாட்டார்கள். கம்பனிக்கு வேலைக்கு வரும் பிள்ளைகளின் திறமைகளை அறிந்த பின்னர்தான் சம்பளம் கொடுப்பார்கள். அதாவது கம்பனிக்கு வேலைக்கு வரும் பிள்ளைகள் நடிக்கக் கூடியவர்களா அல்லது கூலி வேலைக்குத் தகுதியானவர்களா? என அறிந்தே கம்பனியால் சம்பளம் வழங்கப்படும் போன்ற விபரங்களை சத்தியபாமா அவர்களிடம் நாராயணன் எடுத்துக் கூறி "எதற்கும் தயங்காமல் பிள்ளைகள் இருவரையும் என்னுடன் அனுப்புங்கள்" என்றார். மேலும் நாராயணன் சத்தியபாமா அவர்களிடம், "இப்போது அவர்களுக்குத் தேவை நன்றாகச் சாப்பிட்டு உடல் வளர்ச்சியடைவதுதான். அடுத்தது எதுவாக இருந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று தெம்பூட்டினார்.

சத்தியபாமா அவர்கள் தனது இரு பிள்ளைகளையும் அழைத்து கட்டியணைத்து முத்தமிட்டு, "மகன்களே! நீங்கள் வேலைக்குப் போகப் போவதாக கூறினீர்களே! இப்போது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதாவது நமது உறவினர் நாராயணன் பணி புரியும் நாடகக் கம்பனியில் வேலை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது" என்றார். அதற்கு இருவரும் "அம்மா! உங்களுக்கு சம்மதம் என்றால் எங்களுக்கும் சம்மதம்தான். ஆனால் உங்களைத் தனியாக விட்டு விட்டு எப்படிப் போவது என்றுதான் மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்றனர். அந்த நேரத்தில் இளையவரான எம்.ஜி.ஆர். அம்மாவைக் கட்டியணைத்து அழுகிறார். அப்போது அம்மா தனது மன வேதனையைக் காட்டாமல் எம்.ஜி.ஆரின் கண்ணீரைத் துடைத்து உற்சாகமூட்டுகிறார். இதைப் பார்த்து சக்கரபாணியும் அழுகிறார். சத்தியபாமா அவர்கள் மீண்டும் தனது இரு பிள்ளைகளையும் கட்டியணைத்து முத்தங்களைப் பொழிந்து, "படித்தவர்களால் மட்டும்தான் எதையும் சாதிக்க முடியும் என்றில்லை. சத்தியம், தர்மம், நீதி, பக்தி இருந்தால் உலகத்தையே வெல்லலாம்" என்று கூறி உற்சாகப்படுத்தி நாராயணனுடன் தனது இரு பிள்ளைகளையும் மன வேதனையுடன் அனுப்பி வைத்தார்.




அந்த நேரத்தில் மதுரை ஒரிஜினல் போய்ஸ் நாடகக் கம்பனி நடத்தும் நாடகங்கள் பாண்டிச்சேரியை சேர்ந்த காரைக்கால் என்ற ஊரில் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. அங்குதான் நாராயணன் இருவரையும் கூட்டிக் கொண்டு சென்றார். அம்மாவை விட்டுப் பிரிந்து எம்.ஜி.ஆர். சென்ற முதல் ஊர் பாண்டிச்சேரியை சேர்ந்த காரைக்கால் எனும் ஊரே ஆகும். இந்த நாடகக் கம்பனி நடத்தும் நாடகங்களில் நடிப்பவர்கள் அதிகமானோர் சிறுவர்கள்தான். நாராயணன் தான் அழைத்துச் சென்ற இருவரையும் நாடகக் கம்பனியின் முதலாளிக்கு அறிமுகம் செய்து வைத்தார். முதலாளி இரு பிள்ளைகளையும் நன்றாகப் பார்த்து விட்டு "இருவரும் நன்றாகத்தான் இருக்கிறார்கள். நல்ல நிறமாகவும் அழகாகவும் இருக்கிறார்கள். இவர்களை நடிக்க வைக்கலாம்" என்று கூறி நடிகர்களுக்கான பயிற்சி கூடத்திற்கு அனுப்பி வைத்தார்.

இருவரும் நாடக நடிகர்களுக்கான பயிற்சி கூடத்தில் தங்கியிருந்து நடிப்புப் பயிற்சியில் ஈடுபட்டதால் சத்தியபாமாவுக்கு மிகக் குழப்பமாகி விட்டது. இரு மகன்களினதும் வளர்ச்சி முக்கியமா? தன்னுடன் வீட்டில் வந்து தங்கிச் செல்வது முக்கியமா? என்ற குழப்பத்தில் மூழ்கிய சத்தியபாமா அவர்கள் மீண்டும் நாராயணனை சந்தித்து விபரத்தை கூறுகிறார். மேலும் "வாரத்தில் நாடகப் பயிற்சிகள் இல்லாத நாட்களில் ஒருநாள் அல்லது இரு நாட்கள் இரு பிள்ளைகளும் வந்து என்னுடன் தங்கிச் செல்ல வழி வகுத்துக் கொடுங்கள்" என்று நாராயணனிடம் சத்தியபாமா அவர்கள் கெஞ்சிக் கேட்கிறார். இந்த விடயத்தை நாராயணன் அவர்களும் நாடகக் கம்பனி முதலாளியைச் சந்தித்து விபரமாக தெரிவிக்கிறார். இந்த விடயத்தைக் கேட்ட முதலாளி இரு பிள்ளைகளும் நமக்கு முக்கியமாக நாடகத்திற்கு வேண்டும் என்ற நினைப்போடு, "இரு பிள்ளைகளுக்கும் சலுகை கொடுக்க வேண்டும். எனவே நாடகங்கள் இல்லாத காலத்திலும் பயிற்சிகள் இல்லாத காலத்திலும் ஒருநாள் அல்லது இரு நாட்கள் தங்கி வரலாம்" என்று நாடகக் கம்பனி முதலாளி அனுமதியளிக்கிறார்.

நாடகங்கள் அல்லது பயிற்சிகள் இல்லாத நாட்களில் வீட்டுக்குச் சென்று அம்மாவுடன் தங்கியிருக்க அனுமதி கிடைத்த விடயத்தை அறிந்து இருவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். சத்தியபாமா அவர்களும் மிகவும் மகிழ்ந்தார். இதன்படி நாடகங்கள், பயிற்சிகள் இல்லாத நாட்களில் இரு பிள்ளைகளும் வீட்டுக்கு வந்து அம்மாவுடன் தங்கியிருந்து அம்மா கையினால் சாப்பாடு சாப்பிடுவதை நினைத்து பூரிப்படைகிறார்கள். சத்தியபாமா அவர்கள் இளைய மகனான எம்.ஜி.ஆர். மிகவும் குறைவாக உண்பதையும் மெலிந்து இருப்பதையும் கவனிக்கிறார்.

சத்தியபாமா அவர்கள் எம்.ஜி.ஆரை நோக்கி, "மகனே! மிகவும் மெலிந்து காணப்படுகிறாய். சாப்பாடும் சரியாக சாப்பிடவில்லையே!" என கேட்கிறார். அதற்கு எம்.ஜி.ஆர். அவர்கள் மிக துடிப்போடும் செல்லத்தோடும் அம்மாவின் கன்னத்தை தடவி, "என் உடல் மெலிந்து போனால் அதற்கு நான் என்ன செய்வது? என்னால் முடிந்த வரை நான் சாப்பிடுகிறேன். முன்பு போல் சாப்பிட முடியவில்லையே அம்மா" என்று கூறினார். இதனைக் கேட்டதும் அம்மா எம்.ஜி.ஆரை கட்டித் தழுவி மேலும் கீழுமாகப் பார்க்கிறார். அடுத்த நாள் சத்தியபாமா அவர்கள் அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடத்தில் தனது இளைய மகன் எம்.ஜி.ஆரின் உடல் மெலிவைப் பற்றியும் குறைவாக உணவு உண்பதைப் பற்றியும் எடுத்துக் கூறி "அதற்கு ஏதாவது வைத்தியம் உண்டா?" என கேட்கிறார்.

(தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# மாஞ்சேரி நாராயணன் நம்பியார்

அகில உலக சினிமாவில் தேடினாலும் கிடைக்காத அற்புத வில்லன் நடிகர் எம்.என்.நம்பியார். அவரின் 104 வது ஜனன தினம் 07.03.2023.. மாஞ்சேரி நாராயணன் நம்பியார் என்பதையே சுருக்கமாக எம். என். நம்பியார் என அழைத்தனர். நம்பியார் 1919 மார்ச் 7 இல் பிறந்தார். 2008 நவம்பர் 19 இல் தனது 89வது அகவையில் அமரரானார். நம்பியார் தமிழ்த் திரையுலகில் ஒரு பழம்பெரும் நடிகர் ஆவார்.

ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கும் மேல் தமிழ்த் திரையுலகின் தலைசிறந்த நடிகர்களுள் ஒருவராக திகழ்ந்தவர். குணச்சித்திரம் மற்றும் எதிர் நாயகனாக என( வில்லன்) எண்ணற்ற திரைப்படங்களில் நடித்தார் நம்பியார்.



இந்திய கேரள மாநில கண்ணூர் மாவட்ட சிரக்கல் வட்டத்தில் பெருவமூர் என்ற ஊரில் கேளு நம்பியார் என்பவருக்கு கடைசிக் குழந்தையாக பிறந்தார் நம்பியார். இவருக்கு ஒரு தமையனாரும் ஒரு தமக்கையாரும் உள்ளனர். நம்பியாரின் எட்டாவது வயதில் தந்தை இறக்கவே தமையனார் வசித்து வந்த உதகமண்டலத்துக்குக் குடி பெயர்ந்து அங்குள்ள நகராட்சி உயர் பள்ளியில் மூன்றாம் வகுப்பு வரை படித்தார்.1946 ஆம் ஆண்டில் தனது உறவினரான ருக்மணி என்பவரைத் திருமணம் புரிந்தார்.



பா. ஜ. கவின் முக்கிய தலைவராக இருக்கும் சுகுமாரன் நம்பியார் இவரது மகன். மோகன், சினேகா என்போர் இவரின் மற்ற குழந்தைகள் ஆவர். திரைப் படங்களில் வில்லனாக நடித்த போதும், தன்னுடைய வாழ்க்கையில் சிறந்த ஒழுக்கங்களை கடைபிடித்தவர் நம்பியார். திரையுலகில் சிறந்த ஆன்மீகவாதியாகவும், ஒழுக்கத்தில் சிறந்தவராகவும் அறியப்பட்டார்.

நம்பியார் தொடர்ந்து 65 ஆண்டுகளாக சபரி மலைக்குச் சென்று வந்தார். சிவாஜி கணேசன், அமிதாப்பச்சன் போன்றவர்கள் சபரிமலைக்கு யாத்திரை செல்லும் தருணங்களில் அவர்களுக்கு குருசாமியாய் தலைமையேற்று வழி நடத்தியவயர் நம்பியாரே. சிறு வயதில் தொடர்ந்து படிக்க அவரது பொருளாதாரம் இடம் கொடாமையால், தனது 13 வயதிலேயே சென்னை நவாப் ராஜமாணிக்கம் நாடகக் குழுவில் சேர்ந்து சேலம், மைசூர் எனச் சுற்றினார். ஆனாலும் நாடகங்களில் நடிக்க சந்தர்ப்பம் வரவில்லை. நாடகக் கம்பனியின் சமையலறையில் உதவியாளராகவே இருந்தார்.

வேடம் போட்டால் தான் சம்பளம். இலவசச் சாப்பாடும், படுக்க இடமும் கிடைத்தது. நவாப் கம்பனியின் ராம்தாஸ் என்ற நாடகத்தை 1935 ஆம் ஆண்டு பக்த ராம்தாஸ் என்ற பெயரில் திரைப்படமாக எடுத்தார்கள். இதன் படப்பிடிப்புக்காக பம்பாய் சென்றார்கள். நம்பியாரும் கூடவே சென்றார். இப்படத்தில் அக்கண்ணா, மாதண்ணா என்ற நகைச்சுவை வேடங்களில் மாதண்ணா வேடத்தில் நம்பியார் நடித்தார். இதுவே இவர் நடித்த முதல் திரைப் படமாகும்.

**(தொடரும்)**



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...**
கம்பளை

# நந்தவனம் பவுண்டேசனின் சாதனைப் பெண்களுக்கு விருது வழங்கும் விழா



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நந்தவனம் பவுண்டேசன் வருடாந்தம் நடத்தும் விருது வழங்கும் விழா சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பார்க் எலேன்ஸ் ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது.

லிம்ரா பேக்ஸ் பிரைவட் லிமிட்டட் நடத்திய இவ்விழாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், சென்னை மதுரா டிரவல்ஸ் நிறுவனத்தின் தலைவர் வி.கே. டீ. பாலன், கனடா விழித்தெழு பெண்கள் அமைப்பின் இயக்குனர் சசிகலா நரேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். நந்தவனம் பவுண்டேசனின் தலைவர் நந்தவனம் சந்திரசேகர் இதற்கான ஏற்பாட்டைமேற்கொண்டு இருந்தார். இந்த விழாவில் 25 பெண்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இலங்கையைச் சேர்ந்த அமிர்தரத்தினம் ருத்ரா, சந்திரிக்கா நிரோசன், கீர்த்திகா மித்ரன், தஸ்யானி ரந்தீப், கவிதா பாரதி, பிரபா அன்பு ஆகியோர் உட்பட 25 பேர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களைத் தவிர இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்களும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.